# தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை

டாக்டர். ஐ. இரவி ஆறுமுகம், I.P.S.



729
G02
VG5729

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

# தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை

டாக்டர் ஐ. இரவி ஆறுமுகம், I.P.S.,

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

# நூற்குறிப்புகள்


பதிப்புரிமை : Copy right :

பதிப்புத்துறை Publication Division

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் Madurai Kamaraj University

மதுரை — 625 021 Madurai - 625 021

பதிப்பு எண் : 172

விலை : ரூ. 50/-

பதிப்பு விவரங்கள்

1. ஆசிரியர் : **டாக்டர் ஐ. இரவி ஆறுமுகம்** I.P.S.,
காவல்துறை கூடுதல் இயக்குநர்
சென்னை

2. தலைப்பு : **தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை**

3. பதிப்பித்தோர் : **பதிப்புத்துறை**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
**மதுரை - 625 021**

4. ஆண்டு : **2002**

5. பக்கங்கள் : **248**

6. நூல் கிடைக்குமிடம் : **பதிப்புத்துறை**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
**மதுரை - 625 021**

7. அச்சிட்டோர் : **லிட்டில் ஸ்டார்**
**மதுரை**

## முன்னுரை

"தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை" என்ற இந்த நூல் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தினுடைய வெளியீடாக வெளி வருகிறது. இந்நூல் என்னுடைய முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக் களத்தின் சிந்தனைத் தளத்தில் உருவானதாகும். என்னுடைய முனைவர்பட்ட ஆய்வேடு, ஆங்கிலத்தில், அரசியல் விஞ்ஞானத் துறை வழியாகச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆய்வு செய்யும் காலத்தும், கள ஆய்வில் ஈடுபட்ட போழ்திலும், நான் சந்தித்த அனுபவங்கள், நான் சேகரித்த தகவல்கள் யாவும் என் சிந்தனையைத் தூண்டின. தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கு, மேல்தட்டுவர்க்கத்தினர், ஜாதி என்ற பெயரால் இழைத்த எண்ணற்ற கொடுமைகள், அதன் காரணமாகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் அவற்றை நேர் செய்வதில் காவல்துறையினர் ஆற்றிய பணிகள் ஆகிய அனைத்துமே புதையல்களாகப் பூதாகாரமாகக் குவிந்துகிடந்தன. இவை தொகுக்கப்பட்டபோது எண்ணற்ற புதிய தகவல்களும் சிக்கல்களும் வெளிப்பாடாகின. தீண்டாமையை ஒழிக்கவும், பிற்படுத்தப்பட்டோரின் நலனைப் பாதுகாக்கவும், மைய அரசும், மாநில அரசும் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கின்றன. எடுத்து வருகின்றன. பல சட்டச் சீர்த்திருத்தங்கள் இயற்றப்பட்டும் பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டும் வந்திருக்கின்றன. என்றாலும் இன்றுவரை அவர்தம் உரிமைகளானவை பாதுகாக்கப்பட்டுள்ளனவா, நிவாரணங்கள் முறையாக வழங்கப்பட்டு அவர்களது துயரங்கள் துடைக்கப்பட்டுள்ளனவா, என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இதற்கான அடிப்படை என்ன என்று சிந்திக்கிறபோது, இன்னமும் இந்த மக்கள் முழு விழிப்புணர்வு பெறவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. அதே நேரத்தில் பழைய மரபில் ஊறிய மேல்தட்டு வர்க்கத்தினரிடம், இன்னமும் தங்கள் பேராட்சி அழுத்த வல்லமையினைப் பதிவு செய்ய முனையும் முனைப்பே மேலோங்கி இருக்கிறது. சமுதாய மாற்றங்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பும் கூட அவர்கள் இல்லாதிருக்கின்றனர்.

இத்தகைய சமூகச் சூழலில், வர்க்க பேதங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையில் சாதிச்சண்டைகளும், கொலைகளும், கொலை முயற்சிகளும், நிகழந்த வண்ணம் இருக்கின்றன. இவற்றிக்கான சரியான காரணியைக் கண்டறிந்து, இச்சமூக முரண்பாட்டிற்கான நிரந்தரத்தீர்வு காணும் முயற்சியாகவே, இந்த

ஆய்வானது நிகழ்த்தப்பட்டது. ஆய்வின் முடிவுகள், ஆய்வுக்கால அனுபவங்கள், அரசு எடுத்துள்ள முயற்சிகள், சட்டங்கள், சட்டத்திருத்தங்கள், ஆகியவை வெகுசன வாசிப்பாளர்களிடம் சென்று சேர்ந்து, அதன் மூலமாக அவை பொது மக்களைச் சேர்ந்திட வேண்டும் என்ற நோக்கில், இந்நூல் மொழி மாற்றம் செய்யப்பட்டு எளியதமிழில் வெளிவருகின்றது. இந்நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல், சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்தும் காவல்துறையினர், மற்றும் அரசு அலுவலர்களுக்கும் கூட ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலானது, மதுரைக் காமராசர் பல்கலைக்கழக வெளியீடாக வர, அனைத்து வகையிலும், துணைநின்ற பல்கலைக்கழகத் துணைவேந்தர், ஆட்சிக்குழு மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் விதைத்து, இடையறாத தூண்டுகோலாகத் தொடர்ந்து இலங்கி, ஆய்வினை நிறைவு செய்து, முனைவர் பட்டம் பெறுவதற்கும், இந்நூலானது வெளிவருவதற்கும் ஆதாரச் சுருதியாக இருந்து இயங்கிய என் உடன்பிறவாத தம்பி நடசேனுக்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டவன்.

இந்த நூலை நல்ல முறையில் தமிழாக்கம் செய்து உதவிய பேராசிரியர் தேவேந்திரன், மற்றும் பதிப்புத்துறை அதிகாரி, முனைவர் இரா. காசிராசன், முனைவர் பூலோகரம்பை ஆகியோருக்கும் என் உளங்கனிந்த நன்றி.

இந்த நூலை, நான் முனைவர் பட்டம் பெறுவதற்கு அகரமுதலியாக இருந்து, அந்தப் பட்டம் பெறுவதை கண்பனிக்கக் கண்டு, செம்மாந்து மகிழ்ந்த, இன்று 'இருத்தல்' மட்டும் இல்லாமற் போய், ஏகனுடன் தன் ஜீவனைக் கலந்துவிட்ட என் இனிய இல்லாள், என்னுடைய உயிரிலும், என் மழலையர், செல்வியர் இசைநிலா, யாழினி இருவர் உயிரிலும் இரண்டற ஒன்றிவிட்ட, அவர்களது அருமை அன்னை திருமதி.இரமா இராணியின் நினைவிற்குப் படையலாக்குகின்றேன். காரணம், என்னால் முடிந்தது இது ஒன்றுதான்.

( ஐ.இரவி ஆறுமுகம் )

A.பத்மனாபன் இ.ஆ.ப.(ஓய்வு)
முன்னாள் ஆளுநர், மிஷோரம்

## அணிந்துரை

இந்திய சமுதாய அமைப்பில் சாதிவேறுபாடுகளும், தீண்டாமையும், பல நூற்றாண்டுகளாக மக்களிடையே ஊடுருவி, பெரும் கேடுவிளைவித்துவரும் கொடிய நோய்களாகும். இவைகளுக்கு வித்திட்டது இந்து சமயமும், அதனுடைய ஆரிய கலாசாரமும், கோட்பாடுகள் அடங்கிய வேதங்களுமாகும். வேதங்களில் முக்கியமானது ரிக் வேதம் (2000—1500 கி.மு.) இதில் புருஷ சுக்தா என்ற தலைப்பில் சதுர் வர்ணத்தை முதன் முதலில் மனித சமுதாயத்தில் தோற்றுவித்தது. பிராமணர், சஷத்ரியர், வைசியர், சூத்திரர் என்ற பாகுபாட்டை ஏற்படுத்தியது. இதை மனுஸ்மிரிதியும், இதிகாசங்களும், மற்ற வேதநூல்களும், பிறப்பின் அடிப்படையில் ஜாதி பிரிவுகளாக மாற்றி, ஒருவருக்கொருவர் சேராவண்ணம் பிரித்து நிரந்தர பிரிவுகளை ஏற்படுத்தின. இந்த நான்கு ஜாதிகளிலும் சேராத ஐந்தாவது ஜாதியில் தள்ளப்பட்டவர்கள் 'பஞ்சமா' என்றும் ஜாதி பாகுபாடுகளில் இல்லாதவர்கள் (Out castes) என்றும், தீண்டப்படாதவர்கள் என்றும் கூறப்படுகின்ற மக்கள். சாதியும், தீண்டாமையும், இந்திய நாட்டிலே, அன்றும், இன்றும் நடைமுறையிலேயிருக்கின்ற உண்மை. அன்னியர் ஆட்சியிலும் சரி, சுதந்திர இந்தியாவிலும் சரி, இவைகள் இன்றும் தலைவிரித்தாடுகின்றன. 2500 ஆண்டுகளுக்கு முன் புத்தபிரான் இவைகளுக்கெதிராக குரல் கொடுத்தார். அறவழியிலே தர்மத்தை, பௌத்த நெறியை போதித்தார். பின் பல அறிஞர்களும், அருளாளர்களும், சீர்த்திருத்த செம்மல்களும், தலைவர்களும், இந்து சமயத்தை, இந்திய சமுதாயத்தை திருத்தி, மனிதநேய சமுதாயமாகமாற்ற பாடுபட்டார்கள். சமீப காலத்திலே இந்த முயற்சியிலே முக்கிய பங்காற்றியவர்கள் ஸ்ரீ நாராயணகுரு, மகாத்மா பூலே, காந்திஜி, பாபாசாகேப் அம்பேத்கார், பெரியார் ஈ.வெ.ரா அவர்கள். பக்தி இயக்கத்திலே ஈடுபாடு கொண்ட அடியார்கள், மக்களை தீய எண்ணங்களிலிருந்து விடுவிக்க, ஆண்டவனை ஆதாரமாக காட்டி பாடினார்கள். போதித்தார்கள். நந்தனார், சேந்தனார், சோகா மேளர், ரவிதாஸ், போன்ற தீண்டப்படாத, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அருளாளர்கள், சாத்வீக முறையிலே, தீண்டாமையை எதிர்த்தனர். கோயில்களில் போக உரிமை உண்டென்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே போர் கொடி உயர்த்தினர்.

அவர்களுடைய 'உரிமைப் போர்' இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. நாடு சுதந்திரம் பெற்ற பின் இந்திய அரசியல் சட்டம் டாக்டர் அம்பேத்கார் தலைமையில் தயாரிக்கப்பட்டது. இதில் ஷரத்து 17ன்படி 'தீண்டாமை' ஒழிக்கப்பட்டது. இதற்காக பெரிதும் பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள். அப்ரகாம் லிங்கன் அமெரிக்காவில் 'அடிமை முறையை' சட்டத்தின் மூலம் ஒழித்த மாதிரி டாக்டர் அம்பேத்கார் இந்தியாவில் தீண்டாமையை சட்டத்தின் மூலம் ஒழித்தார். தீண்டாமையை எந்த விதத்தில் கடைபிடித்தாலும் குற்றமென்றும் அரசியல் சட்டம் கூறுகின்றது. 'தீண்டப்படாதோர்'. 1935 சட்டத்திற்கு பின் ஷெட்யூல்டு (Scheduled Castes) இன மக்களென்று அழைக்கப்பட்டனர். இவர்கள் முன்னேற்றத்திற்கு பல முக்கிய ஷரத்துக்களும், ஏற்பாடுகளும், இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கின்றன. இவைகள் யாவையுமிருந்தும் இன்றைய நிலைமை என்ன? இவைகள் யாவும் நிர்வாகத்தில் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்று பார்க்கவேண்டும். நிர்வாகத்தில் காவல்துறை முக்கியமானது. 'சாதியும்' தீண்டாமையையும் ஒழிந்தனவா? குறைந்துள்ளனவா? தீண்டாமை ஒழிப்பில் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம். மேலும் முன்னேற, தீண்டாமையை அறவே ஒழிக்க, மேலும் செய்ய வேண்டிய பணிகளென்ன, இதில் காவல் துறையின் பங்கு என்ன என்ற கேள்விகள்,, இந்த 21ஆம் நூற்றாண்டில் நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்று விரும்புகின்ற சிந்தனையாளர்கள் இடையே, அறிவாளர்கள் இடையே, ஆராய்ச்சியாளர்களிடையே, உண்மையான அரசு ஊழியர்களிடையே, தலைவர்களிடத்திலே, எழும் கேள்விகள். இவைகளால் உந்தப்பட்டு டாக்டர் ஐ.இரவி ஆறுமுகம், **IPS.** அவர்கள் 'தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை' என்ற கட்டுரையை டாக்டர் பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு, சமர்ப்பித்தார். இந்தக் கட்டுரை நூலாக தற்போது வெளிவந்துள்ளது. டாக்டர் இரவி ஆறுமுகம், **IPS.** காவல்துறையில் ஒரு மூத்த அதிகாரி. சமூக, சமுதாயப்பணி, இலக்கியப்பணி, மக்கள் முன்னேற்றம், ஆகியவைகளில் அக்கரையும் ஈடுபாடும் உள்ளவர். பல நூல்களையும் அறிக்கைகளையும் படித்து, ஆராய்ந்து இந்த நூலை எழுதியுள்ளார்.

"நூலின் அறிமுகத்தில்" ஆசிரியர் தீண்டத்தகாதோர் இன்றும் அடிமைப்பட்டிருப்பதற்கு மூன்று காரணங்களை கூறுகிறார். ஒன்று ஏழ்மை, இரண்டு "வாழ்க்கை" வசதி, சமுகச்சேவை ஆகியவற்றைச் சமுதாயத்திலிருந்தோ அரசிடமிருந்தோ பெறுவது முதல் அவ்வப்போது

நிகழும் மனிதநேயமற்ற வன்முறைகளுக்கு ஆளாகிவிடும் நிலை வரை அவர்கள் பாரபட்சமாகவே நடத்தப்படுகின்றனர். மூன்றாவதாக தாங்கள் இந்து சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் என்று அவர்களிடையே பரவலாகக் காணப்படும் எண்ணமும், அவர்களைப் பிற இந்து சமுகத்தினரிடமிருந்து பிரிக்கின்றது'.

'தீண்டாமை பற்றிய நூல்கள்' 'தீண்டாமை', 'தென் இந்தியச் சாதியும் பழங்குடிகளும்' 'இந்தியாவில் அம்பேத்காரிசத்தின் பொருத்தம்', 'முதுகளத்தூர்—ஒரு கொடுமையின் வரலாறு' 'இளையபெருமாள் குழு அறிக்கை', 'தீண்டாமை தோற்றம்—செயல்பாடு வளர்ச்சி','தீர்வுக்கான திட்டங்கள்', 'தற்போதைய நிலைமை', 'தீண்டாமையை ஒழிக்க அரசியல் அமைப்பு சட்டமும் பிற சட்டப் பாதுகாப்புகளும்'. 'குடியுரிமை பாதுகாப்புச் சட்டமும், காவல்துறையின் தீண்டாமை ஒழிப்பும்', 'காவல் துறை கண்ட சாதி மோதல்—காரணங்கள்', 'முடிவுரை', மற்றும் பல தலைப்புகளில் ஆசிரியர் எழுதியுள்ளார்.

கீழ்வெண்மணி கொலைகள், விழுப்புரம் வழக்கு, போடி கலவரம், போன்ற நிகழ்ச்சிகளையும், குறிப்பிட்டுள்ளார். நூலிலுள்ள முக்கிய சில கருத்துக்களைப் பார்ப்போம்.

1. "சங்ககால சமுதாயத்தில் மல்லர், புல்லர், பறையர், என்று மக்கள் பிரிவினரைக் குறிப்பிட்டிருப்பதும், அவர்கள் யாரையும் தாழ்த்தப்பட்ட இனத்தவர் என்றோ, தீண்டத்தகாதோர் என்றோ கூறப்படவோ, நடத்தப்படவோ, இல்லை. தற்காலத் தமிழ் நாட்டில் பெரும்பகுதியினராக உள்ள பறையர்கள் சங்ககாலச் சமுதாயத்தில் மதிப்புடனேயே வாழ்ந்தனர்.. சங்க காலத்திற்கு பிற்பட்டகாலத்தில் தான் தீண்டாமை என்ற கருத்து தலைதூக்கியது''.

2. "தீண்டாமையினால் பகைமை தூண்டப்பட்டு, அவ்வப்போது அரசியல் அரங்கிலும் சண்டைச் சச்சரவுகள் நிகழ்கின்றன. சுதந்திரத்திற்குப்பின் தீண்டாமை ஒழிக்கப் பாடுப்பட்ட இந்தியத் தலைவர்கள் கைக்கு ஆட்சி மாறியதும் தீண்டாமை ஒழிந்துவிடுமென பெருந்தலைவர்கள் எண்ணினர். ஆனால் அரசியல் களத்தில் அவர்களுடைய நம்பிக்கை நடைமுறைப்படுத்த முடியாத மாயையானது''.

3. "தாழ்த்தப்பட்ட சாதியினரும் மற்றும் பழங்குடியினரும் அரசியல் அமைப்புச் சட்டப்படி பாதுகாப்பு பெற்றிருந்தாலும் அவர்கள் வாழ்க்கை இன்றளவும் இன்னலுடன் நகர்கின்றது. வானவில்லின் கோடியில் இருப்பதாகத் தென்படும் பொற்களஞ்சியம் மாயைப் போல் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான பாதுகாப்பும் மாயையாகவே உள்ளது".

4. "மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர், காவல்துறைக் கண்காணிப்பாளர், வருவாய்த்துறை அதிகாரி, ஆகியோர் சமூக உணர்வுடனும், முழுமன ஈடுபாடுடனும், கடமையுணர்வுடனும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது அவர்களின் கடமையாகும்."

5. "கலவரம் ஏற்படச் சாதகமான சூழ்நிலையுள்ள சிற்றூர்களுக்கு காவல்துறை அதிகாரிகள் அடிக்கடி போய்வருவது மிக மிக அவசியம்".

6. "குடியுரிமை பாதுகாப்புச் சட்டமும், அதன் தீவிர அமுல் திட்டங்களும், உயர்சாதி இந்துக்களுக்கு எதிராக தாழ்த்தப்பட்ட இன மக்களின் சமூக உள்ளுணர்வை விழித்தெழச் செய்தது. ஒரு சமுதாய விழிப்புணர்வு ஏற்படும்போது சட்டப்படியான உரிமைக்கான ஆவல் அதிகரிக்கின்றது. உரிமைக்கான ஆவல் அதிகரிக்கும் போது, நிலவிவிடும் அடிமைப் பழக்கத்துடனும், சடங்குகளுடனும், அவ்வுரிமை வேட்கை மோதல் கொளவது இயல்பேயாகும். கார்ல்மார்க்சின் சித்தாந்தப்படி ஒரு கொள்கைக்கும் (Thesis) அதன் எதிர் கொள்கைக்கும் மோதல் ஏற்பட்டால்தான் தெளிவான கொள்கை உருவாகும்".

7. "சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் கழித்தும் நாம் பழக்கத்தால், நாட்டின் நான்கில் ஒரு பகுதி மக்கள்பால் கொண்டுள்ள தீண்டாமை எண்ணத்திலிருந்தும், விருப்பு வெறுப்புகளிலிருந்தும்

விடுபடவில்லை என்றால், நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சமூக பொருளாதார அரசியல் நீதிகள் வெறும் வாய்ச் சவடால்களேயாகும்".

8. "தனி மனிதர்களைக் காப்பாற்றுவதும், கலகத்தை தடுப்பதும், சமூக விரோதிகளிடமிருந்து சமுதாயத்தைக் காப்பதும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் புனிதத்தைக் காப்பதும், காவல்துறையின் தலையாய கடமைகளாகும்".

9. "தீண்டாமை இந்தியாவில் பல பாகங்களிலும் குறிப்பாக தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் நிலைத்துள்ளது என்பதில் ஐயத்திற்கு இடமில்லாது நிரூபிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் தீண்டாமை வெளிப்படையாக நடைமுறையில் இல்லை".

10. "குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் கொடுமைத் தடுப்புச் சட்டம், இது சம்பந்தமான மற்றச் சட்டங்களையும், தீண்டத்தகாதோர் மீது நடத்தப்படும் கொடுமைகள் பற்றிய புகாரின் பேரிலும் மேல் நடவடிக்கை எடுப்பதிலோ, காவல்துறை தன்னாலான செயலைச் செய்து வருகிறது".

11. "மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் காவல்துறையினர் சட்டத்தின் பாதுகாவலர்களாக இருந்து வருகின்றனர். பொதுமக்கள் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் மக்கள் காவலர்கள் தங்களின் நண்பர்களே, தங்களைக் கொடுமைப்படுத்தும் எதிரிகளல்ல என்பதை உணரவேண்டும். அத்தகைய மாற்றமே தீண்டாமை ஒழிப்பிற்கு வேகத்தைக் கொடுக்கும். இன்றைய சூழ்நிலையில் தீண்டாமையை முற்றிலுமாக ஒழிக்கும் நாள் எப்பொழுது ஏற்படும் என்று குறிப்பிட முடியாது".

"தீண்டாமை', 'சாதி' ஆகியவை போக,, காவல் துறையுடன் மற்றவர்களும் பாடுபடவேண்டும் என்று சொல்லி, சில சட்ட திருத்தங்களையும், யோசனைகளையும், ஆசிரியர் கூறியிருக்கிறார்.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சாதி அமைப்புகளில் பங்கேற்பதை சட்டரீதியாக தடை செய்யவேண்டும். சாதி அடிப்படைவாதச் சக்திகள் சாதி உணர்வைத் தூண்டிவிடுவதை தடை செய்யவேண்டும் என்ற யோசனைகளையும் கூறியுள்ளார்.

'தீண்டாமை' எந்தக் காலத்தில் இந்திய சமுதாயத்தில் புகுந்தது, எப்படி வந்தது, தீண்டப்படாதோரின் முற்காலத்திய நிலைமை என்ன என்பதைப் பற்றியெல்லாம் பல அறிஞர்கள், வரலாற்றாசிரியர்கள், எழுதியுள்ளார்கள். "UNTOUCHABLES - WHO ARE THEY AND WHY THEY BECAME UNTOUCHABLES" என்ற நூலில் டாக்டர் அம்பேத்கார் விரிவாகவும், ஆதாரங்களுடனும், ஆராய்ந்திருக்கிறார். தீண்டப்படாதவர் திராவிட அல்லது நாகர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆரிய கலாசாரத்தையும், கோட்பாடுகளையும், எதிர்த்ததால் அவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டார்கள் என்றும் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூறுகிறார். அறிஞர் அயோத்திதாஸ் பண்டிதரும், டாக்டர்,, கே.ஆர்.அனுமந்தன் (Untouchability - A Historical study upto 1500 AD with special reference to Tamil Nadu ) நெவிலி ஜெயவீரா, (Continuity and change in Indian Culture) மற்ற அறிஞர்களும், இதே கருத்தைத்தான் கூறியிருக்கிறார்கள். 'தமிழர் உண்மை வரலாறு" (தலித் ஆய்வு நூல்) என்ற நூலில் இதன் ஆசிரியர் பேராசிரியர் கேப்டன் எஸ்.கலியபெருமாள் அவர்கள் இதுவரை வெளிவராத ஏற்கப்படாத பல உண்மைகளை, இலக்கியங்கள், நூல்கள் ஆதராத்துடன், தீண்டப்படாதோர் எப்படி பண்டை காலத்தில் உயர்ந்த நிலைமையில் இருந்தார்கள் என்றும், குறுநிலமன்னர்களாகவும், நாட்டிற்கும், கோயில்களுக்கும் சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்ற உண்மைகளை கூறியுள்ளார்..

'தீண்டாமையை' ஒழிப்பதில் காவல்துறைக்கு முக்கிய பங்கு உண்டு. நூலாசிரியர், காவல்துறை அதனால் முடிந்ததைச் செய்து வருகிறது என்று கூறியுள்ளார். இந்திய அரசாங்கம் 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட காவல் ஆணயத்தின் பரிந்துரைகளுள் 'காவல் துறையும் நலிந்த பிரிவினரும்' என்ற பிரிவில் தீண்டப்படாதோர் (ஷெட்யூல்டு இன மக்கள்) க்கு எதிரான காவல்துறையின் அத்துமீறல்கள் விளக்கப்படுள்ளன. இவர்கள் மீதானவன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளைக் காவலர்கள் கையாளுவது குறித்து எழுதுகின்ற குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவை, புகார்களை பதிய மறுப்பது,

சம்பவ இடத்திற்கு தாமதமாக வருவது, குறிப்பான வழக்குகளின் விசாரணையில், அரைமனதாக நடவடிக்கை, விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவர் நலிவுற்ற பிரிவினரெனில் அளவுக்கு மிஞ்சிய பலப்பிரயோகம் செய்வது, குற்றம் சாட்டப்பட்டவர் செல்வாக்குள்ளவர் எனில் மென்மையான நடவடிக்கை மேற்கொள்வது, கைது செய்வது அல்லது வஞ்சனையாக கைது செய்யாமல் விட்டுவிடுவது முதலியன விளக்கமாக கூறப்பட்டுள்ளன. "Human Rights Watch" என்ற உலக நிறுவனம் வெளியிட்டுள்ள நொறுக்கப்பட்ட மக்கள்--இந்தியாவில் உள்ள தீண்டத்தகாதவர்களுக்கெதிரான சாதிய வன்முறை என்ற புலனாய்வு அறிக்கையில் தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும், சாதியின்பெயரால் 'தீண்டாமை' யின் கொடூரத்தால் நிகழ்ந்து வரும் வன்முறைகளை விவரமாக எடுத்துக் கூறுகின்றது. "அரசும், நிர்வாகமும், தலித் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முனைப்போடு செயற்படவில்லை என்ற நிலை.. அதேவேளை காவல்துறையும், அதிகாரிகளும் இவ்வன்கொடுமைகளுக்குத் துணை நின்றனர் என்ற மற்றொரு நிலை" என்றும் கூறியுள்ளது. தேசீய ஷெட்யூல்டு மற்றும் பழங்குடி மக்கள் கமிஷனும் தன்னுடைய அறிக்கைகளில் இவைகளைப் பற்றி கூறியிருக்கின்றது. கிராமங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரி வன்முறைகளில் ஈடுபட்டு தீண்டாதோருக்கு தொல்லை கொடுக்கின்றனர்.

'சாதியும்' 'தீண்டாமையும்' ஒழிய வேண்டுமென்று, நல்லெண்ணம் படைத்தோரும், மனிதநேயம், சமத்துவம்., சகோதரத்துவமுள்ள சமுதாயம் அமையவேண்டும் என்று நினைப்போரும் விரும்புகிறார்கள். ஆனால் இவைகள் இன்றும் ஒழியாமல்தான் இருக்கின்றன. முக்கியமாக கிராமங்களில் மேலும் வலுவடைந்து அதிகரித்துள்ளன. ஜாதி கட்சிகளும், அரசியல் என்ற போர்வையில், ஜாதியையும்,, தீண்டாமையையும் ஊக்குவிக்கின்றன. தேர்தலில் வாக்குதான் முக்கியம்.. சமுதாய சீர்த்திருத்தம் முக்கியமில்லை என்ற நிலையில் இன்றிருக்கிறோம். ஜாதி அடிப்படையில்தான் இன்று அரசியலும், அதிகார விநியோகமும் நடக்கின்றன. 1932 ஆம் வருடம் தனித்தொகுதி முறையை காந்திஜியின் உயிரை காப்பாற்ற டாக்டர் அம்பேத்கார் விட்டுக் கொடுத்தார். அப்பொழுது காந்திஜி, தீண்டாமையை 10 ஆண்டுகளில் ஒழிப்பேன் என்று உறுதி கூறினார். ஆனால் இன்றும் அது ஒழிந்தபாடில்லை. இவைகளைப் பற்றி என்னுடைய நூல்களில் (Dalits at the Cross Roads' மற்றும் 'தலித்துகளின்

இன்றைய நிலைமை') விரிவாக நான் எழுதியிருக்கிறேன். ஜாதி ஒழியவேண்டும். அப்பொழுதுதான் தீண்டாமை ஒழியும். மக்கள் மத்தியிலே சீர்த்திருத்த மறுமலர்ச்சி இயக்கம் இன்று தேவை. ஆண்டவனால் ஆக்கப்பட்டதல்ல ஜாதியும், தீண்டாமையும். வேதங்கள் கூறுவது, சில சுயநல விரும்பிகளால் புகுத்தப்பட்டவைகளேயாகும் என்று மக்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். சமயத் தலைவர்களும், ஞானிகளும், ஆன்மீகவாதிகளும், கிராமங்களிலே மனிதநேயம், சமத்துவம், போன்ற கருத்துக்களை பரப்பவேண்டும். அரசியல் தலைவர்களும் நல்ல சமுதாயம், நல்ல நிர்வாகம், மக்கள் நலன், என்ற குறிக்கோள்களுடன் பாடுபடவேண்டும். தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தீண்டப்படாதவர் என்று சொல்லப்படுகின்ற கோடானகோடி மக்களுடைய முன்னேற்றம் நாட்டிற்கு இன்றியமையாதது. அவர்கள், உரிமைகளை தட்டி கேட்கும் போது, அரசியல் சட்டத்தின் ஷரத்துக்கள், சட்டங்கள், ஆகியவைகளுடைய பாதுகாப்பினை நாடும்போது, தீயசக்திகள் எதிர்க்கின்றன. இந்த எதிர்ப்பு (Counter Movement) மிகவும் ஆபத்தானது. நாட்டிற்கு கேடுவிளைக்கும் என்று மரியாதைக்குரிய முன்னாள் குடியரசுத்தலைவர் திரு.**K.R.**நாராயணன் அவர்கள் பலமுறை நாட்டிற்கும், தலைவர்களுக்கும் எச்சரிக்கை விடுத்தார். இந்த தீயசக்திகள் வெற்றி பெறா வண்ணம், 'தீண்டப்படாதோர்' ஷெட்யூல்டு இன மக்களுடைய உரிமைகளையும், முன்னேற்றத்தையும், பாதுகாப்பது அரசு நிர்வாகத்தின் தலையாய கடமையாகும். முதலமைச்சர் முதல், தலைமை செயலாளர், செயலாளர்கள், மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை காண்காணிப்பாளர், மற்றவர்கள் கவனமாய், தக்க ஈடுபாட்டுடன், இதில் அவர்களுடைய கடமையைச் செய்யவேண்டும். அறிஞர்கள் "Even Good Laws can be badly administered" என்று கூறுவார்கள். பல சட்டங்களிலிருந்தும், தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத மக்களுக்கு இன்றும் கொடுமைகளும், அநீதிகளும், இழைக்கப்படுகின்றன. சட்டங்கள் நல்ல நோக்கத்துடன் இயற்றப்பட்டவை. ஆனால் நடைமுறையில் சரியாக இயக்கப்படவில்லை. இக் கருத்துக்களுக்கும் நூலாசிரியர் கருத்துக்களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

டாக்டர் இரவி ஆறுமுகம் **IPS** அவர்களுடைய இந்த நூல் ஒரு புதிய பார்வையுடனும், பரந்த மனப்பான்மையுடனும் எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். தெளிந்த சிந்தனையும், சிறந்த அனுபவமும், அறிவாற்றலும் கொண்டு எழுதியிருக்கிறார். தீண்டாமை என்ற சிக்கலான

சமூக சமய பிரச்சினையை தீர்ப்பதில் தன்னுடைய துறையும், மற்றவர்களும், எவ்வாறு செயல்படுகிறார்கள், எவ்வாறு செயல்படவேண்டும் என்னும் கருத்துக்களை ஒளிவுமறைவின்றி திட்டவட்டமாகவும், தைரியமாகவும் கூறியிருக்கிறார். அரசு அதிகாரிகள் அநேகம். ஆனால் எழுத்தாளர்கள், அதிலும் சமூக கண்ணோட்டத்துடனும், சீர்த்திருத்த மனமும் கொண்டு சமூக விஞ்ஞானியாக (Social Scientist) ஆராய்ந்து அலசி எழுதுபவர்கள் சிலரே. இந்த சிலரிலே டாக்டர் இரவி ஆறுமுகம் அவர்களும் ஒருவர். இவர் கூறியுள்ள யோசனைகள் கவனித்து ஆராய வேண்டியவை. இவருடைய எழுத்துக்களிலே நேர்மையுடைய அறிவாற்றலை (Intellectual Honesty) காணமுடிகிறது. இந்த நூலின் மூலம் ஓர் அரிய படைப்பை படைத்துள்ளார். இவருக்கு என்னுடைய பாராட்டுதல்கள். காவல்துறையைச் சார்ந்தவர்கள் மட்டுமல்லாது, மற்ற நிர்வாக அதிகாரிகளும், சமூகப் பணியாளர்களும், அரசியல்வாதிகளும், மக்களும், இந்த நூலை படித்து, 'தீண்டாமையை ஒழித்து' சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், அடிப்படையில் அமைந்த சமுதாயம் உருவாவதற்கு ஆவன செய்வார்கள் என நம்புகிறேன்.

7.9.2002 —ஆ.பத்மநாபன்

Justice **P.R. GOGULAKRISHNAN**

CHIEF JUSTICE OF GUJARAT (Reted)

## "அணிந்துரை"

டாக்டர் ஐ.இரவி ஆறுமுகம் தனது டாக்டர் பட்டத்திற்காக காமராஜர் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரையினைப் படித்து மகிழ்ந்தேன்.

"தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை" என்ற தலைப்பில் தீண்டாமை எனும் தீய பழக்கம் தமிழ்நாட்டில் புகுந்த விதம் இதைக்களைய அரசியல் அமைப்புச் சட்டமும், இன்னபிற மாநிலச் சட்டங்களும் அமுலுக்கு வந்த விதத்தையும் இப்புத்தகத்தில் காணலாம்.

இவ்வாராய்ச்சியின் நோக்கமே சாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்களுக்குத் தரும் இன்னல்களை, அதனால் அவர்கள் அடையும் பாதிப்புக்களை பொதுமக்களுக்கு தெரிவிப்பதும், அவற்றைத் தடுப்பதில் காவல்துறை ஆற்றிய பங்கினை எடுத்தியம்புவதுமே.

தென்னிந்திய சாதியும், பழங்குடிகளும் என்னும் நூல் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மட்டுமே தமிழன மக்கள் என்கிறது. இத்தகைய தமிழின மக்கள் சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் அனுபவித்த, அனுபவித்து வருகின்ற கொடுமைகளை ஆசிரியர் தெளிவாக இப்புத்தகத்தில் விளக்குகிறார்.

பள்ளன் என்ற பெயர் எப்படி வந்தது? என்பதை விளக்க இவர்கள் நஞ்சை நிலத்தில் சாகுபடி செய்துவந்தார்கள். இச்சாகுபடி தாழ்வான அதாவது பள்ளமான நிலப்பரப்பிலே செய்யப்பட்டது. ஆகவே, இவர்கள் பள்ளர்கள் ஆனார்கள் எனக் கூறுகிறார் ஆசிரியர். பறையன் என்ற சொல் புறநானூற்றில் ஒரே ஒரு இடத்தில்தான் காணப்படுகிறது எனக்கூறி, சங்ககாலத்திற்குப் பிற்பகுதியில் தான் தீண்டாமை என்ற கருத்து தலைதூக்கியது என்று கூறுகிற ஆசிரியர், நாகர்கள் இந்நாட்டில் தொன்று தொட்டு வாழ்ந்து வந்தவர்கள் என்று சொல்லி, இவர்களுடைய தாய்மொழி தமிழ் என்கிறார்.

சங்ககாலச் சமுதாயத்தில் மல்லர், புலையர், பறையர் என்ற மக்கள் பிரிவினரைக் குறிப்பிட்டு இருப்பினும், அவர்கள் யாரையும் தாழ்த்தப்பட்ட இனத்தினர் என்றோ, தீண்டத்தகாதவர் என்றோ கூறப்படவோ, நடத்தப்படவோ இல்லை என்று கூறி, பக்தி இலக்கிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் கூட நல்ல பரந்த மனிதாபிமான நோக்கினைக் கொண்டிருந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

தொன்மையான நம் மதங்களும், புத்தரிலிருந்து டாக்டர் அம்பேத்கர் வரையிலான ஞானமுடைய தலைவர்கள் அத்துனை பேர்களும் சாதிகளை, தீண்டாமை பழக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. சாதிக் கொடுமைகளும், சமூக அநீதிகளும் மலிந்த நேரத்தில் உருவானவைதான் புத்தமதமும், ஜைனமும். சமரச நோக்குள்ள மகான்கள் புத்தருக்குப் பிறகும், மகாவீரருக்குப் பிறகும் தோன்றினர். ஆனால், சமுதாயத்தில் ஊடுருவி நின்ற சாதிச் சண்டைகளை, மதப்பூசல்களை ஏற்றத் தாழ்வுகளை அவர்கள் போதனைகள் தீர்த்ததா என்றால் இல்லை. புத்தமதக் கொள்கைகளும், ஜைனமதக் கொள்கைகளும் வெளிநாடுகளில் பரிணமிக்கும் அளவிற்கு நம் இந்தியாவில் இல்லை. பின்பு வந்த சைதன்யர், தெற்கில் மலர்ந்த நாயன்மார்கள், ஆழ்வார்கள், இராமானுஜர், ராமலிங்க அடிகளார் போதனைகள் படித்து மகிழவைக்கும் நிலைக்கும், அவ்வுருவங்களை வைத்து பூஜிக்கும் நிலைக்கும் வைத்து விட்டார்களே தவிர, அவர்கள் போதனைகளை நடைமுறைப்படுத்தினர்களா என்றால் இல்லை. இதற்கு அடிப்படைக் காரணம் சாதியை வைத்து பிழைப்பவர்களும், இறை தத்துவத்தை வியாபாரப் பொருளாக்கி, வாழ்க்கை வழியைத் தேடிக் கொண்டவர்களும்தான் காரணமென்றால், மிகையாகாது. இத்தகையோர் கொடுமையால் மதம் மாறியோர் ஏராளம். சாதிச் சண்டையால் உயிரிழந்தோர் பலர். இதைப்பற்றி, சாதியை கட்டிக்காக்கும் சமுதாயம், சாமியை வியாபாரப் பொருளாக்கி அச்சுறுத்தி வாழும் இனம் சிறிது கூட கவலைப்படவில்லை. இவைகளையெல்லாம் பார்த்த காந்திஜி, டாக்டர் அம்பேத்கர், பெரியார், பேறறிஞர் அண்ணா போன்றோர், எழுத்தால், பேச்சால் நாட்டின் சாதிக்கொடுமைகளை, தீண்டாமை நிலைமையை போக்கிட பாடுபட்டனர். டாக்டர் அம்பேத்கர் மட்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்திய குழுவில் இல்லாமல் இருந்திருந்தால், நம் அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மேன்மையுற சட்டப் பிரிவுகள் நுழைக்கப்பட்டிருக்குமா என்பதே ஒரு கேள்விக்குறிதான்.

தாழ்த்தப்பட்ட சாதியினரும், மற்றும் பழங்குடியினரும் அரசியல் அமைப்புச் சட்டப்படி பாதுகாப்பு பெற்றிருந்தாலும், அவர்கள் வாழ்க்கை இன்றளவும் இன்னலுடன்தான் நகர்கின்றது. வானவில்லின் கோடியில் இருப்பதாகத் தென்படும் பொற்களஞ்சியம் மாயைபோல, அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான பாதுகாப்பும் மாயையாகவே உள்ளது என்று ஆசிரியர் கூறியிருப்பதில் நிறம்ப உண்மைகள் உள்ளன. பொருளாதார பாதுகாப்பின்மை, கல்வி அறிவின்மை, குறுகிய மதநோக்கு இவைகளே நம் சமுதாயத்தில் தீண்டாமை நிலவிட ஏதுக்களாகும் என்பதாக ஆசிரியர் கூறுகிறார்.

பல புத்தகங்களை ஆராய்ந்து, டுமோவின் கொள்கைகளும், அவற்றைப் பற்றிய ஜெரால்டு பெர்ரிமைன் விமர்சனங்களும், சிக்கலான இந்தியச் சாதிமுறை, இனம், சாதிக்கொள்கை சச்சரவு பற்றிய கருத்தினை புதிய நோக்கில் ஆழ்ந்து ஆராய உதவுவதாக ஆசிரியர் கூறியுள்ளார்.

சாதியின் பேரால் சமுதாயத்திற்கு இழைக்கப்படும் கொடூரங்கள் பீஹார், மத்தியப் பிரதேசம், அரியானா, குஜராத், மஹாராஷ்டிரம், தமிழ்நாடு மற்றும் சில மாநிலங்களில் வளர்ந்து வருவதாக, அதிகம் வெளியிடப்படாத உண்மை அறியும் குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து இப்புத்தகத்தில் தந்துள்ளது போற்றத்தக்கது.

கீழ் வெண்மணி கிராமம் தஞ்சைத் தொகுதியைச் சேர்ந்தது. இங்கு நடைபெற்ற கொடூர சம்பவங்களால் பாதிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் இதைப்போல் வேறு பல இடங்களில் நடந்த கொடுமைகள் இவற்றையெல்லாம் இப்புத்தகத்தில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இப்புத்தகத்தின் இரண்டாவது அதிகாரத்தில் பல அறிஞர்கள் கருத்துக்கள், ஏற்படுத்திய சட்டங்கள், எழுந்த இனக்கலவரங்கள், எடுத்த சட்ட நடவடிக்கைகள், அந்நடவடிக்கைகளின் முடிவுகள் இவைகளைப் பற்றிய குறிப்புகள் ஏராளமாக தரப்பட்டுள்ளன.

போலீஸ் (Police) என்பது கிரேக்க சொல்லான பொலிடேஸ் (Politace) என்பதிலிருந்து வந்தது என்பதைக் கூறி, இச்சொல் குடியுரிமை நிர்வாகத்தைக் குறிக்கும் என்பதாக விளக்கப்படுகிறது. குற்றியியல் நீதித்துறையின் ஓர் அங்கம் போலீஸ்: இப்போலீஸ், காவல்துறைச்சட்டம் 1861 என்ற அடிப்படையில் இயங்கி வருகிறது எனச் சொல்லி, தீண்டாமையை ஒழிக்க அரசியல் சட்ட விதிகளையும், போடப்பட்ட பல மத்திய, மாநில சட்டங்களையும் விரிவாக, தெளிவாக

XVII

இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியது. இவ்வளவு சட்டங்கள் இருந்தும் ஆறாவது ஐந்தாண்டு திட்ட ஆவணத்தின் கூற்றான "அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதலும், சட்டசபை, மற்றும் அரசுச் செயலகங்களின் முயற்சிகள் இருந்த போதிலும், பொருளாதார ஆதரவு இல்லாததால், தாழ்த்தப்பட்ட ஜாதி மற்றும் பழங்குடியினர் மேம்பாடு குறிப்பிடும் அளவிற்கு உயரவில்லை" என்பதை ஆசிரியர் இப்புத்தகத்தில் எழுதிக் காட்டியுள்ளார். இதோடு அமையாமல், எத்தகைய நிர்வாக அமைப்பு, நீதிமன்றங்கள் ஏற்பாடு, தனிப்பட்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு, அக்குழு ரகசியமாக புலனாய்வு செய்ய வேண்டிய கடமை, போன்ற யுக்திகளையும் ஆசிரியர் சிறப்பாக இப்புத்தகத்தில் வடித்துத் தந்துள்ளார்.

"பிறப்பால் மனிதன் சுதந்திர மானவன்
சமூக அமைப்பால் அவன் ஒரு கைதி — ரூசோ

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றமையால் — திருக்குறள்

இந்துக்களிடம் பொதுவாக நிலவிடும் ஓர் விநோதமான பழக்கம் தீண்டாமை. உலகில் பல பாகங்களில் வகுப்பு வேறுபாடு உள்ளது. ஆனால், இந்தியாவின் தீண்டாமை மத அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இத்தீய தீண்டாமை எண்ணத்தை ஒவ்வொருவர் மனத்திலிருந்து விரட்ட இராமலிங்க அடிகளார், பெரியார் போன்ற எண்ணற்ற சமூக சீர்திருத்தவாதிகள் தேவை.

இறையுணர்வை யாரும் குறைத்துப் பேச வேண்டியதில்லை. ஆனால், மனிதாபிமான பண்பற்ற தீண்டாமை போன்ற தீய செயல்களில் ஈடுபடுவோர், இறைநம்பிக்கை அற்றோர் என்ற பிரசாரத்தையாவது செய்யலாமே. திருப்பானாழ்வார், நந்தனார், கண்ணப்பர் இவர்களை போற்றிய எங்கள் மதம், சாதிமத மற்ற மதம், தீண்டாமை ஒழித்த மதம் என்று பேசுவதோடு அமையாது, சமுதாயத்தை, மனிதாபிமானத்துடன் பார்க்கும் சர்வசமய அடிப்படைக்கருத்துக்களைப் பரப்ப இளைஞர் சமுதாயம் முன்வந்தாலொழிய, சகோதரத்துவம் நிறைந்த ஒன்றுபட்ட இந்தியாவை காண்பதறிது. ஜாதிப்பிரிவினைகள், தீண்டாமை அழிய கடுமையான சட்டங்கள் தேவை. எவ்வளவுதான் சட்டங்கள் இருந்தாலும் அதனை செயல்படுத்தும் நிர்வாகம் அதற்கு உதவும் காவல்துறை இன்றியமையாதவை. அறிவற்ற சமுதாயம் சாதியைப் பிடித்துக்கொண்டு சாதிக் சண்டையிடுகின்றன. அறிவுள்ள உயர்தட்டுச்

சமுதாயம், சாதியை அழியாமல் மதத்தின் பேரால் காத்து, சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு மகிழ்கின்றன. இந்நிலை ஒழிய, இந்நூலாசிரியர் கூறுவது போல யாவரிடமும் பொருளாதார மேம்பாடு, கல்வியறிவு, அனைத்து மதங்களும் போதிக்கும் மனிதாபிமானத் தத்துவம் நிரம்பி வழிய வேண்டும்.

இப்படி பல்வேறு கருத்துக்களுடன் தீண்டாமை ஒழிப்பில், சட்டம், காவல்துறை எவ்வாறு பயனுற பணிபுரிய இயலும் என்ற நிலைகளை தெள்ளத் தெளிய விளக்கும் ஓர் சிறந்த எழுத்தோவியம் "தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை" என்கின்ற இந்நூல். படித்துப் பயனுற, மேலும் சாதி, தீண்டாமை ஒழிப்பில் புதுயுக்திகளைக் காண "படித்த சட்டமும், காவல்துறையும் பல்வேறு நிலைகளைக் கையாள பெரிதும் உதவும் புத்தகம் "தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை" எனும் இன்னூல். அவ்வரிய நூலை நாட்டிற்கு அளித்த ஆசிரியர் டாக்டர் இரவி ஆறுமுகத்தை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

(P.R.கோகுலகிருஷ்ணன்)

டாக்டர். பா. சிவந்தி ஆதித்தன்
இயக்குநர்
"தினந்தந்தி"
சென்னை

## அணிந்துரை

தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் பிற பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் சாதி வேற்றுமை இன்னும் இருந்து வருகிறது. சாதிகள் எப்போது தோன்றின என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. மனித இனம் தோன்றியபின், அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையில் சாதிகள் உருவாயின என்பது ஆராய்ச்சி—யாளர்கள் கருத்து.

உலகிலேயே நாகரிகம் மிகுந்த நாடாகவும், பெரிய வல்லரசாகவும் திகழும் அமெரிக்காவில் அடிமை வியாபாரம் சில ஆண்டுகள் முன் வரை செழித்தோங்கியிருந்தது என்றால், சாதி வேற்றுமையும், உயர்ந்தோர் — தாழ்ந்தோர் என்ற ஏற்றத்தாழ்வும் உலகம் முழுவதும் வேரோடியிருக்கிறது என்பதை எளிதில் உணரலாம்.

தமிழ்நாட்டில், சங்க காலத்திலேயே சாதிகள் இருந்திருக்கின்றன. தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த காரணத்தால், நந்தனார்கூட கோவிலுக்குள் நுழைய முடியவில்லை. கடவுள் அருளால்தான் அவர் ஆலயப்பிரவேசம் செய்ய முடிந்தது.

சுதந்திரத்திற்காகப் போராடிய மகாத்மா காந்தி, சாதிகள் ஒழிய வேண்டும் என்பதில் — குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம நீதி கிடைக்கவேண்டும் என்பதில் — ஆர்வம் கொண்டிருந்தார். அதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு "அரிஜன்கள்" (கடவுளுக்குப் பிரியமானவர்கள்) என்று பெயர் சூட்டி, கோவிலுக்குள் செல்லும் உரிமை அவர்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதற்காக, "அரிஜன ஆலயப்பிரவேசம்" நடத்தினார்.

தமிழ்நாட்டில் 1954—ல் ஆட்சிக்கு வந்த காமராஜர், ராஜாஜியின் "அரை நேரப்படிப்பு என்ற திட்டம் குலத்தொழிலை வளர்க்க வழி வகுக்கும் என்பதால் அதை ஒழித்துவிட்டு, புதிதாகப் பள்ளிக்கூடங்கள் திறக்க ஏற்பாடு செய்தார்.

ஏழை — எளிய மக்களும் கல்வி கற்று முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் காமராஜர் கொண்டுவந்த இலவச கல்வித்திட்டமும், இலவச மதிய உணவுத் திட்டமும் சாதியை ஒழிப்பதற்கு முன்னோடித் திட்டங்களாகத் திகழ்ந்தன என்று கூறலாம்.

பின்தங்கிய வகுப்பினரும், தாழ்த்தப்பட்டவர்களும் கல்வியில் முன்னேறிய, பெரிய உத்தியோகங்களுக்குச் சென்றால் "குலத்தொழில்" முறை படிப்படியாக ஒழிந்துவிடும் என்று காமராஜர் உணர்ந்திருந்தார். அவருடைய தொலைநோக்குப் பார்வை உண்மையாயிற்று.

தாழ்த்தப்பட்டவர்களிலும், பிற்பட்ட வகுப்பினரிலும் ஏராளமான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தோன்றி உயர் பதிவி வகிக்கிறார்கள். சாதி வேற்றுமை கணிசமான அளவு குறைந்திருக்கிறது.

எனினும் சாதி வெறி என்பது சமூகத்தில் புரையோடியிருப்பதால், அதை வெகு சீக்கிரத்தில் அடியோடு ஒழித்துவிடுவது சாத்தியம் அல்ல. குறிப்பாக கிராமப்புறங்களில் இன்னும் சாதி வேற்றுமைகளும், சாதிச்சண்டைகளும் அதிகமாக இருந்து வருகின்றன.

தமிழக காவல் துறை கூடுதல் இயக்குனராகவும், குற்றவியல் வழக்கு தொடர்வு இயக்ககத்தின் இயக்குனராகவும் பணிபுரியும் டாக்டர் ஆ.ஐ.இரவி ஆறுமுகம் ஐ.பி.எஸ் அவர்கள் எழுதியுள்ள "தீண்டாமை ஒழிப்பில் காவல் துறை" என்ற இந்த நூல், தமிழ்நாட்டில் காணப்படும் சாதி வேற்றுமையை ஆழமாக ஆராய்கிறது.

"தற்கால இந்தியாவில் சாதி ஒரு பெரும் புதிராகவே அமைந்துள்ளது. சாதி வேறுபாடுகள் எவ்வாறு ஆரம்பமானது என்பதே ஒரு புதிர்" என்று தொடங்கும் திரு. இரவி ஆறுமுகம் அவர்கள், சாதிகளால் ஏற்பட்ட இன்னல்கள், சாதி வேற்றுமைகளை ஒழிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், இதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள், அந்த குழுக்களின் அறிக்கைகள் முதலியவற்றை ஆதாரப்பூர்வமாகவும், புள்ளிவிவரங்களோடும் எடுத்துக்கூறுகிறார்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற தீண்டாமை சம்பந்தமான குற்றங்கள், காவல்துறையினர் எடுத்த நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய விவரங்கள் பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. இரவி ஆறுமுகம் அவர்கள், "டாக்டர் பட்டம் பெறுவதற்காக சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளின் நூல் வடிவம் இது. ஏராளமான புத்தகங்களைப் படித்து, அவற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டியும், புள்ளி விவரங்களைச் சேகரித்தும் இந்தக் கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார்.

நூலைப்படிக்கும்போதும், இதிலுள்ள நுட்பமான விவரங்களைக் காணும்போதும், இதை உருவாக்க அவர் எவ்வளவு அரும்பாடு பட்டிருக்கிறார் என்பது புரிகிறது. சாதிகள் பற்றியும், அது தொடர்பான

குற்றங்கள் குறித்து காவல் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் இவ்வளவு விரிவான நூல் தமிழில் இதுவரை வெளிவந்த தில்லை.

காவல் துறைகளில் சிறந்த அதிகாரி என்று புகழ் பெற்று விளங்கும் திரு.இரவி ஆறுமுகம் அவர்கள், எழுத்தாற்றல் மிக்கவர். ஏற்கனவே சில அரிய நூல்களை எழுதியுள்ளார்.

அவருடைய சிறந்த ஆராய்ச்சிக்கும், எழுத்தாற்றலுக்கும் எடுத்துக் காட்டாக, “தீண்டாமை ஒழிப்பில் காவல் துறை” என்ற இந்த நூல் திகழ்கிறது.

இதுபோல மேலும் பல சிறந்த நூல்களை எழுதி தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்ற திரு. இரவி ஆறுமுகம் அவர்களை வாழ்த்துகிறேன்.

சென்னை
29—8—2002 (டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன்)

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | தமிழ் நூல்கள் | 25 |
| 3. | தீண்டாமை தோற்றம் செயல்பாடு, வளர்ச்சி | 37 |
| 4. | சாதிகளும், சாதிச் சண்டைகளும் தீண்டத்தகாதோர் மீது அவற்றின் பாதிப்பும் | 54 |
| 5. | தீண்டாமையை ஒழிக்க அரசியல் அமைப்புச் சட்டமும், பிற சட்டப் பாதுகாப்புகளும், சமூகப் பொருளாதார நடவடிக்கைகளும் | 83 |
| 6. | தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக்குழு | 103 |
| 7. | குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும், காவல் துறையின் தீண்டாமை ஒழிப்பும் | 123 |
| 8. | முடிவுரை | 156 |
| 9. | இணைப்புகள் | 169 |

# அறிமுகம்

தற்கால இந்தியாவில் சாதி ஒரு பெரும் புதிராகவே அமைந்துள்ளது. சாதி வேறுபாடுகள் எவ்வாறு ஆரம்பமானது என்பதே ஒரு புதிர். இதில் உள்ள எண்ணற்ற குழப்பங்கள் இந்தியச் சமுதாய அமைப்பை அறிந்துகொள்ள முயல்வோரையும் குழப்பமடையச் செய்கின்றன. காலங்காலமாக நம் சமுதாய அமைப்பில் ஊடுருவி நீக்கமறப் புரையோடிப்போய் இருக்கும் கொடிய நோய் தீண்டாமையாகும். ஆனால் இயல்பான சமுதாய வளர்ச்சியில் வளர்ந்து வந்த ஒரு கூறாக இது இருக்க முடியாது. சாதி வேறுபாடுகள் அடிமைத்தனத்தை வலிந்து புகுத்திய கருவியாகும். சட்ட விரோதமான கீழ்த்தரமான வெறுப்புணர்வுகள், வெளிப்படையான சமுதாய—பொருளாதாரப் பிரிவினைகள் சாதியை நிலை நிறுத்துகின்றன. இந்தியச் சமூகப்பட அமைப்பிலிருந்து முழுமையாக ஒழிக்கப்படவேண்டிய சமூகக்கேடு சாதியாகும். தீண்டத்தகாதோர் அடிமைப்படுத்தப்பட்டோராவர். கடந்த நூற்றாண்டில் தீண்டத்தகாதோர் உண்மையான சமூகமுன்னேற்றம் பெற்றிருப்பினும், இன்றும் அவர்கள் அடிமைப்பட்டே உள்ளனர் என்பதற்குப் பொதுவாக மூன்று காரணங்களைக் கூறலாம்: ஒன்று, தீண்டத்தகாதோரிடையே இன்றளவும் நிலவிவரும் அளவற்ற ஏழ்மை. இந்திய மக்கள் தொகையில் அவர்கள் ஒரு மாபெரும் பகுதியாக உள்ளனர். ஆனால் அவர்களது சொத்து, சுகம், சமூக அந்தஸ்து, கல்வி, சுகாதாரம், பண்பாடு ஆகிய கூறுகளில் இந்து சமுதாயத்தின் கீழ் மட்டத்திலேயே இன்றும் உள்ளனர். இரண்டாவதாக வாழ்க்கை வசதி, சமூகச் சேவை ஆகியவற்றைச் சமுதாயத்திலிருந்தோ அரசிடமிருந்தோ பெறுவது முதல் அவ்வப்போது நிகழும் மனிதநேயமற்ற வன்முறைகளுக்கு ஆளாகிடும் நிலை வரை அவர்கள் பாரபட்சமாகவே நடத்தப்படுகின்றனர். ஏழைகளுக்கே உரித்தான இன்னல்களோடு சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பதாலும் பலவித இன்னல்களை அனுபவிக்கின்றனர். மூன்றாவதாகத் தாங்கள் இந்து சமுதாயத்தில் மிகத்தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் என்று அவர்களிடையே பரவலாகக் காணப்படும் எண்ணமும் அவர்களைப் பிற இந்து சமூகத்தினரிடமிருந்து பிரிக்கின்றது. இதனால், அவர்கள் தனிமையான

அரசியல் குழுக்களாகக் கூடிச் செயல்படுவது தொடர்ந்து நிகழும் ஒரு நிகழ்ச்சியாக அமைவது குறிப்பிடத்தகுந்தது.

சட்டப்படி தீண்டத்தகாதோர் என்னும் தனிப் பிரிவினர் இந்திய சமுதாயத்தில் கிடையாது. 1950—லிருந்து இந்திய அரசியல் சட்டம், தீண்டாமை ஒழிக்கப்படுவதாகவும் தீண்டாமையைக் கடைப்பிடித்தல் குற்றமெனவும் கூறுகின்றது. ஆனால் இது பொதுவான சட்ட விதிமுறையை ஏற்படுத்தும் கூற்றே அன்றிச் சமுதாய நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும் விதியன்று. மேலும் இவ்வரசியல் சட்டம், சாதிப் பட்டியலை முறைப்படுத்தி, அவ்வழிச் சாதீயச்சட்ட அடிப்படையில் நீதி வழங்கும் நெறி முறைகளைப் பற்றிப் பேசுவதால் தொடரும் தீண்டாமைப் பிரச்சினையை அரசியல் சட்டமே உறுதிப்படுத்துகிறது எனலாம். 1936—இல் "இந்திய அரசியல் சட்டம்" இயற்றப்பட்டதிலிருந்து 'தீண்டாமை' என்ற இச்சொல் பழக்கத்தில் இருந்து வருகிறது.

"சமுதாயத்தில் உள்ள அமைப்புக்களையும், சமுதாயக் கருத்துக்களையும் மாற்றிடவும் நம் சமுதாய வேர்களைக் கருகிடச் செய்யக் கூடியதுமான சக்தி வாய்ந்த ஆர்ப்பாட்டமான மாற்றத்தின் வேகம் கோடிக்கணக்கான இந்திய மக்களை விட்டுவைக்கவில்லை. வழிவழி வந்த இந்து சமுதாய மரபு பலகோடிப்பேரைத் தீண்டத்தகாதோர்களாக்கி அடிமைப்படுத்தியே வைத்துள்ளது. வரலாற்றின் சக்தி இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுத்தது; மனித சுதந்திரத்திற்கான போராட்டம் இந்தியர்களுக்குச் சுதந்திரம் கொடுக்கின்றது. சாதிமுறைகளும் நிறப்பிரச்சினைகளும் சமுதாயத் தீமைகள் மட்டுமல்லாது, பொருளாதாரப் பின்னடைவுகளையும் அரசியலில் ஒதுக்கப்படுவதையும் குறிப்பிடுகின்றன. நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லையானாலும், பின்னடைவு ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது. சாதி, இனப் பேதமற்ற மக்களாட்சி முறை நம்மை பங்கீட்டு விதியை நினைக்க வைக்கிறது. நீதிபதி V.R. கிருஷ்ணய்யர் கூறுவது போல், மெதுவாக ஆனால் உறுதியாக வளர்ந்து வரும் பிற்பட்ட இந்திய மக்களைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி, கடந்த காலப்போக்கினைக் கூர்ந்து அறிவதற்கும், புதிதாக உருவாகி வரும் போக்கினைத் தெரிந்து கொள்வதற்கும், பழைய அமைப்பிலிருந்து அது எவ்வாறு மாறுபடுகின்றது என்பதை உணர்வதற்கும் வழிகாட்டுவதாகும்."2

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் இடம்பெறும் மக்கள் பெருவாரியாகவே உள்ளனர். அநியாயமாக இவர்கள் தீண்டத்தகாதோர் என்று அழைக்கப்படுகின்றனர். நம் நாட்டில் ஏற்பட்டுவரும் சமுதாயப் புரட்சியை உய்த்துணர்வதற்கு, இவர்களின் கொத்தடிமை வாழ்க்கையை ஒழிப்பதற்காகப் பின்பற்ற வேண்டியுள்ள கடினமான வகைமுறைகளையும், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இன்றைய சமுதாய மாற்றங்கள், மனித உரிமைகளுக்குப் போராடும் ஆர்வம், துணிச்சல், அவர்கள் நலனுக்காகப் பெற்றிடும் புதிய வெற்றி முதலியன பற்றிய ஆராய்ச்சிகள் தேசிய முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தகைய தேசீய முக்கியத்துவம் வாய்ந்த இவ்வினப்பிரச்சினை, இங்கு வரலாறு, சமூகம், சொற்பொருள்வாதம் (diabbetical) மற்றும் எதிர்கால நோக்குகளில் ஆராயப்படுகிறது. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினரிடையே இன்று நிலவிவரும் இப்பிரச்சினைகளை முடிப்பதற்காகப் போராடுவது, தேசிய அமைப்பில் தங்கள் பங்கினைச் சரியாகச் செய்திடும் முறைமையில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டி உற்சாகப்படுத்துதல் ஆகியன பற்றியதே இவ்வாய்வின் பகுதிகளாகும்.

'சமூகக்குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அடிப்படையில் தீண்டாமை ஒழிப்பில் காவல்துறையின் பங்கு' பற்றிய இவ்வாராய்ச்சி மிக விறுவிறுப்பான ஒன்றாக இருந்தாலும், நிறைய இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளது. இதில் உள்ள சிக்கல்களே பொருளாதார நிபுணர்களையும் சமூகவியலாளர்களையும், அரசியல்வாதிகளையும் ஆதிக்கவர்க்கத்தினரையும் இதில் கருத்தூன்றிக் கவனம் செலுத்தத் தூண்டுகின்றன. இது உலகப் பொதுப் பிரச்சினையாக இருந்தாலும், இது இந்தியாவில் மிகவும் நூதனமான போக்கைக் கொண்டுள்ளது. இப்பிரச்சினை யாவராலும் அறியப்பட்டதொன்றாகவும், சிலரால் புரிந்துகொள்ளப்பட்டதாகவும், பலரால் பேசப்பட்டதொன்றாகும். அன்றும் இன்றும் தீண்டாமையை ஒழிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டே இருக்கின்றன.

இதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்துச் நல்ல சில ஆராய்ச்சிகள் வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளன. ஆனால் அவற்றின் பெரும்பகுதி ஒரு சில கல்வியாளர்களிடமும் சாதாரணமான தனி மனிதர்களிடமும், குழுக்களின் பரிந்துரைகளிலும்

புதைந்து கிடக்கின்றன. கற்றறிந்தோர் கூட இதன் மதிப்பை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. எனவே தாழ்த்தப்பட்ட இனம் மற்றும் பழங்குடியினரிடையே இடம் பெறும் சாதி இந்துக்களின் இன்னல்களையும் அதனால் அவர்கள் அடையும் பாதிப்பையும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதும், அவற்றைத் தடுப்பதில் காவல்துறை ஆற்றிய பங்கினை எடுத்தியம்புவதுமே இவ்வாராய்ச்சியின் நோக்கமாக அமைகின்றது.

'சமூகக்குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அடிப்படையில் தமிழ் நாட்டில் தீண்டாமை ஒழிப்பில் காவல்துறையின் பங்கு' பற்றிய இவ்வாய்வில் தீண்டாமை, தீண்டாமை ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புத் திட்டங்கள், தீண்டத்தகாதோரின் இன்னல்கள் போன்றவை கருத்தில் கொள்ளத்தக்கன. இதில் 1955—லிருந்து குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமானதொன்றாகும். தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை எவ்வளவு தூரம் பங்கேற்றுச் செயல்பட முடியுமென்பதை அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி காவல்துறைக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் சாதனங்களையும் கொண்டு எந்த அளவு தீண்டாமையைக் காவல்துறை ஒழிக்க முடியும் என்பதைக் கண்டறிவதும் இதன் நோக்கமாகும்.

தீண்டத்தக்கது அல்ல என்பதே தீண்டாமையாகும். அதாவது பிறரைத் தீண்டவோ பிறரால் தீண்டப்படவோ முடியாதவன், தகுதியற்றவன் என்று பொருள்படுகிறான். எல்லோரும் சமத்துவ உணர்வோடு வாழவேண்டிய மனித சமுதாயத்தில் மட்டுமே இத்தகைய பிரிவுகளும் வேறுபாடுகளும் நிலவுகின்றன. மற்றைய உயிர்வாழ் இனங்களிடையே இவ்வகைச் சாதிவேறுபாடுகள் காணப்படுவதில்லை. தீண்டாமையின் தோற்றமும் வளர்ச்சியும் போன்றவற்றிற்கான விரிவான விளக்கங்கள் இவ்வாய்வின் இரண்டாம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

அன்று முதல் இன்று வரையிலான வரலாற்றைப் புரட்டினாலே தீண்டாமை பற்றிய விவரங்களையும் அதை ஒழிப்பதற்குத் தனியாரும், சமூகமும், தனிப்பட்ட அமைப்புகளும் அரசாங்கமும் மேற்கொண்ட முயற்சிகளையும் அறிந்து கொள்ள முடியும். இருந்தாலும் தீண்டாமை

முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டதெனக்கருத முடியாது. இந்தியச் சமூக அமைப்பில் ஒரு வழியில் தீண்டாமை ஒழிக்கப்படுகிறபோது மற்றொரு வழியில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது. இதில், தனிப்பட்டோர், தனிப்பட்ட அமைப்புகள் அரசாங்கம் ஆகியவற்றின் முயற்சிகள் எதிர்பார்த்த விளைவை அடையவில்லை.

இந்தியா சுதந்திரமடைந்த போது, குறிப்பாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியபோது, சாதி, இன மத அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீண்டாமையை ஒழித்திட என்ன செய்தனர் என்பதைப் பற்றிய சிந்தனைக்கு இங்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவரான, தீண்டத்தகாதோரின் தன்னிகரற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார் அரசியல் அமைப்புச் சட்டக் குழுவின் ஒப்புதலுடனும், பிற தலைவர்களின் நல்லாசியுடனும் தீண்டத்தகாதோருக்கான சில சரத்துக்களை 1950—இல் இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டத்தில் இணைத்துள்ளார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்கள் இப்பிரச்சினையை விவாதிப்பதற்கு ஏதாவது ஒரு வழியில் அல்லது மாற்று வழியில் பயனுள்ளதாகவும் உள்ளன. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் தீண்டாமை பற்றியனவாகவே உள்ளன. இவைபோன்றே பிற சட்டச் சரத்துக்களும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தொடர்பாகவே உள்ளன. இயல் IV—இல் இச்சட்டச்சரத்துக்கள் பற்றி விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தீண்டாமையின் மையப்பிரச்சினைகள் பற்றிய முக்கியச் சரத்துக்கள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. சரத்து 17 தீண்டாமை ஒழிப்பும் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதைத் தடைசெய்தலும்.
2. சரத்து 17(2)(b) பொதுவான இந்துமத அமைப்புகளை எல்லாச்சாதிப் பிரிவினரும் பயன்படுத்தத் திறந்து விடுதல்.
3. சரத்து 46, 46(A) தீண்டாமைக் குற்றம், குற்றங்கள் பற்றியும் வேறு சில சட்டதிட்டங்களையும் கொண்டுள்ளது.

இச்சரத்துக்களை ஆதாரமாகக் கொண்டு 1955—இல் "தீண்டாமைச்(குற்றச்) சட்டம் 1955" என்றதோர் சட்டத்தை இந்திய பாராளுமன்றம் இயற்றியது. தீண்டாமை பற்றிய மேலும் பல சரத்துக்களைச் சேர்க்கும் பொருட்டு 1976—இல் ஒரு மாற்றுத் திருத்தல் சட்டம் இயற்றப்பட்டது. அது 1976, நவம்பர் 19—ஆம் தேதி முதல் அமுலுக்கு வந்தது. இதுவே குடியுரிமைப் பாதுகாப்புச்சட்டம்—1955 என்று மாற்றிப் பெயரிடப்பட்டது. அதில் உள்ள சரத்துக்கள் தீண்டாமை ஒழிப்பில் மத்திய மாநில அரசுகள் செயல்பட வேண்டிய வழிமுறைபற்றியதாகும். அரசியல் சட்டச் சரத்து 338—இன் படி அமைக்கப்பட்ட "தாழ்த்தப்பட்டோர் தேசியக் குழு (National Commission For S.C./S.T.), மத்திய மாநில அரசுகளின் தீண்டாமை ஒழிப்புச் செயல்பாடுகள் பற்றி ஆண்டறிக்கை ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சமூக உரிமைகள் பாதுகாப்புச்சட்டப் பிரிவின்படி (The Protection of Civil Rights Act) (15) (A)(4) காவல்துறைத் துணைத்தலைவர் (Deputy Inspector General of Police) பதவியில் உள்ள ஒரு அதிகாரியின் கீழ், உள்ளாட்சித் துறை சார்பாக (Home Ministry) சமூக உரிமைகள் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது.

இத்தகைய தீண்டாமை ஒழிப்புச் சட்டவியல் பற்றிய அறிவு இங்கு இன்றியமையாத ஒன்று. இவ்வழி தீண்டாமை பற்றி முழுமையாகவும் விரிவாகவும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும். இதன் மூலம் தீண்டாமையின் இன்றைய நிலை, தீண்டாமை ஒழிப்பு முயற்சிகளில் உள்ள குறைகள், இடர்ப்பாடுகள், இத்தகைய கீழான சமூகப் பழக்கவழக்கத்தில் அரசாங்கம் குறுக்கிட வேண்டியதின் அவசியம், தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை எந்த அளவிற்கு அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உதவக்கூடும் என்பன போன்ற பல்வகைக் கருத்துக்களை வெளிக்கொணர முடியும்.

காவல்துறைக்கு வந்துள்ள தீண்டாமை பற்றிய சில முக்கிய வழக்குகள் பற்றி எடுத்துரைப்பதன் மூலம் இவ்வகைக் குற்றங்களின் அவலங்கள், விளைந்திடும் கொடுமைகள் பற்றி விளக்குவதே இந்நூலின் மூன்றாவது இயலின் நோக்கம்.

*தீண்டாமை பற்றிய நூல்கள்: ஒரு பார்வை*

இவ்வாராய்ச்சி தொடர்பான சில நூல்கள் பற்றிய ஒரு பறவைப் பார்வை இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அச்சிடப்பட்ட, அச்சிடப்படாத தமிழ்,

ஆங்கில நூல்கள் நிறையவே இப்பட்டியலில் இடம் பெறுகின்றன.

*சாதிகள் – ஓர் ஆய்வு*[1]: (A Study of Caste)

சாதிகள் பற்றிய அனைத்து விவரங்களும் இதில் உள்ளன. சாதியின் பல்வேறு தன்மைகள் தோற்றம், வளர்ச்சி, வகைகள், பழக்கவழக்கங்கள் அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் போன்றவை பற்றி இந்நூல் விளக்குகிறது. இந்திய சமுதாயத்திற்கே உரித்தான இந்தச் சாதி முறைகளால் இந்தியாவிற்கு யாதொரு மதிப்பும் கிடையாது. இந்தியாவின் பேரும் புகழும் சாதிமுறைகளை ஒழிப்பதில்தான் உள்ளது என்பது இவ்வாசிரியரின் கூற்று.

*ஓர் இந்தியச் சாதிமுறை– ஆய்வு*[2]:

இது எழுபத்தேழு பக்கங்களைக் கொண்ட ஒரு சிறுநூல், முதல் அத்தியாயத்தில் சாதிகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாற்று விவரங்களையும் அவை பற்றிய அறிஞர் பலரின் கருத்துக்களையும் இதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சாதி முறைகள் பற்றிய பொதுவான கொள்கை விளக்கங்களை ஆசிரியர் ஆய்ந்துள்ளார். பிராமணியம் பற்றியும் மற்ற சாதிவகைகளான சத்திரியன், வைசியன், சூத்திரன் பற்றிய பாகுபாடுகளையும் ஆராய்ந்துள்ளார். ஆனால் தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைகளின் முக்கியத்துவம் பற்றியோ, தீண்டாமை ஒழிப்புப் பற்றியோ இவர் எதுவும் கூறவில்லை.

*தீண்டாமை அரசியல்*[3]:

ஆக்ரா நகரில் வாழ்ந்துவரும் ஜாதார்(JATARS) இனத்தவர் பற்றிய நூல் இது. அவர்களின் வாழ்க்கை முறை, புதிய இனங்காணலில் அவர்களின் முயற்சி (Quest for new identities) ஏழ்மையிலும் அவர்களின் முன்னேற்றம், நகரத்திலும், தேசத்திலும்

1. லக்சுமி நரசு, P. ஏசியன் எஜுகேஷனல் செர்விஸஸ், C/2/15 S.D.A. நியூ டெல்லி. முதற் பதிப்பு 1922. மறுபதிப்பு 1988.

2. ஹவவாதன ராவ், C. ஏசியன் எஜுகேஷனல் செர்விஸஸ், C. 2/15 S.D.A. புதுடெல்லி. முதற்பதிப்பு 1931. மறுபதிப்பு 1988 ரூ.65/-

3. ஓவன் M.லிஞ்ச் (Owen M.Lynch) நேஷனல் பப்ளிசிங் ஹவ்ஸ், 23.தார்வ காஞ்ச், புதுடெல்லி—110 006. 1974.

புதிய குடியுரிமைக்கான (Citizenship) அவர்களின் ஆரம்பகால முயற்சிகள் போன்றவை பற்றி இந்நூல் விவரிக்கின்றது. ஆக்ரா நகர்வாழ் சாமராக்கள் (Comaros) தங்களுக்காக மட்டுமின்றி இந்தியச் சமுதாயத்திற்காகவும் நாகரீகத்திற்காகவும் ஓவன் லிஞ்ச் (Owen Lynch) மூலம் குரல் கொடுக்கின்றனர். மேலும், உலக நகர்ப்புற நாகரீக வளர்ச்சிக்கும் (World Urbanisation) அரசியல் முன்னேற்றத்திற்கும் ஏற்றத்தாழ்வு மிக்க கட்டமைப்புக்களின் உலகளாவிய சமூகக் கொடுமைகளுக்கும் (Universal Stringencies of Social Stratification) தங்களின் சமுதாயக் குழுக்கள் (groups), தனித்துவநிலை (identities) ஏழ்மை, ஆசைகளுக்கும் இவர் மூலம் தங்கள் எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்துகின்றனர். இதில் பண்பாட்டு மானுடவியல் (Cultural Anthropology) சமூகவியலுடனும் (Sociology) அரசியலுடனும் இணைந்து செல்கின்றது. பொருளாதாரம் மற்றும் வரலாற்றுத் துறைகளைச் சற்றுக் குறைவாகவே தொட்டு நிற்கின்றது.

*ஒதுக்கிவைத்தலும் தீண்டாமை ஒழிப்பும்*[1]

குறிப்பாக இந்தியாவில் உள்ள ஒதுக்கிவைத்தல் பற்றியும் தீண்டாமை ஒழிப்பு பற்றியும் விரிவான விளக்கத்தை இந்நூலில் கொடுத்துள்ளார் இவ்வாசிரியர். இதில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நிலவிடும் இத்தகைய பாகுபாட்டு நிலை பற்றியும் குறிப்பிடுகிறார். ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள அரசியல் அமைப்புச் சட்டம், நடைமுறையில் உள்ள சட்டம், அவ்வப்போது இயற்றப்பட்ட சட்டம், நீதித்துறை ஆகியவற்றில் தீண்டாமைக்கெதிரான திட்டமுறைகளையும் தீர்வுகளையும் சிறப்பாக இந்நூல் விளக்குகிறது. அதிகமாக தீண்டாமைத் தடுப்புச் சட்ட அமுல் பற்றியே பேசுகின்றது இந்நூல். இந்து சமூகப் பிரிவுகளாகிய பிராமணன், சத்திரியன், வைசின், சூத்திரன் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது.

*மாறிவரும் சாதி வரன்முறைகள்*[2]

வளர்ந்து வரும் இந்தியாவில் உள்ள சாதிப் பாகுபாடுகள் பற்றிய நவீன ஆராய்ச்சி இலக்கியத்திற்கு டாக்டர் யோகேஷ் ஆதல் என்பாரின் சிறப்பான சேவை இப்புத்தகம் மத்தியப்பிரதேசக் கிராம மக்களின்

1. (Segregation and untouchability Abolition)

மங்கல் சந்திர ஜெய்ன் காஸி (Kagi) மெட்ரோபாலிட்டன் புத்தகக் கம்பெனி (பிளா) லிமிட்., 1,நேத்தாஜி சுபாஸ் மார்க், நியூடெல்லி—110 002. 1976, ரூ.50/—

2. (Changing Fronters of Caste)

யோகேஷ் அதல். நேஷனல் பப்ளிசிங் ஹவ்ஸ், 23,கார்வார் காஞ், புதுடெல்லி—110 002, 1976, ரூ.60/—

இனம் பற்றி K.S. மதுாரும், அட்ரியன் மேயரும் செய்துள்ள ஆராய்ச்சி நூலுக்கு இந்நூல் துணை நூலாகின்றது. குறிப்பாக, பல்வேறு இடங்களில் உள்ள சாதிமுறை வேறபாடுகளை அறிந்து கொள்ள முடிகின்ற தனியொரு சாதியைச் சமூக அமைப்பின் ஒரு அங்கமாகக் கொண்டு, அவ்வங்கங்களும் அமைப்பும் (Units & System) எவ்வாறு செயல்படுகின்றன என்பதை இவர் ஆய்ந்துள்ளார். சாதிப்பிரிவுகளின் தன்மைகளை வகுத்துக் கொடுத்துள்ளார். மாறிக்கொண்டிருக்கும் சாதித் தன்மைகளையும் அதனால் உண்டாகும் விளைவுகளையும் இவர் ஆய்ந்துள்ளது மிகவும் பயனுடையது. நகரவாழ்வு (Urbanisation) தொழில், கல்வி வெகுஜனத் தொடர்பு முறைகள் விரிந்து வளர்கையில் சமூக மாற்றங்கள் மிகவும் பின்னடைந்து விடவில்லை. இதுவரையில் மாற்றத்திற்குட்படாதிருந்த சாதி முறையில் சமுதாயத்தின் பிற மாற்றங்கள் ஒரு விளைவை ஏற்படுத்தி உள்ளன என்பது குறிப்பிடத்தகுந்தது என்று இந்நூலுக்கு முகவுரை எழுதியுள்ள துபே (Dube) கூறுகிறார்.

*தீண்டாமை:*

"இந்நூல் கி.பி.2000 வரை தமிழ்நாட்டில் உள்ள தீண்டாமை பற்றியே ஆய்ந்திடினும் இந்தியச் சமுதாய வரலாற்றின் பல்வேறு தன்மைகளையும் முழுமையாகக் காட்டுகிறது. வடஇந்தியாவில் நிலவிடும் தீண்டாமையைப் பற்றிய பழம்பெரும் ஆவணங்களை இவ்வாசிரியர் நுட்பமாக ஆய்ந்துள்ளார். அவற்றில் தீண்டாமையின் தோற்றம் பற்றிய சில புதிய கருத்துக்களையும் கொடுத்துள்ளார். முடிவாகத் தீண்டாமை என்பது வடபுலத்தின் பாதிப்பில் தமிழ் மக்களிடையே தோன்றிய ஒரு பழக்கமே என்பதைச் சற்றே உறுதிபடக் கூறுகிறார். தென்இந்தியச் சமூக நிகழ்வான வலங்கை—இடங்கைச் சாதிகள் என்பதற்கு வினோதமான விளக்கத்தையும் கொடுத்துள்ளார். தீண்டாமையை வரலாற்று முறையில் ஆய்வதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. எனினும் இத்தலைப்பை முயன்று ஆய்ந்துள்ள இந்நூல் உண்மையிலேயே தனித் தன்மையுடைய மிக முக்கியமான நல்லாய்வாகும்" என்று இந்நூலுக்கு முகவுரை வழங்கியுள்ள பேரா.A.L. பாஷ்யம் கூறுகிறார்.

1. குறிப்பாக ஆரியப் பண்பாட்டின் தாக்கத்தால் கி.பி.1500 வரையிலான ஒரு வரலாற்று ஆய்வு(குறிப்பாகத் தமிழ்நாட்டில்) டாக்டர் ஹனுமந்தன், K.R. கூடல் பதிப்பகம். 121, கிழக்குமாசித்தெரு, மதுரை—625 001. 1979, ரூ.25/—

இந்நூலின் பிற்சேர்க்கை—1இல் தற்கால இந்தியாவில் தீண்டத் தகாதோரின் இயலாமை என்னும் ஒரு பகுதியையும் சேர்த்துள்ளார். ஆனால், தீண்டாமையை எதிர்த்திடவோ அல்லது ஒழித்திடவோ எந்த வழிவகைகளையும் இவர் முன்வைக்கவில்லை.

*ஒரு அடிமைச்சாதியின் எழுச்சி*[1]:

இது கேரள மாநிலத்தில் உள்ள மிகப்பெரிய இனமான புலையர்களைப் பற்றிய ஓர் ஆய்வாகும். ஆயிரக்கணக்கான தீண்டத்தகாதோர்களை அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்திய இந்து சமுதாய அடுக்குகளைப் பற்றிய முக்கியமானதோர் ஆய்வுநூல். இதில் ஆசிரியர் இரண்டு சிக்கல்களைமுன் நிறுத்துகிறார். ஒன்று, அன்றைய இருண்டகாலம் முதல் இன்று வரையில் ஒரு அடிமையினம் எவ்வாறு எழுச்சியுற்று நிற்கின்றது என்பது. மற்றது சமூக, பொருளாதார நீதிகள் எந்த அளவுக்கு இந்தக் கீழ்மட்ட மக்களைச் சென்றடைந்துள்ளன என்பது. கேரளாவில் உள்ள பிற விவசாயச் சமூகத்தினருடனும், நிலச் சுவான்தார்களாகவும் நிலம் முழுமையையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நம்பியார், நாயர் இனத்தவருடனும், தங்கள் போராட்டத்திற்கு உற்ற துணையாக நிற்கும் ஈழவர்களுடனும் புலையர்கள் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பை இந்நூல் சித்திரிக்கின்றது. விரிந்து வரும் விஞ்ஞான முறையில் நிபுணர்களால் செய்யப்படும் சமூகவியல் ஆய்வில் இந்நூல் குறிப்பிடத்தகுந்தது. எழுச்சி இயக்கங்கள், விவசாயிகள் போராட்டம், சமூகச் சீர்த்திருத்தங்கள், விடுதலைப் போராட்டங்கள் முதலியனவற்றையும் அவற்றால் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் இந்நூல் சிறப்பாக ஆராய்ந்துள்ளது.

பல்வேறு போராட்டங்கள், இயக்கங்கள் மூலம் உருவாக்கப்பட்ட நிர்ப்பந்தங்களையும், அடிப்படைக் கொள்கை மாற்றங்களையும், முன்னேறிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே அகன்று வரும் இடைவெளியைக் குறைப்பதற்கான, சமாதானமுயற்சிகளின் தோல்விகளையும், அம்முயற்சிகளில் உள்ள குறைபாட்டினையும் இந்நூல் தெளிவாகக்காட்டுகிறது.

1. (Emergence of a Slave Caste)

கேரள மாநிலப் புலையர்கள்: சாரதாமணி, K. பியூப்பில்ஸ் பப்ளிசிங் ஹவுஸ்(பி) லிமிட்., ராணிஜான்சி ரோடு, புதுடெல்லி— 110 055. 1980, ரூ45/—

*சிறுபான்மையோர், மற்றும் தாழ்த்தப்பட்ட இனமக்களின் பாதுகாப்பு* [1]

தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும் சிறுபான்மையோருக்குமான பாதுகாப்புப் பற்றிய மிகச் சுவையான, பொருள் பொதிந்த நூல் இது. சில சிறுபான்மை இனங்கள் சட்டபூர்வமான சிறுபான்மை நிலையைத் (Minority Status) தங்களுக்குப் புகலிடமாகக் கொண்டு அரசாங்கத்துடனோ, அல்லது பெரும்பான்மை இனத்தாருடனோ ஒத்துப் போகாதது பற்றி விமர்சித்துள்ளார் இதன் ஆசிரியர். பெரும்பாலும் மக்களின் உரிமைகள்—கடமைகள் பற்றியும் சட்டங்கள் பற்றியும் மக்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய காரியங்கள் பற்றியும் இந்நூலில் விவாதிக்கின்றனர். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 (PCR Act 1955) தீண்டாமைக் குற்றத் திருத்தச் சட்டம் மற்றும் பிறவகையான சட்டங்கள் (The untouchability offences Amenment and Miscellaneous Provisions Act-1976) குற்றவியல் மற்றும் தேர்தல் சட்டத் திருத்தம், 1989(Criminal and Election law Amendment Act 1989) ஆகியவற்றின் கருத்துக்களையும், அரசியல் அமைப்புச் சட்டம் நல்கிடும் பாதுகாப்புப் பற்றியும் மட்டுமே ஆசிரியர் இதில் சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

தனிமனித சுதந்திரத்திற்கான சிறந்த மதிப்பும் பாதுகாப்பும் தெளிவான மக்களாட்சியில் தான் கிடைக்கும் என்பது இந்த ஆசிரியரின் கருத்து. பிரதிநிதித்துவப்படி ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட பாராளுமன்றம், நடுநிலைமையோடு சட்டத்தை அமுல் செய்யக்கூடிய அமைப்பு, கற்றுணர்ந்த காரியங்களைப் புரிந்து கொள்ளும் திறன் கொண்ட வாக்காளர்கள், சரியான நெறிமுறையில் செயல்படும் வானொலி, தொலைக்காட்சிச் சாதனங்கள், கற்ற பொதுமக்களின் கருத்துக்கள் மக்களாட்சி சிறப்புர இன்றியமையாத கூறுகள் என்பனவற்றை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

*தென்இந்தியச் சாதியும் பழங்குடிகளும் :* [2]

இத்தொகுப்பு வரலாற்று நோக்கும் மானிட இயல் நோக்கும் கொண்டு, தென்னிந்தியச் சாதி மற்றும் பழங்குடியினர் பற்றிய மாபெரும்

1. (Protection of Minorities and Sclheduled Castes)
கோஷ் S.K. அசீஸ் பப்ளிசிங் ஹவ்ஸ், H-12, ராஜவ்ரி கார்டன், புதுடெல்லி—110 027, 1980.

2. தொகுப்பாசிரியர்கள் எட்கார் தர்ஸ்டன் (Edgar Thurston) ரெங்காச்சாரி R. ஏசியன் எஜுகேஷனல் செர்விஸஸ் C—2/15, S.D.A, PB.No.4534 புதுடெல்லி—16 முதல்பதிப்பு:1909 மறுபதிப்பு:1987 தொகுதி—I முதல் VII ரூ.195/—

ஆராய்ச்சியாகும் இத்தொகுப்பு. தமிழக மக்கள் தொகை கணக்கெடுப்பில் உள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள மக்கள் மட்டுமே பழமையான தமிழ் இன மக்கள். அவர்களே உண்மையில் இம்மண்ணின் மைந்தர்கள்; அவர்களே உண்மையான ஆதிதிராவிட மக்களாவர் என்பதை இந்நூல் உறுதிப்படுத்துகிறது. தென்னிந்திய மக்களின் சமூகப் பழக்கவழக்கங்களை இத்தொகுப்பு ஆராய்ந்து விவரிக்கின்றது. தாழ்த்தப்பட்ட இனப்பட்டியலைச் சேர்ந்த 'பள்ளன்' பற்றி தாஸ்டன் கூறுவதாவது, "பள்ளன்" என்ற சொல் நஞ்சை நிலச் சாகுபடியைக் குறிக்கக்கூடும். அவர்கள் நஞ்சை நிலச் சாகுபடியில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். இச்சாகுபடி தாழ்வான, அதாவது பள்ளமான நிலப்பரப்பிலேயே செய்யப்பட்டது.

"பறையர்களுக்குச் சில சலுகைகள் இருக்கின்றன. இச் சலுகைகளைப் பழமைவாதிகளான இந்துக்களிடமிருந்து அவர்களாகவே என்றும் பெற்றிருக்க முடியாது. இன்றிருப்பதைவிட ஒருகாலத்தில் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தபோது பெற்றிருந்த சலுகைகளின் எஞ்சிய பகுதியே அவர்கள் இன்று அனுபவிக்கும் சில சலுகைகளாகும். இவர்கள் பற்றி வால்ஹவுஸ்(Walhouse)M.J. கூறுவதாவது: தஞ்சை அருகில் உள்ள திருவாரூரில் நடக்கும் சிவனுக்கான பெருவிழாவில் பறையர்களின் தலைவன், கடவுள் படிமத்தோடு யானையில் ஏற்றப்பட்டுச் சாமரத்தையும் ஏந்திச் செல்கிறான். சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் ஏகாத்தா (Egatta) திருவிழாவில் தற்போது சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள கருப்புத் தெய்வம், அம்மனுக்குத் தாலிகட்டும் வைபோகத்தில் ஒரு பறையன்தான் மணமகனாக இருந்து தாலிகட்டத் தேர்ந்தெடுக்கப்படுகிறான். திருவாரூரில் பறையர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ பெரும்புதூரில் நடக்கும் திருவிழாவிலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. முகமதியர் படையெடுப்பின்போது இவ்வூரில் வழிபட்டுவந்த விஷ்ணுவின் அவதாரச் சிலையைக் காப்பாற்றிக் கொடுத்ததற்குக் கைமாறாக இந்த உரிமை அவர்களுக்குக் கிடைத்தது. காஞ்சிபுரம், கும்பகோணம், ஸ்ரீ வில்லிபுத்தூர் இந்து சமய நிகழ்ச்சிகளில் நடைபெறும் தேர்த்திருவிழாக்களில் சுவாமி சிலைகளை ஏந்தி வரும் தேர்களை இழுத்துச் செல்லப் பறையர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். தேர்வடத்தை அவர்கள் தொடுவதால்

தீட்டாகிவிடாது என்று கருதுவதால் அவர்களுடன் மற்ற இந்து இனத்தவரும் சேர்ந்து வடம்பிடித்துத் தேர் இழுக்கின்றனர். தமிழ்நாட்டின் சில பகுதிகளில், தண்ணீர்ப் பானை ஒன்றை ஒரு பறைய இனத்தவன் தலையில் சுமந்து கொண்டு வயல் வரப்பைச் சுற்றிவரும் பழக்கம் இருந்து வருகின்றது. இதற்கு ஏற்புடைத்தான விளக்கம் கூறுவதனால் அது, பறையர்களே இம்மண்ணில் நின்று நிலைத்து வரும் மற்ற இனத்தவர்களைவிட மிகப்பழமையான இனத்தவராவர் என்பது ஸ்டுவர்ட் என்பவரின் கருத்தாகும்." தமிழ்நாடு முழுவதும் உள்ள சிற்றூர்களில் வீடுகட்ட ஒதுக்கப்படும் மனை(நத்தம்) இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு பகுதியை வடமொழிச் சொல்லான 'கிராமம்' என்றும் மற்றதைத் திராவிடப் பெயரான 'சேரி' (கூடுமிடம்) என்றும் அழைக்கின்றனர்." என்று தர்ஸ்டன்(Thurston) கூறுகிறார். அவர் மேலும் கூறுகிறார். "பறையர்கள் தமிழகத்தின் பழமையான இனம்; ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மதிப்பு மிகுந்த ஒரு இனமாக வாழ்ந்துள்ளனர். அவர்களில் பலர் நெசவாளர்கள். தற்போது அவர்கள் அனுபவிக்கும் சலுகைகளும் உரிமைகளும் இம்மண்ணுடனான அவர்களது நெடுநாளையத் தொடர்பின் மிச்சம் மீதிகளே. "பறச்சேரி" என்ற அமைப்பு அவர்களின் உண்மையான சுதந்திர வாழ்வையும் நிலத்தின் பெரும்பகுதிக்கு அவர்களே சொந்தக்காரர்களாக இருந்து வாழ்ந்து வந்ததையும் குறிக்கின்றன. 18—ஆம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தில் வெள்ளாளர்களின் குடியேற்றம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி எனில், அக்காலத்தே பறையர் இனம் குன்றத் தொடங்கியது என்றும் கூறலாம்" என்று அவர் மேலும் கூறுகிறார். "பறையர்கள் நெடுங்காலமாக இம்மண்ணில் நிலைபெற்ற ஓர் இனம்." என்பது அவர் கருத்து."4

பறையர் இனத்தவர் பற்றிய சார்ஜன்—மேஜர் W.R. கார்னிஷ் என்பவரின் இணக்கமான கருத்தான எத்துறையிலும் உழைக்கக் கூடிய, சிக்கனமான, களியாட்டம் விரும்பும் பறையர்கள் நாட்டின் உயிர்நாடி என்பது கார்னிஷ் கருத்தாகும் என தர்ஸ்டன் குறிப்பிடுகிறார்."5

இத்தொகுதியின் இரண்டாம் பகுதியில் H.A. ஸ்டுவர்ட் சக்கிலியர் பற்றிக் கூறும் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. "இவர்கள் தமிழகத்தில் தோல் கொண்டு தொழிற் செய்வோர். தெலுங்கு நாட்டில் உள்ள மாதிகாஸ் (Madigas) இனத்தவர். அருந்ததியர், பகடையர், மாதாரி(Madori) ரணவீரர் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்" இதையும் தர்ஸ்டன் சுட்டிக்காட்டுகிறார்.

*முழுமையான புரட்சியாளர் அம்பேத்கார்*[1]:

அம்பேத்காரின் வாழ்வும் பணியும் பற்றிய நூல் இது. 'சமூக சீர்திருத்தவாதி', 'அரசியற் சிந்தனையாளர்' என்று அம்பேத்காரை மதிப்பிட மிகமிகக் குறைவான தகவல்களையே இந்நூல் கொண்டுள்ளது. இதில் உள்ள "அம்பேத்கார் தலித்துகளின் விடுதலை வீரர்" என்னும் இயல் அவர் பெயரை நிலைநாட்ட உதவுகிறது.

*சமுதாய அடுக்கு*[2]:

நான்கு பகுதிகளாக பகுக்கப்பட்டுள்ள இந்நூலில் சாதி, சாதி வரலாறு, இனம் (Class) பற்றிப் பேசப்படுகிறது. இதில் தலை சிறந்த சமூகவியலாளர் முப்பத்தி மூன்று பேருடைய கட்டுரைகள் உள்ளன. ஆன்ரே பெதல்(Andre Betelle) எழுதியுள்ள "தென் இந்தியக் கிராமம் ஒன்றில் சாதி முறை" என்னும் கட்டுரை இங்குக் குறிப்பிடத்தக்கது. அதுபோல R.S. கரே(Kare)யின் தீண்டத்தகாதோரின் சொல்லாடல்—ஓர் உன்னத கருத்தியல் மதிப்பீடு" (The untouchables version: Evaluating an ideal Aseetic) ஒரு விருவிருப்பான கட்டுரை. "சமுதாயத் தட்டும்(அடுக்கும்) வேறுபாடுகளும்" (Hierarchy and Difference) என்னும் கட்டுரையில் சாதி என்பதற்கான விளக்கத்தை அறுதியிட்டுக் கூறுவதற்குச் சமுதாய அடுக்கு மற்றும் சமுதாய வேறுபாடுகள் ஒருமித்த கருத்தை உருவாக்க முடியாமல் தடுமாறுகின்றன என்று தீபாங்கர் குப்தா கூறுகிறார். இவற்றில் ஏதாவது ஒன்று முழுமையான விளக்கம் கொடுப்பதற்குத் தடையாக உள்ளது. நீண்ட விவாதத்திற்குப்பின், தன்னினத்திற்குள் திருமணம், சாதித்தீட்டு, தொழில் வேறுபாடு, பிராமணர்களை முதன்மையாகக் கொண்ட சாதி அடுக்கு ஆகியவற்றை விவாதக் கூறுகளாகக் கொண்டு J.M.ஹட்டன் கொடுக்கும் 'சாதி' பற்றிய விளக்கத்தை லீச்(Leach1960:2-3) ஏற்றுக் கொள்கிறார்." போகுள்(Bougle) என்பவரின் கருத்தையும் அவர்

1. D.K. பைசாண்ட்ரி(Baisantry) செக்மெண்ட் புக் டிஸ்ட்ரி பியூட்டர்ஸ் E—256, கிரேட்டர் கைலாஸ்—1 நியூடெல்லி—110045, 1991, ரூ.120/—

2. (Social Stratification)

பதிப்பாசிரியர் தீபாங்கர் குப்தா. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அச்சகம் முதற் பதிப்பு:1991 நான்காம் பதிப்பு1997 ரூ.195/—

குறிப்பிடுகிறார். அதன்படி, ஏற்றத் தாழ்வு, (உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற), வெறுப்பு, பரம்பரைத் தொழில் முறைகள் ஆகிய மூன்றும் சாதிமுறைக்கு முக்கிய அடிப்படைகளாகும் என்கிறார். (போ: 1971:9)

*அம்பேத்கார், அரசியல், பட்டியல் சாதியினர்[1]:*

நம் நாட்டு வரலாற்றில் உள்ள சாதி அரசியல் முறையில் அம்பேத்காரின் பங்கு மிக முக்கியமானதென்பதை இது விளக்குகிறது. தீண்டத்தகாதோருக்குச் சமூக விடுதலை, அரசியற் பாதுகாப்பு, மனித உரிமைகள் போன்றவற்றைப் பெறுவதை அம்பேத்கார் தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அரசியல், சமூக, பொருளாதார நீதிகளுடன் சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றைத் தீண்டத்தகாதோர் பெற்றிட அவர் எவ்வாறு முனைந்தார் என்பதையும் இந்நூல் நன்கு சித்திரிக்கின்றது.

*இந்தியாவில் அம்பேத்காரிசத்தின் பொருத்தம்[2]:*

இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்டோரின் கொள்கை ஒளியாக அம்பேத்காரிசம் விவாதிக்கப்படுகிறது. ஆனால் முழுமையான சித்தாந்தமான, ஒரு கட்டமைப்பான கொள்கையாக அதை இதுவரை எடுத்து வைக்கவில்லை. இக்குறையை நீக்கி நிறைவு செய்யும்முகமாக இந்நூல் உள்ளது.

"இன்றைய இந்தியாவில் அம்பேத்காரிசம்" என்னும் விவாத அரங்கிற்காக உருவானது இந்நூல். தத்துவ, கொள்கை அளவிலான அம்பேத்காரின் பணி; அம்பேத்காரின் சமூகப்பொருளாதாரக் கொள்கைகளும் அவற்றின் இன்றைய பொருத்தமும்; அரசியல் அமைப்புச் சட்டத்தின் அமைப்பாளர், சமூக நிறுவனங்களின் பழமரபுகளைச் சிதைப்பவர்; (Ambedkar as constitution maker & Institution Breaker); அம்பேத்கார் பற்றிய ஆய்வின் நோக்கங்கள் நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டது, இந்நூல் இக்கருத்தரங்கிற்குக் கட்டுரை எழுதியவர்கள் V.R. கிருஷ்ணய்யர், சரத் பாட்டீல்; A.M. ராஜசேகரய்யா, S.G.குல்கர்னி K.வில்சன் ஆகிய தேசியப் புகழ் பெற்றவர்களும் பிறருமாவர்.

1. ப்ரேம் பிரகாஷ், அஜீஸ் பப்ளிசிங் ஹவ்ஸ், 8/81, பஞ்சாபி பாஹ், புடெல்லி—110 026. ரூ.250/—

2. (Relevance of Ambedkarism in India)
K.S.சலம், ராவத் பப்ளிகேஷன், 3-Na-2D, ஜவஹர் நகர், ஜெய்ப்பூர்—302 004.1993, ரூ.240/—

*தீண்டாமை-இந்தியாவின் ஒரு வாழ்க்கை வரலாறு*[1]

இந்நூலாசிரியர் கூற்றுப்படி, நூறுகோடி இந்தியர்களின் ஒருவனான மூளி(Muli) என்பவனுடைய வாழ்க்கைக் கதையாகிய இது, இந்தியச் சமூக நிகழ்வான சாதிப்பாகுபாட்டை மட்டுமின்றி, உலகெங்கும் காணப்படும் சமூக அடுக்கு அமைப்பால் (Stratified system) உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளையும் சாடுவதாக உள்ளது. பேராசிரியர் க்ளன் T.பேட்டர்சன்னின் (Prof.Glemt. Paterson) நோக்கில்," "இந்தியச் சமுதாய அமைப்பின் கடைநிலையைச் சார்ந்த இம் மனிதனின் வாழ்க்கை நம்மைச் சம்மட்டி கொண்டு அடிப்பதாக உள்ளது... அநேகமாக, இதுவரை வெளிவந்துள்ள வெளிப்படையான பண்பாட்டுத் தொகுப்புகளில் இதுவும் ஒன்றாகும். அரை நூற்றாண்டு காலமாகத் தீண்டாமையை ஒழித்திட அரசாங்கம் மிகக் கடுமையாக முயன்று நடவடிக்கைகள் எடுத்துவரினும், தீண்டாமை இந்திய வாழ்க்கையோட்டத்தில் வேர்விட்டு நின்று தளைத்து வளர்கின்றது. கிறித்துவ ஆண்டின் முதல் சில நூற்றாண்டுகளில் தீண்டாமை ஒரு சமுதாய நிகழ்வாகவே இருந்தது. அப்போது பிராமணச் சாதிப் பிரிவை அச்சுறுத்தும் வண்ணம் தீண்டத்தகாதோர் புரட்சியில் இறங்கினர். நிலவிவரும் கிராமிய அமைப்பின் செயல்பாட்டில் இன்று இது பல வழிகளில் ஒரு அத்தியாவசியமான சமூக நிகழ்வாகும். ஒரிசா மாநிலத்தில் பாவ்ரி(Bouri) இனத்தைச் சேர்ந்த தீண்டத்தகாத சமூகத்தைச் சேர்ந்த நாற்பது வயதான மூளி(Muli) என்பவருடைய சுய சரிதையாக இந்நூல் அமைந்துள்ளது. அவர் தன்னுடைய வாழ்க்கைக் கதையை ஒரு மானிட இயல் துறையினரிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இதில் தன்னுடைய சமுதாயச் சூழ்நிலையை ஆய்ந்து தேர்ந்து வளமான வர்ணனைகளைக் கொண்டு தன் அன்றாட வாழ்க்கையைக் கதையாகச் சொல்கிறார் மூளி. இந்திய சமூக அமைப்பின் அடிமட்ட இனத்தைச் சேர்ந்த மனிதனாக வாழ்வதில் உள்ள அனுபவத்தை விரிவாக விறுவிறுப்பாக விளக்குகிறார். அதில் தீண்டத்தகாதோன் தடைகளை உடைத்துத் தன்னுடைய கீழ் நிலையிலிருந்து வெளிவர முயன்றால் என்ன நடக்கும் என்பதையும் விவரிக்கின்றார்.

1. ஜேம்ஸ் M.ப்ரீமேன், ஹார்ப்பா காலின்ஸ் பப்ளிசேர்ஸ், 7/16, அன்சாரிரோடு புதுடில்லி—110 002. 1993. ரூ.150/=

*தமிழ்நாட்டு நிலச் சீர்திருத்தச் சட்டங்கள்*[1]

இந்நூலில் தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயச்) சட்டம், வாடகைச் சட்டம் (Tenancy Act) முதலியன பற்றியும் இவை சம்மந்தமான வழக்குகள், சட்டதிட்டங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் பதிப்பிக்கப்பட்ட காலம் வரையிலான சட்டத் திருத்தங்கள் பொருத்தமான பகுதிகளில் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றிய ஆலோசனைக்கு இந்நூலை நம்பிக்கையுடன் அணுகலாம்.

*தமிழ்நாடு சட்ட விதிமுறைக் கையேடு*[2]

இது உரிமையியல் (Civil), குற்றவியல் (Criminal), கூலி வேலை, வருவாய் சம்பந்தமான சட்டங்கள் பற்றிய கையேடு. இதில் ஹரிஜன நல்வாழ்வுத் திட்டத்திற்கு நிலக் கையகப்படுத்துதற்கான சட்டம் எண் 31, 1978; ஹரிஜன நல்வாழ்வுத் திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம் 1978 முதலியனவும் அடங்கியுள்ளன.

*அடிமைப்பட்டோரின் உரிமைகள்*[3]:

பல நாடுகளில் உள்ள அடிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் நிலைபற்றி இந்நூல் எடுத்துரைக்கின்றது. சமுதாயத்தில் நிலை பெற்றுவிட்ட பால், இன, வர்க்க, வகுப்பு (gender, race, class) வேறுபாடுகள், அடிமைப்பட்டுப்போன மக்கள் ஒன்றிணைவதற்குத் தடைகளாக உள்ளன என்று இந்நூலின் தொகுப்பாசிரியர் கூறுகிறார். இந்தியாவில் உள்ள பழங்குடியினர், தீண்டத்தகாதோர், ஆஸ்திரேலியாவின் ஆதிவாசிகள், ப்ரேசில் இந்தியர்கள், பழைய ரஷ்ய சமஷ்டியில் உள்ள பழங்குடியினர், தென் ஆப்பிரிக்கக் கருப்பினத்தவர், இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சியின் கீழ் உள்ள

1. (Land Reforms laws In Tamilnadu).S.பட்டாபிராமன், வித்யா லா ஹவ்ஸ், B\3,ஸ்ரவிஸ்தா அபார்ட்மெண்ட்ஸ், 27/3,வெங்கடகிருஷ்ணாரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை—28, 1994, ரூ.195 /=

2. (Manuel of Tamilnadu Acts and Rules)

தொகுப்பு: S.V. ஜெயராமன் N.மணிநாராயணன், மற்றும் பலர் டெக்கான் பப்ளிகேஷன்ஸ் 27, பாரதியார் காலனி, அசோக் நகர், சென்னை—600 083 1994. தொகுதி I.ரூ.300/=

3. (The Rights of Subordineted People)

ஆலிவர் மென்டல் சன், உபேந்திர பக்சி: ஆக்ஸ் போர்டு யூனிவர்சிட்டி பிரஸ். 1994. ரூ 150/=.

பெண்டிர் ஆகியோரின் நிலைபற்றி இந்நூல் ஆராய்கிறது. "தீண்டத்தகாதோர்"[1] என்னும் தலைப்பில் ஆலிவர் மென்டல்சன், மரிகா விக்சியானி (Marika Vieziany) என்பவர்கள் எழுதியுள்ள கட்டுரை விறுவிறுப்பானதாகும். தீண்டத்தகாதோர் அடிமைமக்கள் என்ற தங்களுடைய சமூக நிலையை மாற்றத் தவறிவிட்டனர் என்று அவர்கள் கருதுகின்றனர். இனஅடிப்படையிலான சமூக வேறுபாடுகளுக்கான இழப்பீட்டுமுறை (Compensatary discrimination) தீண்டத்தகாதோர்களை ஒரு சமூக நலப் பிரச்சினையாகத் தோற்றுவித்துள்ளது என்பது இவர்களின் நோக்கு. அவர்களுக்கு நலத்திட்டம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. தீண்டத்தகாதோர் மக்கள் தொகையை நோக்கிடின் இத் திட்டம் மகத்தானது; அது, அதிகாரமும் உரிமைகளும் கொண்டவர்களின் ஒரு கருணைச் செயல். அதேசமயத்தில் தீண்டத்தகாதோரின் நிலைமையை மாற்றுவதற்கான முயற்சி முழுமையாக உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. உழுபவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் திட்டம் எதுவும் இல்லை. விரிவான அமைப்புக்களாலும் நோக்குகளினாலும் ஏற்பட்டுள்ள அவர்களின் இந்த நிலைக்கான காரணங்களைக் குறிப்பிட்டுச் சுட்டமுடியாது. அவர்களுடைய சமூக நிலையும் பிறர் நிலத்தில்தான் வேலை செய்து பிழைக்க வேண்டும் என்ற சொந்த நிலமற்ற நிலைமையுடன் சேர்ந்துள்ளது. நில உடமையைக் கட்டுப்படுத்தாது செய்யப்படும் எந்தச் சீர்திருத்தமும் ஏதோ சிறு சிறு நன்மைகளைத் தவிர திட்டமிட்ட நல்ல மாற்றத்திற்கு உதவாததாகும். இந்தியாவில் உள்ள தீண்டத்தகாதோரின் அவலங்களை ஆஸ்திரேலியா நாட்டுப் பழங்குடியினரின் நிலைமைக்கும் மற்ற நாடுகளில் உள்ள அடிமை மக்களின் நிலைமைக்கும் ஒப்பு நோக்குவதன் மூலம் இவ்வாசிரியர்கள் இப்பிரச்சினைக்குப் புதியதோர் நோக்கைக் கொடுத்துள்ளனர்.

***சாதி,இனம்,அதிகாரம் :[2]***

பல்வேறு சாதிகளைக் கொண்ட தென்னிந்தியச் சிற்றூர் ஒன்றில் மாறி வரும் சமுதாய படிநிலைகளைப் (Social stratification) பற்றிய முனைப்பான ஓர் ஆய்வாகும் இந்நூல். பாரம்பரியமிக்க சமுதாயத்தில் தற்கால மாற்றங்களைக் கொண்டு வெளியுலகிற்கும்

1. (In this they argue that the untouchables have foiled to lose their status as subordinated people).

2. ஆண்ட்ரே பெட்டில்லே (Cast Class, Power by Andre Beteille). ஆகஸ்போர்டு யூனிவேர்சிட்டிபிரஸ், முதற்பதிப்பு 1965: இரண்டாம் பதிப்பு 1996 ரூ.395/-

லகிற்கும் அதன் தன்மை பரவுவதற்கு ஏதுவாக, இப்படி நூதனமான மாற்றத்திற்கு அடிகோலியாக அமைந்தது அந்தச் சிற்றூர். இச்சிற்றூரில் ஏற்படும் மாற்றங்கள் வெளிப்படையாகச் சமுதாய அமைப்பில் ஏற்படும் மாற்றங்களாகவே உள்ளன. ஆசிரியரின் கூற்றுப்படி முன்னர் இச்சிற்றூரின் சமுதாய வாழ்க்கை மூன்று சாதிப் பிரிவுகளால் ஆனது: பிராமணர்கள், மத்திய வகுப்புப் பிராமணர்கள் அல்லாதோர், ஆதி திராவிடர் என்ற மூன்றே அச்சாதிப் பிரிவுகளாகும்.

அதிகார வர்க்க அமைப்பிலும், சமுதாயத்தில் ஒருவனுடைய நிலையையும், பிறப்பால் ஒருவன் சார்ந்த சாதியே தீர்மானித்தது. சாதியைப் பிறப்பே தீர்மானித்தது. பேரா.பெட்டோல்லி, நடைமுறையிலுள்ள சமூக அமைப்பைப் புதிய மாற்றங்கள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும், பொருளாதார அரசியல் அமைப்புகளில் அவற்றின் தாக்கம் எப்படி உள்ளன என்பதையும் சித்திரிக்கின்றார். பொருளாதார அரசியல் அமைப்புகள் தற்போது முழுமையாகச் சாதி அமைப்பைச் சார்ந்ததில்லை. பாரம்பரிய சமுதாய அமைப்பின் அடிப்படையாக அன்று விளங்கிய சாதி அமைப்பு இன்றைய இந்தியச் சிற்றூர் சமுதாயத்தை ஆராய்ச்சி செய்வதற்குப் போதுமானதாக இல்லை என்று ஆசிரியர் கருதுகிறார். இந்தியச் சமுதாய அமைப்பின் மாற்றங்களை ஆய்வதற்கு மாற்று ஆய்வு முறைகளை வகுத்திட அவர் முயல்கிறார்.

*சாதி: இருபதாவது நூற்றாண்டில் அதன் அவதாரம் :*[1]

தன்னை மேம்படுத்தி இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டிற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியாவிற்குச் சாதிப்பிரச்சினை விஸ்வரூபம் கொண்டதாக உள்ளது. இன்றைய சூழலில் சாதி என்ன உருவமெடுக்கும், அதன் தீய விளைவுகளை எவ்வாறு எதிர்கொண்டு தடுப்பது இன்னோரன்ன பிற முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் அமைந்துள்ள இந் நூலை இந்தியாவின் தலைசிறந்த சமூகவியளாலர்களில் ஒருவர் தொகுத்து, நல்ல ஒரு முன்னுரையும் வழங்கி உள்ளார்.

1. தொகுப்பாளர்: M.N. ஸ்ரீனிவாஸ், பெங்குயின் புத்தகம் இந்திய (பி) லிமிட்., 210, சிரஞ்சீவ் டவர், 43, நெஸ்ருப்ளேஸ் புதுடெல்லி—110 019, 1996. ரூ.200/—

அந்தந்த இயலில் புலமை பெற்றவர்களால் எழுதப் பட்டுள்ள இக்கட்டுரைகள், சாதியை வாழச் செய்வதில் பெண்களின் பங்கு பற்றி மிக விறுவிறுப்பான கணிப்பைத் தருகின்றன. சாதிக்கும் இந்து மதத்திற்கும் உள்ள உறவை நுணுகி ஆராய்கின்றன. தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் இயக்கங்கள் பற்றியும் உத்திரப் பிரதேசத்திலும் பீஹாரிலும் பிற்படுத்தப்பட்ட சாதிகளிடையே உள்ள அதிகாரப் போட்டி, இவர்களின் திறமைக்கும் வேலை ஒதுக்கீட்டிற்கும் உள்ள தொடர்பு, இந்து முஸ்லீம் கிருத்துவ சமுதாயங்களில் நிலவிவரும் சாதிகள் பற்றிய நோக்கு, மண்டலக் குழு அறிக்கை பற்றிய விமர்சனங்கள், மண்டலத் தீர்ப்பு ஆகிய அனைத்தையும் பற்றிய குழுவினர் கட்டுரைகளும் இதில் உள்ளன.

***குடியேற்ற ஆதிக்கத்திற்குப் பின்னர் சாதி அமைப்புகளும் அரசியல் மாற்றங்களும் :[1]***

சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவில் நிகழ்ந்துள்ள அரசியல் மாற்றங்கள் குறித்துப் பல்துறை நோக்கில் நுணுக்கமாய் ஆராய்ந்திடும் முனைப்பான கட்டுரைத் தொகுப்பின் நான்கு தொகுதிகளில் இது நான்காம் தொகுப்பாகும். சாதி அமைப்புகளின், தோற்றத்திற்கான சிக்கலான அடிப்படைக் காரணங்களையும், இந்திய அரசியல் சமூக, பொருளாதார மாற்றங்களையும் இணைத்து ஆய்வு செய்யும் ஆய்வு நோக்கினைக் கொண்டு பல்வேறு மாற்றங்களை விளக்கி எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டது இத் தொகுதி. இந்தியச் சமுதாயத்தில் அடிப்படைப் பிரச்சினைகளான பலாத்கார முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், கடுமையான உயிர் கொல்லியான சாதி உணர்வுகள், அரசியல் சூழ்நிலையில் மனித உரிமைகள், சட்டம், சமுதாயக் கொள்கைகள், இவற்றின் தற்போதைய உண்மை நிலையை அறிவதோடல்லாமல் இவற்றால் இந்தியாவிற்கு எதிர்காலத்தில் விளையவிருக்கும் நிலையினையும் இந்நூல் தனது வரையறையாகக் கொண்டுள்ளது.

***டாக்டர் அம்பேத்காரின் பொருளாதாரத் தத்துவம் :[2]***

இந்தியத் தாழ்த்தப்பட்ட இனங்களின் மாபெரும் தலைவரான டாக்டர் அம்பேத்காரை நாம் எல்லோரும் அறிவோமாயினும் அவர்

1. தொகுத்தவர் T.V.சத்தியமூர்த்தி ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி ப்ரஸ், ஒய்,எம்,சி.எ. லைப்ரரி பில்டிங் ஜெய்சிங் ரோடு, புதுடெல்லி–110 001, 1996. தொகுதி—4 ரூ.695/=.

2. M.L. (கசாரே) (Kasare),Bi பப்ஸி கேஷன்ஸ் (பி) லிமிட்ட், 54, ஜன்பாத், புதுடெல்லி–110 001, 1996, ரூ.340/=.

ஒரு பொருளாதார வல்லுநர் என்பது பெரிதும் அறியப்படாத உண்மை. அவருடைய பொருளாதார வல்லமையைச் சரியான நோக்கில் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

பொருளாதார மாணவர் என்ற முறையில், இந்த நாடு எதிர் கொண்டிருக்கும் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி தன்னுடைய ஆய்வேட்டில் டாக்டர் அம்பேத்கார் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளார். சமூகப் புரட்சியாளராகப் பிறந்த அவருடைய வாழ்க்கை அவருடைய பொருளாதாரத் தத்துவத்தை செவ்வனே வெளியிட முடியாததாக அமைந்து விட்டது. ஆனால் அவருடைய பிற்கால எழுத்துக்களில் அவை தெள்ளத்தெளிய இழைந்துள்ளன. சாதி அடிப்படையிலான இந்து சமுதாயத்தில் உள்ள பிற்போக்குகளை ஆழ்ந்து ஆய்ந்தார். அவர் விரும்பியது அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நாடு தழுவிய சோசலிசம் (State Socialism) அத்துடன் சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்கான முன்மாதிரியையும் (Model) அவர் கொடுத்துள்ளார். இந்திய அரசியல் சாசனத்தில் அரசியல் அமைப்பு விதிகளோடு பொருளாதார அமைப்பு விதிமுறைகளையும் சேர்க்க வேண்டுமென வலியுறுத்தியவர் டாக்டர் அம்பேத்கார்.

இந்திய அரசியல் சாசனத்தை அமல்படுத்தியது முதல் இந்தியாவில் சமூகப்—பொருளாதாரத்தை உள்ளதை உள்ளது போல் வைத்துக் கொள்ளுதல் என்னும் கருத்திற்கும், சமூகப்—பொருளாதாரம் பன்முக இயக்கம் (dynamism) என்னும் கருத்திற்கும் இடையிலான சச்சரவுகள் தொடர்ந்து கொண்டிருப்பதை இந்நூல் திறம்பட ஆய்கிறது.

*சிற்றூர், சாதி, பால் மற்றும் ஆய்வு முறை :*[1]

M.N.சீனிவாசனின் இந்நூல், இந்தியாவில், சமூகவியல் (Sociology) ஆராய்ச்சியில் ஒரு திருப்பமாக அமைகின்றது. இதில் உள்ள கட்டுரைகளின் கருத்துக்கள் இத்துறையில் நிலையான பாதிப்புக்களை ஏற்படுத்துவனவாகும். இந்நூல் நான்கு பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவை அனைத்துமே சிற்றூர், சாதி, பால் மற்றும் ஆய்வு முறையை மையமாகக் கொண்டுள்ளன.

1. (மானிடவியல் கட்டுரைகள்) (Village. Caste. Gender and Methods: (Eassays in Social Anthropology): M.N. சீனிவாஸ், ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி பிரஸ்,1996. ரூ.395/=.

இவை ஒவ்வொன்றிலும் ஒரு புதிய நோக்கை ஆசிரியர் தோற்று—வித்துள்ளார். இன்றைய இந்தியாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களுக்கு இடையிலான தொடர்ச்சியை இக்கட்டுரைகள் விளக்குகின்றன. பெரும் நடைமுறைச் செயல்பாடுகளுடன் கருத்து நுணுக்கங்களையும் சேர்த்துள்ள வகையில் இக்கட்டுரைகள் சிறப்பானவை. இவற்றில் "ஆளும் சாதி" (மேல் சாதி: dominant caste), "சமஸ்க்கிருதமாக்கல்" (Sanskritisation) என்ற இரு கட்டுரைகள் சீனிவாசனின் முக்கிய கொள்கைகளைக் கொண்டுள்ளன. இரண்டு கட்டுரைகள் இந்தியச் சிற்றூர் பற்றியவை. "பங்குகொள்வோர் கருத்துக்கள்" பற்றிய ஆய்வுமுறையும் (Method of Participant Observation) சமூகவியல் ஆய்வில் அதன் பங்கும் பற்றிய நான்கு கட்டுரைகளுடன் இத் தொகுதி முடிவடைகின்றது.

### *சாதி அமைப்பு: தீண்டாமையும் தாழ்த்தப்பட்டோரும்* [1]

சாதித்துவமும் தீண்டத்தகாதோரும் பற்றி அண்மைக் காலத்தில் எழுதப்பட்ட நூல். இது, பன்னிரு கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு. 1994 முதல் 1995 வரை இந்தியாவைப் பற்றி பேரறிஞர்கள் பன்னிருவரால் எழுதப்பட்டு, ஹிரோயுகி கோடானி (Hiroyuki Kotani) யால் தொகுக்கப்பட்டு ஜப்பானிய மொழியில் பதிப்பிக்கப்பட்டது. இக் கட்டுரைகள் இந்திய சாதிமுறை, சாதிக் கொடுமை, தீண்டாமை, தற்கால இந்தியாவில் முக்கியமான சமுதாய, மற்றும் அரசியல் பிரச்சினைகள் முதலியவற்றைப் பற்றி இக்கட்டுரைகள் ஆய்கின்றன. மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில் இரண்டாவது பகுதியில் தமிழ்நாட்டில் உள்ள ஒரு வறட்சியான சிற்றூர் பற்றிய நேரடி ஆய்வும், பறையர்கள், பள்ளர்கள், சக்கிலியர்கள் ஆகிய தாழ்த்தப்பட்டோருக்குப் பொருளாதார மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளையும் விளக்குகிறது. இதில் உள்ள பிற கட்டுரைகள் கொங்குநாட்டவர்கள், தஷிணம், மஹாராஷ்ட்ரா, மேற்கு வங்கம் முதலிய பகுதிகளில் வாழும் தலித்துக்கள் பற்றி வேதகாலப் பிற்பகுதி கி.மு.1000—கி.மு.600 முதல் இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி வரையிலான தலித்துகள். சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளை ஆய்கின்றன. சாதிமுறை மற்றும் தீண்டாமை பற்றிய படைப்பாக்கத்திற்குப் பயன்படக் கூடியவை.

1. தெற்காசியா பற்றிய ஜப்பானிய ஆய்வு.எண்.1.தொகுப்பு H. மனோகர் கோடானிக். 1977. ரூ.500/=.

*தற்கால சாதி முறை :*[1]

இந்நூல் இந்தியச் சாதிமுறைகள் பற்றிய குறிப்பிடத்தகுந்த ஒன்பது கட்டுரைகளின் அபூர்வமான தொகுப்பாகும். கடந்த சில ஆண்டுகளாகச் சாதி பற்றிய சர்ச்சைகள் மிக அதிகமாகவே வளர்ந்துள்ளன. தற்கால இந்தியாவில் சாதியின் தன்மை பற்றி, அதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கமும் ஆய்வும் இந்நூலின் கண் உள்ளன. பெரும்பாலான கட்டுரைகள் “கலை—நிலை இனப்பண்பாடு” ஆராய்ச்சிமுறையின் அடிப்படையில் (State-of-art ethnographic) வட இந்திய, தென் இந்திய நகர நாட்டுப்புற, இந்து முஸ்லீம் மக்களை ஆய்வு செய்கின்றன. இக் கட்டுரைகள் சாதியின் முக்கியத்தும் எவ்வாறு மேலோங்கிக் குழப்பத்தை உருவாக்கிக் கொண்டு வருகின்றது என்பதையும், ‘சாதி’ என்பது பரம்பரை அந்தஸ்த்து என்பதைவிட, பண்பாட்டு வேறுபாடுகளாக மாறியுள்ளன என்பதையும் இக் கட்டுரைகள் காட்டுகின்றன. ‘சாதி’ வகுப்பு என்பது, பரம்பரை ஏற்றத் தாழ்வுகளைக் குறிக்கும் ஒரு சொல் என்று உறுதி கூறுகின்றனர். நிக்கலாஸ் B.டில்ர்க்ஸ் (Dilrks) என்பவர் எழுதியுள்ள “தமிழ்ச் சமுதாயத்தை மாற்றி அமைத்தல்: சாதி அரசியலும் தற்கால தென்இந்திய இனமும்” என்னும் கட்டுரை இவ்வாய்வேடு எழுதுதற்கு சிறப்பான உதவியை நல்கியது. அதுபோல் M.L.ரிசிஞ்ச் (M.L.Resinche)சின் “நகரத்தில் சாதியின் பன்முகப் போக்கு” (The Urban Dynamics of caste)தமிழ் நாட்டில் நிகழ்வாராய்ச்சி” ஆகியன தற்கால நோக்கையும் போக்கையும் காட்டும் விறுவிறுப்பான கட்டுரை.

*தொற்காசியாவில் ‘இனம்’ என்பதன் நோக்கு”*[2]

ஐரோப்பிய இன நோக்கில் தெற்கு ஆசியாவிற்குக் குறிப்பிட்ட பங்கு உண்டு. ஆனால் இன்றைய பாரம்பரிய மக்களின் அறிவு பூர்வமான எழுத்துக்களில் அது கிடையாது. தெற்காசியாவில் இப்பிரச்சினை பற்றி ஆய்வதற்கான, வீச்சிலும் கால அளவிலும், இந்நூல் முதல் படியாகும். தென் இந்திய இனக்கோட்பாடு என்று ஒன்று இருத்ததா, அல்லது, பொதுவாக நிலவிவரும் கருத்திற்கொப்ப,18—ஆம் நூற்றாண்டிற்குப்

1. தொகுப்பு C.J.ப்ல்லர் (C.J.FULLER) ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி ப்ரஸ் ஒய்.எம்.சி.ஏ.லைப்ரரி கட்டிடம், ஜெய்சிங் ரோடு, புதுடில்லி—110 001, முதல் பதிப்பு 1996. 1997. ரூ. 175/=.

2. (The Concept Race in South Asia) தொகுப்பு பீட்டர் ராப் (Paater Robh) ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி ப்ரஸ். 1997. ரூ.195/=

பின்னர், மேற்கத்திய பாதிப்பிற்குப் பின்னரே சாதி ஒரு பிரச்சினை ஆனதா என்பதை இது ஆய்வு செய்கின்றது. மேல் நாட்டுச் சாதிக் கோட்பாட்டிற்கு இணையான தெற்காசிய சாதிக் கோட்பாடு, குடியேற்ற ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட சாதிக் கோட்பாடு, தற்போதைய மாற்றங்களும் அவற்றின் தோற்றங்களும் பற்றி இதில் ஆராயப் படுகின்றன. மக்கள் தனித்துவம் (identity) சாதாரணச் சமுதாயம் (Civil Society), இனத் தன்மை (ethnicity), தேசியம் ஆகியவை இந்தக் கட்டுரைகளில் ஆராயப்படுகின்றன. டாக்னர் ஹெல்மேன் (Dagnar Hellmann), ராஜநாயகம் எழுதியுள்ள "தமிழன் என்றோர் இனம் உண்டா?" (is there a Tamil Race?) என்னும் கட்டுரை சிந்தனையைக் கிளர்வதாகும். அதுபோல "சாதி இனம் பற்றிய குடியேற்ற (இந்தியாவின்) இனவழிவாக" என்னும் கட்டுரையும் இத்துறையில் ஓர் மைல்கல்.

*தீண்டத்தகாதோர் உலகம்:*

தீர்க்கமான அறிவுத் திறனுடன், இந்தியாவில் இன அடுக்குமுறையில் மிகமிகக் கீழ்படியில் உள்ள ஒரு சாதிப் பிரிவினிடையே ஈடுபாட்டுடன் செய்யப்பட்ட கள ஆய்வினைக் கொண்டு எழுதப்பட்டது இந்நூல். இது தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பறையர் குடியிருப்பை ஆய்வுக்களமாகக் கொண்டது. மற்ற சாதிக் கட்டமைப்புகளுடன் அவர்களின் பாரம்பரியச் செயல்பாட்டிற்கு எதிராக, தங்களது சாதி அமைப்பில் உள்ள உள்ளார்ந்த சமத்துவச் செயல்பாடே (Egalitarian internal organisation) இந்நூலின் மைய ஆய்வுக் கருத்து. சாதி பற்றிய வரலாற்று முறையும் பழக்கத்திலுள்ள சாதிப் பாகுபாடு இங்கு ஆராயப்படுகிறது. இச்சிற்றூரில் உள்ள பறையர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் கிருத்துவர்களாக மாறியுள்ளனர். அந்த வகையில் இந்நூல் இந்தியக் கிருத்துவ ஹரிஜன இனத்தவர் பற்றிய நல்லதோர் ஆய்வாகும்.

இந்திய மானுடவியல் (anthropologist) ஆய்வாளர்களுக்குக், குறிப்பாகத் தமிழகம், இந்தியாவில் வாழும் ஹரிஜனங்கள் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இந்நூல் இன்றியமையாத ஒன்றாகும்.

1. தமிழ்நாட்டுப் பறையர்கள்: ராபர்ட் டிலீஜ் (Rebert Delinege). மொழி பெயர்ப்பு: டேவிட் பிலிப்ஸ். ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டி ப்ரஸ். 1997. ரூ.495/=.

## தமிழ் நூல்கள்

### *"கொடுமைக்குள்ளான இந்துக்கள்"*[1]

இந்தியச் சமுதாயத்தின் சமுதாய படிநிலைகளில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரும் கொண்டுள்ள இடம் பற்றித் தெளிவான விளக்கத்தை இந்நூல் கூறுகிறது. மேலும் இவ்வின மக்கள் அனுபவிக்கும் இன்னல்களையும் தெளிவாகச் சித்திரிக்கின்றது. இவர்களுக்கு உதவும் வகைபற்றிய சில வழி முறைகளையும் இவ்வாசிரியர் விளக்குகிறார். அவற்றில் உள்ளாட்சி அமைப்புகளில் இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதும், இம்மக்களின் தேவைகள் பற்றி அறிந்து ஆவன செய்வதற்கு, மாநில ஆளுநரின் நேர் பார்வையின் கீழ் ஒரு தனித்துறையை அமைப்பது பற்றிய கருத்துக்களும் குறிப்பிடத் தகுந்தவை.

### *பள்ளர் யார்?*[2]

திராவிட இனங்களில் மிகவும் தொன்மையானது பள்ளர் இனம் என்று ஆசிரியர் கூறுகிறார். பள்ளர்களின் வரலாற்றைக் கூறாது, பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய பள்ளர் இனம் பற்றி தேர்ஸ்டன் (Trusston) ஆராய்வதை இவர் குறை கூறியுள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தில் "சேரி" என்னும் சொல் காணப்படுகிறது என்று குறிப்பிடுகிறார்.

சேரி மொழியில் செவ்விதின் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன் என மொழிபுலன் உணர்ந்தோரே.

(தொல்—233)

பழம்பெரும் தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் மாலைச் சேரி, வலைவலனார் சேரி, புறஞ்சேரி, எனப் பல்வகைச் சேரிகள் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளதையும் சுட்டிக்காட்டுகிறார். ஒன்பதாம் நூற்றாண்டின் தமிழ்க் காவியமான 'பெருங் கதை' பரத்தையர் சேரி,

1. M.C.ராஜா, செயலாளர், அம்பேத்கார் சிந்தனை மையம், 6/16, ஜகநாதபுரம்; 4—வது தெரு சேத்துப்பட்டு, சென்னை—31. 1969. ரூ.1.50.

2. பேரா P.தங்கராஜ், புரட்சிக் கனல் வெளியீடு, மாருதி அச்சகம், 83, பீட்டர்ஸ் ரோடு—14, 1975. ரூ.4.50.

அந்தணர் சேரி, முட்டிகைச் சேரி, மிலேச்சர் சேரி, ஆகியவை இருந்ததைக் குறிப்பிடுகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்.

—குறள் : 972

என்று திருவள்ளுவர் பிறப்பால் உயர்வு—தாழ்வு இல்லை என்று கூறுகிறார்.

தமிழ்க் கவிதை உலகில் அமரத்துவம் பெற்ற மகாகவி பாரதியார், அவர் ஆசிரியராய் இருந்து வெளிவந்த ஒரு பத்திரிகையில் 'வந்தே மாதரம்' என்ற தலைப்பில் வெளியிட்ட கவிதை இது:

"ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே"
ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்து இங்கு இருப்பவரன்றோ?
சீனத்தராய் விடுவரோ?

இதுபோல அக்கவிதை நூலில் 133—ஆம் பக்கம் "துடிக்கின்ற நெஞ்சம்" என்ற தலைப்பில் 13.03.1909—இல் பாரதியார் எழுதிய கவிதை உள்ளது.

சாத்திரங்கள் ஒன்றும் காணார்—பொய்ச்
சாத்திரப்பேய்கள் சொலும் வார்த்தை ஒப்பியே
கோத்திரம் ஒன்றாய் இருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிறந்தவனைக் குலத்திகழ்வார்...

"ஜெய பேரிகை" என்னும் கவிதையில்
"காக்கை குருவி எங்கள் ஜாதி–நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்" என்றும்

மிகப் பிரபலமான மற்றோர் கவிதையான "விடுதலை"யில்

விடுதலை, விடுதலை, விடுதலை
பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை!
திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே,
ஏழை யென்றும் அடிமை என்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே.

இந்த அற்புதமான உணர்வூட்டும் கவிதைகள் பாரதியாரை ஒரு புரட்சிக் கனல்தெரிக்கும் சமூகப் பார்வையாளராகக் காட்டுகின்றன.

சமுதாயச் சீர்திருத்தத்தில் வீறுகொண்ட மற்றுமோர் கவிஞரான பாரதிதாசன் "சமத்துவப் பாட்டு" என்னும் கவிதையில் அருவருக்கத்தக்க சமூகப் பழக்கமான தீண்டாமையைச் சாடுகிறார்."

பிறந்த முப்பது கோடிப்
பேரில் ஐங்கோடி மக்கள்
இறந்தாரோ சொல்வாயடி–சகியே
இறந்தாரோ சொல்வாயடி.

அற்பத் தீண்டாதார் என்றும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தாரன்றோ!–சகியே
கர்ப்பத்தில் வந்தாரன்றோ?

1. தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு—91: பாரதிதாசன் கவிதைகள். அருள் சுந்தர் பப்ளிகேசன்ஸ், 7,கடம்பாடியம்மன் கோவில் தெரு, வலசரவாக்கம், சென்னை—87. ரூ.400/=.

சேரிப் பறையர் என்றும்
தீண்டாதார் என்றும் சொல்லும்
வீரர்நம் உற்றாரடி – சகியே
வீரர்நம் உற்றாரடி!

பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை– இந்தப்
பிழை நீக்குவதோ உயிர்உள்ளவர்களின் கடமை.

*"முதுகுளத்தூர்–ஒரு கொடுமையின் வரலாறு."*[1]

புரட்சிக் கருத்துக் கொண்ட, வரலாற்றுப் பேராசிரியரான இந்நூலின் ஆசிரியர் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கும் ஏற்பட்ட கொடுமைகள் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்துள்ளார். இவ்வின மக்களின் நடவடிக்கைகள் பற்றி டாக்டர் அம்பேத்காரும் திரு.இம்மானுவேலும் விடுத்துள்ள எச்சரிக்கைகளைப் பற்றியும் இவ்வாசிரியர் பேசுகிறார். 1980 முதல் 1982 வரை தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்ட சாதிச் சண்டைகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரும் எரிக்கப்பட்டனர் அல்லது கொலை செய்யப்பட்டனர். இவ்விரு இன மக்களும் அன்று அனுபவித்த இன்னல்களையும் அவமதிப்புக்களையும் அவர்களின் இயலாமையையும் இதன் ஆசிரியர் தெளிவாகச் சித்திரிக்கின்றார். ஆனால் இப்பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பதென்பதற்கான வழிமுறைகளைப் பற்றி இவர் எதுவும் குறிப்பிடவில்லை.

*தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பற்றிய தேசியக் குழுவின் அறிக்கை:*

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நிலைபற்றி இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஓர் அறிக்கை வெளியிடுகிறது. இத்தகைய அறிக்கைகள் பல உள்ளன. தற்போதைய ஆய்விற்கு, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்புச் சட்ட முறைப்படி

1. பேரா P.தங்கராஜ், புரட்சிக்கனல் பதிப்பகம்: 8(அச்சு:அன்னை அஞ்சகம் அச்சகம், ராயப்பேட்டை, சென்னை—14, 1983, ரூ.5/=.

உள்ள பாதுகாப்புகள், அரசுப் பதவிகளில் ஒதுக்கீடுகள், தீண்டாமை ஒழிப்பு, குடி உரிமைகள் (Civil Rights), அவர்களுக்கு எதிரான கொடுமைகள், அவர்களின் சமூகப்—பொருளாதார முன்னேற்றம், சிற்றூர் முன்னேற்றத்தால்—வளர்ச்சியால் பாதிப்புகள், அவர்களின் சமூகப் பொருளாதார ஏழ்மையை அகற்றிடுவதற்கான திட்டங்களின் செயல்பாடுகள் ஆகியன பற்றிய அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1979—80 முதல் 90 வரையிலான காலகட்டத்தில் நிலவிய நிலவரம் பற்றிய அறிக்கையின் விவரங்களை இந்த ஆய்வேடு கொண்டுள்ளது.

***இளையபெருமாள் குழு அறிக்கை, 1969:***

இவ்வறிக்கை ஐந்து பாகங்களைக் கொண்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் தோற்றத்தையும் வளர்ச்சியையும், அவை தோன்றியதற்கான சூழ்நிலைபற்றியும் இந்த அறிக்கை விவரிக்கின்றது. இந்தியாவில் பழக்கத்தில் உள்ள தீண்டாமையின் தீவிரம் பற்றித் தேவையான இடங்களில் ஆதாரத்துடன் சுட்டிக் காட்டுகின்றது. இந்தியாவில் பல்வேறு வழிமுறைகளில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் இந்திய இந்துக்களில் கணிசமானவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பது இக்குழுவின் கருத்து. இந்திய வரலாற்றின் பண்டைக் காலந்தொட்டு இன்று வரை இவர்களுக்கு அளிக்கப்படும் கொடுமைகள் பற்றிய விவரங்களையும் கொண்டுள்ளது.

இம்மக்களின் சமூகப்பொருளாதார நிலை உயர்வதற்கும் இந்திய அரசியற் தேர்தல்களில் சுதந்திரத்துடன் பங்கு கொள்ளவும் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டிய சில திட்டங்கள் பற்றி இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. அவைகளில் மிக முக்கியமானவை:

1. மத்திய அரசுப் பதவிகளில் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர்களுக்கு விகிதாச்சார முறைப்படி பிரதிநிதித்துவம் கொடுப்பது.

2. விகிதாச்சார முறைப்படி இவர்களுக்கு மாநில அரசுகளிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சியில் உள்ள மாநிலங்களிலும் (union territories) விகிதாச்சாரப் பணிப் பதவிகள் கொடுப்பது.

3. இவர்களுக்கான கமிஷனர் அலுவலகத்தை மீண்டும் அமைப்பது.

ஆனால், அறிக்கையின் போக்கில் சில இடங்களில் காவல்துறையினரின் நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பினும் தீண்டாமை ஒழிப்பில் காவல் துறையின் பங்கு பற்றிய நேரடியான ஆய்வு இல்லை என்றே கூறலாம்.

*தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்பு அமைப்புகளின் ஆண்டறிக்கைகள்:*

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன்களைக் கவனிப்பதற்கும், பெருவாரியான உயர்சாதி இந்துக்களின் கொடுமையிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் பொருட்டும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 இன் படியும், இதற்குக் கொண்டுவந்து சட்டமாக்கப்பட்ட திருத்தங்கள் 1976—இன் படியும் காவல் துறையில் தனிக் காவல் படை ஒன்று அமைக்கப்பட்டது. இப்படைக்குத் தலைமை பொறுப்பில் இருக்கும் தற்போதைய காவல் துறைத்தலைவர் (I.G.P) சரகக் காவல்துறைத் துணைத்தலைவர் (D.I.G) ஒவ்வொரு ஆண்டும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை நடை முறைப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற அறிக்கையைத் தமிழ்நாடு உள்துறைச் செயலருக்கு அனுப்ப வேண்டும். இந்த ஆராய்ச்சிக்கு இவ்வறிக்கை பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. எனினும் இதன் பயனும் ஒரு எல்லைக்குட்பட்டே இருந்தது. அதற்குக் காரணம் சில ஆண்டுகளின் அறிக்கைகள் முந்திய ஆண்டுகளின் அறிக்கையின் நகல்களாகவே அமைந்துள்ளன. முதற்சில அறிக்கைகள் தவிர மற்றவை அந்தந்த ஆண்டில் நிலவிய உண்மைச் சூழலைச் சித்திரிக்க வில்லை. எனினும் இவ்வறிக்கைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவையனைத்தும் நம்பகமானவைகளே.

*கட்டுரைகள்*

தீண்டாமை, தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் ஆகியவை பற்றிப் பல அறிஞர்களும் ஆய்வாளர்களும் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் கட்டுரைகள் வாசித்துள்ளனர். ஆனால், அவை எங்கு எந்த ஆய்வரங்கத்தில் வாசிக்கப்பட்டன என்பது பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. அவற்றில் இங்கு இவ்வாராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் அமைந்திருந்த சில கட்டுரைகளின் தலைப்புக்களாவன.

1. குடியேற்ற ஆதிக்கத் தமிழ் நாட்டில் தலீத் பிராமணரல்லாதோர் என்ற உணர்வுகள். V.கீதா, S.V.ராஜதுரை.
2. தலீத்துகளின் தன்னிலை உறுதிக்கு (assertion) அச்சுறுத்துதலாக எழுந்த சாதிகளுக்கிடையிலான வேறுபாடுகள் (சச்சரவுகள்): ஒரு குறிப்பு.
3. சாதிச் சமுதாயத்தில் மனித உரிமைகள்—இந்தியச் சூழல்: திருமதி சாய்மி நாயக் (Ms.Sashmi Nayak).
4. தேசிய மனிதஉரிமைகள் இயக்கத்தின் நோக்கும் தாழ்த்தப்பட்ட சாதி, மற்றும் பழங்குடியினர் முன்னேற்றமும். N.I.சாயோ (Sao).
5. தலீத் பகுஜனங்களும் மனித உரிமைகளுக்குமான கொள்கை உருவாக்கமும்: ஒரு குறிப்பு, கஞ்ச இலையா (Kancha Ilaiah).
6. மனித உரிமைகளும் சமுதாய மாற்றங்களும் பற்றிய தேசியப்பயிற்சிப் பட்டறை (National Workshop): குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பற்றி, V.கருப்பன் (ஒய்வு பெற்றI.A.S.)
7. மத, சமுதாயப் பழக்கவழக்கங்களும் தலீத்துகளின் மனித உரிமையும். பேரா. N.G.மெஸ்ராம் (Meshram)
8. தீண்டாமையும் மனித உரிமைகள் அத்து மீறலும்—திருமதி நிர்மலா அருள்பிரகாஷ்.
9. தலீத்துகளும் மனித உரிமைகளும்—முழுமையின் ஒரு பகுதி ஆனால் வேறுபட்டது. முனைவர் S.K.தோரட்(Thorat)
10. மஹாராஷ்ட்ர தலித் இயக்கம் பற்றிய பார்வை. முனைவர் M.F.ஜில்தே (Jilthe).
11. தேசிய மனித உரிமை இயக்கமும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றமும். G.S.பார்கவா (Bhargava).
12. இந்தியாவில் தலீத் மனித உரிமை இயக்கம் தோற்றுவிப்பதற்கான சாத்தியக் கூறுகள். K.விஜயகுமார்.
13. மனித உரிமைகளும் ஆந்திரமாநில தேவதாசிமுறையும் முனைவர் ஏ.லலிதா

எடுத்துக்கொண்ட ஆய்வினை முறைப்படி செய்தற் பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள இருபத்தாறு ஆங்கில நூல்களையும் ஆறு தமிழ் நூல்களையும் பதிமூன்று கட்டுரைகளையும் பல குழுக்களின் அறிக்கைகளையும் சட்டநுணுக்கங்களையும் செவ்வனே கற்றுணர்ந்து, சமுதாய இயல், மானிடவியல், அரசியல், சட்டநோக்கு இவற்றின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு இவ்வாராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான தேசியக் குழுவின் அறிக்கைகளையும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி காவல் துறையினர் கொடுக்கும் ஆண்டறிக்கைகளையும் தவிர இம்மக்கள் பெற்றுள்ள துன்பங்களை விரிவாகக் கூறக்கூடிய பிற ஆவணங்கள் கிடையாது. இக் கொடுமைகளைப் புரிந்து கொண்டு, மத்திய அரசால் சட்டமாக்கப்பட்டு, அதன் மேற்பார்வையில் மாநில அரசு தங்களின் காவல்துறை மூலம் இச் சட்டங்களின் உதவி கொண்டு தீண்டாமையை ஒழிக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் கற்றோரும் காவல் துறை அதிகாரிகளும் சற்றும் ஆர்வங்காட்ட வில்லை என்பது வியப்பிற்குரியது. அதுபோலவே இவ்வின மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களைக் கால நியதிப்படியும் வெவ்வேறு தலைப்புகளின் கீழும், குற்றவியல் முறையிலும் இதற்கான தேசியக் குழு ஆயவில்லை.

### ஆய்வின் அனுமானங்கள்

சமூக உரிமைகள் மற்றும் பாதுகாப்புச் சட்ட நோக்கில் காவல் துறையின் பங்கு பற்றிய இவ்வாய்வில் முதன்மை—துணை ஆதாரங்கள், இப்பிரச்சினை பற்றிய சொந்த அனுபவம், அறிவு இவற்றின் அடிப்படையில் கீழ்க்காணும் அனுமானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. இந்தியாவில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படுவது யாவரும் அறிந்த உண்மை. அதை ஒழிப்பதற்குப் பல திட்டங்கள் தீட்டப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தீண்டாமையை ஒழிக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சுதந்திர இந்தியாவின் குடியரசு அரசியல்

அமைப்புச்சட்டத்தில் அதற்கான சட்ட திட்டங்களைச் சேர்த்துள்ளனர். இத்திட்டங்கள் எவ்வளவுதூரம் அமுல்படுத்தப்பட்டது? அவைகள் செயல்படும் முறை திருப்தியளிக்கின்றனவா?

2. தீண்டாமையை ஒழிக்கக் "குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்—1995—ஐ மத்திய அரசு இயற்றியது. இச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. காவல்துறை எவ்வளவு தூரம் இப்பொறுப்பை நிறைவேற்றியுள்ளது? அதன் விளைவுகள் யாவை?

இந்த அனுமானங்களை மனதிற் கொண்டு இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், தீண்டாமையின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வுடன் இந்த ஆய்வு தொடங்குகின்றது. தீண்டாமையின் பிறப்பூற்று சாதி அமைப்பு என்பது சமூகவியலார் ஐயமற உறுதிபடுத்திய கருத்தாகும். சாதி அமைப்பை ஊட்டி வளர்த்தது இந்து மதம். இவ்வடிப்படை நோக்கோடு இப்பிரச்சனை வெளிப்படையாகவும் தெளிவாகவும் இங்கு நோக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் அதன் மூலம் தீண்டாமையை ஒழிக்கக் காவல்துறை மேற்கொண்ட முயற்சிகளின் அளவையும், அவை பெற்ற வெற்றிகளையும் கண்டறிகின்றது இவ்வாய்வு.

இந்தியாவைப் பொறுத்தவரை தீண்டாமை என்பது மதத்தில், குறிப்பாக இந்து மதக் கோட்பாடுகளில், வேர் கொண்டது. எனவே தீண்டாமை ஒழிப்பில் காவல்துறையின் பங்கு பற்றிய இவ்வாய்வில் இந்து மதம் மற்றும் வேதம் கூறும் சாதீயக் கருத்துக்கள் விளக்கப்பட வேண்டிய ஒன்று. அதோடு, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்குச் சமுதாயம், அரசு, காவல் துறை மேற்கொண்ட முயற்சிகளால் ஏற்பட்ட விளைவுகளும் இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதற்கு, இவ்வாய்வு தொடர்பான நூல்கள் பதிப்பிக்கப்பட்ட மற்றும் பதிப்பிக்கப்படாத முனைவர்(Ph.D.,) மற்றும் எம்.ஃபில் பட்ட (M.Phil) ஆய்வேடுகள், பத்திரிக்கைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் (Seminars & Conferences),செய்தித்தாள்கள், முதலியவற்றில் வெளியான கட்டுரைகள், ஆண்டுதோறும் வெளியிடப்படும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான குழு அறிக்கைகள்,

முதலியவற்றிலிருந்து ஆய்விற்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிதற் பொருட்டு இந்த அறிக்கையிலிருந்து முக்கியத் தகவல்களைச் சேகரித்துக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி தமிழ் நாட்டில் தீண்டாமையை அகற்ற எந்த அளவிற்கு முயற்சிகள் செய்யப்பட்டுள்ளதென்பதை ஒப்பு நோக்குவதே இவ்வாய்வின் குறிக்கோள்களாகும். மேலும், இதுபற்றிய, எதிர்கால ஆராய்ச்சிக்குத் தெளிவான கருத்துக்களை முன் வைத்துத் தீண்டாமை ஒழிப்பிற்கு உந்துதலாய் இந்நூலை வெளிக்கொணர்வதும் இவ்வாய்வாளரின் நோக்கமாகும்.

***ஆராய்ச்சியின் வரன்முறை:***

காலம், பரப்பு, மக்கள் தொகை என்ற பரந்த கட்டமைப்பை இப்பிரச்சினை கொண்டுள்ளதால், இந்த ஆய்வின் பரப்பை தமிழ் நாட்டளவில் 1955 முதல் 1990 வரையிலான வழக்குகள் மட்டுமே ஆய்வு எல்லையாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களின் துயர் துடைக்கும் முயற்சியில் 1955 முதல் 1975 வரை சொல்லக்கூடிய முறையில் எந்தப் பெரிய முன்னேற்றமும் ஏற்படவில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினர், மற்றும் பழங்குடியினருக்குத் தீண்டாமையால் ஏற்படும் தீமைகள் பற்றியும், அவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை பற்றியும் அவர்களின் துயரங்கள் பற்றியும், அரசும், அறிவு ஜீவிகளும், இதை உணரக்கூடிய பொது மக்களும் மிகவும் கவலைப்பட்டனர். இந்நிலையில், இந்தியா 1975 ஜூன் மாதம் சில சிக்கல்களைச் சந்திக்க நேரிட்டமையால், பிரதமரின் அறிவுரைப்படி, இந்திய ஜனாதிபதி ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார். மக்களும் விரைவில் ஒரு ஒழுங்கு முறைக்கு உட்பட்ட வாழ்க்கையின் பல பிரிவுகளிலும் விரைவில் நல்ல முன்னேற்றம் கண்டனர். சமூக பொருளாதார அரசியல் போக்குகளிலும் மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் நல்ல முன்னேற்றங்கள் தோன்றின. இதனால் "தீண்டாமை (குற்றங்கள்) திருத்தம், மற்றும் பல சட்டங்கள்—1976' என்ற சட்டம் இயற்றப்பட்டது.

1977—இல் உள்நாட்டு அவசரச் சட்டப் பிரகடனம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. மத்தியில் ஜனதாக் கட்சி ஆட்சி அமைத்தது. இவ்வாட்சி தன்னுடைய செயல்களில் வெளிப்படையாகவே நடந்து கொண்டதால் மக்களிடையே இருந்த இறுக்கம் தளர்ந்தது. இச் சூழல் மக்களின் ஒரு பகுதியிரைச் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்குத் தீங்கிழைக்கும் செயல்கள் செய்திட வழி வகுத்தது. எனவே, தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினரின் நலனுக்காகப் போராடி வந்த தலைவர்கள் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு நிரந்தரமான ஒரு அமைப்பை அரசு உருவாக்கி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து நடைமுறைப் படுத்துவதை மேற்பார்வையிட்டு வரும்படி கோரினர். அதன்படி முதன் முறையாக 1978—இல் "தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் தேசியக் குழு" என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் தீமைகளையும் பகுத்து ஆய்ந்து அவற்றை ஒழிப்பதற்கான வழிமுறைகளை அரசுக்குக் கூறுவதுதான் இக்குழுவின் முக்கிய செயல்பாடு.

தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான 1989—ஆம் ஆண்டிற்கான தேசியக் குழு, தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி ஏப்ரல் 1990—இல் முதல் முதலாக ஒரு அறிக்கையை[10] அரசுக்குச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையின் 45—ஆம் பக்கத்தில் "இம் மக்களின் நலன்களைப் பாதுகாக்கப் போதுமான சட்டச் சரத்துக்கள் உள்ளதாகத் தோன்றக் கூடும். இருப்பினும் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்கின்றன. 1981 முதல் 1986 வரையில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குக் கொடுமைகள் செய்தது சம்பந்தமாக 1,15055 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வைச் செய்து வரும் காலத்தில் ஆந்திர மாநிலத்தில் காரம்சேடு (Karamchedu) பத்திக்குப்பம், பீகார் மாநிலத்தில் ஜெகனாபாத், உத்திரப் பிரதேசம் சகாரம்பூர், போபால், தமிழ்நாடு மதுரைமாவட்டம் ஆகிய இடங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் படுகொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

"குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1976","தாழ்த்தப்பட்ட சாதி தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (கொடுமைத் தடுப்புச்) சட்டம் 1989" இவ்வினங்களுக்கு எதிரான கொடுமைகளைக் களைந்திட உறுதியான முக்கிய வழிமுறைகளையும், தீண்டாமை ஒழிப்பில் முனைப்பையும் கொண்ட சட்டங்களே. எனவே இவ்வாராய்ச்சிக்கான காலத்தை 1955 முதல் 1990 வரையிலும் ஆய்வுக்களமாக தமிழ்நாட்டையும் கொண்டுள்ளது.

## அடிக்குறிப்பு

1. ஆலிவர் மெண்டல்ஷோன், உபேந்திர பக்ஷி
"அடிமை மக்களின் உரிமைகள்"
ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டிப் ப்ரஸ். 1994
பக். 65 (A Quote).

2. சாரதாமணி, K."ஒரு அடிமைச் சாதியின் எழுச்சி (கேரளப் புலையர்கள்) பியூப்பில்ஸ் பப்ளிசிங் ஹவ்ஸ் (பி)லிட். P(i) (நீதிபதி V.R.கிருஷ்ணையரின் முகவுரை).

3. எட்கார் தர்ஸ்டன், ரெங்கநாதன், K.(தொகுப்பு)
'தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடியினரும்' ஏசியன் எஜுகேசனல் செர்வீசஸ் பக்.473

4. மேற்படி பக் 88—89

5. மேற்படி பக் 119.

6. ஆலிவர்மெண்டல்ஷோன், உபேந்திர பக்ஷி: பக். 65

7. திருக்குறள், திருவள்ளுவர். ட்ரூ,ரெவ்ஜான் லசாரஸ் மொழிப் பெயர்ப்பு: பக் 197

8. பாரதி பாடல்கள்; ஆய்வுப் பதிப்பு: தமிழ் பல்கலைக் கழகம் பக் 51.

9. மேற்படி பக்.659

10. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான குழுவின் அறிக்கை—பழங்குடி இனத்தவர் மீதான கொடுமைகள், காரணங்கள், பரிகாரங்கள், ஏப்ரல் 1990. பக் 42.

11. பாரதி பாடல்கள் சில: தொகுப்பு: தமிழ் பல்கலைக் கழகம் 1987 தஞ்சாவூர். பக்.51

*தீண்டாமை தோற்றம், செயல்பாடு, வளர்ச்சி*

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் இந்திய சமுதாயத்தின் மீதுள்ள ஒரு கறை, மற்றும் சாபக்கேடு தீண்டாமை. அதை ஒடுக்கி அழிப்பதற்கான போராட்டத்தையும் மீறி, பீனிக்ஸ்(Phoenix) பறவைபோல், மீண்டும் மீண்டும் தன் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் மடமையான கொள்கையில் உருவாகி, இழிவான பழக்கமாய்த் தோய்ந்து நிற்பதான இத்தீண்டாமை.

*தீண்டாமை என்பதென்ன?*

இந்திய சமுதாய அமைப்பில் சிறப்பாகப் பொருட் பொதிவுடன் கூடிய ஒரு நூதன நிகழ்வே தீண்டாமையாகும். இது ஒரு இந்தியக் கோட்பாடு. இதன் முழுப்பொருளையும் இந்தியச் சூழலில்தான் நன்கு உணர முடியும். ஆங்கிலத்தில் பரவலாக இங்கு பழக்கத்தில் இருக்கும் 'அன்டச்சபிலிடி' (Untouchability) என்னும் சொல், 'அஸ்பர்சியர்' என்னும் வடமொழிச் சொல்லின் மொழிப்பெயர்ப்பேயாகும். இது தமிழில் 'தீட்டு', என்றும் கன்னடம் மலையாள மொழிகளில் 'புலா' என்றும் பொருள்படும். ஆனால் இச் சொல்லிற்கு இணக்கமான பொருள் சொல்லுவது இயலாததாகும்.

இந்த விளக்கங்களை உணர்த்துவது 'மாசுபடுத்தும்' என அஞ்சிச் சம உரிமை மறுக்கப்படுவதேயாகும். தீண்டாமைக்கு அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய முனையும் அம்பேத்கார், "தீண்டாமை, சாபக்கேடு, மாசு, அப்பழுக்கு என்னும் பொருளை வலியுறுத்தி அதை நீக்கும் வழிமுறைகளையும் சுட்டுகிறது" என்கின்றார்.

"பெருவாரியான கீழ்ச்சாதியினர், மேல்சாதி இந்துக்களை அவர்தம் வீடுகளை, கோவில்களை, குளங்களை, பொதுச் சாலைகளையும் கூடத் தொட, அணுக விடாமலிருப்பதற்கு இந்துக்கள் கடைப்பிடித்த சமூக—மதப்பழக்கம்" என்று தீண்டாமைக்குச் சிறப்பான விளக்கம் கூறுகிறார் டாக்டர் அய்யப்பன்.

தீண்டாமையை "நடைமுறைக் கொப்ப விளக்குவதாயின், மிகவும் கீழ்ப்பட்ட மக்கள் வாழும் குறிப்பிட்ட சிற்றூர் அல்லது ஊரின் ஒதுக்குப் புறங்களே சான்றாகும்."[4] என்று லூயிடுமோ (Louis Dumont) விளக்குகிறார்.

உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் இந்தியாவில் தான் தீண்டாமை மத ஒப்புதலைப் பெற்றுள்ளது. இந்து மதத் தர்ம சூத்திரங்களும் தர்ம சாத்திரங்களும் தீண்டாமையை அனுமதிப்பதுடன் அதைக் கடைப்பிடிக்கத் தவறியவிடத்துச் செய்ய வேண்டிய கழுவாய்க்கான சடங்குகளையும் குறிப்பிடுகின்றன."5

தொன்மையான வடமொழிச் சாத்திரங்கள் சாதிப்பிரிவுகளையும் தீண்டாமையையும் வலியுறுத்தி வருகின்றன. தீண்டத்தகாதாருடனான உறவுகள் பற்றி மிகக் கடுமையான விதிமுறைகளைத் தர்ம சாத்திரங்கள் வாதிக்கின்றன. இந்துப் புராணங்கள், தர்மசாத்திரங்கள் ஆகியவற்றின் பாதிப்புகள் முற்காலச் சங்க இலக்கியத்திலும் இடைக்காலத் தமிழ் இலக்கியத்திலும் தெளிவாகவே புலப்படுகின்றன.

வடமொழி இலக்கியத்தால் வடஇந்தியாவில் நிலவிடும் தீண்டாமையின் சமூக—மதச் சூழலை ஆராய வேண்டியது அவசியமாகும். ஆரம்ப காலத்தில் பிறப்பால் தீண்டத்தகாதோர் என்ற சண்டாளர்களும் நிஷாதேசுகளும் (Nishadesh) மிகச்சிறிய எண்ணிக்கையில் இருந்தனர். ஏற்கனவே இருந்த எண்ணற்ற சாதிப்பிரிவுகளுடன் வர்ணாஸ்ரமத்தையும் வலியுறுத்தியதால், வடக்கிலும் தெற்கிலுமுள்ள இந்திய மக்கள் உயர்சாதி கீழ்சாதி எனப் பிரிவுபட்டு நிற்கின்றனர்.

***தீண்டாமையின் தோற்றம்***

தீண்டத்தகாதோர் யார் என்பதற்கு மூன்று வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று ஆரியர்கள், இரண்டு திராவிட இனத்திற்கு முற்பட்டோர், மூன்றாவது திராவிட இனத்தவர், டாக்டர் R.S. சர்மாவின் நோக்கில் "தீண்டத்தகாதோர் ஆரியரின் ஒரு பகுதியினரே என்னும் கருத்து இரண்டு அனுமானங்களால் நிலைகொண்டது. நான்கு வர்ணங்களில் சூத்திரர் என்பவர்களும் ஆரிய இனத்தவர்களே. ஏனெனில், நான்கு பிரிவுகளான வர்ணாஸ்ரம முறை ஆரிய சமூகத்தின் மாட்டே நிலவியது. அவர்கள் பிற்காலத்தில் படைஎடுத்து வந்த ஆரியர்களால் அடக்கி ஒடுக்கி அடிமையாக்கப்பட்ட மிகப் பழமையான ஆரியர்களே."6

தீண்டத்தகாதோரை ஆரியர்களாகவே கருதும் இக் கொள்கையை டாக்டர் அம்பேத்கார் ஒப்புக்கொள்ளவில்லை. அம்பேத்கார் கருத்துப்படி தீண்டத்தகாதோர் திராவிட அல்லது நாகா இனத்தைச் சேர்ந்தவர்கள். தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு தங்களையே அழித்துக் கொண்டதால் எண்ணிக்கையில் குறைந்து வலுவிழந்து நின்றதால், ஆரியர்கள் வந்து தங்கிய சிற்றூர்களின் புறப்பகுதியில் வாழவைக்கப்பட்ட இவ்வினத்தவர்களே தீண்டத்தகாதோராயினர்.[7]

நாகர்கள் இந்நாட்டில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தவர்கள். தங்களுக்கென ஓர் பண்பாட்டைக் கொண்டவர்கள்; கடலில் உழைப்பவர்கள். பின்னர் இவர்கள் சேர இனத்தில் இணைந்தனர். அவர்களுடைய தாய்மொழியான தமிழ், இந்தியா முழுமையும், காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பேசப்பட்டது. வடக்கு வாழ் நாகர்கள் ஆரியமயமாக்கப்பட்டதனால் தங்களுடைய மொழியை அவர்கள் கைவிட்டனர். எனினும் தெற்கில் வாழும் நாகர்கள் தமிழ்மொழியே பேசி வந்தனர். எனவே அவர்கள் திராவிடர்கள் என்று அழைக்கப்பட்டனர். நாகர்கள் என்பது அவர்களுடைய இன பண்பாட்டுப் பெயர்; திராவிடர்கள் என்பது அவர்களின் மொழிவழிப் பெயர்."[8]

இதிலிருந்து இந்தியாவில் தீண்டத்தகாதோர் எனப்படுபவர்கள் அடிமைப்படுத்தப்பட்ட இந்நாட்டு மக்களே என்பது தெளிவாகும். எனவே, இந்தியப் பழங்குடி மக்கள், இந்தியாவை வெற்றி கொண்ட வேற்றினத்தவர்களால் அடிமையாக்கப்பட்டு, பண்பாட்டு முரண்பாட்டால் காலப்போக்கில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்க கருத்தேயாகும்.

தீண்டத்தகாதோர் பிராமணர்களையும் அவர்களைச் சார்ந்தோரையும் விட்டுத் தாங்களாகவே பிரிந்து கொண்டனர் என்பதற்கும், பதிலுக்குப் பிராமணர்களும் தங்களுக்கு எதிரிகளான அவர்களை மிகமோசமான தீண்டத்தகாதோர்களாகவே ஆக்கிவிட்டனர் என்பதற்கும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. தங்கள் சிற்றூருக்குள் பிராமணர்கள் நுழைவதைப் பறையர்கள் வெறுத்தனர் என்பது இக்கருத்திற்குச் சாதகமாகக் காட்டப்படுகிறது.[9]

*சங்க காலத்தில் தீண்டாமை*

சங்க காலத்துப் பேரிலக்கியந் தொட்டு நிகழ்காலத் தலித் இலக்கியம் வரையில் உள்ள இலக்கியப் படைப்புகளைக் கொண்டு தமிழ்நாட்டில் தீண்டாமையின் வரலாற்று வளர்ச்சியை வடித்திட முடியும். சங்க இலக்கியத்தில் காணப்படும் சமுதாய அமைப்புப் பல சிறு சிறு குழுக்களாக நிலப்பாகுபாட்டையும், தொழிலையும் அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் இலக்கிய மரபில் நாடு நான்குவகை நிலப்பகுதிகளாக இயற்கை நியதியில் பிரிக்கப்பட்டது. அவையாவன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நான்கு வகைகளாகும். அவை மலையும் மலை சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமும் கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். இப்பகுதிகளில் உள்ள வறட்சியான நிலப்பகுதிகள் பாலை என்று அழைக்கப்பட்டன.

இவ்வகை நிலங்களில் அவற்றிற்கியைந்த தொழில்களை அந்நிலமக்கள் செய்து வந்தனர். எடுத்துக்காட்டாகக் குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடும் வாழ்வைக் கொண்டிருந்தனர். அவர்களில் வேடுவர், கானவர், குறவர், எயினர் என்று பிரிவுகள் இருந்தன.

சங்க காலச் சமுதாயத்தில் மல்லர், புலையர், பறையர் என்று மக்கள் பிரிவினரைக் குறிப்பிட்டிருப்பினும், அவர்கள்யாரையும் தாழ்த்தப்பட்ட இனத்தவர் என்றோ, தீண்டத்தகாதோர் என்றோ கூறப்படவோ நடத்தப்படவோ இல்லை. தற்காலத் தமிழ்நாட்டில் பெரும் பகுதியினராக உள்ள பறையர்கள் சங்ககாலச் சமுதாயத்தில் மதிப்புடனேயே வாழ்ந்தனர். பறையன் என்ற சொல் புறநானூற்றில் ஒரே ஒரு இடத்தில்தான் காணப்படுகிறது. பறையன், பாணன், துடியன், குடும்பன்[10] என நான்கு வகை மக்கள் பற்றிய குறிப்பில் இச்சொல் இடம் பெறுகிறது.

சங்க இலக்கியம் எதிலும் பறையர்கள் தாழ்ந்த இனத்தினர் என்று கூறப்படவில்லை. ஆனால் துடியர்கள் 'இழிசினர்' 'இழிபிறப்பினர்'12 என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். துடியர்களையும் புலையர்களையும் தாழ்பிறப்புடையோர் என்று குறிப்பிட்டாலும் அவர்கள் தீண்டத்தகாதோர் என்று கூறப்படவில்லை. சங்ககாலத்திற்குப் பிற்பட்ட காலத்தில்தான் தீண்டாமை என்ற கருத்து தலைதூக்கியது.

பிறப்பையும் நிரந்தரத் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு சங்க காலத்திற்குப் பின்னும் சாதிப்பிரிவினைகள் ஆழ்ந்து வேரிடவில்லை. ஏனெனில் பின்னர் தோன்றிய ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்களில் அவற்றின் ஆசிரியர்கள் சாதிப் பாகுபாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். —குறள் : 98

என்று திருவள்ளுவரும், நாலடியாரில்

நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை — தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வியாள் வினை
என்றிவற்றான் ஆகும் குலம். —நாலடி : 195

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே சங்கம் மருவியகாலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் தீண்டாமை தலை எடுக்கவில்லை என்பது தெளிவாகின்றது. ஆனால் அதற்கான வித்து, உடல் அசுத்தத்தை வைத்துத் தற்காலிகத் தீண்டாமை எனும் கருத்து முளைவிட ஆரம்பித்தது என்று கூறலாம்.

*முன்–இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் தீண்டாமை:*

“கி.பி.574 முதல் கி.பி.897 வரையிலான பல்லவர் காலத்தில் வைதீக மறுப்புச் சமயங்களான புத்த சைன சமயங்கள் தமிழ்ச் சமுதாயத்தில் ஆழமாகக் காலூன்றின.”[15]

இச்சமயங்களுக்கு எதிராகப் பக்தி இயக்க ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூட நல்ல பரந்த சமூக சாதி நோக்குகளைக் கொண்டிருந்தனர். எல்லாச் சாதிகளிடத்தும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ள தாழ்ந்த சாதியினரிடம் மிகவும் பரிவுடன் நடந்து கொண்டனர். இதனால் எல்லாவகுப்பு மக்களிடத்தும் அவர்களின் கொள்கைகள் பரப்பப்பட்டுப் பல்வேறுபட்ட வகுப்பினரையும் ஒன்றிணைக்கும் முறைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த சைவக்குரவர் திருநாவுக்கரசு

சங்கநிதி பதுமநிதி யிரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்க மெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரத்தார்க் கண்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளரே.
(தனித் திருத்தாண்டகம் 10)

என்று கூறுகிறார்.

*இடைக்காலத்தில் தீண்டாமை:*

இடைக்காலத் தமிழ்நாட்டில் சோழ, விஜயநகரப் பேரரசுக் காலங்களில் பிராமண—இந்து மதம் தலையெடுக்க ஆரம்பித்தது. இதனால் வர்ணாஸ்ரம தர்மம் மக்களின் மனதில் ஆழப்பதிந்தது. இதனால் தீண்டத்தகாதோர் நிலை மிகவும் மோசமாகியது. காலப்போக்கில் அவர்கள் விவசாய வேலை செய்யும் அடிமைகளாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

தீண்டத்தகாதோரைப் பார்த்து விட்டாலோ, அவர்களைத் தொட்டுவிட்டாலோ உயர்சாதி மனிதனின் தூய்மை பாதிக்கப்பட்டுத் தீட்டாகின்றது எனும் மூடநம்பிக்கை இக்காலந் தொட்டே ஏற்பட்ட தொன்றாகும். சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்துதற்காக நாகரீகமடைந்த மனிதரும் இதனை ஏற்றுக்கொண்டனர். தொன்மையான நம் மதங்களும், புத்தரிலிருந்து டாக்டர் அம்பேத்கார் வரையிலான ஞானமுடைய தலைவர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அவர்கள் அதைக் கண்டித்தனர்.

தர்ம சாத்திரங்களும் பிரமாணங்களும் சடங்குத்தூய்மை கருதித் தீண்டாமையை ஏற்றனர். வர்ணாஸ்ரம முறையை நாம் ஏற்றுக்கொண்டால் முதல் மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் நான்காவது வர்ணத்தைச் சேர்ந்தவர்களைவிட உயர்ந்தவர்கள் என்பதை

நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அதன்படி தாழ்த்தப்பட்டோர் ஒதுக்கப்படுவதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

எனவே, ஒரு கற்றுயர்ந்த சமத்துவச் சமுதாயத்தில் வர்ணாஸ்ரம தர்மத்தினால் ஏற்பட்ட தீண்டாமை காலத்திற்கு ஒவ்வாததாகின்றது. சமுதாயத்தில் ஒரு பகுதியினரைத் தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கி வைப்பது விரும்பத்தக்க செயலோ, அறிவுசால் செயலோ இல்லை.

"தீண்டாமை என்னும் தீய எண்ணத்தைக் கடைப்பிடிக்கும் மூடத்தன்மை நிலச் சுவான்தார் முறையின் மீதமுள்ள சீர்கேடு; நில உடமைக் கோட்பாட்டின் எஞ்சிய நிலை. சமுதாயம் விரைவில் தொழில் மயமாகும் போது அவற்றில் பல தானாகவே மறைந்துவிடும்"[17] என்கிறார் டாக்டர் ஹனுமந்தன்.

*பொதுவான கருத்துக்கள்:*

பறையர்கள், பள்ளர்கள், சக்கிலியர்கள் ஆகியோரின் தோற்றத்தையும் வரலாற்றையும் எழுதுவதல்ல இங்கு நமது குறிக்கோள். அது பற்றி அறிய விரும்புகிறவர்கள், அவைபற்றி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிடைத்த விவரங்களைத் தர்ஸ்டன் ஐயர்(1981) எழுதியுள்ள நூல்களில் காணலாம். அவர்கள் கொடுக்கும் சில விவரங்கள் ஐயப்பாடுடையதாகவே உள்ளன. அதில் உள்ள பறையர்கள் தோற்றம் பற்றிய விவரம் அனுமான வகையில்தான் உள்ளது. ஏனெனில் பழைய நூல்கள் இவர்களைப்பற்றி எந்தக்கருத்தும் கூறவில்லை. மனிதக் கழிவை அகற்றும் வேலைக்கு மட்டுமே அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். பக்தி இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்ட தீண்டத்தகாத நந்தனாரைப் போன்ற சிலரையும் நாம் அறிவோம். இதில் தனியொருவன் கடவுள் பால் கொண்டிருக்கும் பக்திக்கு அவனுடைய பிறப்பும் ஐதீகச் சட்டங்களும் முக்கியமல்ல என்பதை இத்தகைய சம்பவங்கள் நிரூபிக்கின்றன. சிலர் கருதுவதுபோல் பக்தி இயக்கம் பெரும் புரட்சிகரமான இயக்கமல்ல. இதனால் உயர் சூத்திரர்களான வெள்ளாளர்களே பயனடைந்தனர். (ஸ்டீன் (STEIN) ( 1968:84)

பல நூற்றாண்டுகளாக அல்லல் பட்ட தீண்டத்தகாதோரின் வாழ்வில், ஆங்கிலேயரின் குடியேற்ற ஆதிக்கம் ஏற்பட்ட பின்னர்தான் வெளிப்படையான மாற்றங்கள் தோன்றின. தீண்டத்தகாதோரின் நிலை முற்றிலும் மாறிவிடவில்லை எனினும் அவர்களில் சிலர் நில புலன்கள் கொண்டவராயினர். சட்டமும் அவர்களைப் பாதுகாக்க ஆரம்பித்தது.

தமிழ் நாட்டில் உள்ள தீண்டத்தகாதோர் இனத்தில் பெரும் பகுதியினர் பறையர்கள். இது பற்றி 1971—ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தெளிவான விவரங்களைத் தரவில்லை. அதன்படி 7315595 தீண்டத்தகாதோர் எண்ணிக்கையில் ஆதி திராவிடர்கள் 2547166 என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றது. ஆனால் 'ஆதி திராவிடர்கள்' என்னும் சொல் தாழ்த்தப்பட்டோரைக் குறிக்கும் சொல். அது ஒரு சாதியைக் குறிக்காது. மதுரை ஆர்ச்டையோசிஸ் (archdiocese) சில் உள்ளது போல (பேராயருக்கு உட்பட்ட பரப்பு) பறையர்களைக் குறிப்பிடுவதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. 1971—ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி 15,33,482 பேர்களுடன் பறையர்கள் தாழ்த்தப்பட்டோரில் இரண்டாவது பெரிய இனத்தவராவர். இது தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகையில் 21 விழுக்காடுகளாகும். 13,26,745 மக்கள் தொகை கொண்ட பள்ளர்கள் அடுத்த நிலையில் உள்ளனர். அதற்கடுத்து 8,41,842 நபர்களைக் கொண்ட சக்கிலியர் களாகும். எனவே, மொத்த மக்கள் தொகையில் இச் சாதிமக்கள் முக்கியமான பகுதியாக விளங்குகின்றனர். 1981—இல் 48 மில்லியனாக இருந்த இந்திய மக்கள் தொகையில தீண்டத்தகாதோர் 18 விழுக்காடுகளாவர்.

இம் மூன்று தாழ்த்தப்பட்ட இனத்தவரும் தமிழ்நாடு முழுவதிலும் விரவி இருப்பினும் ஒவ்வொரு சாதி மக்களும் சில குறிப்பிட்ட பகுதிகளில் செறிவாக வாழ்கின்றனர். தமிழ்நாட்டின் கிழக்கே ஆற்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்களில் பறையர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். தென் மாவட்டங்களான திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகியவற்றில் பள்ளர்கள் அதிகம் வாழ்கின்றனர். மேற்கே கோயமுத்தூர் மாவட்டத்தில் சக்கிலியர் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 76 தீண்டத்தகாத சாதிகளைக் குறிப்பிடினும். இம் மூன்று பெரிய சாதித்தொகையுடன் தெளிவில்லாத ஆதி திராவிட இனங்களும் சேர்த்து மொத்த இந்திய தீண்டத்தகாத மக்கள் தொகையில் இவர்கள் 85 விழுக்காடுகளாகும். மற்ற சாதியினர் மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர் என்பது தெளிவு.

பெருவாரியான ஹரிஜனங்கள் இந்துக்களே யாவர். இவர்களில் பலரைக் கிருத்துவ மதத்திற்கு மாற்றியதால் கிருத்துவ மத மக்கள் தொகையில் இவர்கள் தவிர்க்கமுடியாத உயர்ந்த விகிதத் தில் இருக்கின்றனர். கிருத்தவர்களைத் தீண்டத்தகாதோர் என்று

கருதுவதில்லை யாகையால் கிருத்துவ மதத்தில் உள்ள தீண்டத்தகாத மக்கள் தொகை என்ன என்பது தெரியவில்லை.

*தற்கால இந்தியாவில் தீண்டத்தகாதோரின் இயலாமை*

தீட்டு என்னும் பெயரால், தாழ்த்தப்பட்ட சாதியினரும் பழங்குடியினரும் பல இடங்களில், குறிப்பாகச் சிற்றூர்ப் பகுதிகளில் இன்றும் எண்ணில்லாக் கொடுமைகளை அனுபவிக்கின்றனர். பொதுக் கிணறுகளில் நீர் இறைக்கவோ பொது விடுதிகளில் மற்றோருடன் அமர்ந்து உணவு உண்ணவோ, கோவில்களில் நுழையவோ, ஊர்த் திருவிழாக்களில் பங்குகொள்ளவோ அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. தீண்டாமையின் பெயரால் அளவுக்கு மிஞ்சிய வகையில் இக்கொடுமைகள், சில சமயங்களில் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன.

இந்தியாவில் பழக்கத்தில் உள்ள பல்வேறு வகைப்பட்ட தீண்டாமை பற்றி அரசு அமைத்த "இளைய பெருமாள் குழு"வின் ஆய்வறிக்கையில் இது பற்றிய ஒரு முழு அதிகாரம் உள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் கடைப்பிடிக்கப்படும் சித்திரவதைகள் எடுத்துக் காட்டுடன் இதில் விளக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஏறக்குறைய எல்லாச் சிற்றுர்களிலும் இந்தியாவிலும், அவர்களுக்காகத் தனியாக வைக்கப்பட்ட கோப்பைகளில் தேனீர் கொடுக்கப்படுகிறது; தனியாகக் குடிநீர்க் கிணறுகள், குளிக்குமிடங்கள், மயானங்கள் உள்ளன. இவை யாவற்றிலுமுள்ள பொதுத்தன்மை தாழ்த்தப்பட்ட சாதியினரும் பழங்குடியினரும் சிற்றூர்ப் பொதுக்கடைகள், கிணறுகள், கோவில்கள், ஆகியவற்றின் பயன்களைப் பெற்றிட அனுமதிக்கப்படவில்லை என்பதேயாகும்.

"தீண்டாமையை விளம்பரத்தின் மூலமோ, தீண்டாமை கூடாது என்று பிறரை ஒத்துக்கொள்ளச் செய்வதாலோ, அகற்றி விட முடியாதபடி நம் சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இதை ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் சட்ட பூர்வமான முயற்சியே வெகுவாகக் கை கொடுக்கும்".[19]

அரசியல் சட்டம் 17;35 பகுதிகள் தீண்டாமையைத் தடை செய்கின்றன. சட்டத்தால் தடை செய்யப்பட்டிருப்பினும், எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கப்படவில்லை யாகினும் பல இடங்களில் தீண்டாமை நடைமுறையில் உள்ளது.

பொருளாதாரப் பாதுகாப்பின்மை, கல்வியறிவின்மை, குறுகிய மத நோக்கு இவைகளே நம் சமுதாயத்தில் தீண்டாமை நிலவிட ஏதுக்களாகும். அரசு தீண்டாமையை ஒழிக்க எடுக்கும் முயற்சி இம் மூன்று குறைபாடுகளையும் களைவதற்கான மும்முனைப் போராட்டமாகவே இருத்தல் வேண்டும்.

தமிழ்நாட்டில் தொன்று தொட்டுத் தொடர்ந்த இந்தத் தீண்டாமை சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரை மட்டுமின்றி, எல்லா மக்களிடையேயும் ஒற்றுமையைச் சீர்குலைத்து, ஒட்டு மொத்த மக்களின் அமைதியான வாழ்க்கையையும் கெடுக்கின்றது.

தீண்டாமையினால் பகைமை தூண்டப்பட்டு அவ்வப்போது அரசியல் அரங்கிலும் சண்டை சச்சரவுகள் நிகழ்கின்றன. சுதந்திரத்திற் குப் பின் தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்ட இந்தியத் தலைவர்கள் கைக்கு ஆட்சி மாறியதும் தீண்டாமை ஒழிந்து விடுமென பெருந்தலைவர்கள் எண்ணினர். ஆனால் அரசியல் களத்தில் அவர்களுடைய நம்பிக்கை நடைமுறைப்படுத்த முடியாத மாயையானது.

அடிக்கடி, குறிப்பிட்ட இடைவேளைகளில் தமிழ்நாட்டில், நகர்ப் புறங்களிலும் சிற்றூர்களிலும் தீண்டாமை தன் கோரத் தலையைத் தூக்கிக் கூத்தாடுகிறது. தீண்டாமையைக் களைந்திட அரசும், நீதித்துறையும், நிர்வாகமும் எந்த முயற்சிகளையும் விட்டுவைக்கவில்லை எனினும் எதனாலும் இலகுவில் அசைக்க முடியாதபடி தீண்டாமையின் ஆணிவேர் நம் சமுதாயத்தில் ஆழப்பாய்ந்துள்ளது. ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான தீண்டாமை வழக்குகள் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பதிவாகின்றன. தீண்டாமை நிலைத்திருப்பதற்கு முக்கியக் காரணங்கள் நான்குவகை இயலாமைகளேயாகும். ஏழ்மையால் (பொருளாதார) இயலாமை, சமத்துவ மின்மையால் ஏற்படும் இயலாமை (சமூக); அநீதியால் இயலாமை (நீதித்துறை) வெறுப்பால் இயலாமை (மத); ஒதுக்கி வைத்தலால் (அரசியல்) எழும் இயலாமை.

நெடுங்காலமாக தாழ்த்தப்பட்ட இன மக்கள் பொருளாதார வகையில் உயர்சாதி இந்துக்களையே சார்ந்துள்ளனர். அவர்கள் பார்க்கும் வேலையும் பண வரவில்லாதது, கௌவரக் குறைவானது. அவர்களில் அநேகர் நிலமற்ற விவசாயக் கூலிகளாக வேலை பார்த்து நிலச் சுவான்தார்களின் தயவில் வாழவேண்டி இருந்தது.

எனவே அரசாங்கம் கொடுக்கும் கல்வி வசதிகளை அவர்களால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதனால் பொருளாதாரச்—சமூக அடிமைத்தனம் உருவானது. எல்லாச் சமூகத்தினருக்கும் ஆட்சியில் பங்கு கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து, தாழ்த்தப்பட்ட இன மக்களில் தகுதிவாய்ந்த ஒருவர் அரசுப்பணிகளுக்கான பொதுப் போட்டிகளில் கலந்தகொண்டு வெற்றி பெற்றிட முடியாது, என்பதால் அரசுப் பணிகளுக்கான அவர்களுடைய வாய்பை அவர்கள் இழக்கும் படி செய்யக் கூடாது என்று முன்பிருந்த அரசு 1934—இல் அறிக்கை வெளியிட்டது. அவ்வினத்தவர் கல்வியில் பின்தங்கியே இருந்ததால் தகுதியுள்ள கற்றவர்கள் போதிய எண்ணிக்கையில் அவர்களில் இல்லை. எனவே அப்போதைய அரசு, இலாகாக்களில் நியமனங்கள் நடக்கும்போது இவ்வினத்தவர்களுக்குச் சரியான அளவு வேலையில் இட ஒதுக்கீடு செய்வது அவசியம் என்று கருதியது.

*தீர்வுக்கான திட்டங்கள்:*

1942—இல் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு அரசு வேலைகளில் கொடுக்கப்படும் வாய்ப்பினால் அச்சலுகையை நீடித்தும் கூட திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டவில்லை என்பதை உணர்ந்தது. 1941—மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி இருந்த அம்மக்கள் தொகைப்படி, 12.75 விழுக்காடுகள் பதவி பெற்றிட அவர்கள் தகுதியுடையோராய் இருக்க ஆகஸ்டு, 1943—இல் தாழ்த்தப்பட்ட இவ்இனத்தவருக்கு இடஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தது.

அவர்களில் போதிய அளவு தகுதிவாய்ந்தவர்கள் இல் லாததைக் கருத்திற் கொண்டு மேற்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. வேண்டிய அளவு தகுதியானவர்கள் அவர்களில் இருக்கும் போது இந்த விழுக்காடுகளை உயர்த்த வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டு அன்றைய அம்மக்கள் தொகைக் கேற்ப[20] ஜுன் 1946—இல் 8.5 விழுக்காடு இடஒதுக்கீடு 12.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்கப்பட்ட உடன் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான இட ஒதுக்கீட்டை நிர்ணயிப்பதற்கும், அரசு வேலைகளில் அவர்களுக்கு அதிகப் பங்கு கொடுக்கவும். அவர்களுக்கு மற்ற பல சலுகைகள் வழங்குவதற்கும் ஆய்வு

செய்யப்பட்டது. பொருளாதாரப் பாதுகாப்பின்மையே நம் சமுதாயத்தில் தீண்டாமை நிலைப்பதற்குக் காரணமாகும். "பொருளாதார ரீதியில் தீண்டத்தக்கோர் பலமிக்க அதிகாரம் படைத்த கூட்டம்; தீண்டத்தகாதோர் ஏழைகள், பிறரைச் சார்ந்து நிற்கும் கூட்டம்,"[21] என்று அம்பேத்கார் தெளிவாகக் கூறியுள்ளார்.

அச்சுறுத்தும் இத்தீதான பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்கும் வரை நம் சமுதாயத்திலிருந்து இந்தக் கொடிய தீண்டாமையை ஒழிக்க முடியாது. பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட இனத்தவர் சொந்த நிலம் உடையவர்கள் இல்லை. இவர்கள் தங்களின் பண்ணையார்களின் நிலத்தில் வாழ்நாள் முழுவதும் உழைத்திடும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் படி கடனில் மூழ்கித்தவிக்கும் கொத்தடிமைகளேயாவர். சிற்றூர்களில் இன்றும் நிலவிவரும் பழக்கத்தில் உள்ள சட்டப்படி அவ்வூர்களில் உள்ள தீண்டத்தகாதோர் தங்களுக்கெனச் சொத்துக்களை நிலமாகவோ கால்நடையாகவோ, வைத்திருத்தல் ஒரு குற்றமாகும்.

வினோபாபாவே ஆரம்பித்த பூதான இயக்கம் நிலச் சுவான்தார் கொண்டுள்ள உபரி நிலங்களைச் சேகரித்து, அவற்றை நிலமில்லாத தாழ்த்தப்பட்ட சாதி, மற்றும் பழங்குடி ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. ஆனால், நிலச்சுவான் தார்கள் தங்கள் உபரி நிலங்களைக் குறிப்பாகச் செழுமையான நிலங்களை, விட்டுவிட விரும்பாததால் பாவேயின் முயற்சி கைகூடவில்லை. தரிசு நிலங்கள்தான் இத்திட்டத்திற்குக் கிடைத்தன.

மத்திய மாநில அரசுகள் இயற்றிய நில உச்ச வரம்புச் சட்டங்கள் எவ்வளவோ சாதித்திருக்க முடியும். ஆனால், செல்வந்த நிலச்சுவான்தார்கள் பல்வேறு தவறான வழிகளில் இச் சட்டங்களை ஏமாற்றுகின்றனர். தங்கள் நிலங்களைப் பூதான இயக்கத்தின் மூலம் பெற்றிட்ட தாழ்த்தப்பட்ட இனத்தவரை மிகவும் அல்லற்படுத்துகின்றனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களிலிருந்து அவர்களை நிலச்சுவான்தார்கள் விரட்டிவிட முயல்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை அத்தகைய கொடுமையிலிருந்து காப்பாற்ற மத்திய மாநில அரசுகள் கண்காணிப்புக் குழுக்களை (Vigilance Committee) அமைத்திருப்பினும் அவை செவ்வனே செயல்படவில்லை.

ஏப்ரல் 1978—இல் இயற்றப்பட்ட "தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுத்திட்ட நிலக்கையகப்படுத்தல் சட்டம்" தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அவர்களின் பொருளாதார நிலையின்மையை ஒழிப்பதில் ஒரு பெரும் முன்னேற்றமான செயல் இச் சட்டம். இச் சட்டத்தின் மூலம் திட்டத்தை விரைவுபடுத்தும் முகமாக மாவட்ட ஆட்சியாளர்களுக்கு நிலத்தைக் கையகப்படுத்தும் உரிமை தரப்பட்டுள்ளது. முப்பதாண்டுகாலத்தில் தமிழ்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு. ஐந்து லட்சம் பேருக்கு வீடுகட்ட நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. 1949—இல் துவங்கப்பட்ட "ஹரிஜன நலத்துறை" தனியார் நிலங்களைக் கையகப்படுத்தித் தாழ்த்தப்பட்ட இனத்தவர்க்கு வழங்கி வருகின்றது.[22]

இருப்பினும், இது ஒரு மிகக் குறைவான வேகத்தில் செயல்படும் திட்டமாக உள்ளது. இதனால் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களில் பெரும் பகுதியினரின் பொருளாதார நிலைமை முன்னேற்ற மடைந்து மற்ற உயர் சாதி இந்து நிலச்சுவான்தார்களுக்கு இணையாக அவர்களை மாற்றிட முடியவில்லை.

*தற்போதைய நிலைமை:*

தாழ்த்தப்பட்ட இனத்தவருக்காகக் கல்வி நிலையங்களிலும் அரசாங்கப் பதவிகளிலும் செய்த இட ஒதுக்கீடுகள் அவர்களின் பொருளாதாரப் பாதுகாப்பின்மையை ஒழிக்கும் குறிக்கோளாகக் கொண்டு செய்யப்பட்டன. ஆனால் நிர்வாகத் தரப்பில் உள்ள அதிகாரிகள் இந்த உன்னதமான திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்தவித ஆர்வமும் இல்லாதவர்களாக உள்ளனர் என்று பழிக்கப்படுகின்றனர். 1982—ஆம் ஆண்டு அறிக்கைப்படி 14.5 விழுக்காடு தாழ்த்தப்பட்ட இனத்தவர் நிலமில்லாது கூலி வேலை செய்வோராய் தமிழ்நாட்டில் உள்ளனர்.

தீண்டாமையின் ஆணிவேர் சமத்துவமின்மையிலும், சிற்றூர் களில் மக்கள் வாழும் பகுதியின்றும் பிரித்து ஒதுக்கிய இடங்களில் அவர்களை வாழச் செய்வதிலும் உள்ளது. இப்படி அவர்களை ஒதுக்கிவைப்பது இந்தியா முழுமையுமுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினருக்குமான குடியுரிமையை மறுக்கும் கண்கூடான செயலாகும். கீழ்ச்சாதியினர் சமைத்த உணவை உண்பதோ, அவர்களுடன் சமமாக அமர்ந்து சாப்பிடுவதோ தீட்டாகும் என்பது

உயர்குல மக்களின் திட்பமான கருத்தாகும். அவர்கள் தொட்டாலே தீட்டாகும் என்று கருதுவதால் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஊர்ப்பொதுக் கிணற்றிலிருந்து நீர் எடுப்பதைத் தடை செய்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட சாதி, மற்றும் பழங்குடி மக்கள் அனுபவிக்கும் பொருளாதாரப் பண்பாட்டுக் கொடுமைகளை, டிசம்பர், 1930—இல் இராமநாதபுரம் மாவட்டக் கள்ளர் குழு மேற்படி இனமக்களுக்கு விதித்துள்ள தடைகளே தெளிவாக்கும். இத் தடைகள்[23] தாழ்த்தப்பட்ட இனத்தவர் எவ்வளவு கொடுமையாக ஒதுக்கி வைக்கப்பட்டனர் என்பதைக் காட்டுகின்றன.

1.ஆதி திராவிடர்கள் தங்க, வெள்ளி நகைகளை அணியக் கூடாது.

2.அந்த இனத்து ஆண்கள் முழங்காலுக்குக் கீழாக இடுப்பிற்கு மேலாக உடை அணியக் கூடாது.

3.அந்த இன ஆண்கள் கோட்டு (Coat) சட்டை, பனியன் எதுவும் அணியக் கூடாது.

4.ஆதி திராவிடர்கள் யாரும் தலைமுடியை வெட்டிக் கொள்ளக் கூடாது.

5.ஆதி திராவிடர்களின் வீடுகளில் மண் பாத்திரங்களைத் தவிர மற்ற எவ்வகைப் பாத்திரங்களையும் பயன்படுத்தக் கூடாது.

6.அவர்களின் பெண்டிர் துணி, ரவிக்கை, தாவணி எவையும் கொண்டு மார்பை மறைக்கக் கூடாது.

7.அவர்களின் பெண்கள் பூ வைத்துக் கொள்ளவோ, மஞ்சள் பூசிக் கொள்ளவோ, குங்குமம் வைத்துக் கொள்ளவோ கூடாது.

8.ஆண்கள் வெய்யிலுக்காகவோ, முட்களுக்காகவோ செருப்பு அணியக் கூடாது.

இவைதவிர 1931—இல் மேலும் சில தடைகள் விதிக்கப்பட்டன:—

1.ஆதி திராவிடர்களின் குழந்தைகள் எழுத்தறிவு பெறவோ கல்வி கற்கவோ கூடாது.

2.அவர்களின் குழந்தைகள் மிராசுதார்களின் கால் நடைகளை மேய்ப்பது மட்டுமே செய்ய வேண்டும்.

3.அவர்களின் ஆணும் பெண்ணும் மிராசுதார்களின் பண்ணைகளில் அடிமையாக வேலை பார்க்க வேண்டும்.

4.அவர்கள் மிராசுதார்களிடமிருந்து வாரமுறையிலோ குத்தகை முறையிலோ விவசாயம் செய்யக் கூடாது.

5.அவர்கள் தங்களுடைய நிலங்களை மிக மலிவான விலைக்குத் தங்களுடைய மிராசுதார்களுக்கு விற்று விட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அவர்கள் விவசாயம் செய்யத் தண்ணீர் விடப்படமாட்டாது. அதையும் மீறி மழையினால் எந்த விளைச்சலும் உண்டானால் அறுவடைப் பருவத்தில் மிராசுதார்களால் அவை அனைத்தும் எடுத்துக் கொள்ளப்படும்.

6.காலை 7மணி முதல் 6மணி வரையில் கூலிகளாக அவர்கள் மிராசுதார்களுக்கு உழைத்திட வேண்டும். ஆண்களுக்கு ஒரு நாள் கூலி 4 அணா (ரூ0—4—0).

7.இந்த இனத்தவர் தங்கள் வீட்டு விழாக்களுக்கு கொட்டு மேளங்களைப் பயன்படுத்தக் கூடாது.

8.கல்யாணத்தில் தாலி கட்டப் போகும் போது குதிரையில் ஊர்வலம் செல்வதை நிறுத்திவிட வேண்டும். அவர்கள் வீட்டுக் கதவுகளையே அவர்கள் பல்லக்காகப் பயன்படுத்த வேண்டுமேயன்றி வேறு எந்த வாகனத்தையும் பயன்படுத்தக் கூடாது[24].

காலப்போக்கில் சில இடங்களில் இத் தடைகளில் சில மறைந்து போயின. ஆனால், பொதுவாக இந்த ஒதுக்கிவைக்கப்படும் கொடுமை இன்றும் அநேக சிற்றூர்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. சாதி, மத, இன, பால், பிறப்பிடம் முதலியவற்றால் ஒதுக்கி வைக்கப்படுவதைத் தடை செய்யும் அரசியல் அமைப்புச் சட்டம், விதி 46, தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் பெரும்பாலும் மற்ற இனத்தவருக்குச் சமமாக நடத்துவதற்கு அடிப்படையானது.

சிறப்பு இட ஒதுக்கீட்டை உடைத்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அரசியல் அமைப்புச் சட்டம் விதி 46 இன் சாத்துக்களை ஒதுக்கி வைக்கின்றது. இதனால் எல்லோருக்கும் சமமான கல்வி வாய்ப்பிற்கு உத்திரவாதம் கொடுத்துள்ளது. எல்லா மக்களும் கல்வி நிறுவனங்களில் எந்தப் பாகுபாடுமின்றிச் சேர்ந்து படிப்பதை உரிமையாக இது அழுத்தமாகக் கூறுகிறது. ஒருவரின் மத, இன, சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றால் காட்டப்படும் வேறுபாடுகளைப் பொதுவாகவே

தடைசெய்வதாலும், அதையே காரணமாகக் கொண்டு கல்விச் சாலைகளில் இடங் கொடுக்காமல் இருப்பதுவும் தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் பிற சாதி மக்களுக்குச் சமமாக நடத்துவதாகும். இது வலியோரையும் மெலியோரையும் சமமாகப் பார்ப்பதாகும். அதாவது சமமில்லாதோரைச் சமமாகப் பார்ப்பதாகும் என்பது உச்சநீதி மன்றத்தீர்ப்பாகும். இத்தகைய முடிவு சொல்லிலும் செயலிலும் வேறுபாடுகாட்டுவதேயாகும். இத்தகைய போக்கு தாழ்த்தப்பட்ட இனத்தவரைக் காலங்காலமாக அவர்கள் இருந்துவரும் அதே நிலையிலேயே நிறுத்தி வைப்பதாகும்.[25]

தாழ்த்தப்பட்ட சாதியினரும் மற்றும் பழங்குடியினரும் அரசியல் அமைப்புச் சட்டப்படிப் பாதுகாப்புப் பெற்றிருந்தாலும் அவர்கள் வாழ்க்கை இன்றளவும் இன்னலுடன்தான் நகர்கின்றது. வானவில்லின் கோடியில் இருப்பதாகத் தென்படும் பொற்களஞ்சியம் மாயைபோல அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான பாதுகாப்பும் மாயையாகவே உள்ளது. அவர்களின் உரிமையை நிலை நாட்டவும் அவர்களின் சமத்துவத்தை வலியுறுத்தத் தைரியத்தையும் பெற்றிடக் கீழ்கண்ட சட்டங்கள் இயற்றப்பட்டன.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம், 1955 குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், கொடுமைகள் (எதிர்ப்புச்) சட்டம் முதலியனவே அவர்களைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டங்களாகும். இச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி தீண்டாமையை ஒழித்துச் சகோதரத்துவத்தையும் சமூகப் பொருளாதார அரசியல் சமத்துவத்தையும் வளர்த்திட வேண்டும். சமநீதியை உறுதிப்படுத்தி காலங்காலமாக அவர்கள் இருந்து வரும் அடிமை நிலையைப் போக்கிட வேண்டும்.

*அடிக்குறிப்புகள்*

1. ஹனுமந்தன், K.R. தீண்டாமை: ஒரு வரலாற்று நோக்கு.

2. டாக்டர் அம்பேத்கார், B.R. 'தீண்டத்தகாதோர்'

3.டாக்டர் அய்யப்பன், ஈழவர்களும் பண்பாட்டு மாற்றங்களும்.(Iravas & cultural Changes), தொகுதி V.N.I) பக் 37.

4.டுமோ, லூயிர் (Doument Louis) மனித அடுக்குமுறை பக்134

5.ஹனுமந்தன் K.R. மேற்படி பக். 9

6.டாக்டர் ராம் சரண் சர்மா. பண்டைய இந்தியாவில் சூத்திரர்கள், 1958. பக்.208

7.டாக்டர் அம்பேத்கார், B.R.: சூத்திரர்கள் யார்? பக். 238.

8.தீண்டத்தகாதோர், பக் 59.

9.சிவசண்முகம் பிள்ளை, T.J. ஆதிதிராவிடர் வரலாறு பக்.13.

15.வால்டேர்ஸ், தாமஸ், யூங் ச்வாங்கின் இந்தியப் பயணம், தொகுதி II பக்.226.

17.ஹனுமந்தன், K.R.முற்கூறிபடி பக். 213.

18.தீண்டத்தகாதோர் உலகம்: தமிழ்நாட்டுப் பறையர்கள். பக்.121—122.

19.ஹனுமந்தன், K.R.முன்குறிப்பிட்டபடி. பக். 215.

20.இளைய பெருமாள் கமிட்டி அறிக்கை. 1969. பக்.251.

21.டாக்டர்.அம்பேத்காரின், B.R., எழுத்தும் பேச்சும், பக்.21

22.ஹனுமந்தன், K.R.முன் குறிப்புப்படி.

23.ஹனுமந்தன், K.R.மேற்படி. பக்.230

24.ஹட்டன், K.R.இந்தியாவில் சாதிமுறை: அதன் இயல்பு செயல்பாடு, தோற்றம். பக். 178—179.

25.மங்கல் சந்திர ஜெய்ன் காக்ஜி: ஒதுக்கிவைத்தலும் தீண்டாமை ஒழிப்பும். பக்.202.

## சாதிகளும் சாதிச் சண்டைகளும் தீண்டத்தகாதோர் மீது அவற்றின் பாதிப்பும்.

### தீண்டாமையும் சாதியும்

தீண்டாமை சாதி முறையைச் சார்ந்தது. சாதிமுறை இந்து மதத்தின் வர்ணாஸ்ரம தர்மத்தால் உண்டானது. இது தர்மம் என்று அழைக்கப்பட்டாலும் நேர்மையற்ற பழக்கமாகும், சம தர்மமற்றது, தீண்டாமை சாதி முறையின் விளைவு. பெயரளவில் ஒரு கூலியைக் கொடுத்து உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டுவதற்காகவும் அவர்கள் சொத்துக்கள் வைத்துக் கொள்வதைத் தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஏற்பாடு. கீழ்ச்சாதியினர் என்ற நிலையில் உள்ளவர்கள் தங்களைச் சமூக மேல் மட்டத்திற்குக் கொணர்ந்து நிறுத்த முனையும் போது சாதிச் சண்டைகள் உருவாகின்றன.

இந்தியாவில் பொதுவான முறையிலும் தனிப்பட்ட முறையிலும் ஒருவருடைய சமூக அந்தஸ்தைத் தீர்மானிப்பது சாதியேயாகும். அதன்படி தனிமனிதனின் செயல் திறனும் அவனுடைய சாதி அந்தஸ்தை வைத்தே தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய சமூகநிலையில் பல்வேறு சாதிகளுக்கிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட சமத்துவமின்மையின் பாதிப்பினால், சாதிச் சண்டைகளுக்கான சூழ்நிலைகள் உருவாகின்றன. குறிப்பாகப் பிற சாதியினருக்கும், சாதி அமைப்பில் அடிமட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ள தீண்டத்தகாதோருக்கும் சண்டைகள் உண்டாகின்றன. இந்தியச் சமூக அமைப்பைப் பற்றிய பல சமூகவியல் அறிஞர்களின் கருத்துக்களை விவாதித்தோமானால் அதில் நிலவிவரும் சிக்கல்களை நாம் அறிய முடியும்.

### *சாதி அடுக்கு முறை பற்றி டூமோ* (Doumonts) *வின் அனுமானங்கள் :*

"மனித அடுக்குமுறை சாதி முறையும் அதன் உட்பொருளும்" என்னும் டூமோ லூயிசின் (Dumont Louise) புத்தகம் கருத்துச் செறிவுடைய ஒன்று. அவருடைய கருத்துப்படி சாதிகள் ஒரு சமூக அடிப்படைக் கொள்கையைக் காட்டுகின்றன. அக் கொள்கை சமூக அடுக்கு முறையே (hierarchy) யாகும். இதுபற்றி டூமோ கூறும் நான்கு கருத்துக்களையும் ஜெரால்டு பெரிமன் (Gerald Berreman) தன்னுடைய "பிராமண நோக்கில் சாதி" என்னும் கட்டுரையில் விவாதித்து அவற்றை மறுத்திருக்கிறார்.[2]

"பாரம்பரிய" அல்லது 'சாதாரண' (Singular) சமூகமென டூமோ கருதும் (எ—கா. இந்தியா) சமுதாயத்திற்கும், புதிய சமுதாயங்களுக்கும் பிரெஞ்ச், பிரிட்டிஷ் சமுதாயங்கள்) இடையே சீரான, பொதுவான, அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன என்பது இவருடைய முதல் கருத்து. 'பாரம்பரியச்' சமூகங்களின் தனித்தன்மை அவற்றில் உள்ள சமூக அடுக்குமுறையாகும் (hierarchy). அதாவது தூய்மை—தீட்டு என்ற முரண்பாடுகளால் அமைந்த 'சடங்குகளுக்கு' (ritiual hierarchy). முதன்மை தருவது; இதற்குத் மாறாக தற்காலச் சமுதாயங்கள் தனிமனிதத் தன்மையைச் (individualism) சிறப்பாகக் கொண்டவை. அதனால் இங்கு நிலவுவது சமத்துவமின்மையேயாகும் (egalitarianism) என்பது இவருடைய கருத்து.

இக் கருத்தை மறுத்து ஜெரால்டு பெர்ரீமென் கூறுவதாவது "டூமோ குறை கூறும் சமூகவியலார் கூற்றான 'அடுக்கு முறைச் சமுதாயம், போலவே, டூமோ குறிப்பிடும் இந்திய சடங்கு அடுக்குமுறைச் சமுதாயமும் உயிரற்றது, பொய்யானது. இவ்வமைப்புகளில் உள்ள மக்கள் உணர்வற்றவர்களாக, தவிர்க்க முடியாத சமூகச் சக்திகளாலும், எந்த எதிர்ப்புமின்றி எதையும், ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், ஒரு சிறிதும் மாறாது இராணுவக் கட்டுப்பாட்டுடன் இயங்கும் இயந்திரப் பொம்மைகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். தனி மனிதர்களை அடிமைகளாக, சொல்வதை எதிர்ப்பின்றி ஒத்துக்கொள்பவர்களாக இந்தியச் சமுதாயம் மறைத்ததெனக் காட்டும் இப்புத்தகத்தில் கூறியுள்ள கருத்துக்களை டூமோ உண்மையிலேயே நம்புகின்றாரா? அப்படியாயின் அவருடைய இந்தக் கருத்துக்களை, நடைமுறை ஆய்வுகள் காட்டியுள்ளது போல், உலகில் மற்றெங்கும் உள்ள மக்களைப்போல் இந்திய மக்களும் தான்தோன்றித் தனமும், தங்களுக்குள் பல பிரிவினர்களாகவும், ஒவ்வொருவரும் மற்றவரிலிருந்து வேறுபட்டவர் களாகவும் இருக்கின்றனர்" என்பது உண்மையாகிவிடும் என்கிறார்.[3]

உலகளாவிய மக்கள் போல் இந்தியரும் சந்தேகமும் நம்பிக்கையும் கொண்டவர்கள்; ஒத்துப்போகிறவர்கள்; ஒத்துப் போகாதவர்கள்; எதையும் சட்டை செய்யாதவர்கள்; குற்றம் காண்பவர்கள்; தன்னலமும் உள்ளவர்கள்; பெருந்தன்மை கொண்டவர்கள்; சுதந்திரமானவர்கள்; புதியன காண்போர்; பரம்பரையைக்காப்பவர்; பயந்தவர்கள்; தைரியமானவர்கள்; நல்லதே நடக்குமென நம்புபவர்கள்; நல்லதே நடக்காது என்று எண்ணுபவர்கள்; அவர்களிடம் நம்பிக்கை, எதிர்பார்ப்பு கவலை, அழிப்பு, சதி செய்தல், பணிதல், செயல்பாடு. சரிக்கட்டுதல், வேண்டுவதை எடுத்துக் கொள்தல்

(சுய நலம்) என்ற பல நிலைகளில் தாங்கள் வாழும் சமுதாயத்தின் உள்ளார்த்த மதிப்புகளுடன் (Values) ஒத்துப்போகின்றனர். பாரம்பரிய சமுதாயத்தில் வாழும் மக்களை வேறு மாதிரியானவர்கள் என்று முடிவுசெய்வது அவர்களுடைய தனித் தன்மையையும் செயலாற்றலையும் மறுப்பதாகும். இதுவும் ஒரு வகை இனமையத் தத்துவமே (ethnocentrism). சமூக மையத் தத்துவம் போல இதுவும் தவறானதேயாகும் (Socio Centrism). அவர் கூற முனைவது போல இந்தியர்கள் மடமையானவர்களோ, வேறுபாடுகள் இல்லாதவர்களோ அல்லது பழக்க வழக்கத்திற்கும் ஒருவர் பிறருக்கு அடிமையானவர்களோ இல்லை."[4]

டுமோவின் இரண்டாவது அனுமானம், அதிகார பொருளாதார அரசியல் காரணங்கள் சாதியினின்று வேறுபட்டவை, சாதியின் பின்விளைவேயாகும் என்பது சமுதாயச் சடங்குகளுக்குச் (retual hierarchy) சாதி இன்றியமையாத மையமாகும்; அதிகாரக் கட்டுப்பாட்டில் அடங்காதது. இக் கருத்தினை "அதிகாரம், சமூகநிலை (Power-Status) என்பவை எதிரெதிரானவை என்பது சாதி அமைப்பில் பொய்யான வேறுபாடுகள்" என்று ஜெரால்டுபெர்ரி மென் மறுக்கிறார்.

நடைமுறையில், தங்களுக்குள் உள்ளவர்களின் சாதி வரிசையை (rank) இவர்கள் முறைப்படுத்தும்போது பிராமணர்கள் பிரிப்பது போல் அல்லாது வேறு முறையிலேயே பிரிக்கின்றனர். இவ்வாறு இந்தியச் சாதி முறை மிகச் சிக்கலான அமைப்பாய் உள்ளது. அதை தூய்மை, தீட்டு, எதிர்ப்பு என்னும் கருத்திற்குள் அடக்கிடமுடியாது. "கற்றோர்களே அறிந்த வடமொழிச் சாத்திரங்களினால் சாதி அடிமைத்தனம் எப்படி நியாயப்படுத்த முடியாதோ அதேபோல, தங்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட நடக்கும் அடிமைப்படுத்தப்பட்டோரின் இரண்டாயிரமாண்டுப் போராட்டம் மேலை நாட்டுச் சமூக—மைய நோக்குடைய அறிஞர்களால் உண்டானது என்று சொல்லிவிட முடியாது. சாதிக் கொடுமைகள், அவற்றினின்று மீண்டிட மேற்கொள்ளும் முயற்சிகள் சாதி முறை அமைப்பின் இரண்டாம் பட்ச விளைவுகள் அல்ல. அவைகள் அவற்றுடன் இணைந்த தவிர்க்க முடியாத செயல்பாடுகளாகும். நடைமுறையில் சாதிகள் அவற்றில் நிலவிடும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றத்தாழ்வுள்ள வாழ்க்கைக்கான அத்தியாவசியங்களைப் பெருவதில் உள்ள

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் முதலியன பற்றி டூமோ அறியவில்லை. தவறுகளைத் தவிர்ப்போம். சாதி முறைச் சமுதாயத்தில் வாழுவோருக்குச் சாதி என்பது அதிகாரம்—அடிமைத்தனம்; சலுகைகள்—கொடுமைகள், மதிப்பு—அவமதிப்பு, செழுமை—வறுமை, பாதுகாப்பு—பரிதவிப்பு. குடியேற்ற ஆதிக்கத்திற்குட்பட்ட மக்களிடம், குடியேற்ற ஆதிக்கத்தால் அவர்கள் அடையும் பலன்களை குடியேற்ற ஆதிக்கம் செலுத்தவோர் பெருமைப்படக் குறிப்பிட விழையாதது போல, மனிதவியல் ஆவணமாக, மேற் குறிப்பிட்ட முரண்பாடுகளை எடுத்தியம்பாத சாதி பற்றிய விளக்கங்கள் பொருளற்றவைகளேயாகும்."[6] என்கின்றார் பெர்ரிமென்.

டூமோவின் மூன்றாவது கருத்து; சாதிமுறை என்பது இந்தியாவில் மட்டுமே காணப்படும் அமைப்பு. எனவே, இதனை மற்ற நாட்டுச் சமூகப் பண்பாடுகளுடன் ஒப்பு நோக்குதல் கூடாது. இக்கருத்து காலத்திற்கொவ்வாதது என ஜெரால்டு பெரிமன் மறுக்கிறார். இந்தியச் சாதிமுறை நூதனமான ஒன்றுதான் என்று ஒப்புக் கொள்ளும் பெர்ரிமென், அந்த வகையில் இந்தியத் திருமணம், குடும்பம், விவசாயம், அரசாட்சி, மதம் முதலியன வேறுபட்டதே என்று பெர்ரிமென் கூறுகிறார். எனவே, ஒப்பு நோக்குதற்கு எதிரான டூமோவின் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இல்லை. உலகிலுள்ள அனைத்துமே நூதனமானவைகளே. "எனினும், இந்தியாவில் உள்ள சாதிமுறைகளை மற்ற சமூக முறைகளுடன் ஒப்பிடுவதைத் தடுப்பது என்பது ஒரு விவாத வலை (logical trap) ஆகும். ஏனெனில் சாதி என்ற இந்தச் சமூக அமைப்பு இந்து இந்தியாவின் வெவ்வேறு பகுதியிலும் வெவ்வேறு சமூக நிலைக்குத் தகுந்தவாறு மாறுபட்டுள்ளது. இந்தியாவிலேயே சாதிமுறை, மதத்தினால் வேறுபடுகின்றது; தெற்காசியாவில் சாதி, சமூகத்திற்குச் சமூகம், பண்பாட்டிற்குப் பாண்பாடு, கொள்கைக்குக் கொள்கை மாறுபடுகின்றது." [7]

தெற்காசியாவிற்கு வெளியே உள்ள கடுமையான, சாதிமுறை போன்ற அமைப்புக்களையும், வெளிப்படையான வம்சாவழிச் சாதி முறைகளையும், குறிப்பாக அவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள கொள்கை முறைகளையும் டூமோ அறிந்திருக்கவில்லை." அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ருனாடா முதலிய நாடுகளில் கடைப் பிடிக்கப்படும் வரிசைப்படுத்துதல் (ranking), பிரித்து வைத்தல்,கொடுமைப்படுத்துதல் முறைகளையும் அதனால் ஏற்படும்

மதிப்பீட்டு முறையையும் (Value System) மேற்போக்காகவேனும் டூமோ அறிந்திருப்பின் இந்தியச் சமூக அடுக்குகள் ஒப்பு நோக்க முடியாதவை என்று அவருடைய வாதத்தின் பல கருத்துக்களை அவர் தவிர்த்திருக்க முடியும்."[8]

அமெரிக்காவில் அடிமைத்தனம் வந்த பின்னரே இனவாதம் (racisam) வந்ததென்ற டூமோவின் கூற்று நகைக்கத்தகுந்ததே. அது நகைக்கத் தகுந்த செயலானால் இந்தியாவின் சாதிமுறையைப் போல சிக்கலானது இல்லை எனினும் அடிமைத்தனம் இன வேறுபாட்டுச் சூழ்நிலையிலேயே தோன்றி, வளர்ந்து அழிந்தது.

டூமோவின் கருத்திற்கு மாறாக அமெரிக்காவில் சாதிப்பிரிவினை உடல் வாகை அடிப்படையாகக் கொண்டதில்லை. ஆனால் இந்தியாவில் உள்ளது போல் பிறப்பால் ஏற்பட்டது, அதாவது வம்சவழி என்று கருதப்படும் உடல் அமைப்பை முக்கியமாகக் கொண்டது. ஆனால் அது முழுமையாக நம்பத்தகுந்ததோ அல்லது சுட்டப்படுவதோ இல்லாத ஒன்று. உறுதியான உண்மை என்னவெனில் ஒருவன் கருப்பாகத் தோன்றுவதில்லை; கருப்பாகப் பிறக்கிறான். இந்தியாவிலும் ஒருவனின் சாதியை முடிவு செய்வது பிறப்பு. அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ஒருவனின் சாதியை முடிவு செய்வது ஒரு குறிப்பிட்ட நிலையில் சமுதாயத்தில் உள்ள ஒரு பிரிவில் பிறப்பதுவேயாகும். தனிமனிதனின் தோற்றமோ நடத்தையோ இல்லை"[10].

டூமோவின் நான்காவது கருத்து நுட்பமான அறிவுத்திறன் கொண்டு தக்க சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டிருப்பினும் அது ஒருதலைப் பட்சமான கருத்தேயாகும். "ஆகவே சாதியைப் பற்றிய அவருடைய கருத்துக்கள் செயற்கையானது, வளைந்து கொடுக்காதது, எல்லோருக்கும் பொதுவாக மனதில் தோன்றக் கூடியவை, உன்னதமாக்கப்பட்டது. இந்து இந்தியா எப்படி இருக்கவேண்டுமென, சாதிப்பிரிவை உயர்வாக மதிக்கும் உயர் சாதி இந்துக்களின் கருத்தோடு டூமோவின் கருத்து ஒத்துப்போகக் கூடியது. பிராமணீய சாத்திரங்களில் சாதி பற்றிக் கூறியவற்றை அடியொற்றியே இவர் கருத்தும் அமைந்துள்ளது" என்று பெர்ரிமென் கூறுகிறார்.

ஆனால் இந்தியாவில் வாழும் பல கோடி மக்களின் சாதி அமைப்பிற்கோ, அல்லது இன வாழ்க்கை வரலாற்று, நாவல் இலக்கியப் படைப்புகளில் சிறந்து விளங்குவோரின் சக்தியற்ற கருத்துக்களுக்கோ இது ஒரு சிறிதும் ஒத்துவராத கருத்தாகும். எனவே டூமோவின் கருத்துக்கள் பயனற்றவை என பெர்ரிமென் கருதுகிறார். நன்கு பழகிய நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் ஒரு தீண்டத்தகா தோருடன் மனந்திறந்து பேசினாலேயே இதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட பல சந்தர்ப்பங்கள் இதை உறுதி செய்கின்றன. தற்கால இலக்கியத்தையும், இந்தியச் சமுதாய முறையை அறிந்திட உதவும் இதிகாச புராண இலக்கியங்களையும் இணைத்துக் கருத்தோடு ஆய்ந்தால் இத் தகவலே நமக்குக் கிடைக்கும். "அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் சாசனம், சுதந்திர பிரகடனம், தேச விசுவாச உறுதி மொழி, தற்போதைய அரசியல் கட்சிகளின் மேடைப் பேச்சு, களத்தில் நிற்கும் அரசியல் வாதிகளின் பேச்சு, அரசு அங்கீகரித்த பாடப் புத்தகங்கள், பத்திரிக்கைத் தலையங்கங்கள், குறிப்பாகத் தென் பிராந்தியப் பத்திரிக்கைகளின் கருத்துக்கள் ஆகியவற்றைப் படித்து அமெரிக்க இன உறவுமுறை பற்றி ஒருவன் அறிந்து கொள்ளும் கருத்தினைப் போன்ற கருத்தையே டூமோவின் எழுத்துக்களைப் படித்த ஒருவன் இந்தியச் சாதி பற்றி அறிந்து கொள்ள முடியும்."[12]

டூமோ கொடுக்கும் இந்தியச் சாதிகள் பற்றிய கருத்துக்கள் முழுவதும் பொய்யல்ல, முழுவதும் மெய்யுமல்ல அது ஒருதலைப் பட்சமானது, சாதியை உருவாக்கி அதனால் பயனடைந்தோர் உண்டாக்கிய, அங்கீகரிக்கப்பட்டு, பெரிதுபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட, சமூக ஏற்றத் தாழ்வை நியாயப்படுத்திடும் அன்னோரின் விவாதத்தை ஆராதனை செய்யும் முகமாகவே டூமோவின் கருத்துக்கள் உள்ளன. "இத்திட்டம் திறம்படச் செயல்படுவதில் வியப்பில்லை. இது ஒரு அடக்கி ஆளும் முறை என்று அனுபவத்தில் உணர்வோரின் கருத்துக்கள் எதுவும் இப்புத்தகத்தில் இல்லை. ஆனால், அவர்களின் உணர்வுகளுக்குச் செவிமடுப்போருக்கு அவர்களின் உணர்வுகளைத் தெளிவாக உரக்க வெளிக்காட்டுகிறது. தற்காலச் சமூக அரசியல் நிகழ்வுகளில் அது எளிதாக ஒலிக்கின்றது. அதன் நிகழ்வுகளும் இயக்கங்களும்—பௌத்தம் முதல் சீக்கியம், ஆரிய சமாஜம், நவீன பௌத்தம் வரையிலான அனைத்து இயக்கங்களும் மக்கள் மத்தியில்

தாங்கள் காலூன்ற வேண்டிச் சாதிச் சுமையிலிருந்து விடுதலையைப் பற்றியே பேசிவந்தன என்பது இந்திய வரலாறு முழுவதும் பொதிந்துள்ள உண்மையாகும்."[13]

டூமோவின் கொள்கைகளும் அவற்றைப் பற்றிய ஜெரால்டு பெர்ரிமெனின் விமர்சனங்களும் சிக்கலான இந்தியச் சாதிமுறை, இனம், சாதிக் கொள்கை, சச்சரவு பற்றிய கருத்தினை புதியநோக்கில் ஆழ்ந்து ஆராய உதவுகின்றன. சாதி, இனம், அதிகாரம்"[14] என்றும் தனது கட்டுரையில் ஆன்ட்ரே பொதல் (Amdre Beteille)." செங்குத்தான இந்தச் சமுதாய அடுக்கு முறையும் பாகுபாடும், புதியன எவற்றையும் அகப்படுத்திக் கொள்ளவில்லை என்பதையே உணர்த்துகின்றன. மேலும் அதிக உற்பத்தி இல்லாமை, நகர்ப்புறத்தில் அதிகமில்லாது கொஞ்சம் மிஞ்சியவை, அதிக மில்லாது கொஞ்சம் முன்னேறியுள்ள விவசாயத் தொழில்முறை ஆகியவை ஏழை எளியோர்களின் குறுகிய கால நலங்களை மட்டுமல்லாது அவர்களின் நெடுங்கால நலன்களையும் பாதிக்கின்றன,[15] என்று கூறுகிறார். தமிழ் நாட்டில் உள்ள கூலிவேலை செய்யும் தீண்டத்தகாதோர் பற்றி ஆய்வு செய்து "தலை கீழான சாதி அமைப்பு"[16] என்னும் தன்னுடைய கட்டுரையில் ஜோன் P.மஞ்சர் (Joan P.Mencher) கூறுவதாது," அதீதப் பொருளாதார அடக்குமுறை உள்ள சூழலில், அந்தக்காலந் தொட்டுத் தீண்டத்தகாதோர் கொடுத்ததாகப் பதிவான எந்தப் புகாரும் இல்லை. ஏனெனில் தீண்டத்தகாதோரில் பெரும்பான்மையினர் எழுத்தறிவற்றவர்கள் என்பதோடல்லாமல், பிறர் சொல்லச் சொன்ன கருத்துக்களையல்லாது தங்களுடைய சொந்தக் கருத்துக்களைத் தங்கள் குலத்தவர்களிடமின்றிப் பிறரிடம் கூறுவது பெரும் ஆபத்தாகும். சிற்றூர்களில் உள்ள பாரம்பரிய இனத்தவர்களிடமும், ஒருவர் சொல்ல மற்றொரு இனத்தவர் அதை ஆர்வத்துடன் செவிமடுப்பர் என்பது அறவே கிடையாது."[17]

சிற்றூர்களில் உள்ள தீண்டத்தகாதோர்களின் நிலை உயர் சாதி மக்களின் அரசியல் மாற்றங்களைப் பொறுத்தது. இந்த உயர் சாதி மக்கள் தீண்டத்தகாதோரிடையே பிரிவை ஏற்படுத்தியும், ஏழ்மையான உயர்சாதி இந்துக்களுக்கும் தீண்டத்தகாதோருக்கும் இடையே பாரம்பரியத் தடுப்புக்களைப் போற்றிக் காத்துப் பலப்படுத்தியும், அரசியல் பொருளாதார வகையில் தீண்டத்தகாதோரை அடக்கி வைத்துள்ளனர். எனினும். "தாங்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் தீண்டத்தகாதோரும், தங்களுடைய அந்தச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்"[18] என்பது தற்போது மனநிம்மதி கொடுப்பதாகும்.

"நான் கூறியது போல, சாதி அமைப்பானது தங்கள் பொது நலன் கருதியோ அல்லது பொதுக் காரியம் பற்றியோ மக்கள் சமுதாய ரீதியில் ஒன்றிணைவதைச் சாதிமுறை தடுத்து வந்துள்ளது. சமூகப் பொருளாதார வேறுபாடுகளை மறைப்பதினாலேயே சாதி அதன் உறுதிப் பாட்டைப் பெறுகின்றது. சாதி அமைப்புப்பற்றிய கருத்திற்குக் கொடுக்கப்படும் மித மிஞ்சிய முக்கியத்துவமே இந்தியச் சமூக அமைப்பைப் புரிந்து கொள்வதில் சிக்கலை உண்டாக்கக் கூடியது என்று கூறும் பெத்தல்,[19] "சமூக அமைப்பின் அடிப்படைக் குழுக்களைப் பகைமை இல்லாதவை என்று கூறும் போது சண்டை சச்சரவு என்றோ மாற்றங்கள் பற்றியோ விவாதித்திட ஒரு சிறிதும் இடமில்லை. இந்தியச் சமுதாயம் பற்றிய இக்கருத்து, ஒன்றிணைந்த, ஒருமைப்பட்ட, மாற்றமில்லாத அமைப்பு என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் கருத்திற்கு ஒரு படி கீழானதே"[28], எனற பெத்தல்லின் கருத்தை ஜோன். P.மஞ்சர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்தியச் சமுதாயச் சூழ்நிலையில் அன்றும் இன்றும் தீண்டத்தகாதோரும், அவர்களைப்போல சுரண்டப்படும் பிற சாதி ஏழைகளும் தங்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் கருதி இணை வதற்கே சாதிப் பிரிவினை பயன்பட்டுள்ளது. வர்க்கத்தைவிடச் சாதிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. "தனவந்தர்களும், அதிகாரம் படைத்தோரும், செல்வாக்குள்ளவர்களும் சாதிப்பிரிவினையை வெகுவாக வலியுறுத்துவது, இந்தியச் சமூகத்தில் வர்க்க அடிப்படையில் அமைப்புகள் உருவாவதையும் அவற்றை அங்கீகரிப்பதையும் தடுத்திடு வதற்கேயாகும்" என்றும் ஜோன்P.மஞ்சர் கூறுகிறார்.[21]

மேலே கொடுக்கப்பட்டுள்ள சாதி பற்றிய விவாதம் சமூகவியல் அறிஞர்கள் சாதி பற்றிக் கொண்டுள்ள பலவகைக் கருத்துக்களை உறுதி செய்கின்றது. இந்திய அமைப்பில் சாதி பல் வேறுபட்ட விளக்கங்களுக்கும் ஆய்வுகளுக்கும் அவற்றின் முடிவுகளுக்கும் இடங்கொடுத்துள்ளது. சாதிப் பிரிவுகளால் எழக் கூடிய பிரச்சினைகள் இடர்ப்பாடுகள் ஆகியவற்றைச் சமூகவியல் அறிஞர்களான டூமோ முதல் ஜோன் P.மஞ்சர் வரை உறுதிப்படுத்துகின்றனர். ஜெரால்டு D.பெர்ரிமென்னும் ஆண்டரே பெத்தில்லும் இவர்களில் சிறப்பான சமூகவியல் அறிஞர்கள். இந்தியச் சமூக அமைப்பில் தீண்டத்தகாதோர் கடைநிலையிலேயே உள்ளனர் என்பது இவர்களுடைய ஒருமித்த கருத்தாகும்.

சாதிச் சண்டைகள் காலப்போக்கில் சாதிகளால் ஏற்படும் இறுக்கத்தின் விளைவுகளாகும். அவ்வாறு ஏற்படும் இறுக்கம் நீறு பூத்த நெருப்புபோன்று கனன்று கொண்டு இருக்கும். அவ்வப்போது எழும் ஒரு சிறுபொறி அல்லது ஒரு சிறு தூண்டுதல் கலவரத்தை வெடிக்கச் செய்து சமுதாயத்தின் மெல்லிய அமைப்பைத் தகர்த்துவிடுகிறது. இதுபற்றி "இந்திய அரசியலில் மாறிவரும் வன்முறை" என்னும் கட்டுரையில் அஜீத்ராய் பொருத்தமான கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்.[22]

*சாதியும் வன்முறையும்*

"இந்திய குடியேற்ற ஆட்சிக்குப் பின் அரசியலில் வன்முறைக்குச் சாதி ஒரு முக்கியமான காரணம். சமுதாயத்தில் வன்முறை வெடித்திட வர்க்கப் பாகுபாட்டுடன் சாதிப் பாகுபாடு முக்கியத் தூண்டுதலாய்ப் போட்டியிடுகின்றது. எண்ணிக்கை மற்றும், இடப்பரப்பில் சாதி வன்முறை சமூகத்தில் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு ஆக்கிரமித்துள்ளதை வரலாற்று வரைவியல் தெளிவாகக் காட்டுகிறது. மத்திய அரசு சட்டமுறைப்படி அமைக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலப் பாதுகாப்புச் சட்டப்படி மத்திய அரசு அமைத்த ஆணையர் சிறிது காலத்திற்குமுன் (1986—1987) அரசுக்குக் கொடுத்துள்ள அறிக்கைப்படி 1986—இல் பழங்குடியினருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சம்பந்தமாய் பதிவான வழக்குகள் 15,416; இவற்றில் கொலை வழக்குகள் 564; வன்முறைச்சம்பவ வழக்கு 1408; கற்பழிப்பு வழக்கு 727; தீவைத்தல் வழக்கு 1002. 1981 முதல் 1986 வரையிலான ஆறாண்டுகளில் இந்தியக் குற்றவியல் சட்டப்படி பதிவான குற்றவியல் வழக்குகள் 91097; இதில் கொலை வழக்குகள் 3139; கொடுங்காயவழக்குகள் 8501, கற்பழிப்பு வழக்குகள் 3998; தீவைத்தல் வழக்குகள் 6278."[23]

இதற்கு முந்திய ஆண்டுகளிலும் தலித்துகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் எண்ணிக்கை குறைந்ததாய் இல்லை. ஒரு கணக்குப் படி [24]

அ) 1967—1969க்கான மூன்று ஆண்டுகளில் 1117 தலித்துகள் பல மாநிலங்களில் கொல்லப்பட்டனர்.

ஆ) 1971—இல் தலித்துகள் மீது 2127 கொடுமைகள் பதிவாகியுள்ளன.

இ) 1972—இல் தலீத்துகள் மீது 2384 கொடுமைகள் நடந்துள்ளன.

ஈ)1973—இல் முதல் எட்டு மாதங்களில் இதன் எண்ணிக்கை 1848.

உ)1974—இல் முதல் ஆறு மாதங்களில் இது 2758 ஆக உயர்ந்துள்ளது.

ஊ)இதற்குப் பின் கொடுமைகள் வெள்ளமெனப் பெருக் கெடுத்துள்ளன. 1976—இல் 6197 ஆக இருந்த எண்ணிக்கை 1977—இல் 10,879—தாகவும், 1978—இல் முதல் ஆறு மாதங்களில் 6820 ஆகவும் உயர்ந்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கண்காணிப் பாளரின் (Commissioner) அறிக்கையின்படி "இவற்றில் அதிகமான கொடுமைகள் நிலச்சுவான்தார்கள், அரசாங்க அதிகாரிகள், காவல் துறையினர், பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் முதலியோரால் செய்யப்பட்டன. சமுதாய, அரசியல் சூழலில் வன்முறை ஒரு புதிய பரிமாணத்தையும் வலிமையையும் பெற்றள்ளது. இதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட இனத்த வரிடத்தும் ஆதிவாசிகளிடத்தும் எழுந்துள்ள எதிர்ப்புணர்ச்சியே என்று கண்காணிப்பாளரின் அறிக்கை கூறுகிறது."[25]

"தற்போது, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட பட்டியல் சாதியினரின் சூழ்நிலை சற்றே மாறியுள்ளது. அவர்களில் சிலர் எழுச்சி பெற்றுத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கிளர்ந்தெழுகின்றனர். இதற்குக் காரணம் கல்வி, தகவல் ஊடகங்கள், கட்டுக்கோப்பான அமைப்புகளே." [26]

பீஹாரில் நடந்த விவசாயிகளின் வன்முறை பற்றி ஆராய்ந்த ஒரு சிறந்த அறிஞர்[27] கீழ்க்காணும் முடிவுகளைத் தெரிவிக்கின்றார்:

1.பொருளாதார ஆதாயம் நாடி மோதல்களும், நிலச்சுவான்தார்களின் சாதி உணர்வுகளும் சேர்ந்து சில சமயங்களில் சாதிச் சண்டைகளாக உருவெடுத்துள்ளன.

2.தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஏழை விவசாயிகளுக்குத் திருப்பித் தாக்குதல் தவிர வேறு வழியில்லை. இதனால் போர்க் குணம்கொண்ட ஏழை விவசாயிகளின் இயக்கங்கள் தோன்றின.

3.ஏழை விவசாயிகளின் எதிர்த்தாக்குதல்களால் கிராம "ஆண்டேக்கள்" தங்களுடைய அடியாட்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினர்.

4.கிராம "ஆண்டேக்"களில் பலம் வாய்ந்தவர்கள் காவலர்கள், அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து தங்களை எதிர்க்கத் துணிந்தவர்களைத் தங்களின் அடியாட்களைக் கொண்டு மிகவும் கொடுமையாகத் துன்புறுத்தினர். இவ்வகை அதிகாரிகள் "ஆண்டேக்"களின் சமூக—இனத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

"தீண்டத்தகாதோரின் உலகம் தமிழ்நாட்டுப் பறையர்கள்" என்ற ராபர்ட் டெலீஜ்[28] (Robert Deliege) எழுதிய புத்தகத்தில், 1979—இல் மோஃப்பட் (Moffalt) என்பவர் எழுதிய புத்தகத்திலிருந்து நிறையவே எடுத்துக் காட்டுகிறார். தீண்டாமையைப் பற்றி நன்கு அறிந்திட ஒருபடி மேற்சென்று உதவும் நூலாகும் இது, "மோஃப்பட் தன் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட, தமிழ்நாட்டில் உள்ள அச் சிற்றூரில் பறையர்களும் வாழ்ந்தனர்"[29] என்று டெலீஜ் குறிப்பிடுகிறார். தங்களைப் பலிகொள்ளும் அச் சமூக நியதியை எதிர்ப்பதற்கு மாறாகத் தீண்டத்தகாதோர் அதன் உண்மை ஊழியர்களாகவே இருந்து, மேல் தட்டு மக்களிடம் உள்ள அமைப்புக்களையும் சமூக—வர்க்க ஏற்றத் தாழ்வுகளையும் தங்கள் மத்தியில் முழுமையாக உண்டாக்கினர். "உயர் இன சமூக அமைப்பிற்கு ஒத்து அவர்கள் வாழ்கின்றனர். தீண்டத்தகாதோர் மத்தியில் ஆய்வு செய்யும் ஒவ்வொரு ஆய்வாளரும் கேட்கும் கேள்விகள்: "தீண்டத்தகாதோர் அச் சமூக அமைப்பின் ஒரு பகுதியினரா? இக்கேள்விகளுக்கு மோப்பட் கூறும் பதில் இதுவாகும்.[30]

"இந்திய சமுதாய அமைப்பை ஆராய்ந்திடும் தற்காலப் பெரிய ஆராய்ச்சியாளர் லூயி டூமோவின் ஆராய்ச்சிக் கருத்துக்களே மோப்பட்டின் பதில்களுக்குத் தூண்டுகோலாகும். உயர்சாதி மக்கள் உலகிற்கும் தீண்டத்தகாதோர் உலகிற்கும் எந்தவிதப் பிரிவினையும் இல்லை. ஆனால் அதில் இருப்பது அமைப்பு வகையிலான சார்புகளே[31] (Structural employmentarity), என்று டூமோ விவாதிக் கின்றார். சாதி அமைப்பை விளக்கிடும் முறையே சமூக அடுக்குமுறை என்பதை டூமோ காட்டுகிறார். சாதி அமைப்பைத் தாங்கி நிற்கும் எந்தக் கொள்கையும் சுதந்திரத்திற்குக், குறிப்பாக சமத்துவத்திற்கு எதிரானதுதான். இதனைச் சமூக அடுக்குமுறையே ஒரு அமைப்பாக உருவாக்கும் முறையின்றிப் பிரிதொன்றில்லை. இவ்வடுக்கு முறைக்

கொள்கையில் தான் சாதி அமைப்பு முழுமையாக நிற்கின்றது. மேலும் அடுக்குமுறை என்பது ஒரு சாதாரண வரிசைப்படுத்துதல் அல்ல; அது ஒரு எதிர்—புதிரான அமைப்புக் கொள்கை"[32]. இந்திய சமுதாயத்தில் உள்ள எந்தவித ஒட்டுறவும் தூய்மை—தீட்டு என்ற அடிப்படை விரோத நோக்கின் மீதுதான் கட்டப்பட்டுள்ளது. "இந்தியச் சமுதாய அடிப்படை உறவுகள் அனைத்துமே அடுக்குமுறையை உட்கொண்டவை. அவ்வுறவுகள் தூய்மை மற்றும் தீட்டு என்பவற்றிற் கிடையிலான விரோதத்திலேயே வெளிக்காட்டப்படுகின்றன."[33].

எங்கும் சூழ்ந்துள்ள அடுக்குமுறைக் கொள்கை இந்தியச் சமூகவாழ்க்கையின் எல்லா மூலைமுடுக்குகளிலும் வியாபித்துள்ளது. பண்ணையாருக்குப் பணிந்து வாழும் பண்ணையாளும்,பண்ணையாரின் சட்ட திட்டங்களுக்குப் பணிந்து வாழும் பிற மக்களும் ஒரே இடுகுறி மொழியால் உணர்த்தப்படுகின்றனர்.

"ஹரிஜனப் பிரிவிலேயே ஒரு உள் அமைப்பு உள்ளது. இந்த அமைப்பு, விரிந்து வளர்ந்துள்ள சாதி அமைப்பின் சிறு அளவிலான நகலேயாகும்"[34] என்ற பட்வர்த்தனின் கூற்று அதிர்ச்சியைத் தருகின்றது. சாதிப் பிரிவுகளுக்கு இடையிலான புரட்டுவாதக் கூறுபாட்டைப் பற்றி, "தற்கால இந்தியா அதன் கீழ் மட்ட வேலையாட்களிலிருந்து கார் ஓட்டுனர் சாதி ஒன்றை உருவாக்கியுள்ளது. இக்கார் ஓட்டுனர் பிரிவிற்குள்ளேயே ரோல்ஸ்—ராய்ஸ் கார் ஓட்டுனர் சாதி மக்கள் போர்டுஸ் கார் ஓட்டுனர் சாதி யோடு உணவு உண்ணவோ திருமண உறவுகள் வைத்துக் கொள்ளவோ முடியாத நிலை உருவாவதற்கான சூழல் கனிந்துள்ளது" என்று எந்தோவன் (Enthoven)[35] எள்ளி நகையாடுகிறார்.[36]

சாதி அமைப்பு பொருளாதார ஆதாரங்கள் மீதான உரிமையையும் கட்டுப்பாட்டையும், வாய்ப்புகளையும் பாதிக்கின்றது என்பது சொல்லாமலேயே விளங்கும். முற்காலத்தில், வாழ்க்கையின் அடிப்படை ஆதாரங்களை உயர் சாதி மக்களே தனி உரிமையோடு தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். கீழ்சாதி மக்கள் மேல்சாதி மக்கள் கௌரவமான இலாபம் தரக்கூடிய வேலைகள், தொழில்கள், வணிகம் ஆகிய அனைத்தையும் தங்கள் கைக்குள்ளேயே வைத்துக் கொண்டனர். இதனால் சாதி அமைப்பு வெளிப்படையாகவே ஏற்றத் தாழ்வு கொண்ட சமுதாய அமைப்பை உண்டாக்கியது என்பது

தெளிவாகிறது. இதனால் சுரண்டலும் கொடுமைப்படுத்துவதுமான இச் சமுதாய அமைப்பில் சண்டை சச்சரவும், மோதல்களும் சமுதாய அமைப்பின் உள்ளடக்கமாகவே அமைந்து விட்டது.

மேலும், இதற்கு முற்பட்ட கால கட்டத்தில் கூட்டாக ஏற்றுக் கொண்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட சாதிவிதிமுறைகள், அவ்விதி முறைகளையும் அதனால் விளைந்த ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்க்கும் தாழத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகளையும் கட்டாயவேலை வாங்குவதையும் நியாயப்படுத்தின. சமத்துவம் இல்லாத சமூக அமைப்பு இதனைச் சுலபமாகச் செயல்படச் செய்தது. தாழ்த்தப்பட்ட பட்டியல் இனத்தவருக்கு ஒரு சிறிதும் அரசியல் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. தங்கள் எண்ணங்கள் எல்லாவற்றையும் கட்டாயப்படுத்திச் செயல் படச்செய்ய எல்லாவாய்ப்புக்களையும் உயர் சாதி மக்களே பெற்றிருந்தனர். பல சாதியினரிடையே உள்ள உறவை நிர்ணயிப்பதில் தேவைப்படும் போது தங்கள் அதிகார வரம்பைக் கடைசிவரை பயன்படுத்தச் சிறிதளவும் உயர்சாதி மக்கள் தயங்கவில்லை.

முற்காலத்திலும் இடைக்காலத்திலும் பிறப்பால் உயர்வு தாழ்வு என்ற நியதி சாதி முறையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியாயம் இல்லாத ஒரு குற்றவியல் நீதி முறை கடைப்பிடித்து வரப்பட்டது. வழக்குகளைக் கையாளும் முறையிலும் தண்டனை கொடுக்கப்படும் முறையிலும் குற்றம் செய்தவன் சாதிக்கும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவன் சாதிக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கருத்திற் கொண்டே முடிவு செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக, பிராமணனைக் கொன்ற சூத்திரன் கல்லெறியப்பட்டுக் கொல்லப்படுவான்; சூத்திரனைக் கொன்ற பிராமணன் பிராயச்சித்தம் செய்தால் மட்டும் போதுமானது. தற்காலச்சமுதாயச் சூழ்நிலை இம்முறையிலிருந்து குறிப்பிடத்தக்க எந்தவித மாறுபாட்டையும் அடையவில்லை. இந்நாட்டுக் காவல் துறையும் தன்னுடைய குடியேற்ற காலக் கனவுகளிலிருந்து மீள வேண்டியுள்ளது என்பது சிலருடைய கருத்து. பொதுவாகக் காவல்துறையினர் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உணராமலும்; மக்கள் கருத்தை உணர்ந்து நடந்து கொள்ளாமலும், தான்தோன்றித் தனமான அல்லது சட்டத்திற்குப் புறம்பான உத்திகளைக் கையாளுபவர்களாகவும் இருக்கின்றனர். உயர் சாதி மக்களையே அதிக எண்ணிக்கையில் பெற்றிருப்பதால் குடியுரிமை சம்பந்தமான காரியங்களில் காவல் துறையினர் ஒரு தலைப் பட்சமாகச் செயல்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. குற்றவியல் நீதித்துறையின் மற்ற அங்கங்கள் பற்றியும் இதே கருத்து நிகழ்கின்றது. மௌனமாக இருப்பினும் இச்சாதிவகைத் தீர்ப்பினால் கோபம் ஏற்படுவது இயல்பானதே.

சாதிச் சண்டைகள் பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வந்தாலும் தற்காலத்தில் அதன் வேகம் முடுக்கி விடப்பட்டுத் தொற்று நோயாய் உலாவருகின்றது. இதற்கான காரணங்கள் கண்கூடானவை: கல்விப் பரவல், சமுதாய வாழ்க்கை முறையில் உண்டாகும் முன்னேற்றம், குறிப்பாக மேற்கத்தியக் கலாச்சாரப் பரவல், பல் வகைத் தகவல் தொடர்புச் சாதனங்களின் ஆக்கிரமிப்பு, இவை அனைத்தும் சேர்ந்து வர்ணாஸ்ரம அடுக்குகளில் கடை நிலையில் உள்ளவர்களிடம் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. மேலும் அரசியல் சுதந்திரம், மக்களாட்சி முறை இவைகளும் சாதி அமைப்பின் பால் பலவகைப் பாதிப்புகளை விளைவித்துள்ளன. மக்களாட்சியும் சாதி அமைப்பு முறையும் முரண்பட்டவை என்று கூறப்படுகிறது. இதில் ஏதாவது ஒன்றுதான் நிலைபெறக் கூடியது என்று கருதுவர். ஆனால், இதுகாறும் அவ்வாறு எதுவும், நடந்திடவில்லை. ஆழ்ந்த வேர் விட்ட சாதி முறைகள், சாதித் தகவுகள் (Values) மக்களாட்சி முறையில் உள் புகுந்துள்ளன. அதனால் தாறுமாறான சாதிப்பிரிவுகள் மேலும் வலுவடைந்துள்ளன. இதன் மறுபுறமாக மக்களாட்சி முறை அமைக்கப்பட்டது. பல பிரிவு மக்களின் அரசியல் நோக்கங்களை உயர்த்தியுள்ளது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்களும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்ள விழைகின்றனர். இதனால் பல கட்சிகளின் அரசியல் செயல்பாடுகள் சாதி உணர்வில் முடக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடி மக்களின் எண்ணிக்கையுடன் பிற்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கையைச் சேர்த்துக் கணக்கிட்டால் உயர்சாதி மக்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மை கிடையாது என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். உயர்சாதி மக்கள் பாரம்பரியப் பெருமையிலேயே வாழ்கின்றனர். கிளர்ச்சி அரசியலும் சாதிக் கலவரத்துக்கு ஒரு பரிமாணத்தைக் கொடுக்கின்றது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான நலத்திட்டங்கள் செயல்படுவதும் தடைபடுவதும் சாதிக்கிளர்ச்சிகளின் பல்வேறு அளவு, தீவிரத்தன்மை, காலவரையறை முதலியவற்றையே பொறுத்துள்ளன.

சாதிச் சண்டையை ஊக்குவிக்கும் பிறிதொரு காரணம் பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு வேடிக்கையான கூற்றாகும். சுதந்திரமடைந்தது முதல் பல பெரிய திட்டமிடப்பட்டப் பொருளாதார முன்னேற்றத்தை நாடு கண்டுள்ளது. பொதுவான வளர்ச்சித் திட்டங்கள் தவிர வாய்ப்புக்களையும் வாழ்க்கை ஆதாரங்களையும் விரைவாகச் சீரான முறையில் பகிர்ந்திட வேண்டி மக்களை மையமாக வைத்துச்

சமூகப் பொருளாதாரத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் இவ் வளர்ச்சித் திட்டங்கள் அரசியல் கொள்கை கலப்பில்லாமலோ, செயல்பாட்டுப் பிரச்சனைகளில்லாமலோ அமையவில்லை.

மேலும், இம் மாற்றங்கள் பொருளாதாரச் சமன்பாட்டை உருக்குலைத்தது. சாதி உணர்வுகளையும் வன்முறைகளையும், கலவரங்களையும் கிளரிவிட்டது. மறைமுகமான அல்லது வெளிப் படையான, சமுதாய அடுக்கு முறையால் உண்டாகும் சாதிச் சண்டைகள் இந்திய சமுதாய வாழ்க்கையுடன் பிரிக்க முடியாத வண்ணம் இணைந்துள்ளன. உருவிலும் பலத்திலும் எவ்வளவு சிறியதாய் இருப்பினும் இதைச் சாதிச் சண்டை என்றோ வகுப்புக் கலவரம் என்றோ அழைக்கலாம். ஒரு நோக்கில் 'சாதி' 'இனம்' என்பவை ஒரே பொருளுடையன. இரண்டுமே நேரடியாக அல்லது மறைமுகமாகப் பொருளாதார நிலை, செய்தொழில் ஆகியவற்றுடன் தொடர்புடையவை. அமைப்பில் உள்ள முரண்பாட்டினால் இரண்டுமே அந்தஸ்த்து வரிசையையும் சமூகத்தள முறையையும் குறிக்கின்றன. கோபம், கலவரம், வன்முறை, கூட்ட உணர்வு, கூட்ட நோக்கு இவற்றை உள்ளடக்கியுள்ளன.

உயர்வர்க்கம், மத்தியவர்க்கம் ஆகியவற்றினின்று புதிதாகத் தோன்றிய சொத்துரிமை வர்க்கத்தார் பழைய கொடுமையான நெறி முறைகளை அரசாங்க ஆதரவோடு மிக வன்மத்துடன் செயல்படுத்தத் துவங்கினர்.

சொத்து உடமையாளர்கள், அரசாங்க அதிகாரிகள், தேர்ந்தெடுக் கப்பட்ட அமைப்பில் உள்ள அதிகார போதை கொண்ட புதிய பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் முதலியோரால் தீவிரமாகக் கடைப் பிடிக்கப்பட்ட பல்வேறு வகையில் பாரபட்சம் காட்டுதல், சுரண்டுதல், தாக்குதல் ஆகியவற்றிற்கு எதிராகத் தீண்டத்தகாதோர் தங்கள் கோபத்தைத் தீவிரமாகக் காட்டத் துவங்கினர்.

அறுபதுகளின் மத்திய காலந்தொட்டுத் திட்டமிட்ட வளர்ச்சியால் பயனடைந்த மக்களுக்கும், அரசின் பேருதவியுடன் அறிந்தே புதிதாக உருவாக்கப்பட்ட சமூகப் பொருளாதார—அரசியல் போக்குகளினால் சீர் குலைந்து வந்த பெரும்பான்மை வர்க்கமான வசதியற்றோருக்கு மிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளால் நாடு ஒரு கொதிகலனானது.

பல அறிக்கைகளும் சில பரவலான ஆராய்ச்சிகளும், சுதந்திரத்திற்குப் பின்னரும் பெரும்பான்மையான தீண்டத்தகாதோர், அவர்கள் தீண்டத்தகாதோராய் பிறக்க நேர்ந்ததால், அகௌரவமான பாரபட்சத்தை அனுபவிக்கின்றனர் எனக் காட்டுகின்றன: குஜராத் மாநிலத்தின் சிற்றூர்ப் பகுதிகளில் காணப்படும் தீண்டாமை பற்றி ஆராய்ந்து I.P தேசாய், காந்தியும் காந்தீயவாதிகளும் உள்ள இந்த நாட்டில் இன்னும் 70 விழுக்காடு தீண்டத்தகாதோர் தண்ணீருக்காக அலைக்கழிக்கப்பட்டு அகௌரவப்படுத்தப்படுகின்றனர்; 90 விழுக்காட்டினர் கோவில்களிலும் உயர் சாதி மக்களின் வீட்டிற்குள்ளும் நுழைய அனுமதிக்கப் படுவதில்லை, என்று கூறுகிறார். பல்வேறு பொருளாதார, சமூக, பண்பாட்டு வாழ்க்கையின் பிற தன்மைகளால் அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். அப்பகுதிக்கு வேலைக்குவரும் கற்றுயர்ந்த தீண்டத்தகாதோருக்கு உயர்சாதி மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் தங்கிட வீடுகள் கிடைப்பதில்லை.

நாட்டின் பல பகுதிகளிலும் தீண்டத்தகாதோர்கள் தாக்கப்படு கின்றனர் என்று பத்திரிக்கையாளர்களும், உண்மை கண்டறியும் குழுக்களும், வேறு அமைப்புக்களும் கண்டறிந்துள்ளன. கொலை செய்தல், வீட்டுக்குத் தீ வைத்தல், தீண்டத்தகாதோர் வாழும் பகுதிக்கே தீ வைத்தல், சித்திரவதை செய்தல், கொள்ளையடித்தல், கூட்டாகக் கற்பழித்தல், உயர்சாதி, நடுத்தரவர்க்க இந்துக்களால் ஒதுக்கி வைக்கப்படல் போன்ற கொடுமைகள் தீண்டத்தகாதோர் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இக்கொடுமைகளைச் செய்யும் இந்துக்கள் நிலச்சுவான்தார்கள், பணக்கார விவசாயிகள், வணிகர்கள், காவல்துறையைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் ஆவர். அதிகம் வெளியிடப்படாத உண்மையறியும் குழுக்களின் அறிக்கைப்படி பீஹார், மத்தியப்பிரதேசம், ஹரியானா, குஜராத், மஹராஷ்ட்ரம், தமிழ்நாடு மற்றும் சில மாநிலங்களில் தீண்டத்தகாதோர் மீது நடத்தப்படும் காட்டுமிராண்டித் தாக்குதல்கள் வளர்ந்து வருகின்றன.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தங்கள் நிலையைப் பல வழிகளில் உறுதிப்படுத்துகின்றனர். பிரச்சினைகளைத் தீர்க்க நீதிமன்றம் செல்கின்றனர்; எதிலும் சட்டவிரோதமாக அநியாயமாக யாரும் உரிமை கொண்டாடுவதை ஏற்க மறுக்கின்றனர். நியாயமான கூலி வேலைசெய்வதற்கு நல்ல சூழ் நிலை, சமமான சம்பளம்

கேட்கின்றனர். இந்நாட்டுக் குடிமக்களாகத் தங்களுடைய மக்களுரிமையைச் செயல்படுத்தித் தண்ணீர் வசதி, கோவிலுக்குள் செல்வது, மற்ற இந்துச் சாதிகளுக்குச் சமமான சமூகப் பண்பாட்டு வசதிகள் ஆகியவற்றைப் பெற்றிடப் போராடுகிறார்கள். தங்களது இளைஞர் அணியையும் பிற அமைப்புக்களையும் கொண்டு ஊர்வலங்களையும் போராட்டங்களையும் நடத்துகின்றனர்.

தங்களைப் பல வழிகளிலும் சிறுமைப்படுத்திய இந்து மதப்பிடியினின்று விடுபட வேண்டி வேற்று மத நம்பிக்கைகளையும், மாற்று நம்பிக்கைகளையும் கண்டிட முனைகின்றனர். தனிப்பட்ட, அல்லது கூட்டமான மதமாற்றங்கள் செய்கின்றனர். தங்கள் பகுதிக்கு அல்லது இந்தியா முழுமைக்குமான இயக்கங்களையோ, தலீத்வேங்கைகள் போன்ற பிற அமைப்புகளையோ உண்டாக்குகின்றனர். பத்திரிக்கைகள், அறிக்கைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கலகமேற்படுத்தும் அல்லது தங்கள் கொள்கைகளுக்கான விளம்பரங்கள், புத்தகங்கள் முதலியவற்றை வெளியிடுகின்றனர். அமைதியான அல்லது மற்ற வகையான போராட்டங்களை நடத்துகின்றனர். விலைவாசி உயர்வு,குறைந்த கூலி, சம்பளப் பாதுகாப்பு வணிக ஊழியர்சங்க உரிமைகள், மக்களாட்சி கொடுக்கும் சுதந்திரம், பெண்கள் கொடுமைப்படுத்தப்படல் இன்னோரன்ன பிற பொதுப் பிரச்சினைகளில் கொடுமைக்கு ஆளான பிற அமைப்புகளுடன் சேர்ந்து போராடுகின்றனர்.

இந்திய சமுதாயத்தில் அளவிலாக் கொடுமைகளுக்கும் இகழ்ச்சிக்கும் ஆட்பட்ட உரிமையற்ற இப்பெரிய கூட்டத்தினரிடையே வளர்ந்து வரும் விழிப்புணர்ச்சியைத் துல்லிதமாகக் கணிக்கும் நூல்கள் மிகச் சிலவேயாகும்.

தீண்டத்தகாதோரின் விழிப்புணர்ச்சியும் போராட்டங்களும், இந்து மதத்திற்கும், இந்து சமுதாயத்திற்கும், பிறர் பொருளை வவ்விட விழையும் தற்காலச் சமுதாயத்திற்கும், சமுதாயத்தில் சாதி அமைப்பின் பங்கிற்கும் பெரும் பிரச்சினைகளைக் கிளப்பி இருக்கின்றன.

ஆட்சியாளர்களால் கொண்டு வரப்படும் கலப்புப் பொருளாதார முதலாளித்துவ அரசியல், பண்பாட்டு அமைப்புகளில் இப்போக்குகள் பிரதிபலிக்கின்றன. இதனால் ஏற்படும் விளைவுகளில் ஒரு குறிப்பிட்ட விளைவானது திட்டங்கள் முடிய முடிய, ஏழை விவசாயிகள், குத்தகைதாரர்கள், எண்ணிக்கை வளர்ந்து வரும் விவசாயக் கூலிவேலை செய்வோர், ஆகியோரின் நிலைமை மென்மேலும்

மோசமாகிறது. பெரும் பகுதியாய் உள்ள உரிமையற்ற இந்த வகுப்பினர் இவ்வகைப் போக்கைக் கைகட்டி விதியே என ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இத்தகைய சூழலுக்குப் பலவகையிலும் இவ்வகுப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்து விட்டனர் என்பதைப் பல ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. தங்களை அடிமைப்படுத்திச் சுரண்டிடும் இத்தீயசக்திகளைத் தனிமனித மறுப்பு, அல்லது எதிர்த்தல் என்ற வகையில் போராட்டங்கள் துவங்கியுள்ளன. இதனால் அவர்கள் தாக்கப்படுகின்றனர் அல்லது கொல்லப்படுகின்றனர். நீதிமன்ற வழக்குகள், ஊர்வலங்கள், தர்ணாக்கள், சத்தியாக்கிரகங்கள், பலத்தைப் பயன்படுத்தவேண்டிய வன்முறைகள் என அவர்களின் எதிர்ப்புப் பன்முகப் பரிமாணம் பெற்றுள்ளது.

குறிப்பாக அறுபதுகளில் மத்திமகாலந் தொட்டு இப்பிரிவு மக்கள் தங்களுடைய எதிர்ப்புகளைப் பலப்படுத்தி விறுவிறுப்புடன் செயல்படுகின்றனர். விரிவாகவும் முறைப்படியும் இதனை ஆய்ந்தால் நாட்டில் நிகழும் இப்போராட்டங்கள் சில நூறுகள் அல்ல பல ஆயிரங்கள் என்பது தெளிவாகும்.

*சில போராட்ட வகைகள்*

நில உரிமை, நிலப்பறிப்பு இயக்கங்கள், தேர்தல் எதிர்ப்புகள், குத்தகை வாடகைப் பாதுகாப்பு, குறைந்த அளவு சம்பளம், முதலியவற்றை ஆதரித்தும் பொய் வழக்குகள், முறையற்ற இடமாற்றம், அலைக்கழித்தல், கடன்கொடுப்போரால் மறைமுகமாக அல்லது வெளிப்படையாகக் கொடுக்கப்படும் இன்னல்கள், நிலச் சுவான்தாரர்கள், வன ஒப்பந்தக்காரர்கள், ஊழல் அதிகாரிகள், ஊழல்காவல் துறையினர், சட்டமுரணான சொத்து அபகரிப்பு, மனிதத் தன்மையற்ற பல சித்திரவதைகள் முதலியவற்றை எதிர்த்துப் போராட்டம் நடத்துகின்றனர். எழுபதுகளிலிருந்து ஆயுதந் தாங்கிய போராட்டங்களும் இந்தியாவில் பல பகுதிகளில் வளர்ந்து வருகின்றன. இதைத் தவிரப் புதியவகைப் போராட்டங்களும் முளைத்துள்ளன. உயர்கல்வி கற்ற, ஈடுபாடுடன் செயல்படக்கூடிய இளைஞர்கள், தங்கள் பதவிகளை உதறிவிட்டு

இதமான வாழ்க்கை வசதிகளைத் துறந்து, உரிமை உணர்வுகளும் எந்த வசதிகளுமற்ற சிற்றூர் மக்களிடையே வேரூன்றியத் தன்னார்வக் குழுக்களுடன் இணைந்து அவர்களுக்கு உற்சாகத்தையும் போராட்ட வழிமுறைகளையும் காட்டி நடத்திச் சென்றிடத் தலைப்பட்டுள்ளனர்.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் அநேக இடங்கள், பகுதிகள். "கலக இடங்களாக" அறிவிக்கப்பட்டுள்ளன. நிறைய மக்கள் தாங்கள் வசிக்கும் சிற்றூர்களைக் காலிசெய்து விட்டுப் பாதுகாப்புச் சிற்றூர்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர். "பாதுகாப்புச் சிற்றூர்" என்பது கைதிகளைப் பராமரிக்கும் ஒரு புது வகையான இடம். இதை இராணுவமும் இல்லாத காவல் துறையும் இல்லாத ஒரு தனிப் படையின் நிர்வாகத்தின் கீழ் அரசு இயக்கி வருகிறது. அந்தப் பகுதியில் வாழும் பணக்காரர்களும் அதிகார வர்க்கத்தினரும் இணைந்து "மோதலில் சாவுகள், அல்லது மறைந்திருந்து தாக்கினர்" என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தீரமிக்க இளைஞர்களைக்கொன்றுள்ளனர்.

சிற்றூர்களில் அரைகுறையாக, அல்லது நன்கு நிர்வாகிக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டோரால் நடத்தப்பட்ட இந்த எழுச்சிகள் பெரும்பாலான சமூகவியலாளரிடையே ஆய்வுக்குரிய முக்கியத்துவம் பெற்றிட வில்லை.

பெருமளவில் நம்மிடையே உள்ள இந்த உழைக்கும் மக்களைத் தங்கள் செல்வாக்கால் தங்கள் காரியத்தைச் சாதிக்கப் பயன்படும் கருவிகளாகத்தான் பயன்படுத்தப்பட்டுள்ளனரே தவிர சமுதாய மாற்றத்தில் விறுவிறுப்பாகச் செயல்படும் உழைப்புத் திறன் மிக்க, உணர்வுள்ள ஒத்துழைப்பாளர்களாக, உணர்வினைத் தூண்டி விட்டுச் சமுதாயத்திற்கு உதவும் படைப்பாளர்களாக அவர்களை மாற்றிட முடியுமென நாம் கருதவில்லை. அவர்கள் வழிதவறியவர்கள், திசை திரும்பினோர், ஊனமுற்றோர், சட்டம்—ஒழுங்குப் பிரச்சனைகளை எழுப்புவோர் என்றுதான் கருதப்படுகின்றனர்.

எனினும், ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட சுதந்திர ஆங்கிலக் கல்வி, சட்டத்தின் ஆட்சி என்ற கருத்து, சுதந்திர உணர்வு, பாராளுமன்ற அரசியல் அமைப்புக்கள், ஆகியுவை இந்தியாவில்

சமுதாயச் சமத்துவக் கருத்துக்களை விதைத்து வளர்த்தன. இந்து சமுதாய அமைப்பில் ஒதுக்கப்பட்டவர்களாக இருந்த இம் மக்களுக்கிடையே சமுதாய சமதர்ம உணர்வு வீச்சிலும், இயக்க முறையிலும் மேலும் வலிமை பெற்றது. மேலும், இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள பல அறிஞர்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்பால் மிகுந்த சிரத்தை எடுத்துள்ளனர். தீண்டாமை பற்றிய விளக்கம், தீண்டாமை தொடர்வது, இதில் ஏற்பட்டுள்ள மாற்றம், புதிய போக்குகளை அவ்வினத்தவர் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது ஏற்காமை, அதற்கான காரணங்கள், அதன் விளைவாக ஏற்படும் சமுதாய ஒட்டுறவுகள் என்பனவே இவ்வறிஞர்களின் சிந்தனைகளாக உள்ளன.

சாதிப் பாகுபாடு வேலைப் பாகுபாட்டால் அமைந்த அமைப்பே யாதலினால், சாதிக் கோட்பாட்டில் பொருளாதாரத் தன்மையும் ஊடாக வியாபித்துள்ளது. உரிமை அல்லது பொருளாதார ஆதாரத் தொழில்கள் மீது ஆதிக்கம், உற்பத்திக்கும் சேவைக்கும் உள்ள தொடர்பு ஆகியவை அதன் பகுதிகளாகும். இந்த அனைத்துப் பொருளாதாரக் கூறுகளும் நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்குப் பின்னர் குறிப்பிடத்தக்க மாறுதல்களை அடைந்துள்ளன.

இந்திய அரசியல் அமைப்புச் சாசனம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகச் சிறப்பான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. அவ்வின மக்களை உயர்த்த, சமூகவாழ்வின் பொது நீரோட்டத்தில் கலப்பதற்காக, அரசாங்கம் அவர்களுக்கு கல்விச் சாலைகளிலும் சட்டசபைகளிலும் அரசாங்க வேலைகளிலும் இட ஒதுக்கீடு செய்துள்ளது. அரசுத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்துவதுடன், நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி உழைப்போருக்கே நிலம் சொந்தம் என்றும், நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்து மிகுதி உபரி நிலங்களைக் கைப்பற்றி நிலமில்லாதோருக்குக் கொடுத்தும் உதவியது. சிற்றூர் மக்களின் கடன் சுமைகளுடன் கொத்தடிமை முறையும் தொடர்புடையதாக இருந்தால் இவைகளும் சட்டத்தின் பார்வைக்கு உட்பட்டன. பொதுவான வளர்ச்சித் திட்டங்கள் தவிர அரசாங்கம் இம்மக்களுக்காகச் சில சிறப்பு வளர்ச்சித் திட்டங்களையும் தீட்டியது.

இவ்வாறாகச் சாதிகளிடையே நிலவிய பாரம்பரிய பொருளாதாரச் சமன்பாடு சீர்குலைந்தது. இச் சீர்குலைவை மாற்றியமைக்க வேண்டியதாகியுள்ளது என்பதைச் சுலபமாக அறியலாம். இதற்கான முயற்சிகள் உணர்ச்சிகளிலிருந்தும் சண்டைகளிலிருந்தும் விடுபடவில்லை. இக் கருத்தைக் கீழ் கொடுக்கப்படும் விவரங்கள் தெளிவாக விளக்குகின்றன. இங்குக் கொடுக்கப்படும் விவரங்களில் அவற்றில் உள்ள தீவிர உணர்ச்சிகளைத் குறிப்பிடாது அவை நிகழ்வதற்குக் காரணமான சூழ்நிலைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

*கீழ் வெண்மணிக் கொலைகள்–1968.*

முன்பிருந்த தஞ்சாவூர் மாவட்டம் நாகபட்டினம் தாலுகா, கீழ்வெண்மணிச் சிற்றூரில் 1968—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த சம்பவம் மிகக் கொடூரமான ஒரு வன்முறைக் கொலைக் குற்றமாகும். உயர்சாதி மிராசுதார்கள் தங்கள் அடியாட்களைக் கொண்டு, தங்கள் உயிருக்குப் பயந்து கீற்றுக் குடிசையில் தஞ்சமடைந்த தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களைத் தீயிட்டுக் கொளுத்திய இந்நிகழ்ச்சி மிகக் கொடூரமானது. அந்த அடியாட்கள், பயந்த மக்கள் தஞ்சமடைந்திருந்த அந்தக் குடிசையின் கதவை வெளிப்புறம் பூட்டி, அவர்கள் தப்பிச் செல்லாமல் செய்து, அக் குடிசைக்குத் தீயிட்டனர். இதில் 44 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் கருகிச் சாம்பலாயினர். தீயினால் காயமடைந்த திருமுனியன் என்ற அய்யாவு என்பவரின் மகன், கீவளூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில்; ஆயுதச் சட்டத்தின் கீழ்[1]

1. P.S.Cr.No. 327 / 68 u/s, 148, 323, 324, 325, 307, 302, 436, 114, 149, I.P.C. பிரிவு

27 ஆயுதச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் இவ்வழக்கை வன்முறைக் குற்றவியல் பிரிவு.(C.I.D) 1.1.1969—இல் எடுத்துக் கொண்டது. 26.3.1969—இல் இது சம்பந்தமாக 24 பேர்களை (u/s 148, 323, 324, 325, 307, 302, 436, 114, 149)[2] இந்தியக் குற்றவியல் சட்டப்படியும்; ஆயுதச் சட்டம் பிரிவு 27இன் படியும் குற்றம் சாட்டி நாகபட்டினம் சப்—மாஜீஸ்த்ரேட் முன் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கு 24.7.70—இல் நாகபட்டினம் (செசன்சுக்கு) மாற்றப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 23 நபர்களில் எண்மர் குற்றவாளிகள் எனத்தீர்மானிக்கப்பட்டு மாவட்ட (செசன்ஸ்) நீதிபதியால், 30.11. 70—இல் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின சாதி எண் 80;26/70—இன்படி தண்டிக்கப்பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் நீதி மன்றத்தால் (செசன்ஸ்சில்) விடுவிக்கப்பட்டவர்களுக்கு எதிராகச் சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (செசன்ஸில்) குற்றவாளிகள் என்று முடிவு செய்யப்பட்டுத் தண்டனை பெற்றவர்களும் மேல் முறையீடு செய்தனர். C.A. எண்1208/70, 593/71 ஆவணப்படி கீழ் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட எட்டுப்பேரும் உயர்நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். இத் தீர்ப்பை எதிர்த்து S.L.P. எண் 878/75—இன் படி மாநில அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.

*விழுப்புரம் வழக்கு-1977.*

1977—இல் அன்றைய தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் உயர் சாதி இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் நில சம்பந்தமான தகராறு நெடு நாட்களாக இருந்து வந்தது. 1978—ஆம் ஆண்டு ஜுன் மாதம் கடைசி வாரத்தில் விழுப்புரம் பெரிய குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஒரு ஹரிஜனப் பெண் சினிமாப் பார்த்து விட்டுத் திரும்பி வரும் வழியில் கற்பழிக்கப்பட்டாள். மறுநாள் அதாவது 24, ஜுலை, 1978—இல் விழுப்புரத்தில் மிக இறுக்கமான சூழ்நிலை உருவாகியது. இங்குமங்குமாகச் சில வன்முறைகள் நிகழ்ந்தன. பதில் தாக்குதலாகப் பெரிய குடியிருப்பில் இருந்த ஹரிஜன, ஹரிஜனரல்லாத மக்களுடைய வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 24, 25 ஜுலை 1978லும் வன்முறைகள் நீடித்தன. இதன் காரணமாக 25.7.1978 காலை 9.30 முதல் மாலை சூரியன் மறையும் வரை பற் பல வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இவ் வன்முறையில் அகப்பட்டவர்களைப் பாரதியார், தர்மராஜா தெருக்களுக்குக் கொண்டு சென்று கம்பத்தில் கட்டிவைத்து அடித்து உதைத்தனர். சம்பவத்தில் பெரிய குடியிருப்பைச் சேர்ந்த ஒன்பது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் படுகாயமடைந்தனர். இது நாட்டின் மனதையே உலுக்கியது.

ஜூலை 25, 1978—இல் நடந்த இச்சம்பவம் தொடர்பாக ஹரிஜனங்களல்லாத 36 பேர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இதில் A6, A8, A16, A31, A35, ஆகிய குற்றம் சாட்டப்பட்டவர்கள் செசன்ஸ் நீதிபதியால் விடுவிக்கப்பட்டனர். மீதமுள்ள குற்றம் சாட்டப்பட்ட 31 பேர்களும் சட்டப்பிரிவு 302 பிரிவு 32; 302—149, பிரிவு 302—மற்றும் பல இந்தியக் குற்றவியல் சட்டப்படி பல தண்டனைகளைப் பெற்றனர். குற்றம் சாட்டப்பட்ட 1, 11, 19 எண் நபர்களுக்குத் தூக்குத் தண்டனை கொடுத்து செசன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார். மீதமுள்ள குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் A1 (கண்ணன்) A11 (பச்சையப்பன்) A19 (அமாவாசை என்ற ராமலிங்கம்) ஆகியோரது மரண தண்டனையையும் A16 க்கான ஆயுள் தண்டனையையும் உறுதிப்படுத்தியது. மேல் முறையீடு செய்ததின் பேரில் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதி மன்றம் குறைத்தது.

*போடிக் கலவரம்–1989:*

தமிழ் நாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள போடி நாயக்கனூரிலும் அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் கலவரமும் மோதலும் ஏற்பட்டன. இது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் அவரல்லாத சாதியினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களாகும். இது பரம்பரையாக வந்து கொண்டிருந்த குரோதத்தினால் ஏற்பட்ட விளைவாகும்.

தமிழ்நாடு மதுரை மாவட்டத்தில் உண்டாகும் ஹரிஜன—ஹரிஜனரல்லாத மக்களுக்கிடையே ஏற்படும் மோதல்களுக்குக் காரணம் விவசாயக் கூலிகளைச் சுரண்டி வந்ததால் நெடுங்காலமாக உருவான இறுக்கமேயாகும். சாதி வெறியையும் கலவரத்தையும் தூண்டிவிடும்படியான சொற்களும் செயல்களுமே இக்கலவரத்துக்குக் காரணங்களாகும். இதனால் கொலை, கொள்ளை, தீவைத்தல் முதலியன நிகழ்ந்து, அறியாத ஏழை மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். மதுரை மாவட்டம் போடிநாயக்கனூரிலிருந்து இருபது கிலோ மீட்டரில் உள்ள தேவாரம் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு ஹரிஜனத் தலைவர் தன் இனத்தவரிடையே, ஹரிஜன் அல்லாத இந்துப் பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளும்படியும், செப்டம்பர் 10,1989—இல், வன்முறையைத் தூண்டும்படியும் பேசினார்.

ஹரிஜன் அல்லாத மக்கள் இதற்கு எதிராக எழுந்து, அங்குள்ள காவல் நிலையத்தில் புகார் செய்து, அந்த ஹரிஜனத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டனர். இதற்குக் காவல் துறையினரிடமிருந்து எந்தச் சாதகமான செயலும் தென்படாத நிலையில், ஹரிஜனரல்லாத மக்கள் இது பற்றி அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிகளைப் பேருந்துகளில் ஒட்டினர். இதுவும் பலனில்லாமற் போகவே, கோபமுற்ற ஹரிஜனரல்லாதோர் செப்டம்பர் 16, 1989—இல் சாலை மறியல் செய்யப் போவதாகத் தங்கள் போராட்டத் திட்டத்தை அறிவித்தனர்.

செப்டம்பர் 15—இல் நடந்த அமைதிக் குழுப் பேச்சு வார்த்தையில் அந்த ஹரிஜனத் தலைவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர்கள் உறுதி கூறியும் செப்டம்பர் 16—இல் கலவரங்கள் வெடித்தன. ஐந்து ஹரிஜனமல்லாதோர் ஒரு மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் போடிநாயக்கனூர், கண்டமனூர், தேனி, சின்னமனூர் ஆகிய இடங்களில் வன்முறைகள் ஏற்பட்டுக் காவல் துறையினரால் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாகியது.

மூன்று நாட்களுக்குப் பின்னர் சகஜ நிலை நிலவுவது போன்ற தோர் தோற்றம் வன்முறைக் களங்களில் நிலவியது. காவலர்கள் சுட்டதில் இறந்த பதினோரு பேருடன் கலவரத்தால் இறந்தவர்கள் இருபது பேர்களாவர். முப்பது காவலர்களுடன் படுகாயமடைந்த 91 நபர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். துப்பாக்கிக் குண்டிலிருந்து தெறித்த உலோகத் துண்டுகள் பாய்ந்ததால் இரண்டு பேர்களுக்கு ஒவ்வொரு கண்பார்வை போய்விட்டது.

மக்களின் கோபம் கோவில் நகர் மதுரையையும் ஊடுருவும் என்ற எண்ணத்தில் அதிர்ந்து போயிருந்த அரசு அதிகாரிகள், கலவரப் பகுதிகளுக்குள் இரண்டு நாட்களாகக் காவல் துறையினரும் நுழைய முடியாத சூழல் இருந்ததைக் கண்டு அச்சமடைந்தனர். பரவிவரும் கலவரம் பற்றியும் ஓரிரு இடங்களில் நிகழ்ந்த கொள்ளை தீவைத்தல் ஆகியனபற்றி அறிந்த அரசு கலவரப் பகுதிகளுக்கு ஆயுதச் சிறப்புக் காவலர் படையை (Armed Reserve Police) விரைவில் அனுப்பி வைத்தது.

கலவரப் பகுதிகளைப் பார்வையிட மாநில அரசு அமைச்சர்கள் விரும்பினாலும், அங்கு நிலவிடும் இறுக்கமான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, அவர்கள் அங்கு செல்லாமல் காவல் துறையினர் தடுத்து விட்டனர். கலவரங்கள் முடிந்து இரண்டு நாட்களுக்குப் பின்னரே, அதிக எண்ணிக்கையில் காவலர்கள் உடன் செல்ல, அமைச்சர்கள், கலவரப்பகுதிக்குப் போகமுடிந்தது.

மதுரை மாவட்டத்தின் பிற பகுதிகளில் இருந்து கலவரப்பகுதிகள் மூன்று நாட்களுக்குத் துண்டிக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் சொல்லொண்ணாத் துயரத்திற்கும் இன்னல்களுக்கும் ஆட்பட்டனர். கொலை, கொள்ளை, தீவைப்பு பற்றிய வதந்திகளும், ஏற்கனவே இருந்த இறுக்கமும் மக்களை வீட்டிற்குள்ளேயே அடைந்திருக்கச் செய்தன. பேருந்துப் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டுக் கடைகளும் மூடிக் கிடந்ததால் அவர்களுடைய கவலை அதிகரித்தது, மக்கள் பட்டினி கிடக்க நேர்ந்தது.

அந்த ஹரிஜனத் தலைவரைக் கைது செய்தும் மக்கள் மனம் நிம்மதியடையவில்லை. இதனால் அரசாங்கம் கவலை யடைந்தது. மேலும், ஹரிஜனங்களல்லாதோர் போர்க்கொடி உயர்த்தினர்.

இருபத்தி மூன்று ஹரிஜனங்கள் கைது செய்யப்பட்டதும் இரண்டு துப்பாக்கிகளும் (அவற்றில் ஒன்று அனுமதி பெறாதது) ஆறு நாட்டு வெடிகுண்டுகளும் தேவாரத்தில் ஒரு திடீர்ச் சோதனையில் கைப்பற்றப்பட்டதும், ஹரிஜனங்களல்லாதோர் புகாரில் கூறியுள்ளது போல, துப்பாக்கியால் ஹரிஜனங்கள் சுட்டதால் செப்டம்பர் 16—இல் ஐவர் மாண்டனர் என்பது உறுதியானது. மேலும், ஹரிஜனங்கள் பக்கம் யாரும் சாகவில்லை என்பதால் எதிர்த்துப்பாக்கித் தாக்குதல் இருக்கவில்லை என்பதுவும் இதை உறுதி செய்தது.

ஒரு சிறு நிகழ்ச்சி எவ்வாறு சமூக இறுக்கத்தை ஏற்படுத்தி, அதை ஒரு பெரும் வன்முறையாக வெடிக்கச் செய்து ஒரு பரந்த தூரம் வரை பரவச்செய்யும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

சாதி உராய்வால் வெடித்திடும் வன்முறைகளைச் சமூகவியல் நோக்கிலும் சட்ட அடிப்படையிலும் ஆராய வேண்டியது அவசியம். சாதி மோதல்களில் உள் புரையோடும் ஓட்டங்களையும் ஆய்வு செய்வது அவசியம். சட்ட அமைப்பின் இயலாமை, சட்டத்தை அமுல்படுத்துதலில் பயனில்லாமை, அமுல்படுத்தும் அதிகாரிகளிடம் காணப்படும் அலட்சியம், அவர்கள் கருத்தூன்றிச் செயலில் ஈடுபடாமை, முதலியன நிலவிடும் இறுக்கத்திற்கு வலுவூட்டிச் சாதி மோதல்களுக்கு வழிவகுக்கின்றன. துன்பம் துடைக்கும் சமூக அமைப்புகள் திறமையாகப் பயன் அளிக்கும் வகையில் செயல்படுமாயின் சாதி பேதங்களைத் தவிர்த்திட முடியும். இல்லையெனில், காலங்காலமாக மனதிற் போட்டு இறுக்கிய பகை உணர்விற்கு வடிகாலாக மோதல்கள் வெளிப்படும்.

*சில கோட்பாட்டுக் கேள்விகள்:* (Some quasi-theoritical questions)

"இன்றைய இந்திய அரசியல் விவாதங்களில் வளர்ந்து வரும் வன்முறையின் அளவை விளக்குவதற்கும் புரிந்து கொள்வதற்கும், இணக்கத்திற்கும் கட்டாயப்படுத்துதற்கும் "சொல்லின் சக்திக்கும்" "சக்தியான சொல்லிற்கும் உள்ள தொடர்பை ஆராய வேண்டியதில்லை"[38].

வன்முறை, அரசியலிலிருந்து பிரிக்கமுடியாத ஒன்று. இன அடிப்படைச் சமுதாயத்தில் பல்வேறு வகையிலான அமைப்புகளின் செயல்பாடுகள், செயலெதிர்ச்செயல்களேயாகும். ஆனால் இவ்வன் முறையின் பெரும்பகுதி, நீரினில் மிதந்திடும் பனிப்பாறை போல், மேல் பரப்பிற்குக் கீழ் பெரும் பகுதி அமுந்தி மிக்க பலத்துடன் உள்ளது. இதன் தீவிரமும், வன்முறையின் வழிமுறைகளும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. அவை வெவ்வேறு தோற்றங்களில் வரக்கூடியன.

பொதுவாக ஒவ்வொரு அரசாங்கமும் அதன் அடிப்படைச் சட்ட அமைப்புகளில், அதாவது, அரசியல் அமைப்புச் சட்டம், அடிப்படைச் சட்ட விதிகள் முதலியனவற்றில், இயல்பான சூழ்நிலையில் வன்முறையை எந்த அளவிற்கு அனுமதிப்பது என்று வரையறை செய்து "இயல்பான சூழல்" எது என்பதையும் தீர்மானிக்கிறது. ஆனால் நடைமுறையில் விளக்கப்பட்ட நியதியிலிருந்து வன்முறை என்பதிலும் இயல்புநிலை என்பதிலும் அடிக்கடி மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

இது தவிர வன்முறையின் நெறிமுறைகளும் மீறப்பட்டுள்ளன. இத்தகைய மீறல்கள் சந்தர்ப்ப வசத்தினாலோ, சில சந்தர்ப்பக் காலங்களிலோ நிகழ்கின்றன. இம் மீறல்கள் எப்போதாவது, குறுகிய காலத்திற்கு மட்டுமே நிகழ்கின்றன.

கடைசியாக, விதிமுறைகளை மீறுவதே நடைமுறைப் பழக்கமெனும் காலச்சாட்டமுமுண்டு. அதுவும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. அதாவது, இயல்பான, அல்லது இயல்பான தெனக் கருதப்பட்ட, சமூகத்தின் சில பிரிவினருக்கும் பொதுவான சமூக அமைப்பின் அதிகாரத்திற்கும் இருந்த ஒட்டுறவு மிகவும் நலிவுற்றது. இதனால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒத்துப்போதல் என்பது மென்மேலும் சிக்கலானது. விட்டுக்கொடுத்து ஒத்துப்போதல் என்பதே இயல்பான நடைமுறையில் ஏற்றுக்கொள்ள முடியாததாக அற்றுப்போய்விட்டது.

இத்தகைய சாதகமற்ற சூழ்நிலையில் சமுதாயத்திற்கு இரண்டு வழிகளில் ஒன்று தான் மிஞ்சி நிற்பது:

1.கூடிவாழும் சமுதாயத்தையும் அதன் அமைப்புக்களையும் சிதைத்திடும் அராஜகம்.

2.தீவிர மாற்றங்கள் மூலம் சமூக அரசியல் சீரமைப்புச் செய்தல்.

ஒரு கால அளவில் நிலவிடும் அராஜகம் சமுதாயத்தின் தீவிர மாற்றங்களுக்கும் உதவக் கூடும். இதையே மாற்றியும் சொல்லலாம். இதில் இந்தியா எந்த நிலையில் உள்ளது என்பது இந்த அதிகாரத்திற்குட்பட்ட ஆராய்ச்சியல்ல.

### அடிக்குறிப்புக்கள்

1.டூமோ, லீவிஸ்; மானிட அடுக்குமுறை: சாதி அமைப்பும் அதன் பொருளும். பக்.

2.தீபாங்கர் குப்கா: சமுதாய அடுக்குமுறை. பக்கம்.84

3. மேற்படி பக். 85.

4. மேற்படி பக். 86

5. மேற்படி பக். 86

6. மேற்படி பக். 88

7. மேற்படி பக். 89

8. மேற்படி பக்.89—90

9. டூமோ,லூவிஸ் முற் சொன்னபடி பக்—225

10.மேற்படி பக். 90

11.மேற்படி பக். 90

12.மேற்படி பக். 91

13.மேற்படி பக். 91

14.மேற்படி பக். 338

15. மேற்படி பக். 368

16. தீபாங்கர் குப்தா. முன் சொன்னபடி பக்.93

17. மேற்படி பக். 105

18. மேற்படி பக். 107

19. மேற்படி பக். 108

20. மேற்படி பக். 108

21. மேற்படி பக். 109

22. சத்தியமூர்த்தி, T.V. (தொகுதி)" குடியேற்ற காலத்துக்குப் பின் இந்தியாவில் வர்க்கத் தோற்றமும் அரசியல் மாற்றமும்". பக்.321.

23. தாழ்த்தப்பட்ட சாதிகளும் மற்றும் பழங்குடியினருக்குமான ஆய்வுக்குழு 1986—87. அட்டவணை—1; பிற்சேர்கை—1.

24. சத்திய மூர்த்தி,T.V. முதற்குறிப்பிட்டபடி பக்.331.

25. மேற்படி . பக். 331.

26. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்குமான ஆய்வுக் குழு—1986—87. பக்.11.

27 பிரசாத் P.H. ஒழுங்கற்ற வளர்ச்சி: இந்திய அரசியல் பொருளாதார வளர்ச்சி. பக்.1

28.ராபர்ட் டெலீஜ்: (Robert Deliege) தீண்டத்தகாதோர் உலகம்: தமிழ் நாட்டுப் பறையர்கள். (மொழிப் பெயர்ப்பு—டேவிட் பிலிப்ஸ்) பக்.1

29.மேற்படி பக். 2

30.மேற்படி பக். 2

31.டூமோ, லூயிஸ் முன் குறி. பக். 79

32.மேற்படி பக். 59

33.ராபர்ட் டிலீஜ் முன். குறி. பக். 2—3.

34.பட்வர்தன்,S. இந்திய ஹரிஜனங்களிடையே ஆன மாற்றம்: மஹராஷ்ட்ரம்—ஒரு ஆய்வு. பக். 7

35. எந்தோவன், R.(Enthovern,r). பம்பாய்ப் பழங்குடியினரும் சாதிகளும், (2 தொகுதிகள்)

36.ஹட்டன், J. இந்தியாவில் சாதி: அதன் இயல்பு, செயல்பாடு, தோற்றம். பக். 89.

37.ஆலிவர் மெண்டல்சன்; உபபேந்திர பக்சி: தாழ்த்தப்பட்டோர் உரிமைகள் பக். 89

38.சத்யமூர்த்தி, முன். குறி. பக். 339.

## தீண்டாமையை ஒழிக்க அரசியல் அமைப்புச் சட்டமும், பிற சட்டப் பாதுகாப்புகளும் சமூகப்–பொருளாதார நடவடிக்கைகளும்.

தென்ஆப்ரிக்காவில் தன் இளமைக் காலத்தில் அதிக காலம் தங்கியிருந்த நம் நாட்டின் தந்தை என்று போற்றப்படும் காந்திஜி ஒதுக்கி வைக்கும் கொள்கையால் வெள்ளையரல்லாதோர் எவ்வளவு பாதிக்கப்படுகின்றனர் என்பதை அறிந்திருந்தார். என்னதான் காரணங்களாக இருந்தாலும் ஒதுக்கப்பட்ட மக்கள் அனுபவித்த துன்பங்களிலிருந்து நிறையவே கற்றுக்கொண்டார். அவர் இந்தியா திரும்பியபோது, சாதி, இனம், மதம் என்ற வேறுபாடு கருதாமல் இந்தியாவிற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் பொறுப்பு அவரை வந்து சேர்ந்தது. மக்களை இயல்பாகவே கவர்ந்து அவர்களைச் சமூகக்கொடுமைகளுக்கு எதிராகவும், வெளிநாட்டவர் நம்மை அதிகாரம் செய்து ஆட்சி நடத்துவதற்கு எதிராகவும் மக்களை நடத்திச் செல்ல ஒரு இயல்பான தலைவர் அப்போது இல்லை. ஒன்றல்ல பல இயற்கைச் சக்திகளும், அன்னிய நாட்டவரும் இந்தியர்களைச் சமூகப் பொருளாதார அரசியல் வகைகளில் சுரண்டுகின்றனர் என்பதை அறிந்தார். இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் போது, ஒருமுறை அவர் மதுரைக்கு வந்திருந்தார். அப்போது இந்தியர்களின் வறுமையைக் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினரின் வறுமைத் துயர்களை நேரில் கண்டு மனம் வருந்தினார். அறையிலிருந்து இடுப்பைச் சுற்றி ஒரு சிறு வேஷ்டியையும் தோளில் துண்டு ஒன்றையும் மட்டும் அணிந்து கொண்டு கையில் ஊன்று கோலுடன் அவர் வலம் வரத் துவங்கினார்.

வரலாற்றில் காந்திஜி பற்றி நாம் வாசித்தால், ஏழை எளியோரின், குறிப்பாக தாழ்த்தப்பட்ட இன மக்களின் நலம் நாடி அவர் அயராது உழைத்தது தெரியவரும். இந்த ஆய்வில் காந்தியடிகள் பற்றி அதிகம் எழுத முடியாது. அவரைப்போல் பண்டிட் ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய்படேல், டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், வினோபாபாவே, ஜெகஜீவன்ராம், J.P. நாராயண், பெரியார் ஈ.வே.ரா, C.N. அண்ணாதுரை, நாராயணகுரு முதலியோர் இவ்வின

மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டனர்.

அவர்கள் காலத்திலேயே அவர்களைப்போல தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காக ஓயாது உழைத்த தலைவர் அறிஞர் டாக்டர் அம்பேத்கார். தீண்டத்தகாதோரின் துன்பங்களையும், தீண்டாமைக்கான காரணத்தையும் கண்டு அவற்றைக் களைந்திட முற்பட்டார். ஏற்கனவே தீண்டத்தகாதோர் விடுதலைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அவரே அவர்களின் ஒப்பற்ற தலைவரானார். தீண்டத்தகாதோர் பற்றிய காந்தியின் எல்லாக் கருத்துக்களையும் அம்பேத்கார் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால், காலம் செல்லச் செல்ல இருவருமே தீண்டத்தகாதோரின் உரிமைகளுக்காகவும், இந்திய சமுதாயத்தில் சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சமுதாய அந்தஸ்த்தையும் அவர்கள் பெற்றிட அவர்களுக்காக உழைத்திடும் இருபெரும் தலைவர்களாக இருவரும் விளங்கினார்கள்.

பின்னர், இந்தியாவிற்கான அரசியல் அமைப்புச்சட்டம் இயற்றுவதை அரசியல் அமைப்புச் சட்டக்குழு ஒன்றிடம் ஒப்படைக்க உறுதியானது. அப்போது, அகில இந்திய தாழ்த்தப்பட்ட இனத்தவர் கூட்டமைப்பு, அதன் தலைவர் டாக்டர் அம்பேத்காரை தாழ்த்தப்பட்ட இனத்தவர் பாதுகாப்புக்கான சட்டத்திருத்தங்களைத் தயார் செய்து கூட்டமைப்பு சார்பாக அரசியல் அமைப்புச்சட்டக் குழுவிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டது. அதன்படி டாக்டர் அம்பேத்கார் ஒரு விண்ணப்பம் தயார் செய்து அனுப்பி வைத்தார். அவ்விண்ணப்பமே இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான பல திட்டங்களுக்கும் பரிந்துரைகளுக்கும் அடிப்படையாக அமைந்தது.

அந்த விண்ணப்பத்தில் பழங்குடியினத்தவரைப் பெரும்பான்மையாக உள்ள மேல்சாதி இந்துக்களிலிருந்து வேறுபடுத்தி, சிறுபான்மை இனத்தினர் என்று குறிப்பிடவேண்டுமென்று கேட்கப்பட்டது. "தாழ்த்தப்பட்ட இனத்தவர், சிறுபான்மை இனத்தவர் என்பதையும் விடச்சற்று வேறுபட்டவர்கள். மற்ற மக்களுக்கும் சிறபான்மையினருக்கும் அளிக்கப்படும் பாதுகாப்பு தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குப் போதுமானதாகாது. அதாவது, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் சமூகப்பொருளாதாரக் கல்வி நிலைமை மற்ற சிறுபான்மை மக்களின் சமூகப் பொருளாதாரக் கல்வி

நிலையைவிட மிக மோசமாகவே உள்ளது. இந்நாட்டின் மக்களாகவும் சிறுபான்மையினராகவும் அவர்கள் பெற்றிடும் பாதுகாப்புடன், பெரும்பான்மையினரின் கொடுமைகளில் இருந்தும், ஒதுக்கி வைக்கப்படுவதினின்றும் சிறப்பான பாதுகாப்பு தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குத் தேவைப்படுகிறது."1

*அரசியல் அமைப்புச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான பாதுகாப்புகள்:*

மேற்குறிப்பிட்ட விண்ணப்பம் அரசியல் அமைப்புக் குழுவிற்கு அனுப்பப்படும் அதே நேரத்தில் பொதுமக்களுக்கும் வெளியிடுவதாக இருந்தது. அந்த விண்ணப்பத்தில் விதி II பிரிவு 4 தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான கீழ்காணும் பாதுகாப்பை உள்ளடக்கியுள்ளது.

விதி II பிரிவு IV தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான பாதுகாப்புகள்:

பகுதி I: உறுதிகள்

கூறு (Clause) I:

சட்டசபையிலும் மற்ற உள்ளாட்சி

அமைப்புகளிலும் பிரதிநிதித்துவம்பெற்றிட உரிமை.

கூறு 2: நிர்வாகத் துறைகளில் பிரதிநிதித்துவஉரிமை

கூறு 3: அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம்

பகுதி II: சிறப்புப் பொறுப்புகள்:

கூறு 1: உயர்வு பெற்றிட

2: தனிஇட வசதிகள்

பகுதி III: பாதுகாப்புகள்—அவற்றிற்கான திருத்தங்கள்:

கூறு 1: அரசியல் அமைப்புச் சட்டத்தில்

சேர்க்கப்பட வேண்டிய பாதுகாப்புகள்.

கூறு 2: பாதுகாப்பிற்கான திருத்தங்கள்

பகுதி IV: இந்திய மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான பாதுகாப்புகள்

பகுதி V: விளக்கங்கள்

விண்ணப்பம் பகுதி III பிரிவு—4 விதி:II பாதுகாப்பு விதிமுறைகளும், பாதுகாப்பு விதிமுறைத் திருத்தங்களும் என்பதன் விளக்கத்தில் கீழ்க்காணும் இரு குறிப்புக்களைக் கொடுத்துள்ளார்.

"தீண்டாமைப் பிரச்சினை தீண்டத்தகாதோர் எதிர்கொள்ள முடியாத ஒன்று. தீண்டத்தகாதோரைச் சுற்றிலும் அவர்களுக்கு எதிரான பெருவாரியான இந்துக்கள் சூழ்ந்துள்ளனர். அவர்கள் தீண்டத் தகாதோருக்கு எவ்விதக் கொடுமை செய்யவும் தயங்கமாட்டார்கள்.[3]

தினமும் நடக்கும் இக்கொடுமைகளைத் தவிர்ப்பதற்குத் தீண்டத்தகாதோர் அரசாங்கத்தையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. ஆனால் அரசாங்கம் மேல்சாதி இந்துக்களின் கைகளிலேயே இருக்கின்றது. இதனால் தீண்டத்தகாதோரைப் பிரித்துச் சட்டத்தின் நன்மைகள் அவர்களுக்குத் கிட்டாதபடி செய்வதோடு அவர்களை அடிமைப்படுத்தி கொடுமைப்படுத்துவதிலிருந்து அவர்களைக் காப்பாற்றும் சட்டங்களைச் செயல்படாமல் செய்வதேயாகும்.விளைவு, தீண்டத்தகாதோர் இந்துக்களுக்கும் இந்துக்களால் ஆன அரசாங்கத்திற்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டனர். ஒன்று, அவர்களுக்குக் கொடுமைகள் செய்வது, மற்றொன்று கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு உதவாமல், கொடுமைகள் செய்வோரைப் பாதுகாப்பது. "வேறு முறையில் சொல்வதானால் சுதந்திரத்திற்குப் பின்னரும் இந்துக்களாலும் இந்து மதத்தினாலும் ஏற்படும் அவமானங்கள் கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து தீண்டத்தகாதோர் தப்பிக்க முடியாது."[4]

சிறுபான்மையரான தாழ்த்தப்பட்டோர் மீது பெரும் பான்மையினரான இந்துக்களால் நடத்தப்படும் கொடுமைகள் அடக்குமுறைகள் மீது விசாரணை, விளம்பரப்படுத்துதல், அவைபற்றி விவாதிப்பது என்னும் வழிமுறைகளே இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வாகும். தீண்டத்தகாதோருக்கு இந்துப் பிற்போக்குவாதிகளால் செய்யப்படும் கொடுமைகளுக்குக் காவல்துறை இந்து பிற்போக்குவாதிகள் மீது வழக்குத் தொடுக்கும் என்ற பயம் கொடுமை செய்வதை ஒரு அளவிற்குள் வைத்துக் கொள்ள மட்டுமே செய்துள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்ட வரைவைத் தயார் செய்யும் பொறுப்பு அம்பேத்காரிடமே கொடுக்கப்பட்டிருந்ததால், அவருடைய விண்ணப்பத்தில் கேட்டிருந்த தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான அரசியல் அமைப்புச் சட்டப் பாதுகாப்புகளை அச்சட்டத்தில் சேர்த்திடத் தன்னாலான முயற்சியை அவர் செய்தார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி 17—இல் "தீண்டாமை ஒழிக்கப்படுகிறது; எந்த முறையிலும் அதைக் கடைப்பிடிப்பது தடை செய்யப்படுகிறது. தீண்டாமையின் காரணமாகச் செய்யப்படும் கொடுமைகளும் தண்டிக்கப்படத்தக்கது. இந்துமதப் பழக்கவழக்கங்களில் தீண்டாமைப் பழக்கம் மிக இழிவானது. தீண்டாமை மதக் கோட்பாடாக அமைந்துள்ளதால் அது ஒரு சரியான பழக்கமே என்பது பெரும்பாலான இந்துக்களின் நம்பிக்கையாக உள்ளது. மனுவும் தன்னுடைய சாத்திரத்தில் ஆழமாக அழுத்தமாகத் தீண்டாமையை வலியுறுத்துகிறார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்துள்ள இந்துக்களின் மனதில் அது ஆழமாகப் பதிந்து, தீண்டாமை இந்து மதம் கொண்டுள்ள ஒரு புனிதமான மரபு என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டது.

இங்கிலாந்தில் உள்ள இந்தியாவிற்கான செயலருக்கு (Secretary of the State of India) மஹாராஷ்ட்ரா மஹாராஜா கொடுத்துள்ள விண்ணப்பத்தில் தீண்டத் தகாதோரின் நிலை குறித்து மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் என்ற காரணத்தினால் ஆங்கிலப் பொது நீதி, பொதுகௌரவக் கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்டுவரும் ஆணைகளுக்கு நாங்கள் அடிபணிய மாட்டோம். காட்டுமிராண்டித்தனமான இந்து பழக்க வழக்கங்கள் எங்கள் மீது திணிக்கும் அடிமைத்தனத்தை நாங்கள் வெறுக்கின்றோம். பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற வகையில், ஆங்கில மக்களும் ஆங்கில அரசும் வேற்றுமை பாராட்டாது எல்லா மக்களும் பூரண சுதந்திரம் பெற்று அதை நாங்கள் அனுபவிக்கவே விரும்புகிறோம். எனவே எங்களுக்காகச் சாம்ராஜ்ய அரசு காரியங்கள் செய்ய வேண்டுகிறோம். சாதி என்ற ஜெகநாத தேர்ச்சக்கரத்திற்கு நீண்ட காலமாக எங்களைப் பலியிட்டுக் கொண்டோம். அதன் மாபெரும் சக்கரத்தில் பட்டுச் சிதைந்து போனோம். ஆனால், இனிமேலும் நாங்கள் இந்தக் கொடுமைக்கு அடிபணிய மாட்டோம். எங்களுடைய இந்து மன்னர்கள் எங்கள் வளர்ச்சியைக் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் ஆடு மாடுகளிலும் கேவலமாக எங்களை நடத்தினர். தன்னையே தியாகம் செய்து நீக்ரோக்களின் விடுதலையை ஏற்படுத்தியதும், அதன் காமன்வெல்த் நாடுகளின் ஏழை எளிய மக்களுக்கு வாழ்வும் வளமும் ஈந்த அந்த நாடு எங்களுக்கும் உதவிக்கரம் நீட்டாதோ?"[5]

26, ஜனவரி,1950—இல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் செயல்பாட்டுக்கு வந்தபோது தீண்டத்தகாதோருக்கு இழைக்கப்பட்ட அத்தனை கொடுமைகளுக்கும் பரிகாரம் செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் அமைப்புச் சட்டம் நமது தேசியக் கொள்கையின் காரணகாரியங்களையும் குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது, சமுதாயத்தின் இரட்டைத் தூண்களாகிய சமுதாயம். சமுதாயத்தில் நலிந்தோருக்கு உதவும் முகமாக அவர்களின் கல்வி, பொருளாதார நிலைகளை உயர்த்த முனையும்படி விதி 46 மாநிலங்களைக் கோருகிறது. குறிப்பாக, குறிப்பிட்ட கீழ்சாதி மக்கள், ஒதுக்கி வைக்கப்பட்டோர், பழங்குடியினர் முதலியோர்களைச் சமூக அநீதிகளிலிருந்தும், எல்லா வகைச் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்க இந்தச் சட்டவிதி உதவுகிறது.

இது தவிர விதிகள் 14—17,19,23,25—30,46,164, 244, 275,330,332,335—342 ஆகியவை இவ்வகையில் தாழ்த்தப்பட்டோருக்கு உதவக்கூடியவையே. அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி 35—இன் படி தீண்டாமை (குற்றச்) சட்டம் 1955 என்ற சட்டத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. அச்சட்டப்படி தீண்டாமையைக் கடைப்பிடித்தல் கண்கூடான மற்றக் குற்றங்களுடன் சேர்க்கக்கூடிய செயலாகும். இருப்பினும் தீண்டாமை (குற்றம்) திருத்த, மற்றும் சில சட்டங்கள் 1976 (சட்டம் எண் 106:1976) (Untouchability offences) Amendment and Miscellaneous provision Act-1976) பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. தீண்டாமை (குற்றங்கள்) சட்டம்—1955 என்று மாற்றம் செய்யப்பட்டது. பாராளுமன்றம் மாநில சட்டசபைகளுக்கான தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க அரசியல் அமைப்புச்சட்டம் வகைசெய்தது. மேலும், அரசியல் அமைப்புச் சட்டம் சமஉரிமை விதிகளுக்கு 1951 வது திருத்தம்,(4) இந்த விதியில் அல்லது பிரிவு (2) விதி (29) எதுவும் சமூக, கல்வி நிலையில் பிற்படுத்தப்பட்டோருக்கு, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காகவே சிறப்பான விதிமுறைகளை மாநிலங்கள் செய்வதை இச்சட்டம் கட்டுப்படுத்தாது." என்று இச்சட்டம் கூறுகின்றது.

1. (Untouchability offences) Amendment and Miscellaneous provision Act-1976)

இன்றைய இந்தியாவில் தீண்டாமை காரணமாகப் பிரித்து வைக்கும் பழக்கத்தை அரசியல் அமைப்புச் சட்டம் விதி—17 தடை செய்கிறது. தொழில்மயமான பெரிய நகரங்களில் தீண்டாமை ஒழிப்பில் சற்று முன்னேற்றம் காணப்படுகின்றது. நகர்ப்புற வாழ்க்கை பரந்து விரிந்ததாய் அமைவதாலும், இடைக்காலப் பழக்க வழக்கங்களும், தனிமனித உரிமைகளும் அவனுடைய சமுதாய அந்தஸ்தையும் அவனுடைய பிறப்பால் நிச்சயிக்கும் செயலற்ற அடுக்குமுறைச் சமுதாய நோக்கிற்கும் நகர்புற வாழ்க்கை எதிரானதாக உள்ளதால் சாதி இன உணர்வுகள் இங்கு மேலோங்கி இருப்பதில்லை.

சிற்றூர்ச் சூழல்களில் தீண்டாமை ஒழிப்பு அதிகம் செயல்படவில்லை. "தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் சொல்லும் விதிமுறைகள் வேண்டா வெறுப்பாகச் சிற்றூர்களில் அமுல்படுத்தப்படுகின்றன. எவ்வளவு நிறைவான சட்டங்களை உண்டாக்கினாலும், நெடுங்காலமாகச் சமூகத்தில் புரையோடி நிற்கும் தீமைகளுக்குச் சட்டங்கள் மட்டும் முழுமையான தீர்வுகாண முடியாது. ஆனால் அச்சட்டங்கள் சீர்திருத்தத்திற்கான வழியையும் தேவையான அடிப்படைச் சூழ்நிலைகளையும் உருவாக்குகின்றன. அச்சூழலில் சமூக ஒழுக்கச் சீர்திருத்த முயற்சிகள் எந்தவிதத் தங்குதடையுமின்றி முன்னேற்ற மடையவும், அவற்றை இணங்கச் செய்யவும் அமைந்த விளம்பரங்களும், அவை போல, சட்டமும் தீண்டாமை ஒழிப்பின் வெற்றிக்கு இன்றியமையாத ஒன்றாகும்."7

சமூகச் சீர்திருத்தம் செய்வோருக்குச் சட்டம் சட்டத்திற்குட்பட்ட உதவியைச் செய்கிறது. அவர்களின் முயற்சிக்கு ஊக்கமளித்து மக்கள் மனதில் தீவிர மாற்றங்களைக் கொண்டுவர உதவுகிறது.

தீண்டாமைத் (குற்றங்கள்) திருத்த விதிமுறைகள் சட்டம் (சட்ட எண் 106, 1976) 1976—இல் பழைய விதிமுறைகளை மேலும் கடுமையாக்கியது. இவற்றுடன் புதிய விதிமுறைகளும் சேர்க்கப்பட்டன. சில சூழ்நிலைகளில் நிகழ்ந்திடும் தீண்டாமைக் குற்றங்களுக்குச் சிறைத் தண்டனை அவசியமாக்கப்பட்டது. ஒட்டுமொத்தமான வழக்குமுறைக்கும் (Summary trials) வழிவகுக்கப்பட்டது. தீண்டாமைக் குற்றம் புரிந்திடும் இடங்களில் வாழ்ந்திடும் அனைத்து மக்களுக்கும் இக்குற்றத்திற்காக ஒட்டு மொத்த அபராதம் போடுவதற்கும் சட்டம் வழிவகுத்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆணையர் (Commissioner)

அலுவலகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. அல்லது, ஏற்கனவே உள்ள அலுவலகங்கள் விரிவாக்கப்பட்டன. சில மாநிலங்களில் இத்திட்டச் செயல்பாட்டையும் முன்னேற்றத்தையும் கண்காணிக்கச் சிறப்புக் குழுக்கள் (Special Cells) உருவாக்கப்பட்டன. இன்னும் சில மாநிலங்களில் மண்டல அதிகாரிகள் (area officers) நியமிக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டோரை ஒதுக்கி வைப்பதைக் கண்டுபிடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த அதிகாரிகள் மிகவும் விழிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் கடமை உணர்வுடனும் முனைந்து சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களாக இருக்க வேண்டியுள்ளது. தீண்டாமைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டோரைக் காக்க உடனடியாகச் செயல்படாத, அறிந்திருத்தும் அவ்வளவாகக் குற்றங்களைப் பற்றிய விசாரணையை மேற்கொள்ளாத அதிகாரிகள் அக்குற்றங்களுக்க உடந்தையாக இருந்து, அவற்றைத் தூண்டி விடுபவர்களாகக் கருதப்படுவர் என்று சட்டம் கூறுகிறது.

***அரசியல் அமைப்புச் சட்டப் பாதுகாப்புகள்:***

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டு வந்த உடன், இனப் பாகுபாடு என்ற கொடிய நோய்க்கிருமி சமுதாயத்திலிருந்து அழிக்கப்படும் என்று நம்பப்பட்டது. ஆனால், எதிர்பாராத வகையில் அதை நடைமுறைப் படுத்திப்பல ஆண்டுகள் கடந்த பின்னரும் நம் நம்பிக்கை பொய்த்தது; நம் எதிர்பார்ப்புகள் உருப்பெறாமலே போயின. பல்வேறு வகையிலும் இக்கொடுமைகள் தொடர்கின்றன.

எனினும், அகில இந்திய தாழ்த்தப்பட்ட இன ஒருங்கிணைப்புத் தலைவர்களால் (All India Scheduled Castes Federation 1944) 1944—யிலிலேயே இத்தகைய நிலை எதிர்பார்க்கப்பட்டது. செப்டம்பர் 23,1944—இல் அந்த அமைப்பின் செயற்குழு இயற்றிய தீர்மானம் ஒன்று இக்கருத்தினைத் தெளிவுபடுத்துகின்றது. புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தீண்டத்தகாதோர்களுக்கான பாதுகாப்புகள் பற்றிச் சேர்க்கப்பட வேண்டிய விதிமுறைகள் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாகத் தீர்மானம் எண் 3—இல் சட்டப் பாதுகாப்புகளின் தன்மை என்ற தலைப்பில் மிகவும் கவனமாக அவர்கள் தங்கள் விருப்பங்களையும் எதிர்பார்ப்புக்களையும் கொடுத்துள்ளனர்.[8]

*தீர்மானம் எண் 3: சட்டப்பாதுகாப்புகளின் தன்மை:15*

அ) இது தாழ்த்தப்பட்ட இனத்தவரின் ஒப்புதலைப்பெற்றது.

ஆ) இது தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் பிறமக்களினின்றும் தனிப்பட்டவர்களாகக் கருதுகிறது.

ஈ) கீழ்க்காணும் கோரிக்கைகளைப் பெற்றிட வழிவகைகளைத் தன்னுள் கொண்டது.

1) தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் பள்ளி, பல்கலைக்கழக, மற்ற மேற்படிப்புகளுக்கு மத்திய மாநில வரவு—செலவுத் திட்டத்தில் (budget) ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குதல்.

2) ஒரு குடியிருப்புக் குழு மூலமாக தாழ்த்தப்பட்ட இனத்தவர் தனியாகக் குடியேறி வாழ்ந்திட அரசு நிலங்களில் ஒதுக்கீடு செய்தல்.

3) கீழ்க்காணும் சமூக அமைப்புகளில் தாழ்த்தப்பட்ட இனமக்களின் தேவை, மக்கள் தொகை, முக்கியத்துவம் என்ற வகைகளில் பிரதிநிதித்துவம் கொடுத்தல்.

i) சட்டசபை ii)நிர்வாகத்துறை (executive)

iii) நகர சபைகள், சிற்றூர் அமைப்புகள்

iv) அரசாங்க அலுவல்கள் (Public Services)

v) அரசு அலுவல் ஆணையம் (Public Service Commission)

4) மேற்படி தீர்மானங்கள் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டதாய், அவை இருக்கவேண்டும். இவற்றால் எந்தவிதத் திருத்தமும், மாற்றமும், ரத்தும் செய்ய முடியாதவைகளாக இக்கோரிக்கைகளை ஏற்க வேண்டும்.

5) இந்த அடிப்படை உரிமைகள் செயல்படும்விதம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க, இந்திய அரசாங்கச் சட்டம் 1935—இல் கூறியுள்ளது போல உச்ச நீதிமன்ற (Federal Court) நீதிபதியை ஒத்த அந்தஸ்தும், உள்ள ஒரு நீதிபதியை நிர்மாணம் செய்து மேற்படி நீதிபதியைப் பதவி நீக்கம் செய்ய அதிகாரம் உள்ள மற்றொரு அதிகாரியையும் நியமிக்க வேண்டும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதிடும் பொறுப்பு தாழ்த்தப்பட்ட இன மக்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்பேத்காரிடம் ஒப்படைக்கப்பட்டதால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தாழ்த்தப்பட்ட இன மக்களும் ஒப்புக்கொண்டனர் என்று பொதுவாகக் கூறலாம்.

தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஒரு தனிப்பட்ட பிரிவினர் என்பதை ஏற்றுக் கொள்ளும் கருத்தை அரசியல் அமைப்புச்சட்டம் விதி 15(4)இல் அல்லது விதி 29 பிரிவு(2)இல் உள்ள சரத்துக்கள் எதுவும், மாநில அரசு சமூக, கல்வி முதலானவற்றில் பின் தங்கியுள்ளோர், தாழ்த்தப்பட்ட சாதி, மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய முன்னேற்றம் கருதி எடுக்கப்படும் எந்த நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தாது"9 என்ற வாசகம் உறுதிப்படுத்துகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத் தீர்மானத்தின்(ஈ) பகுதியில் தாழ்த்தப்பட்ட இனமக்களின் பள்ளி மற்றும் பல்கலைக்கழகம் போன்ற மேற்கல்விக்காக வரவு—செலவுத் திட்டத்தில் (budget) நிதி ஒதுக்க வகைசெய்யப்பட்டுள்ளது. இது அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதி 15—இல் சேர்க்கப்பட்டுள்ளது.

தீர்மானத்தின் இரண்டாம் பகுதி, குடியிருப்பு ஆணையத்தின் உதவியோடு அரசு நிலங்களில் தனியாகத் தாழ்த்தப்பட்ட இன மக்கள் குடியிருக்க வசதி செய்திட வேண்டுகிறது. இதற்கிணங்க விதி(46) விதி 39(b)(c) ஆகியவற்றுடன் சில விதிகளைச் சேர்க்க அநேக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அரசியல் அமைப்புச் சட்டம் விதி 46, தனிக் கவனமெடுத்துச் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினமக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகச் செயல்படவும், எல்லாவகைச் சுரண்டல்களிலிருந்தும் சமூக அநீதிகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கவும் ஆவன செய்யலாம் என்று கூறுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் (முதல் திருத்தம்) 1951—இல் திருத்தம் செய்யப்பட்டு, இந்த விதியை நடைமுறைக்குக் கொண்டுவர, சிறப்பு விதி முறைகளை மாநிலங்கள் வகுத்திட வகை செய்தது. எடுத்துக்காட்டாகச் சாதி அடிப்படையில் பிரித்து வைப்பது தடைசெய்யப் பட்டிருந்தாலும், ஹரிஜனங்கள் வாழ்வதற்கு மாநில அரசு தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுத்திட முடியும். இந்த விதி "பங்கீட்டு நீதி" (distributive justice) என்னும் கருத்தைக் கொண்டது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்குவது, சமுதாயத்தில் மேல்,கீழ் மட்ட மக்களிடையே பரிமாற்றங்களில் ஏற்படும் அநீதிகளைப் போக்குவது என்பது இதில் பொதிந்துள்ள கருத்தாகும். ஒருவர் கையில் குவிந்துள்ள சொத்துக்களைச் சொத்துக்கள் இல்லாதோருக்குப் பங்கிட்டுக்

கொடுப்பதற்கு, மாநில அரசு, நிலம் வைத்திருப்பதில் உச்ச வரம்பை அமுல்படுத்துவதன் மூலம் செய்ய முடியும். இதனால் சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வைக் குறைக்கலாம்.

விவசாயிகள் சீர்திருத்தச் சட்டங்களை ஏற்றிட அரசியல் அமைப்புச் சட்டம் மாநில அரசுகளுக்கு அதிகாரம் கொடுக்கின்றது. அதன்படி, உச்சவரம்பிற்கு அதிகமாக உள்ளவர்களிடமிருந்து அதிக நிலத்தைக் கையகப்படுத்தி அதை நிலமில்லாத சிற்றூர்வாசிகளுக்குப் பகிர்ந்து கொடுத்திட மாநில அரசால் முடியும்.

*நிலச்சீர்திருத்தச் சட்டங்கள்:*

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) 1961 என்றதோர் நிலச்சீர்திருத்தச் சட்டம் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் தமிழகத்தில் விவசாய நிலங்கள் வைத் திருப்பதற்கு உச்ச வரம்பை ஏற்படுத்துவதையும் தமிழ்நாட்டிலுள்ள இது சம்பந்தமான வேறுசில விவரங்களையும் கொண்டுள்ளது. விதி—39 பகுதி(b)(c) ஆகிய அரசியல் அமைப்புச் சட்டப் பகுதிகள் ஒவ்வொரு மாநிலமும், சமுதாய பொருள் ஆதரவுகளைச் (material resources) சமுதாய நலத்திற்கு உகந்தவகையில் பிரித்துக் கொடுத்துக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுகிறது. பொருளாதார அமைப்பின் நடைமுறைகள் சமுதாயத்திற்குக் குந்தகம் ஏற்படும்படி சொத்துக்களையும் உற்பத்தி முறைகளையும் ஓரிடத்தில் குவித்து விடக் கூடாது. மாநிலங்கள் விவசாய நிலங்கள் வைத்திருப்பதில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்திட வேண்டும்.12

அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிற விதிகளுடன் இணைந்து மற்றுமோர் கருத்தும் இதில் அடங்கியுள்ளது. அது சமத்துவம் நிலவும் பொதுநலச் சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

இதனைத் தொடர்ந்து "தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (உபரி நிலங்களைப் பட்டுவாடாச் செய்தல்) சட்டம் 1965" G.O. Ms.No. 3266/ வருமானத் துறை நவம்பர் 25, 1965—13 என்ற குறிப்புடன் பிறப்பிக்கப்பட்டது. இந்த விதிப்படி தமிழ்நாடு அரசு சட்டதிட்டங்களை உருவாக்கியது; அவைகளைச் சட்ட சபையும் அங்கீகரித்தது.

தங்களின் அல்லது தங்கள் குடும்பத்தினரின் உழைப்பை எந்த ஒரு நிலத்திலாவது பயன்படுத்தும் நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடி மக்களுக்கு உபரி நிலங்களைப் பகிர்ந்தளிக்க இந்தச்சட்டம் வழிவகுத்தது. இதற்காக அவ்வப்போது தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டங்களும் விதிமுறைகளும் அரசியல் அமைப்புச் சட்டக்கோட்பாடுகளுக்கு இயைந்து இருந்தன. அத்துடன் இச்சட்டதிட்டங்கள் அகில இந்திய தாழ்த்தப்பட்ட இன அமைப்பு ஒருங்கிணைப்பு இயற்றிய தீர்மானத்தின் வாசகத்தைச் செயல்படுத்துவதாக இருந்தன.

அம்பேத்காரின் தீர்மானத்தில் உள்ள அடுத்த வேண்டுகோள் தேவைக்கும், மக்கள் தொகைக்கும், முக்கியத்துவத்திற்கும் ஏற்ப தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பது என்பதாகும்.

இந்த வேண்டுகோள், சட்டசபைப் பிரதிநிதித்துவம் விதி 330, 332 பகுதி XVI படியும், ஆட்சித் துறை விதி 16(4) இன் படியும்; பஞ்சாயத்து நகர சபை அமைப்புகளில் பிரதிநிதித்துவம் விதி 243D, 243T படியும்; அரசாங்க வேலையில் பிரதிநிதித்துவம் (Public Service) விதி 335 இன் படியும், பூர்த்தி செய்யப்படுகிறது. இந்த விதிகள் பற்றிய விபரங்கள் பிற்சேர்க்கை—1இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக, தாழ்த்தப்பட்டோர் பாதிக்கப்படும்போது அவர்களின் இன்னல்களைக் களைந்திடவும், அதற்கான நடவடிக்கைகளை எடுத்திடவும் ஒரு உயர்அதிகாரியை நியமிக்க அத்தீர்மானம் வேண்டுகிறது. அரசியல் அமைப்புச் சட்டம் விதிகள் 338, 339 அவ்வகை அதிகாரியை அரசு நியமிக்க வழிவகை செய்கின்றன. அத்துடன் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் நலனுக்காக அரசு அவ்வப்போது ஆரம்பித்துச் செயல்படுத்தும் திட்டங்களை விரிவாக ஆய்ந்து மதிப்பீடு செய்வதற்கு ஒரு குழுவை அமைக்க அரசியல் அமைப்புச் சட்டம் விதிகள் 338,339 உதவுகின்றன.

அத்தியாயம் 3—இல் குறிப்பிட்டபடி தீண்டாமை சாதிப்பாகுபாட்டின் விளைவேயாகும். எனவே “சாதியை ஒழிக்காது தீண்டாமையை ஒழிக்க முடியாது.” மக்கள் மனதிலிருந்து சாதி உணர்வை ஒழித்திட முயற்சி செய்தி சமூகத்திட்டங்கள் அவை வெற்றியடைய நெடுங்காலம் எடுக்கக் கூடியவை. இதற்கிடையே தீண்டாமைப் பிரச்சினைக்கு உடனடித்

தீர்வுகாணத் தூண்டும் வகையில் ஒரு அரசியல் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும்.

தீண்டப்படாதோர் துயர்களைந்திடக் கொடுக்கப்படும் அரசியற் பாதுகாப்புகளை மனப்பூர்வமாகச் செயல்படுத்த வேண்டும். அதற்காகத்தான் சுதந்திர இந்தியாவில் சட்டசபைகளிலும் அமைச்சரவையிலும் ஆட்சித் துறையிலும், உயர் பதவிகளிலும் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென அவர்கள் கேட்கின்றனர். தீண்டத்தகாதோரை உயர்த்திடும். இவ்வரசியல் முயற்சிகளுடன், தீண்டாமையை ஒழித்திடச் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். இந்த வேண்டுகோளும் ஏற்கப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டம் விதி 341—1950—இல் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்விதி தீண்டத்தகாதோர் வாழ்க்கை நிலை குறித்து மதிப்பீடு செய்ய வழி செய்கிறது. அவர்கள் துன்பங்கள் என்னவென்று தெரிந்துவிட்டால் அவற்றைக்களைந்திட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். அரசியல் அமைப்புச் சட்டம் விதி 17 தீண்டாமையால் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு அடுக்கும் இன்னல்களை நீக்கிட வகை செய்கிறது. தீண்டாமையை அரவே ஒழித்திட அது முயல்கின்றது.

*சிறப்புச் சட்டங்கள்*

அரசியல் அமைப்புச்சட்டப் பாதுகாப்புகளுடன் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான சிறப்புச் சட்டங்களும் அவர்கள் பாதுகாப்பிற்கு வலிமை சேர்க்கின்றன. அதற்காக உருவானதே “குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்—1955”, “தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (கொடுமைகளை தடுத்திடும்) சட்டம்—1989.

*குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955*

தாழ்த்தப்பட்டோர்களை மருத்துவமனை, கல்விநிலையம், விடுதி ஆகிய இடங்களில் அனுமதிக்க மறுப்பதும், அவர்கள் பொருட்களைவிற்க, சேவைசெய்ய மறுப்பதும், விதி 17—இன் படி அவர்களுக்கு உள்ள உரிமைகளை மறுப்பதும்; தீண்டாமையைக் கருத்திற்கொண்டு தோட்டி வேலை, பெருக்கும் வேலை, பிணத்தை அப்புறப்படுத்துதல், விலங்குகளைத் தோல் உரித்தல், குழந்தை பிறந்தபின் கருப்பையை

அப்புறப்படுத்துதல், அல்லது இவை போன்ற வேலைகளை அவர்களைக் கட்டாயப்படுத்திச் செய்யச் செய்வதும் சட்ட விரோதமான குற்றங்களாகும். இக்குற்றங்களைச் செய்வோருக்குத் தண்டனை கொடுக்க இச்சட்டம் வழிசெய்துள்ளது. விதி 17இன் படி தனக்குள்ள உரிமையைச் செயல்படுத்தும் ஒருவனைத் தண்டிக்கவோ அல்லது பழிவாங்கவோ செய்தால் அதற்கு இந்தியத் தண்டனைச் சட்டப்படி (Indian Penal Code) இரண்டாண்டுகளுக்குச் சிறைத்தண்டனை உண்டு; அதே குற்றங்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இரண்டாண்டு களுக்குக் குறையாத சிறைத்தண்டனையும் அபராதமும் போடப்படும். விடுதிகள் போன்றவற்றை நடத்தும் உரிமையை(License) ரத்து செய்யவோ அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ, அரசாங்கம் உதவிபெறும் நிறுவனமாயின் அவ்வுதவியை தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ அல்லது மறுக்கவோ, கூட்டு அபராதம் போடவோ இச்சட்டம் வழி செய்துள்ளது. திரும்பவும் அதே குற்றத்தைச் செய்தால் தண்டனை அதிகமாகும். இச்சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றிடும் ஒவ்வொரு குற்றமும் நீதிமன்ற அதிகாரத்திற்கு உட்பட்டதே. குறைந்தது மூன்று மாதச் சிறைத் தண்டனை கொடுக்கக் கூடிய குற்றம் தவிர மற்ற குற்றங்களைச் செய்பவர்கள் மீது ஒட்டு மொத்தமாக வழக்குகள் நடத்தப்படலாம்.

*தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (கொடுமைகள் தடுப்புச் ) சட்டம்–1989*[16]

இச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய கொடுமைகள் எவை எவை என்பது குறிப்பிடப்பட்டுள்ளன. நச்சுத்தன்மை கொண்டவற்றைத் தீண்டத்தகாதோர் சாப்பிடும்படி கொடுமைப்படுத்துதல், குப்பைக்கழிவுகளை அவர்கள் வாழுமிடத்தில் கொட்டுவது, நிர்வாணப்படுத்துதல், அவர்கள் நிலங்களை ஆக்கிரமித்தல், அவர்கள் சொத்துக்களை அபகரித்தல், அவர்களைக் கொத்தடிமையாக்குதல், ஓட்டுப்போடவிடாமல் பயமுறுத்துதல், தொல்லை கொடுப்பதற்காகவே வழக்குகள் தொடுப்பது, தவறான தகவல்களைக் கொடுத்தல், பொது இடங்களில் அவர்களை இழிவு படுத்துவது, அவர்கள் தன்மானத்திற்கு ஊறு விளைவித்தல், பாலியல் பலாத்காரம், அவர்களின் தண்ணீர் நிலைகளை அசுத்தப்படுத்துதல், பொது இடங்களில் நுழைவதைத் தடுத்தல், அவர்களுடைய வீட்டிலிருந்து வெளியேற்றப்படுதல், வெடிகுண்டுகளை வைத்தல், வீடுமனைகளை அழித்தல், சாட்சியத்தை அழித்தல் ஆகியவை

இச்சட்டப்படி தண்டனைக் குரியவைகள். இக்குற்றங்களுக்கு இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் தண்டனையை விடக் கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தண்டனை மிகக் கடுமையானது. காவல் நிலையக் கற்பழிப்பு, நெடுஞ்சாலைக் கொள்ளை, இரவில் வீட்டை உடைத்துத் திருடுதல் முதலிய குற்றங்களுக்கு இந்திய குற்றவியல் சட்டப்படி 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையாகும். கொடுமைகள் தடுப்புச் சட்டப்படி இவைகளுக்கு ஆயுள்காலச் சிறைத் தண்டனையும் அபராதமும் உண்டு. குற்றவாளியின் சொத்துப் பறிமுதலுக்கும் கூட்டு அபராதத்திற்கும் இச்சட்டத்தில் வழியுண்டு.

*அடிமைத் தொழில், குழந்தைத் தொழிலாளர் குறைந்த அளவு சம்பள நிர்ணயச் சட்டம்*[17]

தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான சிறப்புச் சட்டங்களுடன், பொதுவானதும் அவ்வின மக்களுக்கும் பொருந்தும் பொது நலச்சட்டங்களும் உண்டு: அடிமைத் தொழில்முறை (ஒழிப்புச்) சட்டம் 1976, குறைந்த பட்ச கூலிச் சட்டம் 1948, குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பு, ஒழுங்குபடுத்துச் சட்டம் — 1988 என்பன. பிற சட்டங்கள் வசதியற்ற மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட சாதியினரும், மற்றும் பழங்குடியினரும் குறிப்பிடத்தகுந்த விழுக்காடுகள் இருப்பதால் இச்சட்டங்களில் உள்ள விளக்கங்கள் பற்றி அறிந்து கொள்வது நன்றாகும். இச்சட்டங்களை எதிர்க்கும் வகையில் தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கு எதிராக அடிக்கடி கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

*அடிமைத் தொழிலாளிமுறை (ஒழிப்புச்)சட்டம்: 1976*[18]

இந்தச் சட்டம் அடிமைத் தொழில் முறையை, அதன் எல்லா வகையினையும் ஒழிக்கின்றது. எல்லா அடிமைத் தொழிலாளியும் வற்புறுத்தப்பட்டு வேலை செய்ய வேண்டிய கட்டாயக் கடமை எதுவும் கிடையாது. அடிமைத் தொழிலாளிக்குப் பணம் கொடுக்க வேண்டிய கடமை, ஒப்பந்தப்படி முன் பணம் கடனாகக் கொடுத்தல் அடிமைத் தொழிலாளியிடமிருந்து பறிக்கப்பட்ட சொத்தைத் திருப்பிக் கொடுக்காதிருத்தல் அல்லது ஒப்பந்தக் கடனைத் திரும்பப் பெறுவது தொடர்பான குற்றங்கள் பற்றி இச்சட்டம் பேசுகின்றது.

*குறைந்த பட்ச சம்பளச் சட்டம் 1948*[19]

சுரண்டலுக்கு வசதியாக இருக்கக்கூடிய வேலைகளுக்குக் குறைந்த பட்ச சம்பளத்தை நிர்ணயிப்பது இச்சட்டம். சம்பளம் நிர்ணயிக்கும் வழிமுறைகள் பற்றியும், வேலை நடக்கும் இடங்கள் பற்றியும் அதிகப்படி வேலை நேரத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் பற்றியும், ஓய்வு நாட்கள் பற்றியும் இச்சட்டம் விளக்குகிறது.

*குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு, ஒழுங்குபடுத்துச்)சட்டம் 1986*[20]

பதினான்கு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைத் தொழிற் சாலைகளில், சுரங்கங்களில், மற்ற அபாயகரமான தொழில்களில் வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்கவும், அபாயமில்லாத தொழில்களில் வேலைக்கு அமர்த்தப்படும் குழந்தைத் தொழிலாளர்களின் வேலை முறையை ஒழுங்குபடுத்தவும் இச்சட்டம் அமைந்துள்ளது.

*தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்குமான திட்டங்கள்*[21]

அரசியல் அமைப்புச் சட்டத்திலும், சட்டரீதியாகவும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் மற்றும் பழங்குடியினருக்கும் பாதுகாப்புகள் அளிக்கப்பட்டிருந்தாலும், அடுத்தடுத்த திட்ட வரைவுகளில் இந்தியத் திட்டமிடுதலில் முக்கிய கவனம் சமுதாயத்தில் உள்ள நலிந்தோர் மேம்பாட்டிற்காக அமைய வேண்டும் என்று கூறுகிறது. இவ்வின மக்களின் ஒருங்கிணைந்த சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பழங்குடியினர் துணைத்திட்டம் ஒன்றை ஐந்தாவது திட்டத்திலும், தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான சிறப்புத் துணைத்திட்டம் ஆறாவது திட்டத்திலும் சேர்க்கப்பட்டன. இத்திட்டப்படி குறிப்பிட்ட காரியத்திற்காக குறிப்பிட்ட அளவு பண ஒதுக்கீடுகள் செய்யும் முறையும் ஏற்பட்டது. ஏழாவது திட்டத்தில் இவர்களின் பொருளாதார அடிப்படை வலுப்பெற்றிடுவதையே முனைப்பாகக் கொள்ளப்பட்டது. அவர்களுக்குத் தொழில் வகை சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த வகைசெய்தது. இவர்களுக்காகப் பல மாநிலங்களில் பொருளாதாரம், கல்வி, உடல் நலம் மற்றும் பல ஒருங்கிணைந்த திட்டங்கள் வகுக்கப்பட்டன.

### *தாழ்த்தப்பட்ட சாதி, மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான திட்டச் செலவுகள்*[22]

ஆறாவது திட்டத்தில் இவர்களுக்கான திட்டச் செலவு ரூ.10,392/- கோடியாகும். ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட தொகை:

| | | தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு | பழங் குடியினருக்கு | மொத்தம் (கோடி) |
|---|---|---|---|---|
| 1. | மாநிலங்களில் சிறப்புத்துணைத் திட்டம்:பழங்குடித்துணைத்திட்டம் | 3533 | 3409 | 6942 |
| 2. | மத்தியச் சிறப்புதவி | 395 | 485 | 1080 |
| 3. | நிறுவனப்பண உதவி | 2110 | 800 | 2910 |
| | | 6238 | 4694 | 10932 |

"கல்வி பொருளாதாரத் திட்டங்கள், சமூகநலத்திட்டங்களுக்கான செலவுகள் ஆறாவது திட்டத்தில் முறையே 50%, 28%, 22% ஆயின. திட்டச் செலவில் தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியவர்களுக்கான செலவு மிகப்பெரிய அளவு கூடியது. பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் முதலீட்டுத் திட்டங்கள், ஆறாவது திட்டத்தில் ரூ.19.93 கோடியாக இருந்தது. ஏழாவது திட்டத்தில் ரூ.5988 கோடியாக, அதாவது 300 மடங்கு உயர்ந்தது. மொத்தத் திட்டச் செலவில் இது ஒன்றாவது திட்டத்தில் 1% ஆக இருந்தது. ஏழாவது திட்டத்தில் 8.1% ஆக உயர்ந்துள்ளது. முக்கிய திட்டங்களின் விளைவுகளை ஏழாவது திட்ட ஆவணம் கீழ்க்காணும்படி குறிப்பிட்டுள்ளது. 1961—1981—இல் 10.27% ஆக இருந்த தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் கல்வித்தகுதி 21.38% ஆக உயர்ந்துள்ளது. தாழ்த்தப்பட்ட பழங்குடியினரிடம் இது 8.53% லிருந்து 16.35% ஆக உயர்ந்துள்ளது. 1965—1983: தாழ்த்தப்பட்ட சாதியினரின் வேலைவாய்ப்பு 3—லட்சத்தில் இருந்து (13.17%) 5.76 லட்சமாக(16.24%), உயர்ந்துள்ளது. அதேகாலத்தில் பழங்குடியினத்தவரில் ஏற்பட்ட உயர்வு 51000—இல் இருந்து 1.62 இலட்சமாக, அதாவது 2.24% லிருந்து 4.56% ஆனது. உதவித்தொகை, சீருடை, எழுதுபொருட்கள், புத்தகங்கள் 238 இலட்சம் தாழ்த்தப்பட்ட இனக்குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பன்னிரெண்டாம் வகுப்பிற்கு மேல் படிப்பிற்காக, இவ்வினங்களைச் சேர்ந்த 9 இலட்சம்

மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வினத்தைச் சேர்ந்த 3 லட்சம் மாணவர்களுக்கு விவசாயம், கால்நடை வளர்த்தல், குடிசைத்தொழில் ஆகியவற்றிற்காகவும் உதவி செய்யப்பட்டுள்ளது."[23]

*ஏழ்மை ஒழிப்பு (எதிர்ப்புத்)திட்டம்:*

8.65 மில்லியன் தாழ்த்தப்பட்ட சாதிக் குடும்பங்களை ஏழ்மையிலிருந்து மீட்க ஆறாவது திட்ட எதிர்பார்ப்பிற்கும் மேலாக, 1984—85—இல் 8.71 மில்லியன் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டது. பழங்குடி மக்களைப் பொறுத்த வரை ஆறாவது திட்டக் குறிக்கோள் 2.7 மில்லியன் குடும்பங்களாகும். ஆனால் பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை 3.46 மில்லியனாகும். இத்திட்டங்களின் தன்மையும் அவற்றின் செயல்பாடுகளும் முந்திய திட்டங்களை விஞ்சியதாகவே உள்ளன என்று கூறப்படுகிறது.

*உபரி நிலத்தை வினியோகித்தல்*

தாழ்த்தப்பட்ட இனத்தவரின் உயர்வுக்குப் பெரிதும் உதவக்கூடியதாய் அமைந்ததும், பல மாநிலங்களில் செயல்பட்டதுமான திட்டம், நில உச்சவரம்புச் சட்டப்படி மிகுந்த நிலங்களை அரசு கையகப்படுத்தி அவற்றை நிலமில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வினியோகித்ததாகும். ஆறாவது திட்ட காலத்தில் 8.06 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு உபரியாக இருந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 6.88 லட்சம் ஏக்கர் நிலம் தாழ்த்தப்பட்ட இனக் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

*பழங்குடியினத்தவரும் வளர்ச்சி அமைப்புகளும்*[25]

ஏறக்குறைய எல்லா மாநில அரசுகளும் 'பழங்குடி இனத்தவர் வளர்ச்சி' அமைப்பை உருவாக்கி அதன் மூலம் ஓரளவு பண உதவிகளையும், நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றிட உதவியும் செய்துள்ளன. ஆறாவது திட்ட இறுதிக் காலத்திற்குள் இந்த மாநில அமைப்புகளின் நிதி ரூ.173 கோடிகளாகும். இதன் மூலம் 2.7 மில்லியன் தாழ்த்தப்பட்ட இனக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதற்கான மானியத் தொகை, பகுதி உதவித்தொகைக் கடன்கள் வங்கிக் கடன்கள் ஆக இதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.635 கோடிகளாகும்.

## அடிக்குறிப்புகள்

1. டாக்டர் பாபா சாகேப் அம்பேத்காரின் எழுத்தும் பேச்சும் I பக்.383—383

2. மேற்படி பக்.391

3. மேற்படி பக்.414

4. மேற்படி பக்.414

5. பர்குஹார் J.N. (Farquhar J.N.) இந்திய மித இலக்கிய வரலாற்றுச் சுருக்கம் பக்.368—369

6. அரசியல் அமைப்புச்சட்டம், விதி 29 கோஷ் S.R. சிறுபான்மையின தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கான பாதுகாப்பு. பக்.75—76

7. கோஷ் S.K. முன்குறிப்பு பக்.78

8. டாக்டர் அம்பேத்காரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் தொகுதி—IX பக்.348

9. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்—விதி 15

10. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்—விதி 46

11. துர்க்கா தாஸ் பாசு: இந்திய அரசியல் அமைப்புச் சுருக்கம் பக். 306

12. பட்டாபிராமன் S. 'தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம்' வித்தியா லா பக்.1

13. மேற்படி பக்.168

14. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்காரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் தொகுதி IX பக்.260

15. பட்டியல் சாதி பட்டியல் பழங்குடிமக்கள் தேசிய ஆய்வுக்குழு அறிக்கை: பட்டியல் சாதி, பழங்குடியினர் மீதான கொடுமைகள்: காரணங்களும் பரிகாரங்களும் ஏப்ரல் 1990. பக்.1

16. மேற்படி பக்.1

17. மேற்படி பக்.1

18. மேற்படி பக்.1—2

19. மேற்படி பக்.2

20. மேற்படி பக்.2

22. மேற்படி பக்.2

23. மேற்படி பக்.2

24. மேற்படி பக்.2

25. மேற்படி பக்.2

## தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக்குழு

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வான அந்தஸ்துகளில் உள்ள குடிமக்கள் தங்கள் குலத் தகுதிக்கு ஏற்ப மாறுபட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிக்க இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி 16 அனுமதிக்கின்றது. விகிதாச்சாரச் சமன்பாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தலையே இது சுட்டுகிறது. சமமானவர்களைச் சமமாகவும் சமமில்லாதோரைச் சமமில்லாமலும் நடத்துவதே விகிதாச்சாரச் சமன்பாட்டுக் கொள்கையாகும். குடிமக்களில் நலிவுற்ற தாழ்த்தப்பட்ட இனமக்களுக்குத் தரப்படாத உரிமை மற்றும் அனுகூலமற்ற வாழ்க்கைச் சூழ்நிலையைச் சமன் செய்வதே இச்சட்டத்தின் நோக்கமாகும். “தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார கல்விப் பின்னணியைக் கருத்தில் கொள்ளாது’ அவர்களுக்குக் கொடுக்கப்படும் எந்தச் சந்தர்ப்பங்களும் ஏற்றத்தாழ்வு மிக்கதாகத்தான் இருக்கும்.

நலிந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதே வேலை வாய்ப்பிற்கு வழிவகுக்கும் உறுதியான செயல்பாடாகும். இவ் இட ஒதுக்கீடு பற்றிய விவாதத்தில், நீதிபதி கிருஷ்ணய்யர், “தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் மேம்பாட்டில் அக்கரை கொண்ட அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொண்டுள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் தகுதிச் சலுகையே அவர்களுக்குப் பயனுள்ளதாக, அமைவதோடு அதுவே அவ்வினமக்களின் முன்னேற்றத்திற்குச் சட்ட ரீதியான சரியான—தகுதியான நடவடிக்கையாகும் என்கிறார்.

இன்றும் இந்தியர்களில் நான்கில் ஒருவர் தாழ்த்தப்பட்டோரே. தீண்டத்தகாதோர்களில் பெரும்பாலோர் இந்துக்களே. இவர்களில் பெரும்பாலோர் இன்னும் தாழ்த்தப்பட்டும் மற்றும் தீண்டாமைக் கொடுமையை அனுபவித்தும் வருகின்றனர்.

“இந்திய விடுதலைக்கு முன் இருந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்கவே இல்லை. டாக்டர் அம்பேத்கார் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகள், அரசு ஆதரவோடு

எவ்விதமான எதிர்ப்புமின்றிக் கடைப்பிடித்து வரும், தீண்டாமையைக் கண்டித்துச் சமூகச் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டினர். சட்டங்களும் நீதிமன்றங்களும் வலிமையற்று இருந்தன. கோவில்கள், பாராளுமன்றம், சட்டசபை, உயர்பதவிகள் எதிலும் தாழ்த்தப்பட்டோர் நுழைவதற்கு இயலவில்லை. ஒரு சில வழக்குகளில் மட்டும் அவற்றில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொண்டு, தெருக்கள், குடிநீர்க் குழாய்கள், பொதுக் கிணறுகள், மற்றும் பொது இடங்களைத் தாழ்த்தப்பட்டோரும் பயன்படுத்துதற்கான உரிமையை அங்கீகரித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது"[3].

இந்துமத "ஸ்ருதிகளும், ஸ்மிருதிகளும் வர்ணாஸ்ரம முறையை ஏற்றுக்கொண்டு சமுதாயப் பிரிவுகளை நடைமுறை விதிகளாக்கின. சட்டத்தின் முன் சமத்துவத்தையோ, சட்டப்படி சமப் பாதுகாப்பையோ அவை தரவில்லை. சாதி வழியிலான இயலாமை, பொறுப்புகள், ஏற்றத் தாழ்வு, குறைபாடு சமபங்கீட்டின்மை அநீதிகள், முதலியவற்றைப் பெரிதும் வலியுறுத்தின. வர்ணமுறை, தீண்டாமை காரணமாக மட்டுமே ஏற்றத் தாழ்வுகளை அனுமதித்தன".

காலங் காலமாகச் சமத்துவமும் வாய்ப்புக்களும் மறுக்கப்பட்டதால் தாழ்த்தப்பட்டோர் சமூகத்தில் மிகத்தாழ்ந்த கடை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, "அவர்கள் அனைவரும் சமூகம் பொருளாதாரம், மற்றும் கல்வி ஆகியவற்றில் பின்தங்கியுள்ளனர்".

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் சமூக மாற்றங்களுக்கு வேண்டிய உந்துதல்களைக் கொடுத்துள்ளது. அதில் உள்ள தீண்டாமை ஒழிப்பு விதிமுறைகள், சமுதாயம் மற்றும் பொருளாதாரச் சமத்துவத்தையும் நீதியையும் பெற்றிடச் சட்டமுறையிலான அதிகாரத்தைக் கொடுக்கின்றன. சமூகக் கொடுமையான தீண்டாமையை ஒழித்திடச் செயல்படுத்தப்படும் தீர்மானங்களுக்கும் திட்டங்களுக்கும் அதிகமான அதிகாரங்களை அவை கொடுத்துள்ளன.

"தாழ்த்தப்பட்ட வசதியற்ற மக்களிடையே சகோதரத்து வத்தையும், சமூக பொருளாதார, அரசியல் சமத்துவத்தையும் நீதியையும் வளர்த்திடத் தீண்டாமை ஒழிப்பு முயல்கின்றது"[4]. அரசியல் அமைப்புச் சட்டத்தின் முக்கியக் குறிக்கோளான இது சரிவர நிறைவேற்றப்பட்டுள்ளதா இல்லையா என்பதைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கே தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அரசியல் அமைப்புச் சட்டம் விதி 338 மேற்படி குழுவைத் தேசிய அளவில் அமைப்பது பற்றித் தெளிவாகவே கூறியுள்ளது. அவ்வாய்வுக் குழுவின் காலவரையறையையும் செயல் முறைகளையும் அதில் இடம் பெற வேண்டிய நபர்களையும், பாதுகாப்புகள்—பாதுகாப்பிற்கான திட்டங்கள் பற்றியும் அக்குழு உறுப்பினர்களின் பிற பரிந்துரைகள் பற்றியும் இச் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது. பின்னர், 65—வது சட்டத் திருத்தத்தின்படி இந்த விதி திருத்தப்பட்டு அக் குழு "தாழ்த்தப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக் குழு—1990" என்று அழைக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் நலன் காக்க இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விரிவான வழிமுறைகளை வகுத்துள்ளது. இதில் அவர்களுக்கு என அரசு பணியிட ஒதுக்கீடு அடங்கும்[5] (லோக் சபாவிலும்) பாராளுமன்றம் மற்றும், மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர் தேர்வுக்கான ஒதுக்கீடு[6], சமூக இடர்ப்பாடுகளைக் களைதல் மற்றும் சுரண்டுதலைத் தவிர்த்தல்[7], சில நிர்வாக ஏற்பாடுகள், தாழ்த்தப்பட்ட இன மக்கள் பகுதிகளை நிர்வகித்தல்[8], தாழ்த்தப் பட்டோரின் கல்வி பொருளாதார முன்னேற்றம்[9] ஆகியனவும் இதில் அடங்கும். இவ்வேற்பாடுகள் தாழ்த்தப்பட்டோரின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் வகை செய்வனவாகும்.

மேற்குறிப்பிட்ட சட்ட பூர்வ விசாரணைக் குழு தவிர, விதி 339—இன் படி ஒரு சிறப்பு அதிகாரியின் கீழ் ஒரு நிலையான அமைப்பு, தாழ்த்தப்பட்டோர் நலன்காக்க அமைத்திட விதி 338 வகை செய்கிறது. சிறப்பு அதிகாரி "தாழ்த்தப்பட்டோருக்கான ஆணையர்" என்று அழைக்கப்படுவார். "தாழ்த்தப்பட்ட இன மக்களின் பாதுகாப்பு பற்றிய காரியங்களை விசாரணை செய்து, அவற்றின் செயல் பாடுகளைப் பற்றிக் குடியரசுத் தலைவருக்குக் குறிப்பிட்ட கால கட்டங்களில் அவர் அறிக்கை அளிக்க வேண்டும். அவ்வறிக்கையைக் குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்வார்."[10]

முன்னர் கூறியுள்ளது போல, இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் ஆணைப்படி1 (எண்/3013/9/ 77 SCT(I) நாள் 21, ஜுலை 1978—) தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் ஆய்வுக் குழு இந்திய அரசால் அமைக்கப்பட்டது. அரசியல் அமைப்புச்

சட்டம் விதி 338—இன் படி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலன்காக்கச் சிறப்பு அதிகாரி ஒருவரை நியமித்து அவர் மேற்படி இனத்தவர்களின் பாதுகாப்பு நலன் பற்றிய அனைத்துக் காரியங்களையும் கவனித்து வருவார். இருப்பினும் இப்பிரச்சினைகளின் முக்கியத்துவம் கருதி "இக் காரியங்களை ஒரு உயர்மட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்". என்று விதிமுறை செய்யப்பட்டது.

"இந்தக் குழுவின் செயல்பாடுகள் சிறப்பு அதிகாரிகளின் அதிகாரத்தை எந்த வகையிலும் பாதிக்காது" என்று மேற் குறிப்பிட்டுள்ள ஆணை விளக்கம் கூறுகிறது. "அக் குழு ஒரு தலைவரையும், சிறப்பு அதிகாரியையும் சேர்த்து நான்கு அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கும்". இந்தக் குழு செயல்படும் கால அளவு பொதுவாக மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இருக்கும்.[12]

உயர்மட்டக் குழுவின் வேலைகள்:

அரசியல் அமைப்புச் சட்டம் விதி 338—இன் படி நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரியினுடைய கடமைகளும் இக்குழுவின் கடமைகளும் ஒன்றானதாகவே இருக்கும்[13].

1. அரசியல் அமைப்புச் சட்டப்படி தாழ்த்தப்பட்ட சாதிக்கும் பழங்குடியினருக்கும் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் பற்றிய எல்லாச் செயல்பாடுகளையும் ஆய்வது, அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் பழங்குடியினருக்கும் கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும் ஆய்ந்து பார்க்க வேண்டியது இக் குழுவின் கடமையாகும்.

2. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955—இன் அமுலாக்கத்தைக் குறிப்பாகத் தீண்டாமையையும், தீண்டாமையினால் உண்டாகும் வன்மத்தை ஒதுக்கி வைக்கவும், ஒழித்திடவும் ஓர் ஐந்தாண்டுத் திட்டகால அளவில் எந்த அளவு செயல்பாடுகள் நிகழ்ந்துள்ளன என்பதையும் இக்குழு ஆய்ந்திட வேண்டும்.

3. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்களின் சமூக, பொருளாதார மற்றும் பிற சூழ்நிலைகளையும், நடைமுறையில் உள்ள சட்டங்களில் அவர்களுக்கு எதிராக இயங்கக் கூடிய இடர்ப்பாடுகளை அறிந்து அவற்றைக் களைந்திடவும், அவ்வகைக் குற்றங்களை விரைவில் விசாரணை செய்வது உள்பட சரியான வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்;

4. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த எந்த ஒரு தனி நபருக்கும் சட்டபடி கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மறுக்கப்படும் பட்சத்தில் அவ்வகைக் குற்றங்களை விசாரணை செய்தல்,

ஆகியவை இவ்வாய்வுக் குழுவின் பணிகளாகும்.

இக் குழுவின் முக்கியப் பணிகளில் ஒன்று தாழ்த்தப்பட்ட இனத்தவர் கொடுமைப்படுத்தப்பட்டதாக வரும் வழக்குகளை விசாரணை செய்வதாகும். இப் பணியைக் குழுவின் கள ஆய்வாளர்களையும் தலைமையகத்தில் இதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளையும், ஒரு சரகக் காவல் துறைத் துணைத்தலைவரையும் (Deputy Inspector of Police) இரண்டு காவல் கண்காணிப்பாளர்களையும் (Two Superintendents of Police) அவர்களுக்கு உதவும் பிறரையும் கொண்டு செய்யப்பட வேண்டும்.

இருப்பினும், ஆய்வுக் குழு 1952 கொண்டிருந்த அதிகாரங்களையும், வழக்கு விசாரணைக்காக இதில் அவ்வப்போது செய்யப்பட்ட சட்டத் திருத்தங்களையும் இக் குழுவிற்கு இந்திய அரசு வழங்காத வரையில் சாட்சிகளை அழைப்பதற்கும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கக் கட்டளையிடவும் இக் குழுவால் இயலாது. இச் சிக்கல் குறித்து உள்ளாட்சித் துறைக்கு எழுதப்பட்டது. அத்துறை 1(எண் BC–13015/32/79SC & BC (I) நாள் 25, ஆகஸ்டு 1981) எழுதிய கடிதத்தில், அவ்வாறான சிறப்பு அதிகாரங்களை, குறிப்பிட்ட, முக்கியமானதாகக் கருதப்படும் வழக்குகளுக்கு அவ்வப்போது வழங்கப்படும் என்றும், அவ்வகையான குறிப்பிட்ட வழக்குகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் படியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

***தேசியக் குழுவின் அதிகாரங்கள் :***

24 மார்ச், 1977இல் மத்திய அரசில் மாற்றம் ஏற்பட்டது. ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தது. அதன் தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் இருந்த மொரார்ஜி தேசாய், காந்திஜீயின் உண்மையான தொண்டர், ஒரு தீவிர காந்தியவாதி, தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர், பிற சிறுபான்மையினர் ஆகியோரின் பாதுகாப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார். அவர்களின் சமூக, சூழ்நிலை மேம்பாட்டிற்கு மொரார்ஜி காந்தியச் சிந்தனைகளைப் பின்பற்றினார். அவருடைய முயற்சியினால் இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் தனது [2](எண் BC 1301/9/77-SCT (I) நாள் 21 ஜுலை, 1978. தீர்மானப் படி[2] "தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் ஆய்வுக் குழு" ஒன்றை அமைத்தது. தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான சமூக, பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றை ஆய்வு செய்திடும் முறைகள் முதலியன பற்றிய அரசியல் அமைப்புச் சட்டம் விதி 338—உம் அதன் விளக்கங்களும் திருத்தங்களும் வழிகாட்டுகின்றன:

1. தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காக "தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் தேசிய ஆய்வுக் குழு" என்னும் பெயரில் ஒரு ஆய்வுக் குழு செயல்படும்.

2. இதற்காகப் பாராளுமன்றம் நிறை வேற்றும் சட்டங்களுக்கு உட்பட்டுச் செயல்படும் இவ்வாய்வுக்குழுவில் தலைவர், ஒரு துணைத் தலைவர், மற்றும் ஐந்து உறுப்பினர்கள் இருப்பர். இதன் தலைவர், துணைத் தலைவர் உறுப்பினர்களின் செயல்பாடுகள் மற்றும் பதவிக் காலம் குடியரசுத்தலைவர் செய்யும் விதிப்படி நிர்ணயிக்கப்படும்.

3. இதன் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடனும் முத்திரை யுடனும் கூடிய ஆணைப்படி நியமிக்கப்படுவர்.

4. இவ்வாய்வுக் குழு தன் செயல் முறைகளைத் தானே வகுத்துக் கொள்ளலாம்.

5. இவ்வாய்வுக் குழுவின் கடமைகளாவன:

a) தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பிற்காக இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், அமலில் உள்ள எந்தச் சட்டம் அல்லது அரசின் எந்த ஆணைப்படியும் உள்ள இது தொடர்பான எல்லாக் காரியங்களையும் ஆய்வதும் கண்காணிப்பதும் அவற்றின் செயல்பாட்டுத் திறனை மதிப்பிடுவது ஆகும்.

b. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான உரிமைப் பாதுகாப்பிற்குத் தனிப்பட்டு ஏற்படும் குந்தகத்தால் வரும் புகார் களை விசாரிப்பது.

C. தாழ்த்தப்பட்ட சாதியினர், மற்றும் பழங்குடிகளுக்கான சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதும், அவற்றின் வளர்ச்சியை மாநிலங்களிலும் மத்திய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங் களிலும் ஆய்வு செய்வது.

d. ஆண்டுதோறும், ஆய்வுக்குழு சரியெனக் கருதும் இப் பாதுகாப்புகளின் செயல்பாடுகள் குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அளித்தல்.

e. அப்பாதுகாப்புகளைச் செவ்வனே செய்திட தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு, பொது நலம், சமூகப் பொருளாதாரவளர்ச்சி ஆகியவற்றிற்கான வழிமுறைகளை மத்திய அரசின் நேரடி நிர்வாகப் பகுதிகளுக்கும் மாநிலங்களுக்கும் ஆய்வுக்குழு பரிந்துரைகளைச் செய்தல். தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடி மக்களின் பாதுகாப்பிற்காகவும், நலத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் மற்ற செயல்களுக்காகவும் பாராளுமன்றம் இயற்றிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆணை குறிப்பிடுவதை தடை செய்தல்.

6. அனைத்து அறிக்கைகளையும் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் வைக்கும்படி குடியரசுத் தலைவர் செய்வார். அதில் மத்திய அரசு நேரடி நிர்வாகப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட செயல்களையும் அல்லது செயல்படுத்தவிருக்கும்

திட்டங்கள் பற்றியும், ஏதாவது பரிந்துரைகள் ஏற்கப்படாவிட்டால் ஏன் அவைகள் ஏற்கப்படவில்லை என்பதை விளக்கிடும் குறிப்பையும் இணைத்துச் சபைகளில் சமர்ப்பிக்கப்படும்.

7. அவ்வறிக்கை அல்லது அறிக்கையின் ஒருபகுதி மாநில அரசு சம்பந்தமானதாக இருந்தால் அதன் ஒரு நகல் அந்த மாநில ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்படும். மாநில ஆளுனர், ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் பற்றி எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்போகும் நடவடிக்கை பற்றியும் பரிந்துரைகள் எதுவும் ஏற்கப்படாவிட்டால் அதற்கானக்காரணங்களை விளக்கும் குறிப்புக்களையும் சட்ட சபையில் சமர்ப்பிக்கச் செய்வார்.

8. உப—விதி (a) தொடர்பான காரியங்களை அல்லது விதி 5 உப விதி (b) யில் குறிப்பிடப்பட்டுள்ளவை தொடர்பான எந்தப் புகாரையும் விசாரணை செய்யும் போதும், கீழ்க்காண்பவை பற்றி விசாரிக்கும் போதும் ஆய்வுக் குழு சிவில் நீதிமன்றம் வழக்கு விசாரணையில் கொண்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

a) எந்த ஒரு நபரையும் இந்தியாவின் எப்பகுதியிலிருந்தும் விசாரணைக்கு வரும்படி ஆணையிட்டு அதனைச் செயல்படுத்தி உறுதி மொழியுடன் விசாரணை செய்தல்.

b) ஆவணங்களைக் கைப்பற்றுதல், அவற்றை நீதி மன்றத்தில் தாக்கல் செய்தல்.

c) உறுதி மொழியின் பேரில் சாட்சியம் பெறுதல்.

d) எந்த நீதி மன்றம் அல்லது அலுவலகங்களிலிருந்தும் பொது ஆவணங்களை அல்லது அவற்றின் நகல்களைச் சமர்ப்பிக்கச் செய்தல்.

e) ஆவணங்களையும் சாட்சிகளையும் விசாரணை செய்ய ஆணையிடுதல்.

f) குடியரசுத் தலைவரின் ஆணைப்படி தீர்மானிக்கப்பட்ட பிற காரியங்கள்.

9. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினரைப் பாதிக்கும் முக்கியக் கொள்கைகளில் மத்திய, மாநில அரசின் நேரடி நிர்வாகப் பிரிவு ஆய்வுக் குழுவைக் கலந்து ஆலோசித்தல்.

10. இவ்விதிகளில் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் என்னும் பதங்கள், விதி 340, பிரிவு விதி (1) படி அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் அறிக்கைப்படி குடியரசுத் தலைவரால் சேர்க்கப்படும் பிற இனத்தவரையும் பின் தங்கிய வகுப்பினரையும் குறிப்பிடும்.

தேசியக் குழுவின் ஆண்டறிக்கைகள்:

தீர்மானப்படி தன்னுடைய செயல் முறைகளைத் தேசிய ஆய்வுக் குழு தானே வகுத்துக் கொள்ளும். இந்திய அரசின் அனைத்து இலாக்காக்களும் இக்குழு அவ்வப்போது வேண்டும் தகவல்களையும் ஆவணங்களையும் கொடுத்துதவுவதுடன், குழுவிற்குத் தேவையான பிற உதவிகளையும் செய்திட வேண்டும். மாநில அரசுகளும் மத்திய அரசின் நேரடி நிர்வாகப் பகுதிகளும் இக்குழுவின் செயல்பாட்டிற்குத் தங்களின் முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும்.

"ஆண்டறிக்கையில் மத்திய அரசு சம்பந்தமான பரிந்துரை களைச் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பும், ஏற்கப்படாத பரிந்துரைகளுக்கு, அவை மத்திய அரசைப் பொருத்த அளவில் ஏன் ஏற்கப்பட வில்லை என்பதற்கான விளக்கங்களையும் சேர்த்துக் குடியரசுத் தலைவரால் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்கப்படும்'' தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடி மக்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் கொடுத்துள்ள பாதுகாப்புகள், நடைமுறைப் படுத்தப்பட்டு அரசுப் பணிகளில் அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் செயல் படுத்தப்பட்டுள்ள வகை பற்றியும் ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதனால் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு ஏப்ரல் 1983 முதல் மார்ச் 1986 வரையிலான மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள விளைவுகளை ஆய்வுக்குழுவின் அறிக்கைப்படி ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

முதலாவதாக இந்த ஆய்வுக் குழுவின் அமைப்பையும் அதன் செயல் முறைகளையும் பற்றி ஆய்ந்திட வேண்டும்.

ஆய்வுக் குழுவின் அமைப்பு:

இந்த ஆய்வுக் குழு ஒரு தலைவர், அரசியல் அமைப்புச் சட்டம் விதி 338—இன் படி நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரி உள்பட நான்கு பேர்களுக்கு மேலாகாத உறுப்பினர்களைக் கொண்டது. இக் குழு அமைக்கப்பட்டதிலிருந்து திரு.போலா பாஸ்வன் சாஸ்த்ரி, M.P., திரு. ராஜ மல்லு, M.P.,திருமதி M.சந்திரசேகர், M.P.முதலிய சமுதாயச் செல்வாக்கு மிக்க பலர் தலைவராகவோ அல்லது அதன் உறுப்பினர்களாகவோ பதவி வகித்துள்ளனர்.[15]

இக் குழுவின் வேலைகளைச் செய்திட டெல்லியில் ஒரு அலுவலகமும் நாட்டின் பல பகுதிகளிலுமாக 17 கள ஆய்வாளர்களும் உள்ளனர்.[16]

மேலே குறிப்பிட்டுள்ள அறிக்கைக்கு (1983—84) முன்னர் ஐந்து ஆண்டறிக்கைகள் இக் குழுவினரால் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் வைக்கப்பட்டுள்ளன.[17]

தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக் குழு (1983—84)—கருத்துக்கள்:—

சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து அறிக்கைகளிலும் மொத்தம் 1046 பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய அறிக்கையில் தாழ்த்தப்பட்ட இன மக்களின் வளர்ச்சிக்காகவும் நலனுக்காகவுமாகக் கொடுக்கப்பட்டுள்ள 35 பரிந்துரைகளையும் சேர்த்து 1081 பரிந்துரைகளாகின்றன.

1983—84 ஆம் ஆண்டு அறிக்கையில், முன் அறிக்கைகளில் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் உள்ள தாமதம் குறித்து வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், உள் துறை அமைச்சரகத்தில் இதற்காகத் தனிப் பிரிவு துவங்கப்பட்டது குறித்து அறிக்கை மகிழ்ச்சி தெரிவிக்கின்றது.

இருப்பினும், இந்தக் கடைசி அறிக்கை, இதற்கான செயல்பாட்டிற்கு அமைக்கப்பட்ட சிறப்புப் பிரிவு போதுமானதா என்பதைச் சந்தேகிக்கின்றது. இக் குழுவின் வேலைகளை நிறைவேற்றிடத் திறமை மிக்க, பலமானதாக இச் சிறப்புப் பிரிவை அமைக்குமாறு கோருகிறது.[18]

தற்போதைய அறிக்கை இவ்வாய்வுக் குழுவிற்கு அரசியல் அமைப்புச் சட்ட அந்தஸ்த்தைப் பெற்றிட முனைப்பாய் உள்ளது. அந்த அந்தஸ்து இல்லாததால் இக்குழு அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளைத் திறம்படச் செய்ய முடியவில்லை. சில வழக்குகளில் கிடைத்துள்ள தடையங்களையும் சாட்சிகளையும் மறு ஆய்வு செய்து நடுநிலையில் நின்று தீர்மானிக்கும் வண்ணம் மத்தியப் புலனாய்வுத் துறையிடம் பொறுப்பை ஒப்படைக்க முடியாமல் உள்ளது. சில குறிப்பிட்ட வழக்குகளில் "காவல் துறையால் விசாரணை செய்யப்பட்டு அவர்களால் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆய்வுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாக உள்ளன"[19]

தற்போதைய அறிக்கை பல மாநிலங்களில் மத்திய அரசு நேர் நிர்வாகப் பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான பொது நல வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடு பற்றி இக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் நேரடியாகக் கள ஆய்வில் திரட்டிய கருத்துக்களையும், ஆய்வுக் குழுவின் கள ஆய்வுப் பிரிவுகளிலிருந்து திட்டச் செயல்பாட்டு நிலை குறித்துப் பெறப்பட்ட தகவல்களையும், மாநில—மத்திய அரசுகளின் நேர் நிர்வாகத்திடமிருந்தும் பிற அமைப்புக்களிடமிருந்தும் பெறப்பட்ட விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

"மாநில அரசுகளும் மத்திய அரசின் நேரடி நிர்வாகப் பகுதி அரசுகளும் போதுமான விவரங்களைக் கொடுக்காதது இவ்வாய்வுக் குழுவிற்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம். இதனால் அறிக்கை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படுவதுடன் போதுமான விவரங்கள் இன்றித்தவறான முடிவுகளை எடுக்கும் அபாயத்தையும் ஏற்படுத்து கின்றது"[20].

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளை ஆய்ந்ததில், பெருவாரியான வழக்குகளில் குற்றவாளிகளை விடுதலை செய்து விடுவதிலும் அல்லது விசாரணைக்கே வழக்குகளை அனுமதிக்காததுமாக முடிவடைந்துள்ளது பற்றி ஆய்வுக்குழு வருத்தம்

தெரிவிக்கின்றது. 1983—இல் நீதிமன்றம் எடுத்துக் கொண்ட 9249 வழக்குகளில் 7299 வழக்குகள் முடிவடையவில்லை. தீர்ப்பளிக்கப்பட்ட 1950 வழக்குகளில் 243 வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. 1707 வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இப்படி அபரிமிதமான குற்றவாளிகள் விடுதலைக்குக் காரணம் “தோற்ற வழக்குகளில் பெரும்பாலானவை தீண்டாமை காரணமாகப் பிறரைப் புண்படுத்துதல் அல்லது புண்படுத்த முயலுதல் என்பது தான்” என்பதே ஆய்வுக் குழுகூறும் காரணம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் சட்டப்படி ஒரு மாதச் சிறைத் தண்டனை உறுதியாதலால் “ஆரம்ப விசாரணை நீதிமன்றங்கள்” (Trial Courts) கூட யாரையும் குற்றவாளிகள் என்று தீர்ப்புக் கூறத் தயங்குகின்றன. ஏனெனில், இவ்வழக்குகளுக்குக் குறைந்த பட்சத் தண்டனை என்று எதுவும் இல்லாததுடன், தண்டனையின் முறைகளைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறையோ வாய்ப்போ நீதிபதிகளுக்குக் கிடையாது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட 14 வயதிற்கு மேற்பட்ட யாருக்கும் “நன்னடத்தைக்கால குற்றவாளிகள் சட்டம் 1958” படி (Probation of Offenders Act 1958) தண்டனை கொடுக்க முடியாது’[21].

எனவே, பாதிக்கப்பட்டோருக்கு நீதி மறுக்கப்படுகிறது; பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலோர் சமூகப் பொருளாதார நிலைகளில் கீழ்மட்டத்துள்ளோரேயாவர். ஆகவே, பாதிக்கப்பட்டோர் ஆரம்ப விசாரணை நீதிமன்றத் தீர்ப்பிற்கு அது தவறாகவே இருப்பினும் தலை வணங்கிச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், “குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்குட்பட்ட வழக்குகள் “ஆரம்ப விசாரணை நீதிமன்றத்தைத் தாண்டி மேல் நீதிமன்றங்களுக்குச் செல்வதே இல்லை” என்று ஆய்வுக் குழு சுட்டிக்காட்டுகிறது”.[22]

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப் படுவதற்கான காரணங்கள்:—

இக் குற்றவாளிகள் மிகுதியும் விடுதலை செய்யப்படுவதற்கான காரணங்களை முடிவு செய்யும் முகமாக இது பற்றிய விவரங்களைக் கேட்டு ஆய்வுக் குழு ஏழு மாநிலங்களுக்குக் கடிதம் எழுதியதற்குத் தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்கள் மட்டுமே பதில் எழுதியிருந்தன. இதற்கான காரணங்களாகத் தமிழ் நாடு அரசால் கொடுக்கப்பட்டவை.

1) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி இக்குற்ற வாளிகளுக்குச் சிறைத் தண்டனை உறுதி என்பதால் பிரதிவாதி வாதியுடன் சமரசம் செய்து கொள்கிறான். இதனால் அரசு வாதச் சாட்சிகள் வழக்குக்கு எதிராகச் சாட்சி சொல்கின்றனர்.

2) பெருவாரியான தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேராதவர்களிடமே வேலைபார்க்கும் சூழ்நிலை உள்ளது. எனவே, அரசுக்கு ஆதரவாகாமல் இருக்கும்படியான கட்டாயத்திற்கு ஆளாக வேண்டியுள்ளது.

3) வழக்குகள் முடிந்து தீர்ப்பாவதற்கு அதிக நாட்கள் ஆகின்றன.

குற்றவாளிகள் விடுதலையாவதைக் குறைக்கக் காவல் துறையினரின் பங்கு:

இவ்வாறு குற்றவாளிகள் அதிக எண்ணிக்கையில் விடுதலையாவதைத் தடுக்கத் தமிழ் நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தன் பதிலில் கூறியுள்ளது.[25]

1) கும்பகோணம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கடலூர், நாகபட்டினம் கோயமுத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மேலும் 4 சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

2) அரசு வழக்கறிஞர்கள் சாட்சிகளுக்கு உதவி, அவர்கள் சரியானபடி சாட்சிகள் சொல்ல அறிவுறுத்தும்படி காவல் துறைக்குக் (Superintendent of Police) கூறி இருப்பதுடன் சாட்சிகளுக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி, நீதிமன்றம் அல்லது காவல்துறை விசாரணையளவில் உள்ள வழக்குகளுக்கு தொடர்புடைய வாதிகள், சாட்சிகள் பற்றிய பட்டியலை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பி வைக்கும்படி காவல் துறைக் கண்காணிப்பாளர் (Superintendent) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இவ் வழக்குகள் உள்ள

வாதிகளுக்கும் சாட்சிகளுக்கும் “தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம்” அல்லது “வேலை உத்திரவாதத்திட்டம் (N.R.G.PN.Empoymnet Guarantee Schemes) ஆகிய திட்டப்படி வேலை கொடுக்க வசதி செய்வதே இதன் நோக்கமாகும்.

தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குச் சட்ட உதவி.

மாநில அரசுகள் தீண்டாமையை ஒழிக்கக் கொண்டு வந்த பல திட்டங்களில் சட்ட உதவியும் ஒன்றாகும். “இலவசச் சட்ட உதவியைப் பல மாநிலங்கள் அறிவித்திருப்பினும், துரதிஷ்டவசமாக உண்மையில் அதனால் பயனடைந்தவர்கள் பற்றியும் எவ்வளவு பணம் உதவப்பட்டது என்ற விவரங்கள் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை”[25] என்று தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான ஆய்வுக்குழு (1983—84) கூறுகிறது.

தாழ்த்தப்பட்ட சாதியினருக்குச் சில மாநிலங்கள் உதவி செய்கின்றன. சில மாநிலங்களில் ஒரு குறிப்பிட்ட வருவாய்க்கு உள்பட்டவர்களுக்கு மட்டுமே அத்தகைய உதவிகள் செய்யப்படுகின்றன. தமிழ் நாட்டில் வருடத்திற்கு ரூ.5000/=க்கு உட்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கே இலவசச் சட்ட உதவி கொடுக்கப்படுகிறது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 படி பகுதி 15(A) (2) (ii) யின் கீழ் பதிவாகும் வழக்குகளைத் தொடரவும் கண்காணிக்கவும் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டில் மாநிலத் தலைமையகத்திலும், மாவட்ட அளவிலும் பல நிலைகளில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பகுதி 15 (A) 2 (ii) விதிப்படித் தீண்டாமையை ஒழிக்கக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும். அத்தகையை குழுக்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. மாநிலத்தில் தீண்டாமை எந்த அளவு செயல்படுகிறது என்பதைத் தெரிந்திட அதன் ஆய்வமைப்பின் மூலம் (Research Orgonisation) ஆய்வு செய்யப்பட்டது. ”ஆய்வு பற்றிய குறிப்புகள் (terms of reference) ஆய்வின் முன்னேற்றம் அல்லது ஆய்வின் முழு முடிவுகள் கிடைக்கவில்லை”[27] என்று தற்போதைய ஆய்வுக் குழு அறிக்கை வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகின்றது.

ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள்:

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி தீண்டாமையை ஒழித்திட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆய்வுக் குழு விசாரணையில் கண்ட குறைபாடுகளையும் அவற்றைப் போக்குவதற்கான வழிமுறை

களையும், தற்போதைய ஆய்வுக் குழு (1983–84) கீழ்க்கண்டபடி பரிந்துரைகளைச் செய்துள்ளது:[27]

1. மத்திய உள்துறை அமைச்சகம் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் செயல்படும் முறை பற்றிய தன்னுடைய ஆண்டு அறிக்கையில் பகுதி 15 (A) இன் விதி முறைகளைச் செவ்வனே விரிவாக ஆராய்ந்து அறிந்து அதன் முடிவுகளை அளவிட வேண்டும். இத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து மாநிலங்கள் பெற்ற உதவி பற்றித் தீர ஆராய்ந்திட வேண்டும். குறிப்பாகச் சிறப்பு நீதிமன்றங்கள், காவல்துறை ஆகியவற்றின் செயல்பாடுகளையும் அவை சாதித்தவைகளையும் ஆழ்ந்து ஆராய வேண்டும். தேவைப்பட்டால் இதை நன்கு ஆய்ந்து முடிவெடுக்க ஒரு சிறு ஆய்வுக் குழுவை அமைக்கலாம்.

2. ஒவ்வொரு மாநிலத்தின் சிற்றூர்களின் வெளிப்புறங்களில் தாழ்த்தப்பட்ட இனமக்கள் குழுக்களாக வாழ்கின்றனர். சிற்றூர் வீட்டு வசதித் திட்டம், குறிப்பாகச் சிறப்புத் துணைத்திட்டத்தின் படி செயல்படும் வீட்டு வசதித் திட்டங்கள் இவ்வாறு அவர் களைப் பிரித்து வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் மற்ற சாதி மக்கள் வாழும் பகுதியிலேயே அவர்களுக்கும் வீடுகள் கொடுக்கப்பட வேண்டும். இது அவர்களின் சமூக இயலாமையைப் போக்குவதுடன் தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்க்கும்.

3. பீஹார் போன்ற மாநிலங்களில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படியான வழக்குகள் குறைந்த விட்ட போதும் பத்திரிக்கைச் செய்திகள் வேறு விதமான நிலைமையையே காட்டுகின்றன. பொருளாதார வளர்ச்சி, சமூக மாற்றங்களுக்கான பீஹார் மாநில தாழ்த்தப்பட்ட சாதிக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த L.N.மிஸ்ராவின் ஆய்வினைச் சுட்டிக் காட்டி, அக்டோபர் 10, 1985–ஆம் தேதி டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையில் உள்ள செய்தி இது: "95%க்கும் மேலாகப் பீஹார் ஹரிஜனங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் மிக மோசமான நிலையில் வாழ்கின்றனர். மிகுதியானோர் தீண்டத் தகாதோர்களாகவே வாழ்கின்றனர். கிணற்றிலிருந்து நீர்

எடுத்திட, உணவு விடுதிகளில் நுழைந்திட, சிற்றூர்களில் தங்களுடைய திருமணம் அல்லது மதசம்பந்தமான ஊர்வலங்கள் மேல் சாதியினர் வசிக்கும் தெருக்கள் வழியாகச் சென்றிட அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை". இதிலிருந்து சில மாநிலங்கள் கொடுக்கும் புள்ளி விவரங்கள் பிரச்சினையின் சரியான நிலவரத்தைப் பிரதிபலிப்பதில்லை என்பது தெளிவு. எனவே தேவையான சீர்திருத்த முறைகளை மாநிலங்கள் செய்திட வேண்டியதை இது காட்டுகின்றது.

தேசிய ஆய்வுக்குழு அறிக்கை 1984—85

தேசிய ஆய்வுக் குழு அறிக்கை 1984—85, அதன் தலைவர் திரு.பீகாபாய் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்த அடுத்த அறிக்கை "தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடி மக்களுக்கான ஏழாவது ஆய்வுக் குழு ஆண்டறிக்கை" என்பது இதன் பெயராகும்.

இவ்வாய்வுக் குழு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் படி அந்த ஆண்டு பதிவான வழக்குகளை ஆழ்ந்து ஆராய்ந்துள்ளது. "தீண்டாமை ஒழிப்பு காவல்துறை செயல்பாட்டுக்கு மட்டும் உட்பட்டதன்று. அது சமுதாய உள்ளுணர்வையும் திட்டமான சமூகச் செயல்பாட்டையும் பொறுத்தது". இந்த உள்ளுணர்வை உண்டாக்குவதற்கு அரசு திட்டவட்டமான திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். இது தீண்டாமையை ஒழித்திடப் பெரிதும் உதவும். மேலும் அதுவே கொடுமைப் படுத்துவோரை எதிர்த்து நிற்கும் மன வலிமையைத் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்குக் கொடுக்கும். அதே சமயம் விரைவான காவல்துறை விசாரணையும் வழக்குகள் உடனுக்குடன் நடத்தப்படுவதும் இன்றியமையாதனவாகும்"[28] என்பதே இவ்வாய்வுக் குழுவின் கருத்தாகும்.

தீண்டாமைக்குப் பலியான தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கான சட்ட ஆலோசனை உதவிக்காகத் தமிழ் நாடு அரசு எந்தத் தனிப்பட்ட சிறப்புச் சட்ட உதவித் திட்டத்தையும் செயல்படுத்த வில்லை என்பதை இக்குழு சுட்டிக் காட்டுகிறது. இருப்பினும், தமிழ் நாடு அரசு, தாழ்த்தப்பட்ட இனத்தவரையும் பிற மக்களையும் சேர்த்துப் பொருளாதாரம் அல்லது மற்ற வகை இன்னல்களுக்கான இலவசச் சட்ட ஆலோசனை கிடைக்க வகை செய்துள்ளனது[29] என்று இக்குழு கூறுகின்றது.

இது தொடர்பான அதிகாரிகள் நியமனம் பற்றி இவ்வாய்வுக் குழு கருத்துத் தெரிவிக்கையில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அடிப்படையில் பதிவான வழக்குகளைத் தொடங்கவும் அவற்றைக் கண்காணிக்கவும், மாநில மாவட்ட அளவிலான சிறப்பு இலாக்காக் களைத் தமிழ் நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிடுகிறது. மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட சிறப்பு இலாக்காக்களுடன் தமிழ்நாட்டில் காவல் நிலையச் செயல்பாட்டிற்குத் துணையாகச் சுழலும் காவல்படை மாவட்டம்ந்தோரும் இயங்கி வருகின்றது. இவை 20 மாவட்டங்களில் இயங்குகின்றன. இருப்பினும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படித் தொடரப்படும் வழக்குகளைத் தொடரவும், கண்காணிக்கவும் அதிகாரிகளை நியமிக்கும் முகமாகச் செயல்பட்டிருப்பினும், அவற்றின் செயல்பாடுகளை அவ்வப்போது ஆராய்ந்து வேண்டும் போது வேண்டிய திருத்தங்களைச் செய்வதற்கான உள் அமைப்பை அது கொண்டிருக்கவில்லை என்று தமிழ் நாட்டைப் பற்றி ஆய்வுக்குழு குறிப்பிடுகின்றது. எனவே, தீண்டாமையை ஒழிக்க இதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனைத்தரவில்லை. ஆகவே "இச்சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாநில அரசு அவ்வப்போது மதிப்பீடு செய்ய வேண்டும்"[30] என்று ஆய்வுக் குழு பரிந்துரைக்கின்றது.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி பதிவான வழக்குகளை விசாரிப்பதற்காகச் சிறப்பு நீதிமன்றங்கள் மாவட்டத் தலைநகரிலேயே அமைந்திருக்கின்றன. (Circuit Courts) சுழலும் நீதி மன்றங்களை அமைத்து வழக்குகளை விரைவிலேயே முடிக்க வசதி செய்யவில்லை என்று குழு கூறுகின்றது. சிறப்பு நீதி மன்றங்கள் சுழல் நீதி மன்றங்களாக இல்லாவிடில் அவைகள் எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்தக் குறிக்கோள் நிறைவேறப் போவதில்லை என்று ஆய்வுக் குழு தெரிவிக்கின்றது. எனவே சிறப்பு நீதிமன்றங்களைத் திறம்படப் பயனுள்ள முறையில் செயல்பட அவற்றைச் சுழல் நீதிமன்றங்களாக அமைக்க வேண்டும்"[31]. என்று தன்னுடைய முந்தைய பரிந்துரையை ஆணித்தரமாகக் கூறியுள்ளது.

தமிழக அரசு, கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்ட இனத்தவராக இருப்பின் அவர்களுக்கு

ஊக்கப் பரிசு வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளது.[32]

***தேசிய ஆய்வுக் குழு அறிக்கை: 1985–86.***

எட்டாவது தேசிய ஆய்வுக் குழு 1985—86 இன் அறிக்கையில் மாநில அரசுகள் சிறப்பு நீதிமன்றங்கள் அமைப்பதை உண்மையான உள்ளுணர்வுடன் செய்ய வேண்டும். அவை குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் எதிர்பார்க்கும் நீதிக்கான சிறப்புச் சாதனங்களாகச் செயல்பட வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

***தாழ்த்தப்பட்ட இன மக்கள் மீதான கொடுமைகள் பற்றிய தேசிய ஆய்வுக் குழு: கொடுமைகளுக்கான காரணங்களும் அவற்றைக் களைந்திடும் வழிமுறைகளும் ஏப்ரல் 1990.***

இது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீதான கொடுமைகள் பற்றிய விரிவானதோர் ஆய்வறிக்கையாகும். பட்டியல் இனத்தவர் மீது கட்டவிழ்த்து விடப்படும் கொடுமைகளுக்கான சமூகப் பொருளாதாரக் காரணங்களும், பிற சூழ்நிலைகளும் பற்றி தேசிய ஆய்வுக் குழு விரிவானதோர் ஆய்வை மேற்கொண்டது. அது தாழ்த்தப்பட்ட இன மக்கள் மீது தொடுக்கப்படும் மிகக் கொடுமையான செயல்களான கொலை, ஆபத்தான தாக்குதல், கற்பழிப்பு, தீவைத்தல், திட்டமிட்டுச் சொத்து சுகங்களை இழக்கச் செய்தல் ஆகிய குற்றங்கள் பற்றிக் குறிப்பாக ஆராய்ந்தது. அத்துடன் அது நிலச் சீர்திருத்தத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், தீண்டாமையை ஒழித்தல், குறைந்த அளவு சம்பள நிர்ணயம், அடிமைக் கூலி வேலைகளை ஒழித்தல், முதலியனவற்றையும் உள்ளடக்கி ஆய்ந்துள்ளது. காரண காரியங்களைத் தீர்க்கமாக ஆராய்ந்து அதற்கான நடைமுறைத் தீர்வுகளையும் அது தெரிவித்துள்ளது (பின் இணைப்பு II)

தேசிய ஆய்வுக் குழுவின் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான பரிந்துரைகள் மிக விரிவானவை, வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. செறிந்த கருத்துடைய இவ்வறிவுரை மாநிலங்களுக்கு அனுப்பிவைக்கப்படலாம். அத்துடன் அவற்றை நடைமுறைப் படுத்தவும் வலியுறுத்தலாம். அப்பரிந்துரைகளிலிருந்து ஒரு வழிகாட்டியை அமைத்துக் கொடுத்து பல திட்டங்களின் செயல்பாட்டையும் தாழ்த்தப்பட்ட இன மக்களின் மீது நடத்தப்பட்ட கொடுமைகள் பற்றியும் மாவட்ட

வாரியாக மதிப்பீடு செய்வதற்கு அடிப்படையாக அதை அமைக்கலாம். இவ்வாய்வுக் குழுவால் ஆராயப்பட்ட சில குறிப்பிட்ட வழக்குகள் தாழ்த்தப்பட்டோர் மீது தொடுக்கப்பட்ட கொடுமைகளின் பல்வேறு அம்சங்களை எடுத்துக் காட்டுகிறது. அவை பல்வேறு பிரிவுகளாகவும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் கொடுமைகள் சட்டம் ஆகியவற்றை அமல் செய்வதில் உள்ள முனைப்பின்மையையும் இவ்வறிக்கை தெளிவாகக் காட்டுகின்றது.

அடிக் குறிப்புகள்

1. மங்கள் சந்திர ஜெயின் காக்சி: முன் குறிப்பு. பக் 220—221
2. மேற்படி பக் 221
3. N.D. வைத்யா, V.B.R. அம்பேத்கார் AIR 1938 BM.146
4. மங்கள் சந்திர ஜெயின் முன்குறிப்பு பக்: 238.
5. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் விதி 16(4)320(4);335.
6. மேற்படி விதி 330, 332, 334.
7. மேற்படி விதி 17,23,25,46.
8. மேற்படி விதி 244—V; VI. C& Shedule of the Constitrition)
9. மேற்படி விதி 46, 275.
10. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆய்வுக்குழுவின் 1985—86 ஆண்டிற்கான அறிக்கை இந்திய அரசு. பக்.20.
11. உள்துறை அமைச்சகத் தீர்மானங்கள் எண் 13013/9/77 SCT (I) நாள் 21.7.1978.
12. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக்குழு அறிக்கை. 1985—86. இந்திய அரசு பக். 3
13. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக்குழு அறிக்கை 1980—81 இந்திய அரசு. பக்.1

14. துர்க்காதாஸ் பாஸு
பக். 1077—1078.

15. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக் குழு அறிக்கை. 1983—84. இந்திய அரசு. பக்.11

16. மேற்படி 1983—84: பக். 2

17. மேற்படி 1983—84: பக். 2

18. மேற்படி பக். 3

19. மேற்படி பக். 3

20. மேற்படி பக். 3

21. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான ஆய்வுக் குழு அறிக்கை. 1983—84 இந்திய அரசு பக். 90

22. மேற்படி பக். 90

23. மேற்படி பக். 99

24. மேற்படி பக். 99

25. மேற்படி பக். 91

26. மேற்படி பக். 102.

27. மேற்படி பக். 92

28. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான ஆய்வுக்குழு அறிக்கை 1984—85. இந்திய அரசு. பக் 14.

29. மேற்படி பக். 15

30. மேற்படி பக். 16

31. மேற்படி பக். 17

32. மேற்படி பக். 17

33. மேற்படி பக். 28

ஒரு தேசத்தின் குற்றவியல் நீதித்துறையின் ஒரு பகுதியாகக் காவல்துறை திகழ்கின்றது. இதில் நீதி மன்றமும் சிறைச்சாலையும் அடங்கும். சமுதாயத்தை அச்சுறுத்தும் கொலை, கொள்ளை, வீடு புகுந்து திருடுதல் போன்ற பிற குற்றங்களை அடக்குதற்குக் குற்றவியல் சட்டத்தை அமுல்படுத்துவது காவல்துறையேயாகும். அவ்வகைக் குற்றங்களை விசாரணை செய்வதும் சந்தேகத்திற்கிடமானவர்களைக் கைது செய்வதும் காவல் அதிகாரிகளேயாவர். மேலும், நீதிமன்ற விசாரணையின் போது சாட்சிகளாகவும் அவர்கள் செயல்படுவர்.

உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் காவல் துறைகள் அமைந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட பகுதிகளைக் கண்காணிப்பது அல்லது குறிப்பிட்ட வகைக் குற்றங்களை விசாரணை செய்வது என்ற பிரிவுகளாகச் செயல்படுகின்றன. காவல்துறை அமைப்புகள் ஆஸ்திரேலியாவில் எட்டும், இங்கிலாந்தில் ஐம்பதிற்கும் அதிகமாகவும், ஐக்கிய அமெரிக்காவில் 40,000 தனிக் காவல் துறைகளும் உள்ளன. சில நாடுகளில் அந் நாட்டு அரசே தன் செலவில் தங்களுக்குக் கீழ் காவல் துறையை இயக்குகின்றன. சைனா, பிரான்ஸ், அயர்லாந்து, நியூசிலாந்து, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளில் முறையே ஒரே ஒரு காவல்துறை மட்டுமே உள்ளது.

காவல் அதிகாரிகளை மக்கள் பல பெயர்களால் அழைக்கின்றனர். இங்கிலாந்திலும் இன்னும் சில நாடுகளிலும் காவலர்கள் 'Coppers' என்று அழைக்கப்படுகின்றனர். இது கைது செய் என்னும் சொல்லான 'Cop' என்னும் சொல்லிலிருந்து தோன்றி இருக்கக்கூடும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் 'Cops' என்று அழைக்கின்றனர். ஊழி என்ற சொல் "Constable on Patrol" என்னும் வாசகத்திலிருந்து தோன்றி இருக்கக் கூடும். Cop என்பது Copper என்னும் சொல்லின் சுருக்கம் என்பது சிலரின் கருத்து. காவலர்கள் தாமிரத்தாலான இலச்சினையை (badge) அணிந்திருந்ததால் இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர். ஒரு காலத்தில் பிரிட்டனில் காவலர்கள் "பீலேர்ஸ்" (Peelers) அல்லது "பாபீஸ்" (bobbies) என்று அழைக்கப்பட்டனர். இது லண்டன் நகரில் காவல்துறை உருவாகக் காரணமாய் இருந்த சர்ராபர்ட் பீல் (Sri Robert Peele) என்பவரின் பெயரை ஒட்டி உருவானது. பில் (bill) லா (Law) ஃபஸ் (Fugg), சட்டம் அலட்டல் என்று முறையே இவை பொருள்படும்) என்றும் காவலர்கள் அழைக்கப்படுகின்றனர்.

சட்டப்படி இப்பதவியில் நியமிக்கப்பட்ட அனைவருமே காவலர்களாவர்[1]. காவலர்கள் சட்டத்தின் பிரதிநிதிகளாவர். சட்டமே அவர்களின் அதிகாரியாகும்[2]. காவலர் பதவியில் நியமனமாவதே அவர்கள் நாட்டில் அமைதியைக் காக்கும் உன்னதக் கடமையைக் கொண்டவர்களென்பதாகும்[3]. "நன்கு ஒருங்கிணைந்து தெளிவான அதிகார அடுக்குகளைக் கொண்ட சிறந்த அமைப்பு காவல்துறை."[4]

"காவல் துறையின் குறிக்கோள் என்னவென்பதைக் காவல்துறைச் சட்டமும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும், அவ்வப்போது நிறைவேற்றப்படும் சட்டங்களும் தெளிவுபடுத்துகின்றன. சட்ட ஒழுங்கை நிலை நாட்டுபவர்களே, மக்களின் உயிர்க்கும் சொத்து சுகங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஊழியர்களே காவலர்கள். கொடுமை, பழிவாங்குதல், தீமை செய்தல் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியது காவலர்களின் கடமை. கலவரத்தைத் தடுத்துச் சமுதாய விரோதிகளிடமிருந்து சமூகத்தைக் காப்பவர்களாகக் காவலர்கள் உள்ளனர். அரசியல் அமைப்புச் சட்டத்தின் புனிதத் தன்மையையும், சட்டத்தின் ஆளுமையையும் நிலை நிறுத்த வேண்டியது காவலர்களின் தலையாய கடமையாகும்."[5]

"காவலர்கள், ஆட்டத்தின் விதிமுறைகளை (Rules of the game) ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கின்றனரா என்பதைக் கண்காணிக்கும் சமூக அதிகாரத்தின் குறியீடாவர்."[6] சட்டத்தின் ஆட்சியைத் தாங்கி நின்று அது இயங்குவதற்கு உதவும் அச்சுப் போன்றவர்கள் காவலர்கள்."[7]

***காவல்துறைச் சட்டம் 1861:***

ஆகஸ்டு 15, 1947 இல் நாட்டிற்குக் கிடைத்த சுதந்திரமும், ஜனவரி 30, 1950 இல் அமுல் செய்யப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டமும் இந்திய அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார அமைப்புகளில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தன. "இந்தியக் காவல்துறை அமைப்பும் அதன் உருவமும் இன்று 137 ஆண்டுகள் பழமையான "காவல் துறைச் சட்டம் 1861" என்ற சட்டத்தின் அடிப்படையில் இந்தியக் காவல்துறை இயங்கி வருகின்றது."[8]

"காவல்துறைச் சட்டம் 1861 பிரிட்டிஷ் இந்தியாவில் காவல்துறை அமைப்பிலும், நிர்வாகத்திலும் ஒரு புரட்சிகரமான

## *குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும், காவல் துறையின் தீண்டாமை ஒழிப்பும்*

"காவல்" (Police) என்னும் சொல்லிற்கு விளக்கமும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் பற்றிய சுருக்க விளக்கமும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்வதில் காவல் துறையின் பங்கும் பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

### *"காவல்" Police-என்பதின் பொருளும் காவலர் கடமையும் :*

கிரேக்கச் சொல்லான 'போலிடேஸ்' (Politace) இல் இருந்து "போலிஸ்' (Police, காவல்) என்ற சொல் உருவானது. அது குடியுரிமையையும் நிர்வாகத்தையும் குறிக்கும்.

"கட்டுப்பாட்டைக் காத்துச் சட்டத்தை அமுல் படுத்தும் ஒரு அமைப்பு, ஒரு நாட்டின் உள்நாட்டு நிர்வாகம், சட்டம், அமைதி, கட்டுப்பாட்டை அமுல் செய்வதற்காக ஆண்பெண் இருபாலரைக் கொண்ட ஒரு நிர்வாக அமைப்பு, காவலர் போல் கட்டுப்படுத்த, காவலர்களை அனுப்பிவைக்க, பாதுகாக்க, கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க" என்று இருபதாம் நூற்றாண்டு சேம்பேர்ஸ் அகராதி விளக்குகிறது.

"காவலர்கள் சட்டத்தை அமுல் படுத்திக் கட்டுப்பாட்டைக் காத்து நிற்கும் அரசாங்க ஊழியர்கள். ஒரு சமுதாயத்தில் உள்ள மக்களின் உயிரையும் உடமைகளையும் பாதுகாப்பதோடு குற்றங்களைத் தடுப்பதற்கும் இவர்கள் உழைக்கின்றனர். ஆண் பெண் காவலர்கள் தங்கள் சமுதாயத்திற்குப் பல்வேறு வழிகளில் தொண்டு, செய்கின்றனர். தெருக்களில் குற்றங்கள் நடக்கமால் தடுக்கவும் மக்களின் பல பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவர்கள் உதவுகின்றனர். சாலைகளில் வாகனங்களின் போக்குவரத்தைச் சீர் செய்வதும் அவை பாதுகாப்பாகப் போய் வரவும் உதவுகின்றனர். சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைத்தும், காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்தும் விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும் சேவை செய்கின்றனர். வெள்ளத்தின் போதும், தீ விபத்துக்களின் போதும் வேறு அசம்பாவிதங்கள் நடந்திடும் போதும் பாதிக்கப்பட்டோருக்குப் பாதுகாப்பும், போக்குவரத்திற்கான வசதிகளையும். செய்து கொடுக்கின்றனர்".

மாற்றத்தைக் கொண்டுவந்தது முதன் முறையக ஒரு உறுதியான அலுவலக (அதிகார) அடுக்கு முறையை ஏற்படுத்தி வலுவான அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் காவல்துறையில் ஏற்படுத்தியது. காவல்துறையின் பொறுப்புகளும் கடுமையானதாகவும் முறை செய்யப்பட்டவைகளுமாயின."[9]

'காவல் துறைச் சட்டம் 1861' இந்தியா முழுமைக்கும் ஒரு நவீன காவலர் படையை உருவாக்கியது. இச்சட்டப்படி, காவல் துறைக்கும் காவல்துறை ஆணையர் (Inspector General of Police) தலைவராவார், காவல்துறையின் நிர்வாகம், வேலைக்கு ஆள் சேர்த்தல், காவல்படையின் ஒழுக்கம் ஆகியவற்றைக் கண்காணித்து முறைப்படுத்துவது, இவரது பொறுப்பாகும். மாவட்ட நீதிபதிகள் (District, Magistrates) காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் (Superintendents of Police) ஆகியோரின் அதிகாரங்களைத் தெளிவு படுத்துவதுடன், பொது மக்கள் கூடுமிடங்கள் (Public assemblies) தொடர்பான காவலர் அதிகாரங்களையும் இச்சட்டம் விளக்குகின்றது. காவல்துறை அதிகாரிகளின் அதிகாரத்தைக், குறிப்பாகக் காவல்நிலைய அதிகாரிகளின் (Station House Officers) அதிகாரத்தையும் "குற்றவியல் நடைமுறைச் சட்டம்" (Crimimal Procedure Code) கொண்டுள்ளது. குற்றம் நடைபெறாது தடுக்கவும், குற்றம் பற்றி அவர்களுக்குள்ள அதிகாரத்தை இச்சட்டம் தெளிவுபடுத்துகிறது."[10]

*காவல்துறைச் சட்டம் 1861 இன் அறிமுகம்1 முன்னுரை.*

"காவல் துறையின் தற்போதைய பணியை மார்ச் 22, 1861இல் இந்தியத் தலைமை ஆளுநர் (Governor General of India) ஒப்புதல் அளித்த "காவல்துறைச் சட்டம் 1861' வகுத்துக் கொடுத்தது" காவல் துறையைச் சீரமைப்பதற்காகச் செய்யப்பட்டது. இந்தச் சட்டம் 1860இல் காவல்துறை ஆய்வுக் குழுவால் அளிக்கப்பட்ட நகல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டது. அதன்படி சமுதாயக் காவலர் படை அமைக்கப்பட்டது (Civil Constobulary) நாட்டைக் கட்டித் காப்பதற்குப் போதுமான அளவு (மட்டும் இருக்கும்படி) உள் நாட்டுச் சிப்பாய்களின் படையைக் குறைத்துக் கொள்வதற்காகவே இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 1857இல் நடந்த "சிப்பாய் கலகம்" அல்லது "சுதந்திரப் போராட்டத்தில்" பங்கு பெற்ற அனைவருமே இந்தியச் சிப்பாய்களாவர். எனவே, இந்தியச் சிப்பாய்களின் எண்ணிக்கையைக் குறைக்க

வேண்டிய ஆங்கில அரசின் ஆதங்கம் புரிந்து கொள்ளக் கூடியதே. மேலும், இராணுவக் காவலர்களுக்குப் பதில் (Military police) இக் காவலர் படை பொருளாதார நோக்கிலும், பயனுள்ளதாகும். இதனால் ஆபத்தும் குறைவு."[12]

"காவல் படையை உருவாக்குவதும் அதைக் குற்றங்களைத் தடுப்பதற்கும் துப்புத் துலக்குதற்கும் உதவக்கூடிய கருவியாக அமைப்பதுவும் காலத்தின் கட்டாயமாகும்"[13] என்று காவல் துறைச் சட்டம் 1861 தனது முகவுரையில் கூறுகிறது.

காவல் துறையின் வேலை வீச்சு மிகப்பெரிது என்பதையும் குடிமக்களின் சுதந்திரத்தின் மீது நேரடியான பாதிப்பு அதனால் உண்டெனபதையும் இது தெளிவுபடுத்துகிறது. ஒவ்வொரு மனிதனுடைய பொதுவாழ்வு நடவடிக்கைகளிலும் காவல் துறையின் பங்கு பொதிந்துள்ளது. குற்றத்தைத் தடுப்பதும், குற்றத்தைப் புலன் விசாரணை செய்வதும் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதும், கயவர்களின் செயல்களைத் தடுப்பதும் காவலர்களின் தலையாய கடமையாகும். ஏழைகளையும் இயலாதோரையும் வயோதிகர்களையும், பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவது அவர்கள் கடமையாகும்.

***குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்-அதன் பரிணாமம் நிறை குறைகள்-செய்யப்பட்ட வேண்டிய மாற்றங்கள்:***

"தீண்டாமை ஒழிக்கப்படுகிறது; எந்த வகையிலும் தீண்டாமையைக் கடைப்பிடித்தல் தடை செய்யப்படுகிறது. தீண்டாமையினால் உண்டாகும். எந்தக் குற்றங்களும் சட்டப்படி தண்டனைக்குட்பட்டவைகளாகும்."[14] தீண்டாமையை அறவே ஒழிக்க வேண்டி அரசியல் அமைப்புச் சட்டவிதி 17—இல் இவ்வாறு கண்டிப்புடன் கூறப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்ட விதி 35 (a) (ii) இல் தீண்டாமை ஒழிப்பை நாடு முழுவதும் செயல்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி (i) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் (a) இல், எது எப்படி இருப்பினும் பாராளுமன்றம் தவிர மாநிலச் சட்ட சபைக்கு எந்தச் சட்டம் இயற்றும் அதிகாரமும் கிடையாது (ii) அரசியல் அமைப்புச் சட்டம் செயல்படத் தொடங்கிய

உடன், இப்பகுதியில் குற்றங்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கும், இந்த இரு பிரிவுகளிலும் உள்ள துணை—விதி (ii)யில் குறிப்பிட்டுள்ள செயல்களுக்கும் தண்டனையை வகுக்கப்படும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டவிதி 17—இன் படி தீண்டாமை ஒழிக்கப்பட்டாலும், வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நாட்டின் பல பகுதிகளில் தீண்டாமை இருந்து வருகிறது. எனவே "தீண்டாமைச் (குற்றங்கள்) சட்டம் 19—இல் 155—இல் இயற்றப்பட்டு ஜூன்1,1955 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது வரையில் இச்சட்டமே மனிதாபிமானமற்ற தீண்டாமையைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் காரணமாக இருக்கின்றது.

மேற்கூறிய சட்டம் செயல்பாட்டுத் திறனற்று உள்ளதாகப் பொதுவான கருத்து நிலவியது. எனவே, ஏப்ரல், 1972—இல் "தீண்டாமையும் சட்டமும் மற்றும் விடுபட்ட சட்ட விதிமுறைகளும் சட்டம்—1972) (Untouchability (offenecs) and Amendment and Misecllameous Provisuns Bill-1972) என்ற சட்டம் லோக் சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

இச்சட்டம் 'இணைத் தேர்வுக் குழு' (Joint Selcct Committee) கொடுத்த சில திருத்தங்கள் மற்றும் சில மற்றங்களுடன் செப்டம்பர் 1976—இல் நிறைவேற்றப்பட்டுக் "குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955" என்று 19.11.1976 முதல் அமுலுக்கு வந்தது. தீண்டாமை ஒழிப்பால் கிடைக்கும் உரிமைகளை அவற்றிற்குரியவர்கள் பெற்றுப் பயனடைய மாநில அரசுகள் ஆவன செய்ய வேண்டியது அவைகளின் கடமையாகுமென்று மேற்படிச் சட்டத்தின் பிரிவு 15 (A) குறிப்பிடுகிறது.

***மாநில அரசுகள்***

அ) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சரியாகச் செயல் படுகின்றதா என்பதை அவ்வப்போது கண்காணித்து, அது சரியாகச் செயல்பட எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும்.

ஆ) எந்தெந்த இடங்களில் தீண்டாமையால் மக்களுக்குச் சிக்கல் ஏற்படுகின்றதென்பதைக் கண்டு அச்சிக்கலைப் போக்கிட எந்தவகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை அறியத் தேவையான ஆய்வுக் குழுக்களை அமைத்து மாநில அரசு

தீண்டாமையை ஒழிக்க வகை செய்கிறது "குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் 1955" பிரிவு 15 A (iv)

"குடியுரிமை" என்பதை இச் சட்டம் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. அரசியல் அமைப்புச் சட்டம் விதி 17—இன் படி "குடியுரிமை" என்பது தீண்டாமையை ஒழிப்பதால் ஒரு குடிமகனுக்குக் கிடைக்கக் கூடிய உரிமைகளாகும்.

*குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் முக்கிய சரத்துக்கள்:*

குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் முக்கிய சரத்துக்கள் வருமாறு:

I) விசாரணைக்குரிய எல்லாத் தீண்டாமை வழக்குகளும் பழைய சட்டத்துடன் இணைக்கப்படக் கூடிய வழக்குகளே என்னும் விதி அவை விசாரணைக்குரியதே என்றும் ஆனால் அவை மற்ற சட்டங்களுடன் இணைக்கப்படமுடியாதவை என்றும் மாற்றப்பட்டுள்ளது.

II) தீண்டாமைக் குற்றத்திற்கான தண்டனை 6 மாதச் சிறை அல்லது, ரூ.500/= அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்தது. முதல் முறையாகச் செய்த இக்குற்றத்திற்குக் குறைந்த அளவு ஒரு மாதம் சிறை தண்டனை ரூ.100/= அபராதம் முதல் 6 மாதம் சிறை ரூ.500/= அபராதம் வரையிலாகும். இக் குற்றம் இரண்டாம் முறை செய்யப்பட்டால் குறைந்த அளவு தண்டனை 6 மாதம் சிறை ரூ.200/= அபராதம். முதல், அதிகஅளவு தண்டனை 6 மாதம் சிறை ரூ.200/= அபராதம் வரையிலாகும். இக் குற்றம் மூன்றாவது முறை அல்லது அதற்கு மேலும் செய்யப்பட்டால் 1 ஆண்டு சிறை ரூ.500/= அபராதம் முதல் 2 ஆண்டு சிறை ரூ.2000/= அபராதம் என மாற்றப்பட்டுள்ளது.

III) தண்டிக்கப்பட வேண்டிய இக் குற்றங்களை விசாரணை செய்வதில் அலுவலகர் பாராமுகமாக இருந்தால், மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி அவ்வலுவலரும் தண்டிக்கப்பட வேண்டியவரே.

IV) இச்சட்டம் தீண்டாமைக் குற்றங்களைச் செய்தாலோ அல்லது செய்வதற்குத் துணைபோனாலோ அவர் வாழும் பகுதியிலுள்ள

அனைவருக்கும் கூட்டுஅபராதம் விதிக்கக் கூடியவகையில் மாநில அரசு சட்டம் இயற்ற அதிகாரம் இச்சட்டம்.

V) மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுடன் இணைந்து மத்திய அரசும் செயல்படும் பொறுப்பை இச் சட்டத்தின் பிரிவு 15—Aப்படி முதல் முறையாக மத்திய அரசு ஏற்றுள்ளது. மத்திய அரசும் மாநில அரசும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள மேற்படி சரத்தை நடைமுறைப் படுத்துவதில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்க வேண்டும். இப்பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

VI) சட்ட உதவி மற்றும் வழக்குகள் தொடர, வழக்கு நடை முறையைக் கண்காணிக்க வேண்டிய அதிகாரிகளை நியமிக்க, இதற்காகச் சிறப்பு அல்லது சுழலும் நீதி மன்றங்களை அமைக்க, சரியான அதிகார மட்டங்களில் ஆய்வுக் குழுக்களை நியமிக்க, இச்சட்ட விதிமுறைகளை நடைமுறைப் படுத்துவதை மேற்பார்வையிட, தீண்டாமையால் மக்களுக்குச் சிரமங்கள் ஏற்படும் பகுதிகளைக் கண்டறிய, தீண்டாமை ஒழிப்பிற்குத் தேவைப்படும் பிற நடவடிக்கைகளை எடுத்திடக் குடியுரிமைப் பாதுகாப்பச் சட்டப் பிரிவு A (2)—இன்படி மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

VII) பொதுவான குற்றவியல் வழக்கு முறையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளையும், நிச்சய மற்ற தன்மைகளையும் உணர்ந்து, தீண்டாமை தொடர்பான சட்டங்கள் ஒரு காகிதப் புலியாக அமையாத வண்ணம், குடியரிமைப் பாதுகாப்புச் சட்டம் இவ் வழக்கு முறைக்காகவும், இச்சட்டப்படியான வழக்குகளின் சாட்சி முறைகளிலும் சில சிறப்புச் சட்டங்களைக் கொண்டுள்ளது. இது பற்றிய தகவல்கள் பிற்சேர்க்கை III- இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1981—மக்கள் தொகைக்கணக்கெடுப்புப்படி இந்திய மக்கள் தொகை 6851.85 லட்சமாகும். தமிழ் நாட்டு மக்கள் தொகை 484.08 லட்சமாகும். இதில், இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட

இனத்தவர் 15.4.% உம் தமிழ் நாட்டளவில் 18.35% உம் ஆவர். 1991–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி இந்திய மக்கள் தொகை 8463.026 லட்சம்; தமிழ் நாட்டில் மக்கள் தொகை 558.59 லட்சம். தமிழ் நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் 63.72% இதில், 107.12 லட்சம் மக்கள் தொகை கொண்ட சாதியினர் 19.08% பழங்குடியினர் 1.03% அதாவது 5.74 லட்சம், கல்வி அறிவு பெற்றோர் தாழ்த்தப்பட்ட சாதியினர் 46.76%; பழங்குடியினர் 27.89% இது 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படியாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்ட மாநிலங்களுக்கான வழிகாட்டுக் கொள்கையில்'' மாநில அரசு எளியோரின் கல்வி, பொருளாதார வாழ்க்கை மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்த வேண்டும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் நல்வாழ்விற்காகச் செயல்பட வேண்டும் அவர்களைச் சமூக அநீதியிலிருந்தும், எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறுகிறது.

எனினும் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் உயர வேண்டிய அளவிற்கு உயரவில்லை. ஏனெனில், அவர்களின் மேம்பாட்டிற்காகப் போதுமான அளவு பொதுச் செலவினத் தலைப்பின் கீழ் நீதி ஒதுக்கப்பட வில்லை. மாநில, மத்திய அரசுகள் தாழ்த்தப்பட்ட இனத்தவர் நலனுக்காக 1979–80 வரையிலான ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவான ரூ.433.24 கோடியேயாகும். "அரசியல் அமைப்பச் சட்டத்தின் வழிகாட்டுதலும், சட்டசபை, மற்றும் அரசுச் செயலகங்களின் முயற்சிகள் இருந்த போதிலும், பொருளாதார ஆதரவு இல்லாததால் தாழ்த்தப்பட்ட சாதி, மற்றும் பழங்குடியினரின் மேம்பாடு குறிப்பிடும் அளவிற்கு உயரவில்லை''[16] என்று ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட ஆவணம் கூறுகிறது.

எனவே தாழ்த்தப்பட்ட இனத்தவர் உயர்விற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட இனத்தவர் வறுமைக் கோட்டிலிருந்து மீள்வதற்காக மைய அரசு சிறப்பு இணைத்திட்டத்தின் மூலம் பல மாநில அரசுகளுக்கு மைய அரசின் சிறப்பு உதவித் தொகையை வழங்கியது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் படி பிரிவுகளை சிறப்புற நடை முறைப்படுத்த வேண்டிப் பல நிர்வாக அமைப்புகளைத் தோற்றுவிக்கப் பொருளுதவி செய்தது.

தாழ்த்தப்பட்ட இனத்தவர் சட்ட உதவி பெற்றிட தமிழக அரசு "தமிழ் நாடு அரசுச் சட்ட உதவி ஆலோசனைக் குழு" மூலம் வசதி செய்து கொடுத்தது. இது "சங்கப் பதிவுச் சட்டப்"படி பதிவு செய்யப்பட்டதாகும். தன்னுடைய 98 குழுக்கள் மூலம் இது விரிவான முறையில் செயல்படுகின்றது. மாநிலம் முழுவதுமாக 33 சட்ட உதவி முகாம்களை இந்த அமைப்பு நடத்தியுள்ளது. தமிழ் நாட்டு ஆளுநரே இந்த அமைப்பிற்குத் தலைவராவர். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டச் செயல்பாடு பற்றிய 1984—க்கான ஆண்டறிக்கையின்படி "தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்குச் சட்ட உதவி செய்திடத் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 141 சட்ட உதவி முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த அமைப்பு 8753 விண்ணப்பங்களைத் தாழ்த்தப்பட்ட இன மக்களிடமிருந்த பெற்றுள்ளது."[17]

### *தீண்டாமை ஒழிப்பில் காவல்துறையின் பங்கு:*

தமிழ் நாட்டில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துதல் பற்றிய காரியங்களைக் கவனித்திட ஒரு துணைச் செயலரையும் (Deputy Secretary) ஒரு உதவிச் செயலரையும் (under Secretary) மற்றும் தேவையான உதவியாளர்களையும் கொண்ட சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தைச் செம்மையாக அமுல் செய்யும் பொருட்டும், அதை நடத்திச்செல்லவும், மேற்பார்வையிடவும் ஒருங்கிணைக்கவும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப் பிரிவிற்கு ஒரு சரகக் காவல் துறைத்துணைத் தலைவர் (Deputy Inspector general of Police) பதவி உண்டாக்கப்பட்டது.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்த மாநில அளவில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதற்குத் தமிழ்நாட்டு முதலமைச்சரே தலைவர், ஆதி திராவிட நல அமைச்சர் உப—தலைவராவார். இச்சட்டத்திலுள்ள கூறுவானவற்றைச் செயல்படுத்துவது பற்றி விமர்சித்தல், சட்டத்தைச் சரியாகச் செயல்படுத்த வேண்டிய வழிமுறைகள் பற்றி ஆலோசனை கூறுதல், சமூகக் கேடான தீண்டாமையை ஒழிக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அரசுக்கு ஆலேசானை கூறி, உதவுதல் போன்றவையே இக்குழுவின் குறிக்கோளாகும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டச் செயல்பாடு, தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கு ஏற்படும் கொடுமைகள் பற்றிய பிரச்சினைகள், தாழ்த்தப்பட்ட இனத்தவர் மதம் மாறிய பின்பு ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவற்றை விமர்சனம் செய்திட அரசுத் தலைமைச் செயலாளரால் இரு வாரங்களுக்கு ஒரு முறை கூட்டம் கூட்டப்படும். அத் தலைமைச் செயலாளர் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்பிரிவு சரகக் காவல்துறை துணைத் தலைவருக்கு அவர் செய்ய வேண்டிய பணி விவரங்களைக் கூறுவார். மாவட்ட அளவில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் அமுல் பற்றிய விமர்சனம் மாவட்ட ஆட்சியாளரால் அவ்வப்போது கூட்டப்படும் கூட்டத்தில் விமர்சிக்கப்படும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை மட்டும் விசாரணை செய்யத் தமிழ் நாட்டில் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி. மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒரு முதல் வகுப்பு நீதிபதியும் அவருக்கு வேண்டிய அலுவலர்களும் கொண்ட நீதி மன்றங்கள் 1982 முதல் செயல்பட்டு வருகின்றன. 1984—ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின்படி இந்த நீதி மன்றங்களில் 1757 வழக்குகள் நடத்தப்பட்டுள்ளன. (பிற்சேர்க்கை IV). கடலூர், நாகபட்டினம், கோயமுத்தூர், மதுரை, தென்னார்க்காடு, மாவட்டம், தஞ்சை கிழக்குச் காவல் மாவட்டம், கோயமுத்தூர் நகர்ப்புறம், கோயமுத்தூர் கிராமப்புறம், பெரியார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம்—தெற்கு, ஆகிய இடங்களிலும் இந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று 1984 ஆண்டறிக்கை கூறுகிறது. 1984க்கான புள்ளியியற் குழு தமிழ் நாட்டில் 564 சிற்றூர்கள் தீண்டாமை சார்புடையனவாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை V). இவற்றில் 64 சிற்றூர்கள் புதிதாக இனங்கண்டு கொள்ளப்பட்டவை. தீண்டாமை சார்புடைய சிற்றூர்களில் புலனாய்வு செய்ய வேண்டி, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்பிரிவு (D.I.G) சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் அலுவலகத்திற்கு ஒரு பொருளாதார நிபுணரையும் ஒரு சமூகவியலாளரையும் கொண்ட ஆய்வுக் குழுவை அரசு அமைத்துக் கொடுத்தது. இக்குழு சமர்ப்பிக்கும் ஆய்வறிக்கையை மாவட்ட ஆட்சியாளர்கள் ஆய்ந்து தாழ்த்தப்பட்ட இனமக்களின் இன்னல்களைக் களைந்திட ஆவன செய்ய வேண்டும்.

***தீண்டாமையை ஒழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்***

தீண்டாமையின்பால் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து அதன் கேடுகளையும் அதனைப் போக்கிட வேண்டிய அவசியத்தையும் அவர்களுக்கு உணர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் "ஆதிதிராவிட நலவாரம்" கொண்டாட முடிவெடுக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் நடத்தப்படும் இவ்விழாக்களில் தீண்டாமைக் கேடுகள் வலியுறுத்தப்பட்டன. தமிழ் நாட்டில் ஒரு விளம்பரப் பிரிவைப் போதுமான அலுவலர்களுடன் அரசு அமைத்துள்ளது. சுவரொட்டிகள் அச்சடிப்பதற்கும், படக்காட்சி சாலைகளில் காட்டுவதற்கான கண்ணாடித் தட்டுகளைச் (Slides) செய்வதற்காகவும் தமிழக அரசு ரூ.1.69 இலட்சத்தை 1984—ஆம் ஆண்டு செலவு செய்துள்ளது. இந்த விளம்பர உத்திகள் அனைத்தும் தீண்டாமை நிலவிடும் சிற்றூர்களில் மிக அதிகமாகப் பயன்படுத்தப் பட்டன. தீண்டாமை ஒழிப்புப் பற்றி 16 மி.மீ, 35 மி.மீ.—இல் "தீர்த்தயாத்திரை" என்ற பெயரில் ஒரு செய்திப்படத்தை அரசு தயாரித்து தீண்டாமை நிலவும் சிற்றூர்களில் 104 இடங்களிலும் திரை அரங்குகளிலும் திரையிடப்பட்டது. இந்த 104 சிற்றூர்களிலும் சிற்றூர் அளவிலான "சிற்றூர்க் குழுக்கள்" அரசு அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்டு, ஆதி திராவிடர்கள், ஆதி திராவிடரல்லாதோர் கூட்டங்கள் நடைபெற்றன.

கலப்புத்திருமணங்களை ஊக்குவிக்கும் முகமாக அதற்கு அரசு பரிசுகள் வழங்கியது. 1984—இல் ரூ.4000/=க்கான தேசிய சேமிப்புப் பத்திரம், கல்யாணச் செலவிற்காக ரூ.300/= ஒரு பாராட்டுப் பத்திரம் எட்டு கிராம் எடை உள்ள 14 காரட் தங்கப் பதக்கம் ஆகியவை கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குக் கொடுக்கப்பட்டன. மருத்துவக் கல்லூரியில் ஆறு இடங்களும் பொறியியற் கல்லூரியில் ஐந்து இடங்களும் கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டன. தமிழ் நாடு அரசால் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் படி எடுக்கப்பட்ட சட்ட உதவி, குழுக்கள் அமைத்தல், சிறப்பு நீதிமன்ற அமைப்பு, தீண்டாமை சார்புடைய இடங்களைக் கண்டறிதல் தீண்டாமை பற்றிய விளம்பரங்கள் ஆகிய நடவடிக்கைகளால் தமிழ் நாட்டில் தீண்டாமையின் இறுக்கம் பல இடங்களில் தளர்ந்துள்ளது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி எடுக்கப்பட்ட முக்கியச் செயல்பாடுகளால், குறிப்பாகத் தீண்டாமை இருந்த இடங்களில், ஆதிதிராவிடர்—ஆதிதிராவிடரல்லா தோருக்கிடையேயான மோதல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

குடியுரிமைப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் காவல்துறை பதிவு செய்யும் வழக்குகள்:

தமிழ் நாட்டில் 1980 முதல் 1986 வரையிலான காலகட்டத்தில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளின் பட்டியல் பிற்சேர்க்கை—VI—இல் மாவட்டவாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1984—இல் அதிக எண்ணிக்கையில் வழக்குகள் பதிவாகியுள்ளன. 1984க்குப் பின் இவ்வகைக் குற்றங்கள் இறங்கு முகமாக உள்ளன. "தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர்—கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989"—இல் கொண்டு வரப்பட்ட பின்னர் இவ்வகை வழக்குகள் இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டன. எனவேதான் 1993—யிலிருந்து குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகள் குறைவாக உள்ளன. இக் குற்றங்களின் எண்ணிக்கையை ஆராயும் போது தென்னார்க்காடு, திருச்சி, நாகபட்டினம், தஞ்சாவூர், பெரியார், திருநெல்வேலி ஆகியவற்றில் அதிக பட்சமாக முறையே 192, 1152, 988, 971, 1008 வழக்குகள் 1980 முதல் 1986 வரை பதிவாகியுள்ளன. குறைந்த பட்ச எண்ணிக்கையாகச் சென்னை நகரில் 8—உம் கிழக்குச் செங்கல்பட்டு மாவட்டத்தில் 154—உம் கோயமுத்தூர் நகரில் 318—உம் வழக்குகள் பதிவாகியுள்ளன. பரந்த நோக்குடைய நகர்ப்புறங்களில் தீண்டாமை என்னும் தீய பழக்கம் ஏறக்குறைய மறைந்து விட்டது. என்றே கூறலாம். நிலச்சுவான்தார் முறை நிலவிடும் கடலூர், வில்லுபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சி, பெரியார், திருநெல்வேலி ஆகிய இடங்களில் அது பலமாகக் காலூன்றியுள்ளது. நகரமயமாக்கல் என்பது நினைத்த மாத்திரத்தில் நடப்பதல்ல. எனவே, நகரமயமாக்கல் வெளிப்படையாக நகரத்தில் ஏற்படும் முன்னர் மனிதர்களின் மனம் நகரமயமாவதில் தான் தீண்டாமையை ஒழிப்புதற்கான சமூகப் புரட்சி உருவாக முடியும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப் பிரிவு வகையில் பதிவான வழக்குகளின் விவரங்கள் பிற்சேர்க்கை VII—இல். கொடுக்கப்பட்டுள்ளன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 3—இன் கீழ் (மத சம்பந்தமான இடையூறுகள்) 7 வழக்குகளும், பிரிவு4—இன் கீழ் (சமூக இடையூறுகள்) 31 வழக்குகளும், பிரிவு 6—இன் கீழ் (தீண்டாமை காரணமாகப் பொருள் விற்க, மற்ற சேவைகள் மறுத்தல்)

289 வழக்குகளும், பிரிவு—7—இன், கீழ் (மனதைப் புண்படுத்துதல், திட்டுதல் காரியம் செய்ய விடாது தடுத்தல்) 5,530 வழக்குகளும், 1985 முதல் 1990 வரை பதிவான வழக்குகள் 5857; ஆக 1985—இல் மொத்தம் பதிவான வழக்குகள், 1280 அவற்றின் முகத்தைக் காட்டுகின்றன. 1985 முதல் 1990 வரை பதிவான வழக்குகள் 5857; இவற்றில் சாதிப்பெயர் சொல்லித் திட்டியதாகப் பதிவான வழக்குகள் மட்டும் 5530 ஆகும். இது 1985—90 இல் பதிவான வழக்குகளில் 94 ஆகும். இவற்றில் 1986 முதல் 1990வரை பதிவான வழக்குகள் இறங்குமுகமாகவே அமைந்துள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களின் இன சமூக் பொருளாதாரத் துயரங்களுக்கு ஒரு முடிவு கட்டுவதாகவே இச் சட்டம் அமைந்துள்ளது. இருப்பினும் அவர்களின் பொருளாதாரச் சீர்திருத்த நிலையில் உடனடி மாற்றங்கள் எதையும் இச்சட்ட நடைமுறை ஏற்படுத்தவில்லை என்பதையே இவ்வாய்வு காட்டுகிறது.

அது போல் 1982 முதல் 1996 வரையிலான ஆண்டுகளில் கொலை, காயப்படுத்துதல், கற்பழிப்பு, தீ வைத்தல் இவை போன்ற குற்றங்களுக்கான இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPG) கீழ் இக் குற்றங்களால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின், குற்றவழக்குப் பதிவு தமிழ் நாட்டில் எவ்வளவு என்பது பற்றிய புள்ளிவிவரங்கள் பிற்சேர்க்கை VII-XVII வரை கொடுக்கப்பட்டுள்ளன. இதில் உள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் பதிவான வழக்குகளை ஒப்பிட்டு நோக்கும் போது, முன் குறிப்பிட்ட கருத்திற்கு ஏற்பத் தென்னார்க்காடு, நாகபட்டினம், திருநெல்வேலி மாவட்டங்களில் குற்றங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மதுரை மாவட்டப் புறநகர்ப் பகுதி (Madurai Rural district) சாதி உணர்வு உணர்ச்சிப்பூர்வமாக மேலோங்கி நிற்கும் மற்றுமோர் இடம். இங்குக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படிப் பதிவான குற்றங்கள் குறைவாக இருப்பினும் இந்தியத் தண்டனைச் சட்டப் (IPC) படியான குற்றங்கள் மிகுதியாகவே உள்ளன. இதில் 1982—86 இல் பதிவான வழக்குகள், ஆதிதிராவிடர்கள் பலியாகிப் பாதிக்கப்பட்ட கொலை வழக்குகளாகும். இதுபோல விருதுநகர் தூத்துக்குடி மாவட்டங்களிலும் சாதி உணர்வால் மேல்சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவருக்கும் இடையில் உள்ள இறுக்கமான நிலையைப் பிற்சேர்க்கை VII-XVII காட்டுகிறது. இதில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை, அங்கு தீண்டாமை நிலவிவரும்

தன்மையையும், அச்சட்டத்தின் செயல்பாட்டுத் தன்மையையும் மதிப்பீடு செய்ய உதவுகின்றது. பிற்சேர்க்கை VII-XVII காட்டும் புள்ளி விவரங்கள் தீண்டத்தகாதோர் மீது நடத்தப்பட்ட அக்கிரமங்களையும் கொடுமைகளையும் காட்டுகின்றன.

*தீண்டாமையை ஒழிக்கச் சுழலும் காவலர் குழு:*

மாநில, மாவட்ட அளவில் உள்ள அரசுகள் பல பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரின் வழக்குகளைக் கவனித்துப் பலியானோர்களின் இன்னல்களைப் போக்கிட எல்லா முயற்சிகளையும் செய்துள்ளன என்று குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் 1984—ஆம் ஆண்டறிக்கை"[18] கூறுகிறது.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்—1955—இன்படி தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் (Deputy Inspector General of Police) சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் 1985—இல் கொடுத்துள்ள ஆண்டறிக்கைப்படி[19] தீண்டாமையினால் பாதிக்கப்பட்டோருக்காக குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி மாநிலத்தில், சிறப்புச் சட்ட உதவித் திட்டம் எதுவும் உருவாக்கப்பட்ட வில்லை. எனினும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவருக்குச் சாதாரண (Cvil) குற்றவியல் வழக்குகளில் வேண்டிய உதவியைத் "தமிழ்நாடு அரசு சட்ட உதவி, ஆலோசனைக் குழு" கொடுத்தது. இந்தச் சட்ட ஆலோசனைச் சட்ட உதவிக் குழு பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்பு. இதற்குத் தமிழ்நாடு ஆளுநரே தலைவராவார். 1985க்கான ஆண்டறிக்கைப்படி தாழ்த்தப்பட்ட பட்டியல் இனத்தவருக்கு உதவிட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 224 சட்ட உதவிமுகாம்கள் நடத்தப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரிடமிருந்து உதவிகேட்டு 63,911 விண்ணப்பங்களை இக்குழுமம் பெற்றுள்ளது.

1985—இல் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவிற்கு உதவிட நாட்டில் உள்ள 22 காவல் மாவட்டங்களிலும் சுழலும் காவற்படைகள் அமைக்கப்பட்டன. அதில் ஒரு (Sub-Inspector of Police) காவல் உதவி ஆய்வாளர் (Inspector of Police) காவல் ஆய்வாளர் இரண்டு தலைமைக் காவலர்கள், இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள் இருப்பர்.

இத்துடன் தஞ்சாவூர் மேற்கு, திருச்சிராப்பள்ளி, மதுரை வடக்கு, திருநெல்வேலி, தென்னார்க்காடு, கோயமுத்தூர், நகர்ப்புறம் ஆகிய ஆறு மாவட்டங்களிலும் வழக்குத் தொடரும் குழு ஒன்று காவல் உதவி ஆய்வாளர் (Sub-Inspector of Police) ஒரு தலைமைக் காவலர், ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர்களுடன் இயங்குகின்றது. புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும் போது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு ஒன்றும் அதனுடன் அமைக்கப்படுகிறது என்பது வரவேற்கத்தகுந்த ஒன்றாகும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க ஒரு புள்ளி விவர ஆய்வாளர் (Inspector) ஒரு புள்ளி விவர உதவி ஆய்வாளர் (Sub Inspector) என்ற குழு ஒன்று 22 காவல் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் செயல்படுகின்றது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், மேற்பார்வையிடவும் 378 விரிவு நிலை அதிகாரிகள் (Extension Officers) 378 பஞ்சாயத்துக்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்டள்ள ஆண்டில் ஒரு பொருளாதார நிபுணரும், ஒரு சமூகவியலாளரும் ஜூலை 1985—லிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

1985—இல் இவ்விரு நிபுணர்களும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவிற்குத் தங்களுடைய அவ்வப்போதைய ஆய்வுகளில் பெரிதும் உதவினர். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் புள்ளி விவர ஆய்வாளர் (Inspector) அந்தந்த மாவட்டத்தின் பிற காவலர்களின் உதவியோடு ஆய்வுகளை நடத்துவார். தீண்டாமைக்கு இணக்கமான சிற்றூர்களை ஆய்வு செய்யும் போது, தீண்டாமை நிலவுதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை அறிந்திடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் கொடுக்கும் ஆய்வறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (Superintendents of Police) உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

***கலகத்துக்கு இணக்கமான இடங்களை மாநில அளவிலான அதிகாரிகள் பார்வையிடல்:***

1985—இல், தென்னார்க்காடு மாவட்டம் குறுங்குடி கிராமத்தில் கொட்டு அடிப்பது சம்பந்தமாக இரு சாதிகளுக்கிடையே பெரும் மோதல்

ஏற்பட்டது கலவரத்திற்குப் பின்னர் தமிழ் நாடு காவல் துறைத் தலைவர் "Inspector General of Police, Tamil Nadu பார்வையிட்டுச் சென்றார். பின்னர், தாழ்த்தப்பட்டோர் மற்றம் பழங்குடியினத்தவரையும் பிற சாதியினரையும் சேர்த்து ஒரு கூட்டுறவுப் பால்பண்ணை ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது, எதிரெதிரான சாதி மக்களை இணைத்து ஒன்றுபட வைப்பதும் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதுமே இதன் நோக்கமாகும். அதன்படி 1986 மார்ச் மாதத்தில் "குறுங்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்" என்ற அமைப்பு பதிவு செய்யப்பட்டது. அரசுக் கடிதம் எண் 17507/PIV/86-1, நாள் 24.3.1986– இன்படி பொது மாட்டுத் தொழுவம் கட்டிடவும் பால் மாடுகள் 50 வாங்குவதற்கும் ரூ.1.60 லட்சம் வழங்கப்பட்டது. 50 பால்மாடுகளும் உண்மையிலேயே சாதிக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குயினத்தாருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

தீண்டாமைப் பழக்கத்தின் தன்மைகளையும் கொடுமைகளையும் பற்றிப் புகார் செய்யப்பட்ட வழக்குகளின் போக்குகளையும், அவற்றின் முடிவுகளையும் ஆராய்ந்து அறிக்கை கொடுப்பது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவிலுள்ள சமூகவியலாளரின் பொறுப்பாக உள்ளது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் காவல் துறைத் தலைவர்(Inspector General of Police) நடவடிக்கை எடுப்பதற்கான ஆணை வழங்குவதற்கு வசதியாக ஒவ்வொரு மாதமும், வழக்குகள் பற்றிய விவரங்கள் அவரிடம் கொடுக்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவர்கள் இஸ்லாத்திற்கு மாற்றப்பட்டதன் காரணங்களை இக்குழுவின் சமூகவியலாளர் தனிப்பட்ட முறையில் ஆய்ந்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இக் குறிப்பிட்ட ஆண்டில் நிகழ்ந்த கலவரங்களை ஆராய்ந்த போது, மக்களுடைய பிற குறைகளைத் தீர்த்து வைக்காத காரணத்தினால் தான் இனக்கலவரங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ளன என்பது தெளிவாகின்றது. எனவே, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு காவலர்களைக் கொண்டு, ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளின் (Block Development Officers) ஆலோசனையுடன் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்குத் தேவையான குடிநீர், வீதி விளக்குகள், சுடுகாடு, சுடுகாட்டுப்பாதை, முதலிய வசதிகள் பற்றிய திட்டம் தீட்ட ஆணையிடப்பட்டது.

***தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் உயர்வுக்காகக் காவல் துறை மேற்கொண்ட பல நடவடிக்கைகள்:***

1987—ஆம் ஆண்டிற்கான குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் அறிக்கை[21] தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரின் உயர்வுக்காகச் செய்யப்பட்ட, செய்யவிருக்கும் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

1) தஞ்சாவூர் மாவட்டம் மணலூர், பேறையூர், கருவிளாச்சேரி, கருப்பம்புலம், ஆகிய சிற்றூர்கள் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுமை இழைக்கும் சிற்றூர்களாகக் கணிக்கப்பட்டன. சாதிச் சண்டைகளினால் மேல்சாதி இந்துக்கள் ஆதி திராவிடர்களுக்கு வேலை கொடுக்க மறுத்தனர். இந்தப் பொருளாதாரப் புறக்கணிப்பை ஆராய்ந்து ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்புத்தரும் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் படி குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் பொருளாதார ஆலோசகர் ஆணையிடப்பட்டார்.

அதன்படி, மணலூரில் ஒரு கயிறு சார்ந்த தொழில் அமைப்பை உருவாக்கிப் பேறையூர், கருவிளாச்சேரி கருப்பம்புலம் ஆகிய சிற்றூர்களில் கிளைகளையும் ஏற்படுத்தத் திட்டம் தீட்டி அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மாவட்டச் சிற்றூர் வளர்ச்சித்துறை அலுவலகத்தின் (District Rural Development Agency) திட்ட அதிகாரி (Project-Officer), தஞ்சாவூர், 240 ஆதி திராவிட மக்களுக்கு இத் தொழிலில் பயிற்சி கொடுக்க ஆவன செய்யுமாறு ஆணையிடப்பட்டார். இத்திட்டத்தை மாவட்டச் சிற்றூர் வளர்ச்சித்துறை அலுவலகத்தின் தலைவரான, மாவட்ட ஆட்சியாளர் அரசின் ஒப்புதலுக்கு கடிதஎண் 3317 / 86 / C.1.நாள் 26—8—1986, 20.9.1986 படி அனுப்பிவைத்தார். மாநில அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி மேற்படி அலுவலகத் தலைவர் என்ற முறையில் ஆதிதிராவிட மக்கள் பயிற்சிக்காக ரூ.4.76 இலட்சத்தை தஞ்சை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் (Deputy Inspectors General of Police) சரகக்காவல்துறைத் துணைத்தலைவரால் 21.3.1987—இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நான்கு மையங்களிலும் முதல் தவணையாக 120 ஆதி திராவிட மக்கள் பயிற்சியை முடித்து விட்டனர். 1987, நவம்பரிலிருந்து இரண்டாவது, தவணையாக 120 ஆதி திராவிட மக்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 6.1.1988—இல் ரூ.8.72 இலட்சத்தை மானியமாகவும். ரூ.6.36 இலட்சத்தை மத்திய அரசு சிறப்பு உதவித் திட்டப்படி (Margin money) அடிப்படைமுன் உதவித்தொகையாகவும் மீதிப் பணத்தை வங்கிக் கடனாகவும் அரசு கொடுத்தது. இதற்கான தொழிற் கூடங்கள் கட்டுவதற்காகப் பயன்படுத்திய நிலங்கள் பற்றிய விவரங்களாவன:

1) மணலூர்: Rs எண் 313/C/E2. அருள் மிகு அச்சய நாதசுவாமி தேவஸ்தானம், திருவாடு துறை ஆதீனம் பரம்பரை தர்மகர்தாவிடமிருந்து 304 ஏக்கர் நிலம் 99 ஆண்டுகளுக்கான குத்தகையாகப் பெறப்பட்டது.

2) பேறையூர்: Rs. எண் 418/1/படி 120 ஏக்கர் நிலம் பேறையூரில் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டது.

3) கருவிளாச்சேரி: Rs. எண் 87/1 படி புறம்போக்கான 0.70 ஏக்கர் நிலம் மருதநல்லூர் சிற்றூரில் கிடைத்தது. இந்த நிலத்தைப் பயன்படுத்த வருவாய்த் துறையின் அனுமதி பெறப்பட்டது.

4) கருப்பம்புலம்: இதனருகில் உள்ள சிற்றூரான ஆதனூரில் 0.30 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்காகக் கிடைத்தது. கட்டிடங்கள் கட்டுவதற்கும் வேண்டிய இயந்திரங்கள் வாங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை, தெக்கத்தூர் (The kathur) தீண்டாமை சார்புடையதாய் காணப்பட்டது. களஆய்வின் போது இங்குள்ள ஆதிதிராவிட மக்கள் தங்களுக்குப் பாய்முடையப் பயிற்சியளிக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதனுடன் தொழில் துவங்கிட வங்கிக் கடன் வசதி ஏற்பாடு செய்து தரக்கோரினர். எனவே, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் (Deputy Inspector General of Police) காவல்துறைத் துணைத்தலைவர் பாய்முடையும்

பயிற்சிக்கும், உற்பத்தி மையம் அமைப்பதற்குமான ஒரு திட்டத்தைப் புதுக்கோட்டை மாவட்டச் சிற்றூர் வளர்ச்சி அமைப்பிற்கு எண் 11/ECO/PP/87 நாள் 26—6—1986 கடிதத்தில் அனுப்பியிருந்தார்.

ஒவ்வொரு சிற்றூருக்கும் 20 ஆதி திராவிடப் பெண்கள் விராலிமலை, தெக்கத்தூர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 18.8.86 முதல் பாய் முடைதலில் பயிற்சி கொடுக்கப்பட்டது. வங்கிக் கடன் கிடைக்கும் பட்சத்தில் இப்பயிற்சி பெற்றோர் ஆதாயத்துடன் இத் தொழிலில் ஈடுபட முடியுமென்று கருதினர். எனவே அவர்களின் கடன் விண்ணப்பங்கள் இந்தியன் ஓவர் சீஸ் வங்கி, விராலிமலை; ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, திருமயம் ஆகிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டது. பயிற்சி பெற்ற தெக்கத்தூர் ஆதி திராவிட மக்கள் 20—பேருக்கும் ஒரு நாளைக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை சம்பாதிக்கும் பொருட்டுத் திருமயம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.1500/= கடன் கொடுத்தது.

3) அண்ணா மாவட்டம் நத்தம் என்ற நகரில் ஆதி திராவிடர் குடியிருப்பில் நடந்த ஆய்வில் அங்கு தீண்டாமை புழக்கத்தில் இருப்பது தெரியவந்தது. அங்குள்ள ஆதிதிராவிட மக்கள் தங்களுக்கு நார் உரித்துக் கயிறு திரிக்கும் நிறுவனம் ஒன்றை அமைத்துத் தரும்படி வேண்டினர். அதற்கான சூழலைப் பொருளாதார நிபுணர் ஆய்ந்து, 40 ஆதி திராவிட மக்கள் கயிறு திரிக்கும் ஓர் அமைப்பை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலேயே நிறுவிடத் திட்டம் வகுத்துப் பரிந்துரை செய்தார்.

40 ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கயிறு திரிப்பதற்குப் பயிற்சி அளிக்கக் கேட்டு அண்ணா மாவட்டச் சிற்றூர் வளர்ச்சி அமைப்பின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடித எண் 19/ECO/Co-op / 86 நாள் 11.8.86, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் (Deputy Inspectore General of Police) சரகக்காவல் துறைத் துணைத்தலைவர் அனுப்பிவைத்தார். பரிந்துரை ஏற்கப்பட்டு 35 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு திண்டுக்கல் மாவட்டச் சிற்றூர் வளர்ச்சி அமைப்பு பயிற்சி கொடுத்தது. நத்தம் ஒன்றிய வளர்ச்சித்துறை அதிகாரி (Block Development Officer)35 ஆதிதிராவிட இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து 29.4.87—இல் பயிற்சியைத்

தொடங்கினார். அவர்களின் 6 மாதப் பயிற்சிக்குப் பின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் (Deputy Inspector General of Police) சரகக் காவல் துறைத் துணைத் தலைவர் மாவட்டச் சிற்றூர் வளர்ச்சி அமைப்பிற்கு கடிதம் அனுப்பினார். அதில் 35 ஆதி திராவிட இளைஞர்களுக்கு வங்கிக் கடனுதவி வழங்கவும் தொழிற் கூட்டுறவுக் கழகம் அமைத்திடவும் ஏற்பாடுகள் செய்தார்.

4) விருதுநகர் மாவட்டம் சேத்தூர், (Seithur), சோழபுரம், முகவூர், (Muhavoor), தளவாய்புரம்.(Thalavaipuram) ஆகிய சிற்றூர்கள் தீண்டாமை அதிகமாக புழக்கத்தில் உள்ள சிற்றூர்கள். இங்கு நடத்திய ஆய்வில் அங்கு படித்து வேலை இல்லாத ஆதிதிராவிட இளைஞர்கள் TRUSEM அமைப்பில் விசைத்தறி நெசவு செய்யப் பயிற்சி பெற்றவர்கள் அங்கிருப்பது தெரியவந்தது. எனவே அந்த இளைஞர்களை விசைத்தறி நெசவில் அமர்த்திட ஒரு திட்டம் தீட்டப்பட்டது.

ஒரு நபருக்கு 2 விசைத்தறி என்று 25 இளைஞர்களுக்கு ரூ.22 இலட்சம் செலவில் விசைத்தறி அமைக்கத் திட்டமிட்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் சரகக் காவல்துறைத் துணைத் தலைவர் கடிதம் எண் 4/ECO/PP/ 86 நாள் 5.8.81—இல் சட்டமுறைப்படியான அரசு ஒப்புதல் வேண்டி அரசுக்குக் கடிதம் அனுப்பினார். எண் 98829/Sept) 86—1 இதற்கு 6.3.87—இல் அரசு சட்டப்படியான ஒப்புதல் அளித்தது. இதற்கு மானியமாக ரூ.6.907 இலட்சமும் ரூ.5.112 இலட்சம் அடிப்படை முன் பணமாகவும் (margin money) மீதி ரூ.9.981 இலட்சம் வங்கிக் கடனாகவும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

5) கடிதம் எண் 12 / ECO / PP / 86 நாள் 11.3.86—இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் நலத்திட்டம் ஆரம்பிக்க குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு சரகக்காவல்துறைத் துணைத்தலைவர் கோரிக்கை விடுத்தார். இராமநாதபுரம் மாவட்ட காவல்துறை (Superintendent of Police) கண்காணிப்பாளர் (D.O. கடிதம் எண் முதுகுளத்தூர் தாலுகா செவல்பட்டிக் சிற்றூரில் 177 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.15 இலட்சம் செலவில் 77 ஆதி திராவிடக் குடும்பங்கள் பயனடைய ஒரு உப்பளம்

கடிதம் எண் 19 / ECO / Coop / 86 நாள் 30.6.1987—இல்
கடிதம் எண் 4 / ECO / PP / 86 நாள் 5.8.81—இல்
கடிதம் எண் 12 / ECO / PP / 86 நாள் 11.3.86—இல்
(D.O. கடிதம் எண் 37/ PCR.56 / 86 நாள் 3—5—86—இல்

அமைக்கத் திட்ட அறிக்கை ஒன்றைக் கொடுத்தார்.[1]

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி அமைப்பு மேற்படித் திட்டத்திற்குத் தேவையான நிலத்தைப் பெறுவதற்கான செலவு ரூ.8.85 இலட்சத்தை அவ்வமைப்பே ஏற்றுக் கொள்ள வேண்டுகோள் விடுத்தார்.[2]

திட்ட இயக்குனர் அந்த இடத்தைப் பார்வையிட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கினார்.[3] மேலும் ரூ.15.76 இலட்சத்தில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இதில் 18 கிணறுகள் தோண்ட ரூ.9.79 இலட்சமும், குழாய்—அறை கட்டவும் இயந்திரங்கள் மற்றும் பிற பொருட்கள் வாங்கவும் இரு கூடங்கள் (Sheds) அமைக்கவும், மண்ணால் (bunding) கரை கட்டுதல் மற்றும் வாய்க்கால் வெட்டுவதற்காகவும் ரூ.5.79 இலட்சமும் கேட்டு அதற்கான ஒப்புதலை விரைவில் அளிக்கக் கோரித் தமிழக அரசிற்கு விண்ணப்பித்திருந்தார்.

6) சேலம் மாவட்டம் நாமக்கல் தாலுகா மரூர்பட்டிச் சிற்றூர் தீண்டாமை சார்புடையதெனத் தெரிய வந்தது. இச்சிற்றூரில் ஆய்வு நடத்திய போது அங்குக் கோரைப்பாய்முடைதற்கான கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தரும்படி ஆதிதிராவிட மக்கள் வேண்டினர்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் சரகக் காவல் துறைத் துணைத் தலைவர் இச் சங்கம் அமைக்க அனுமதி கேட்டு அரசுக்குக் கடிதம் எழுதினார்[4] அதோடு ஆதிதிராவிட மக்களின் பயிற்சிக்காகவும், அவர்களின் வேலைக்காகவும் ஒரு திட்டம் தீட்டப்பட்டு ரூ.1.65 இலட்சம் கேட்டு அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. இது அரசின் பார்வையில் உள்ளது.

7) தர்மாபுரி மாவட்டம் பொண்ணாகரம் தாலுகா எர்ரா பயனகல்வி, இராமர்கூடல் ஆகிய சிற்றூர்களில் தீண்டாமைப் புழக்கம் உள்ளதாக அறியப்பட்டது. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் (Special Central Assistance Programmce) 100 ஆதிதிராவிட மக்களுக்கு ரூ.11.17 இலட்சம் செலவில் சர்க்கா பட்டுச் சுற்றுவோர் கூட்டுறவுச் சங்கம்

கடிதம் 12/ECO/PP/86 நாள் 14.6.86—இல்

D.O.கடிதம் எண் R4/86/4622 நாள் 25.6.86—இல்

கடித எண் 13/ECD/MPCS/86 நாள் 3.3.1986—இல்

(Charka Silk Rellers Co-operative Society) அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், தர்மபுரி மாவட்டத்தில் 50 சர்க்காக்களை நிறுவுவது கூட இயலாத செயல் என்று பட்டுப்புழு வளர்ப்புத் துறையின் இயக்குனர் தெரிவித்தார். ஏனெனில் தர்மபுரி கிருஷ்ணகிரி வாணியம்பாடிச் சந்தைகளில் போதுமான அளவு பட்டுப்புழுக் கூடுகள் கிடைப்பதில்லை. அதற்கு ஏற்பத் திட்டம் மாற்றப்பட்டு 10 சர்க்காக்கள் 360 கதிர்களுடன் கூடிய பட்டு நூற்பு நிலையம் ஆரம்பித்து 30 முதல் 40 பேர்களை வேலைக்கு அமர்த்துவது என்று முடிவாகியது. திருத்தங்கள் ஏற்கப்பட்டுத் திட்டங்கள் மாற்றப்பட்டு அரசு பரிசீலனையில் உள்ளது.

8) திருப்புரம்பியம் சிற்றூரில், இடுகாட்டிற்குச் செல்லும் பாதை சம்பந்தமாக வன்னியர்களுக்கும், தேவேந்திர குல வேளாளர்களுக்கும் மோதல் ஏற்பட்டுக் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேர்ந்தது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட சரகக் காவல் துறைத் துணைத் தலைவர் திருப்புரம்பியம் சென்று பார்வையிட்டார். வன்னியர் தெருவழியாகச் செல்ல உரிமை கேட்கும் தேவேந்திர குல வேளாளர்கள் தங்கள் சகோதாரர்களை பறையர் குலத்தவர் தங்கள் வீதி வழியாகச் செல்ல அனுமதி மறுத்தது ஒரு முரண்பாடான செயலாகும்.

தீண்டாமை நிலவிடும் இடங்களை அறிவதற்குக் காவல் துறையினர் பின்பற்றும் புதிய விதிகள்:

1) தேநீர்க் கடைகள், முடிவெட்டுமிடங்கள், உணவு விடுதிகள், மதச்சார்பான இடங்கள் மற்றும் திருவிழாக்களிலும் சாதிப்பெயர் சொல்லித் திட்டுவதிலும், வேலை கொடுப்பதிலும், இன்னோரன்ன பிற வழிகளிலும் வேறுபாடு காட்டுதல் தீண்டாமைப் புழக்கத்தைக் குறிக்கும்.

2) பழங்காலப் பழக்கங்களான, இறப்புச் செய்தியைப் பிறருக்குச் சொல்லி அனுப்புவது, இறுதிச் சடங்குகள் மற்றும் திருவிழாக்களில் பறை கொட்டுவது, இறந்தோரைப் புதைத்திடக் குழி தோண்டுவது, ஆகிய செயல்களைச் செய்திட ஆதிதிராவிடர்களைக் கட்டாயப்படுத்துவது போன்றவை தீண்டாமையைக் கடைபிடிப்பதாகும்.

3) தீண்டாமைப் புழக்கம் பற்றிய புகார்கள்.

4) தேவைக்குக் குறைவான குடிநீர்நிலைகள் இருத்தல்.

5) ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளில் மின்விளக்குகள் இல்லாமை, இடுகாடுகள் இல்லாமை, ஆதிதிராவிடக் குடியிருப்பிலிருந்து சுடுகாட்டிற்குச் செல்ல வழியில்லாமை, போன்றவை தீண்டாமையின் அறிகுறிகளாகும்.

6) ஆதிதிராவிடக் குடியிருப்புப் பகுதிகளுக்கு இணைப்புச் சாலை இல்லாமை.

7) சாதி மதச் சமூக வேறுபாடு காட்டுவதால் சிற்றூர்களிலிருந்து ஆதிதிராவிடக் குடும்பங்கள் வெளியேறுதல்.

*தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகக் காவல் துறை ஆற்றும் பணிகள்.*

தீண்டாமைக் கொடுமையை ஒழிப்பதற்காக 1987—இல் சில சிறப்பு முயற்சிகள் காவல் துறையால் மேற்கொள்ளப்பட்டன. தீண்டாமை அடிப்படைக் காரணமாகயிருந்து, பின்னர் அது சாதிக் கலவரமாக மாறும் பகுதியில் உள்ள களக்காவல் துறையினருக்குக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழுவின் சரகக் காவல் துறைத் துணைத் தலைவர் (Deputy Inspector General of Police) கீழ்க்காணும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

1) தீண்டாமைச் சிக்கல் வளர்ந்து அது ஒரு பெரிய சாதிக் கலவரமாக மாறுவதற்கு முன்னரே சூழ்நிலையை அறிந்து கொண்டு விரைவாகச் செயல்பட்டு நிலைமை மோசமாகிவிடாது காக்க வேண்டும்.

2) உயர் சாதி இந்துக்கள் சமூக மத காரியங்களில் ஆதி திராவிட மக்களுக்கு எதிராக சாதிய அடிப்படையில் வேறுபாடு காட்டுவதைக் காவல் துறையினரே வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

3) தீண்டாமை நிலவிடும் சிற்றூர்களுக்குக் காவல் துறையினர் வாரம் ஒருமுறை சென்று பார்வையிட வேண்டும். இது அந்தச் சிற்றூர் மக்களிடம் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் சரகக் காவல் துறைத் தலைவர் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அலுவலகங்களில் கிடைக்கும் செய்திகளையும் பதிவான வழக்குகளையும் ஆராயத் தேவையான வழிமுறைகளை அறிவிப்பார். இந்த ஆய்வு பின் வருமாறு நடத்தப்பட வேண்டும். தீண்டாமை இருக்கக் கூடிய சிற்றூர்களில் முறைப்படி ஆய்வு நடத்தி ஆதி திராவிடர்களுக்கு எதிரான செயல்களைக் குறித்து அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிய வேண்டும். இவ்விவரங்களைத் தாழ்த்தப்பட்ட சாதியினரிடமிருந்து பெற்றிட வேண்டி 19 பக்கங்கள் கொண்ட ஒரு வினாநிரல் தயாரிக்கப்பட்டது. அது மக்களிடையே கொடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. கீழ்க்காணும் விதத்தில் அந்த ஆய்வுக் கேள்விகள் கொண்ட வினாநிரல் அமைக்கப்பட்டது.

பகுதி A : பொதுவிவரங்கள்

பகுதி B : சமூக மத இடுக்கண்கள்

பகுதி C : தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரின் அவலங்கள்.

1984, 1988—இல் 414 சிற்றூர்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல் செய்வது தொடர்பாக 2.1.1989—இல் கூட்டப்பட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக் கூட்டத்தில், தீண்டாமை நிலவும் சிற்றூர்கள் இவையிவை என முடிவு செய்யத் தற்போது கடைப்பிடிக்கப்படும் விதி முறைகள் அவ்வளவு விரிவானதாகவும் குறையற்றதாகவும் இல்லை. எனவே இவ்வளவு கோலை மாற்ற வேண்டுமெனத் தமிழ் நாடு அரசின் தலைமைச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய விதிமுறைகளின் படி 1989—இல் ஒரு பெரிய பரந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 26062 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினக் குடியிருப்புகளும் 4293 இருப்பிடங்களும் தீண்டாமை நிலவும் பகுதிகளாக அறியப்பட்டது. இந்த ஆய்வறிக்கை தீண்டாமை நிலவும் சிற்றூர்களில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரின் அவலங்களைத் தெளிவாகக் காட்டுகின்றது. இதன் விவரங்கள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டுத் தாழ்த்தப்பட்ட இனத்தோரின் அவலங்களைக் களைந்திட ஆவன செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

1983 முதல் 1989 வரையிலான குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் ஆண்டறிக்கைகளை ஆய்ந்ததில் கண்டறிந்த தகவல்கள்.

1) தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. நிலையத்தில் உள்ள அதிகாரிகளுக்கு (Station House Officers) இச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யவும், விசாரணை செய்யவும் அதிகாரமும், கடமையும், உண்டு.

அவர்கள் செயலுக்கு உறுதுணையாக இருக்கவும் இச் சட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தவும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தவும் "குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இச் சட்டத்தைச் செம்மையாக நடைபெறச் செய்வதுடன் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் பொது நலத்திலும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு முனைப்பைக் காட்டியது.

2) தமிழ் நாட்டில் 1984 முதல் ஒவ்வொரு ஆண்டும் சராசரி 1200 வழக்குகள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வந்தன. இக்கால கட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் வழக்குகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்துள்ளது. நடத்தப்பட்ட வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட அநேகர் விடுவிக்கப்பட்டனர். தண்டனை பெற்றவர் எண்ணிக்கை மிகமிகக் குறைவேயாகும். இந்த விவரங்கள் அடங்கிய பிற்சேர்க்கை XVIII இது பற்றிய நிலவரத்தைக் காட்டுகிறது. இதில் 1977 முதல் 1990 வரையிலான குற்றம் சாட்டப்பட்டவர்களில் இந்திய அளவில் விடுதலையானவர்கள் எண்ணிக்கையும், அவர்களில் தமிழ் நாட்டில் விடுதலையானவர் எண்ணிக்கையும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

3) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் தீவிரப் பிரச்சாரத்தினால் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் தங்களுடைய உரிமைகள் பற்றிய பொதுவான விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி பதிவான வழக்குகளை நோக்கிடின் அவற்றில் பெரும்பாலானவை சாதிப் பெயர் சொல்லித்திட்டியவை அல்லது மனம் புண்படும் படியாகப் பேசியது பற்றியவையாகவே

உள்ளன. மத, சமூக இணக்கமின்மையால் உண்டான வழக்குகள் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே தமிழ்நாட்டில் உள்ளன.

4) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தியவுடன் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரல்லாதவர் மற்றும் மேல்சாதி இந்துக்கள் தீண்டாமையைக் கடைப்பிடிக்க மனதில் ஒரு கலக்கத்தை உண்டு பண்ணியது. இதனால் ஒரு ஆண்டில் நடந்த குற்றங்களின் எண்ணிக்கை அடுத்த ஆண்டில் குறைந்துள்ளது.

5) 1984—85—இல் தீண்டாமை நிலவுவதாகக் கணிக்கப்பட்ட 564 சிற்றூர்களில் அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக்கப்பட்டன. 1986—87—இல் தீண்டாமை நிலவுவதாக அறிவிக்கப்பட்ட சிற்றூர்களுக்குக் குடிநீர் வசதி, தெருவிளக்குகள், சுடுகாடு, சுடுகாட்டிற்குப் பாதை, இணைப்புச் சாலை வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அச்சிற்றூர்களின் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (D.O கடிதம் எண் 92 /ECO/Welfare/ 88. நாள் 12.4.1988.[1] இக்கடிதம் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் சரகக்காவல் துறைத் துணைத் தலைவரால் அனுப்பப்பட்டது. பின்னர் இதனை நினைவுப்படுத்த அடுத்தடுத்து நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

6) எந்த உருவத்திலேனும் தீண்டாமை நிலவும் வரையில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார உயர்வு ஏற்பட வாய்ப்பு இல்லை; தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவர் முன்னேற்ற முயற்சிகளும், தீண்டாமை ஒழிப்பு முயற்சிகளும் இணைந்தே செயல்படவேண்டும். இந்த வகையில் தமிழ் நாட்டில் உள்ள குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுக்கள், சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்துவதுடன் காவல்துறையும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் இன்னல்களைப் போக்கிட உதவும் வகையில் ஒரு கருவியாக இயங்குகின்றது.

"கொடுமைகள் சட்டம், 1989"—காவல் துறைச் செயல்பாடுகளை வலுப்படுத்தும்:

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குறிக்கோள்களை முழுமையாக முனைப்பாகச் செயல்படுத்த 1989—இல் மற்றுமோர் சட்டம்

இயற்றப்பட்டது. "தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்—கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989" என்பதே இச்சட்டமாகும். சட்டமன்றத்தில் இதைத் தீர்மானமாக வைத்து அதன் நோக்கங்களை விளக்கும் வகையில் இச்சட்டத்திற்கான காரண காரியங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

"தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டும் அவர்கள் நிலை, இன்னல்களுக்குட்பட்டதாகவே உள்ளது. பல குடியுரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. பல வகைக் கொடுமைகளுக்கும் அவமரியாதைகளுக்கும் பரிகாசத்திற்கும் அலைக்கழித்தலுகளுக்கும் அவர்கள் ஆளாகின்றனர். மிகக் கொடுமையான பல நிகழ்ச்சிகளில் உயிரையும் உடமைகளையும் இழந்து அவர்கள் தவிக்கின்றனர். வரலாற்று, சமூகப் பொருளாதாரக் காரணங்களால் அவர்கள் மிகப் பயங்கரக் கொடுமைகளுக்கு ஆளாகின்றனர்.

பரவி வரும் கல்வி மற்றும் சமுதாயச் செயல்களால் எழுச்சி பெற்ற தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடி மக்கள் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்ட முயல்வதை மற்றவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தாழ்த்தப்பட்ட இனத்தவர் தங்கள் உரிமைகளை நிலை நாட்டும் போது அடிமைத்தனமான வேலையைச் செய்யச் சொல்லி அச்சுறுத்தி அல்லது கொடுமைப் படுத்திப் பணியச் செய்கின்றனர். தாழ்த்தப்பட்ட இனத்தவர் தங்கள் சுயமரியாதையையும் மனைவியரின் கௌரவத்தையும் காக்க முயல்வது பலமுள்ள சுயநலவாதிகள் அவர்களைத் தங்களுக்கு எதிராக நினைத்து தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் போதும் அல்லது சட்டப்படியான குறைந்த பட்சக் கூலியைக் கேட்கும் போதும் உயர் சாதி மக்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துகின்றது. அரசு அவர்களுக்குக் கொடுத்த நிலத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் அதில் பயிர் செய்வது உயர் சாதி மக்களுக்குக் கோபத்தைத் தூண்டுகிறது. அச்சுயநலவாதிகளின் தாக்குதலுக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் பலியாகின்றனர். தற்போது அவர்களுக்கு இழைக்கப்படும் சில கொடுமைகள் மனிதக் கழிவு போன்ற உண்ணத்தகாதவற்றை உண்ணச் செய்தல், நிராயுதபாணிகளாக யுள்ள அவர்களைக் கொடுமையாகத் தாக்குதல். அவர்களை மொத்தமாகக் கொலைசெய்தல், அவர்களின் பெண்களைக் கற்பழித்தல் ஆகியவைகளாகும். தற்போது உள்ள சூழலில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955,

இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal code) ஆகியவை இக் குற்றங்கள் நடக்காமல் தடுத்திடப் போதுமானதாக இல்லை. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களல்லாதவர்களால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த ஒரு சிறப்புச் சட்டம் தேவைப்படுகிறது."[22] இது பற்றிய பிற விவரங்கள் பிற்சேர்க்கை XIX—இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பிற்சேர்க்கை XX—இல் 1990 முதல் 1996 வரை தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட் இனத்தவருக்குக் கொடுமைகள் இழைத்ததாக இந்தச் சட்டத்தின் கீழ்பதிவான வழக்கு விவரங்கள் மாவட்ட வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

கொடுமைகள் என்று இச் சட்டம் கருதும் செயல்கள் பிற்சேர்க்கை XIX—இல் கொடுக்கப்பட்டுள்ளன. இது பற்றித் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான அரசியல் அமைப்புச் சட்ட நடவடிக்கைகள் பற்றி, அவர்களுக்கான சட்டப் பாதுகாப்புப் பற்றி 4—ஆம் அத்தியாயத்தில் விளக்கிடும் போது குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி 17—இல் "தீண்டாமை ஒழிக்கப்படுகிறது" என்பதற்கிணங்கக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955, கொடுமைகள் சட்டம் 1989 ஆகிய சட்டங்கள் தங்களின் இரும்புக் கரங்களால் தீண்டாமையை அழிக்க விருக்கின்றன.

*காவல் துறை கண்ட சாதிமோதல்–காரணங்கள்*

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவர் தங்கள் உரிமைகளை நிலை நாட்ட முயலும் போது அவர்கள் தண்டனைக்குட்பட நேரிடும் என்ற பயம் கொண்டுள்ளனர். அவர்கள் மீது கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அனுபவ ரீதியாக இம் மோதலுக்குக் காரண காரியங்களைக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுவின் ஆண்டறிக்கை கீழ்க்கண்டபடி பட்டியலிட்டுள்ளது.

1. நிலம், வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல்
2. கோவில் திருவிழக்கள்
3. சுடுகாட்டுப் பாதை
4. விவசாயக் கூலி

5. பெண்களைக் கேலி செய்தல்
6. தீண்டாமை
7. வயலில் பிறர் மாடுமேய்தல்
8. தேர்தல்கள்
9. திருட்டு
10. குடிபோதையில் சண்டை
11. சிறு சச்சரவுகள், சைக்கிளில் மோதல் பேருந்தில் இடம் பிடித்தல்.
12. மேல் சாதி இந்துப் பெண் ஆதி திராவிட இளைஞனுடன் ஓடிப்போதல், அல்லது ஆதி திராவிடப் பெண் உயர் சாதிப் பையனுடன் ஓடிப்போதல்.
13. குடிநீர் விநியோகம்.
14. பழிவாங்குதல்.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர், காவல்துறைக் கண்காணிப்பாளர், வருவாய்த்துறை அதிகாரி ஆகியோர் சமூக உணர்வுடனும், முழுமன ஈடுபாட்டுடனும் கடமையுணர்வுடனும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது அவர்களின் கடமையாகும்.

மேல் சாதி இந்துக்களுக்கும் பழங்குடியினத்தவருக்கும் இடையே ஏற்படும் சச்சரவுகளுக்கான காரணங்களை காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளரும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழுவும் முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும்.

காவல் துறைக்குத் தகவல் கொடுப்போருக்குத் துறை அதிகாரிகளின் முகவரியுடன் உள்ள தபால் அட்டைகளைக் கொடுத்து வைப்பது நன்மை பயக்கும். கலவரம் ஏற்படச் சாதகமான சூழ்நிலையுள்ள சிற்றூர்களுக்குக் காவல் துறை உயர் அதிகாரிகள் அடிக்கடி போய் வருவது மிக மிக அவசியம்.

### *குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு மேம்பாட்டிற்கான ஆலோசனைகள்*

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட அலுவலர்கள் சாதாரண உடையில்

செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும். அவர்கள் சீருடை அணிந்திருந்தால் தாழ்த்தப்பட்ட இன மக்கள் அவர்களுடன் மனம் விட்டுப்பேசத் தயங்குவர். அவர்கள் மனதில் ஏற்படும் பயத்தினால் அவர்களிடமிருந்து சரியானதகவல்களைப் பெற்றிட முடியவில்லை. மேலும், தங்களுக்குள்ள குறைபாடுகளையும் இடர்ப்பாடுகளையும் கூட அவர்கள் சொல்லப்பயப்படுகின்றனர். மற்ற மாநிலங்களில் உள்ளது போல குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு ஒரு இரகசியப் புலனாய்வுக் குழுவாக அறிவிக்கப்பட வேண்டும். அதை உளவுத் துறையின் சரகக் கூடுதல் மேலாண்மை இயக்குநரின்(Additional Director General of Police) நேரடி நிர்வாகத்தில் சேர்த்திட வேண்டும். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட இன மக்கள் மீது நடத்தப்படும் கொடுமைகள் பற்றிய, குறிப்பிட்ட சில உணர்ச்சிமயமான வழக்குகளைக் குற்றவியல் புலனாய்வுத் துறைக்குப் (Crime Branch Unit) புலனாய்வு செய்ய ஒப்படைக்க வேண்டும். திறமை மிக்க துறையைக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஈடுபடுத்துவதன் மூலம் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு புத்துயிர் பெற்றிடும். தற்போது அக்குழுக்கள் அரசு அங்கீகாரமும் ஆதரவும் இல்லாததால் அவை பொலிவிழந்து காவல் துறைக் குழுக்களாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் மிக விரிவாக 1989—இல் செய்யப்பட்ட தீண்டாமைச் சார்புச் சிற்றூர்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்விற்கு இந்த ஆராய்ச்சியாளர்களே மூல காரணம் என்பதில் பெருமைப்படலாம். தமிழ் நாட்டில் இவ்வகை ஆராய்ச்சிகளில் தீண்டாமைச் சிற்றூர்கள் பற்றிய ஆய்வே மிகவும் விரிவான ஆராய்ச்சியாகும். தமிழ்நாடு அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் சமூகப் பொருளாதார உயர்விற்கு இவ்வாய்வு பல்வேறு திட்டங்கள் தீட்டி அமல்படுத்த உதவும் குன்றாக உயர்ந்த நிற்கின்றது. இவ்வாய்விற்குத் தமிழ்நாட்டுக் காவல் துறையால் பின்பற்றப்பட்ட விதி முறைகளைப் பின்னர் பிற மாநிலங்களும் பின்பற்றின.

ஆனால், தொன்னூறுகளில் தமிழ் நாட்டில் தென் மாவட்டங்களில் உயர் சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும் இடையில் ஏற்பட்ட கொடூரமான சாதிக் கலவரங்கள் நிகழ்ந்தது வருந்தத்தக்கது. இந்தச் சமூக அவலம் கவலையை உண்டாக்கிய போதிலும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும் அதன் தீவிர அமுல் திட்டங்களும் உயர் சாதி இந்துக்களுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட இன மக்களின் சமூக உள்ளுணர்வை விழித்தெழச் செய்தது. ஒரு சமுதாய விழிப்புணர்வு ஏற்படும்போது, சட்டப்படியான

உரிமைக்கான ஆவல் அதிகரிக்கின்றது. உரிமைக்கான ஆவல் அதிகரிக்கும்போது, நிலவிடும் அடிமைப் பழக்கத்துடனும் சடங்குகளுடனும் அவ்வுரிமை வேட்கை மோதல் கொள்வது இயல்பேயாகும். காரல்மார்க்ஸ்சின் சித்தாந்தப்படி ஒரு கொள்கைக்கும் (thesis) அதன் எதிர்க்—கொள்கைக்கும் மோதல் ஏற்பட்டால் தான் தெளிவான கொள்கை உருவாகும். இந்தப் போக்கு சட்ட ஒழுங்குப் பிரச்சினை நோக்கில் சிக்கலானதானாலும் சமூகப் பரிணாம நோக்கில் ஆரோக்கியமானது; வரவேற்கத் தகுந்ததொன்று. இந்த மோதலின் பிரசவ வலியில் தான் சாதி இனப் பாகுபாடற்ற சமுதாயம் அமையும் வன்முறையை ஒரு கொள்கையாக ஏற்க முடியாது. சட்ட ஒழுங்கையும் இருக்கும் நிலைமையையும் மாற்றிடாது காப்பாற்றுதல் (Status quo) என்பதெல்லாம் நியாயமான எதிர்பார்புக்களைத் தீய்த்திட முடியாது. நம் நாட்டின் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் நிலை "பிறப்பால் மனிதன் சுதந்திரமானவன் (சமூக) அமைப்பால் அவன் ஒரு கைதி" என்ற ரூஸோவின் கருத்திற்கு ஏற்புடையதாக உள்ளது. சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் கழித்தும், நாம், பழக்கத்தால், நாட்டின் நான்கில் ஒரு பகுதி மக்கள் பால் கொண்டுள்ள தீண்டாமை எண்ணத்திலிருந்தும், அற்ப வெறுப்புக்களில் இருந்தும் விடுபட முயலவில்லை என்றால், நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் நீதிகள் வெறும் வாய்ச்சவடால்களேயாகும். உள்ளுணர்வோடு "குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும்," "கொடுமைகள் சட்டமும் அமுல்படுத்தப்பட்டால் தாழ்த்தப்பட்ட இன மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். இச் சட்டங்கள் சமூக இடைவெளியைக் குறைப்பது மட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உயர்சாதி இந்துக்களுக்கும் இடையே உள்ள சமூக மத இடைவெளியைக் குறைப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. இச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்துதல் மூலம் பொருளாதார, சமூகச் சமத்துவங்களை அடைந்திட முடியும், பொருளாதாரச் சமத்துவமும் உயர் சாதி நிலச் சுவான்தார்களிடமிருந்து விடுதலை பெறுவதுமே, தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உறுதியாகக் கூறும். பொருளாதார அரசியல் நீதிகள் கிடைத்திட வழி செய்வதாகும்.

## அடிக்குறிப்புகள்

1. பார்மர், M.S., 'காவல்துறை நிர்வாகப் பிரச்சினைகள் பக்.39
2. ஷாகா, B.P.: "இந்திய காவல்துறை: பாரம்பரியமும் உருவாக்கப் பங்கு முயற்சியும்: பக். 195.
3. காவல் துறையின் சமுதாயத் தொடர்பு. பக். 77—78.
4. காவல் துறைச் சட்டம்—1861 (சட்ட எண் V:1861) இந்தியஅரசு.
5. சகிலேந்திர மிஸ்ரா: "காவல் துறையினர் கொடுமை: காவல் துறை செயல்பாடு பற்றிய ஒரு ஆய்வு.
6. சிங், K.K.,ராகேஷ் பாகா, மத்தியக் குற்றவியல் சாதாரண (mimor) சட்டங்களுக்கு விதிகளும் பக். 838.
7. மேற்படி பக்.838.
8. கோஷ், S.K. "காவல்துறை நிர்வாகிகள்: நினைவலைகள். பக்.42.
9. லேம்பர்ட், J.L., "காவல் அதிகாரமும் பொறுப்பும்" பக். 97
10. டாக்டர் பொன்னையன், M., "குற்றவியலும் தண்டனையியலும்" பக். 211.
11. விக்ரம் சந்திர கோயல்: "ஒழுக்கக் காவல்துறையின் பலம்"பக்.67.
12. காவல்துறையின் சமுதாயத் தொடர்பு,
13. டெப், R. (Deb.R) "காவல் துறையும் சட்ட அமலும்" பக்.2.
14. விதி 17—போலீஸ் அகடெமி.
15. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம். 1955 (சட்டம் 22—1995) இந்திய அரசு.
16. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணம்: குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட ஆண்டறிக்கை இந்திய அரசு.
17. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955—ஆண்டறிக்கை—1984.பக்.53
18. தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு. ஆண்டறிக்கை: 1984.
19. தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு.ஆண்டறிக்கை—1985.
20. 1985—ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955—ஆண்டறிக்கை. பக். 71.
21. தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு.ஆண்டறிக்கை.1987
22. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக் குழுவின் அறிக்கை. தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினர் மீதான கொடுமைகள்: காரணங்களும் போக்கும் வழிமுறைகளும் ஏப்ரல், 1990. பக்.35

முடிவுரை

தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி தீண்டாமை ஒழிப்பில் காவல்துறையின் பங்கு முக்கியமான ஒன்றாகும். இந்திய, வெளிநாட்டு அறிஞர் பலர் சாதி, தீண்டாமை பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளனர். அவை இப்பிரச்சினையின் பலகோணங்களைக் காட்டுகின்றன. அவர்களில் சிலர் ஆதிகாலத்தில் நிலவிய தீண்டாமை பற்றியும், சிலர் இடைக்காலத்தில் இருந்த தீண்டாமை பற்றியும், சிலர் தற்போது நிலவிடும் தீண்டாமை பற்றியும் பேசுகின்றனர். இவற்றில் சில நூல்களே ஆராய்ச்சித் தன்மையுடன் உள்ளன. மற்றவை இப்பிரச்சினை பற்றிய தொகுப்பாகவோ அல்லது விவரங்களாகவோ தான் உள்ளன. ஜான் P.மென்சர் (John P.Mencher), ராபர்ட் டிலீஜ் (Robert deliege), ஆண்ட்ரே பெதல் (Amdre Betelle), முதலியோர் மஞ்சுப்பாளையும், பச்சையூர்(Paccaiyur), செங்கல்பட்டு மாவட்டம், வாழ்கிற மாணிக்கம்(Valghira Manikkam), சிவகங்கை மாவட்டம், தேவகோட்டைப்பக்கம், தஞ்சாவூர் மாவட்டம், ஸ்ரீபுரம் என அவர்கள் தேர்ந்தெடுத்த வட்டங்களுக்குள் ஆராய்ச்சி செய்துள்ளனர். சில நூல்கள் தீண்டத்தகாதோரின் இன்றைய நிலை பற்றிய விமர்சனங்களாகும். இவர்களில் யாரும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப் படியும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படியும் தீண்டாமை ஒழிக்கும் வழிமுறைகள் பற்றி ஆராயவில்லை. இதற்குக் காரணம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் தீண்டத்தகாதோர் மீது ஏற்படுத்தும் பாதிப்பை அதன் செயல்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களால்தான் தெளிவான முறையில் ஆராய்ந்து நடைமுறைப்படி முடிவு சொல்ல முடியும்.

இப்பிரச்சினையைப் பல்வேறு கோணங்களில் ஆராய முடிந்ததற்கான காரணம் ஆசிரியர் காவல்துறை அதிகாரி என்பதே எனலாம். இதன் காரணமாகத் தீண்டாமை பற்றிவரும் வழக்குகள் பிரச்சினைகளில் ஆசிரியருக்கு நேரடித் தொடர்பு உண்டு என்பதால் அவற்றால் ஏற்பட்டுள்ள அனுபவத்தின் பாதிப்புக்கள் இந்நூலாக்கத்திற்கு மிகுந்த பயனாக அமைந்தன. மேலும், தீண்டாமை இந்திய இந்து சமுதாயத்தின் மீதுள்ள ஒரு கரும்புள்ளி என்பதும், அது அவர்களுக்கு இழைக்கப்படும் மிகக்கடுமையான கொடுமை மற்றும் அநீதி என்பதும் பெரிய மற்றும் சிறிய அளவில் இப்பிரச்சினையை அணுகி ஆராய்ந்துள்ளதால் கண்டறிப்பட்டது. எனவே, தீண்டத்தகாதோரின் இன்னல்களை ஒழிக்கச் சரியான

முழுமையான வழிமுறைகளைக் கண்டறிவதே ஆய்வின் நோக்கமாகும். இந்திய அரசியல் சட்டம் எதிர்பார்த்த தீண்டாமை ஒழிப்பு இந்தியா சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகியும் ஏட்டளவில்தான் உள்ளது. எனவே பல்வேறு வகைகளில், பல்வேறு உருவில் பழக்கத்தில் உள்ள தீண்டாமையின் கேடுகளையும் கொடுமைகளையும் இந்த ஆய்வு வெளிக்கொணர முயன்றுள்ளது.

இவை, இப்பொருள் தொடர்பான பிற ஆய்வுகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்ற நோக்கில் சில முடிவுகள், பரிந்துரைகள் மற்றும் சில பட்டியல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தீண்டாமை, இந்திய சமுதாயத்தின் ஒரு பகுதியினர் மீது சமத்துவமாக வாழும் உரிமைக்கு எதிராகத் திணிக்கப்பட்ட ஒரு சமுதாயக் கொடுமை; சமுதாய ஊனம்; இத் தீண்டாமை பிறப்புடன் இணைந்தது என்று கூறப்படுகிறது. தீண்டாமை என்னும் மாசு தொட்டில் முதல் சுடுகாடுவரை ஒருவனைத் தொடர்கிறது.

இந்துக்களிடம் பொதுவாக நிலவிடும் ஒரு விநோதமான பழக்கம் தீண்டாமை. தீண்டாமை என்பது ஒரு இந்திய நோக்கு அதை இந்தியச் சூழ்நிலையிலேயே புரிந்து கொள்ள முடியும்.

உலகின் மற்றப் பகுதிகளில் உள்ள வகுப்பு வேறுபாடு(Class) இருப்பது போலில்லாமல் இந்தியாவில் தீண்டாமை மத அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. தீண்டத்தகாதவரோடான தொடர்புகள் பற்றி மிகக் கடுமையான விதிமுறைகளைத் தர்மசாஸ்த்திரங்கள் வகுத்துள்ளன.

இடைக்காலத் தமிழ்ச்சமுதாயத்தில் உடல்தூய்மை இல்லாத காரணமாகவே சிலகாலம் மட்டும் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டது. இதுவே பின்னர் தீண்டாமை முளைப்பதற்கான வித்தானது. காலப்போக்கில் அது கட்டுக்கடங்காமல் பிரச்சினைகளைக் கிளப்பும் அளவிற்கு வளர்ந்துவிட்டது.

இன்றைய தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் சிற்றூர்களில் மட்டுமே தனிக் குடியிருப்புக்களில் வாழ்கின்றனர். அவர்களின் பொருளாதாரச் சமூக நிலை இந்துக்களின் பிற பிரிவினரின் நிலையைவிடத் தாழ்வாகவே உள்ளது.

சாதி முறையின் பின்விளைவே தீண்டாமை. சாதிமுறையும் தீண்டாமையும் ஒட்டுறவு கொண்டவையேயாகும். அவை இரண்டுமே தீண்டத்தகாதோருக்கும் பிறருக்கும் தொல்லை தருவதாகும். இதுவே ஏறக்குறைய அனைத்து அறிஞர்களின் கருத்தாகும்.

சமூகவியல் வல்லுனர்களான ஹட்டன் டூமோ போன்றோரின் சாதி பற்றிய கருத்துக்களை வைத்துப் பார்க்கிறபோது இந்திய சமூகம் சாதிமுறையில் பல அடுக்குகளைக் கொண்ட சமூகம் என்பது புலப்படும். அந்த அடுக்கு முறையில் தீண்டத்தகாதோர் கடைசிப் படியாகவே உள்ளனர். டூமோவின் கருத்துக்களும், அவைபற்றி ஜெரால்டு D.பெர்ரிமேன், ஆன்ரோ பெத்தல் ஆகியோரின் விமர்சனங்களும், சிக்கலான இந்தியச் சாதிமுறை, இனப்பாகுபாடு ஆகியவை பற்றியும் சாதி இனம் மோதல் பற்றிய கொள்கைகளை உருவாக்கவும் அவை உதவுகின்றன.

இந்தியச் சூழ்நிலையில் அன்றும் இன்றும் சாதியானது தீண்டத்தகாதோர் மற்றும் சுரண்டலுக்கு ஆளான ஏழைகள் ஒன்று சேர்ந்து தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட முயல்வதைத் தடுப்பதற்கே பயன்பட்டது, பயன்படுகின்றது. உலகில் உள்ள பிற சமுதாயங்களில் வகுப்பு ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கியது பொருளாதாரக் காரணங்களேயாகும். இந்தியாவில் சாதி உணர்வுகள் தான் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்குகின்றன.

சுதந்திர இந்தியாவில் சாதிதான் சமூக, விவசாய அரசியல் வன்முறைகளுக்கு முக்கியக்காரணம். சாதாரண சமுதாயத்தில் வன்முறையை உண்டாக்கச் சாதி, வகுப்பு வாதத்துடன் போட்டியிடுகின்றது.

தாழ்த்தப்பட்ட இனத்தவரின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள், கலவரங்களின் வேகம், கலவர காலத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து வேகமாக நடந்திடவோ அல்லது தடைபோடவோ செய்கின்றன.

தீண்டத்தகாதோர், சமூகப்பண்பாடு மற்றும் வாழ்க்கையின் பிற தன்மைகளில் சமமாக நடத்தப்படவேண்டி இன்றும் உயர்சாதி இந்துக்களுடன் போராடுகின்றனர்.

காந்திஜி, அம்பேத்கார், ஜகஜீவன் ராம் ஆகிய பெருந்தலைவர்கள் தீண்டாமையை ஒழிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். தீண்டப்படாதோரின் சுதந்திரத்திற்காகவும் மேம்பாட்டிற்காகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை அரசியல் அமைப்புச் சட்டமும் பிற சட்டங்களும் வலியுறுத்துகின்றன.

இந்திய அரசிடம் டாக்டர் அம்பேத்கார் கொடுத்த விண்ணப்பத்தில் தீர்மானமாக எழுதப்பட்டிருந்த கருத்துக்கள் உரிய திருத்தங்களுடன் சட்ட விதிகளாக 14—17,19,23, 25—30,46,164,244,275,330,332,335,338—342 என்னும் பகுதிகளில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தீண்டாமை ஒழிப்பிற்கான சட்டத்தின் நற்பயன்கள் நகர்புறங்களில் மிகவும் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால் சிற்றூர்களில் தீண்டாமையால் உண்டாகும் அதே இயலாமையும் இன்னல்களும் இன்றும் தொடர்கின்றன.

இந்துக்களின் ஒரே குறிக்கோள் தீண்டத்தகாதோர் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச் சட்ட உதவியை நாடுவதைத் தடுப்பதுதே என்று டாக்டர் அம்பேத்கார் கூறுகிறார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதாக அறுதியிட்டுக் கூறுகிறது. தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்துவதும், தீண்டத்தகாதோரின் அவலங்களை ஒழிப்பதும் அவர்களின் நிலையைச் சீர்படுத்துவதும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட குழுவின் கடமையாக்கப்பட்டன.

கல்வி, வேலைவாய்ப்பு, பாராளுமன்றம் மற்றும் சட்டசபைத் தேர்தலில் இடஒதுக்கீடு ஆகியவையும், அவர்களைச் சுரண்டுவதைத் தடுப்பதற்குப் பல பாதுகாப்புகளும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களின் பாதுகாப்பிற்காக மேலும் பல சட்டங்களைக் கொண்டுவந்து பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் கொடுமைப் பாதுகாப்புச் சட்டம் 1989 ஆகியன இதற்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள்யாகும்.

முதன் முறையாக ஜூலை 1978—இல் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. இது அரசியல் அமைப்புச் சட்டப்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்புகள் சரிவரச் செயல்படுவதை நிர்வாகிக்கவும், மேற்பார்வையிடவும், கொடுக்கப்பட்ட பாதுகாப்புகளைக் கணிப்பதற்கும் அதனால் ஏற்படும் மாற்றங்களை அறிவதற்குமானதோர் நிரந்தர அமைப்பாகும். இந்த ஆய்வுக் குழு தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் சம்பந்தமான வழக்குகளைக் கண்காணிக்கச் சட்ட ரீதியான அதிகாரங் கொண்டதாகும். இப்பணியை இக்குழு செம்மையாகச் செய்திட (Deputy Inspector General of Police) சரகக் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளரைத் தலைவராகக் கொண்டு களஆய்வாளர்கள் முதலியோருடன் ஆய்ந்து இவ்வாய்வுக் குழு தன் பணிகளைச் செய்கின்றது.

காவல்துறைச் சட்டத்தின் பிரதிநிதி, சட்டம் மற்றும் காவல் துறையின் அதிகாரியினர் காவல்துறையினர் மற்றும் சமூக அதிகாரத்தின் உருவமாவர். சமுதாயத்தில், வாழ்க்கை விதிமுறைகளை ஒவ்வொருவரும் சரியாகக் கடைப்பிடிக்கின்றனரா என்பதை இவர்கள்தான் கண்காணிக்க வேண்டும். தனி மனிதர்களைக் காப்பாற்றுவதும் கலகத்தைத் தடுப்பதும், சமூக விரோதிகளிடமிருந்து சமுதாயத்தைக் காப்பதும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் புனிதத்தைக் காப்பதும் காவல்துறையின் தலையாய கடமைகளாகும்.

சமூக நீதியை நிலை நாட்டிடும் மற்றோர் அமைப்பே குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம். இது தீண்டாமையை ஒழிக்கவும், அதற்கான திட்டங்களையும் நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தவும் அரசியல் அமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்டதாகும். ஒரு சட்டம் நிறைவேறிவிட்டால் மட்டுமே அது யாருக்காக இயற்றப்பட்டதோ அவர்களுக்கு நன்மை செய்யும் என்று சொல்ல முடியாது. அதை நிறைவேற்ற அமைப்பு ரீதியாகச் சில குழு செயல்பட வேண்டும். இதற்காகத் தமிழ் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் (Inspector of Police) காவல் ஆய்வாளர். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு அமைக்கப்பட்டு (Departy Inspector General of Police, Additional Director General of Police for Social Justice) சரகக் காவல்துறைத் துணைத் தலைவர்,

சரகக் காவல்துறைச் சமூக நீதிக் கூடுதல் துணைத் தலைவர் இவர்களின் கீழ் ஒரு கூட்டு அமைப்பு செயல்பட்டு வருகிறது.

அரசு அலுவலர்கள், காவல்துறை, பொதுமக்கள் யாவருமே குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைச் சரிவர அமல் செய்திடத் தங்கள் பங்கைச் செய்திட வேண்டும். தெரிந்தே இச்சட்டத்தை அலட்சியம் செய்தல் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப் பிரிவு (15) Aயின் படி, மாநில அரசுகள் எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசினுடையதாகும். மேற் குறிப்பிட்டுள்ள சட்டப் பிரிவின்படி மைய அரசும் மாநில அரசுகளும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் ஒர் அறிக்கையை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

தீண்டாமை இந்தியாவின் பல பாகங்களிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டுச் சிற்றூர்களில் நிலைத்துள்ளது என்பது ஐயத்திற் கிடமில்லாது நிரூபிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் தீண்டாமை வெளிப்படையாக நடைமுறையில் இல்லை. அறிந்த அளவில் இதற்குக் கீழ்க் காண்பவைகளே காரணங்களாக இருக்கக் கூடும்.

1. நகர்ப்புறங்களில் தீண்டாமை, ஒரு சமூகத் தேவை என்று தீண்டத்தகாதோர்களோ, உயர்சாதி மக்களோ உண்மையில் எண்ணவில்லை. ஏனெனில் அவர்கள் ஒன்று கூடி வாழ்வதும் ஓரே இடம்; வேலை செய்வதும் ஓரே இடம். தீண்டாமையைக் கிளரிவிடாமல் இருக்கும் வரை அது பற்றித் தீவிரமாகச் சிந்தித்திட நகர் மக்களுக்கு நேரமில்லை. மக்கள் தொகை பெருகி மக்கள் நெருக்கம் அதிகமாக ஆக நகர் வாழ் மக்கள் மத்தியில் தீண்டாமை ஒழிந்துவிடும். நகரங்களில் நிலவிடும் கூட்டு வாழ்க்கை முறையினாலும் கூட்டுச் செயல்பாடுகளினாலும் சமூக சக்திகளின் குறுக்கீடுகளினாலும் நகர்வாழ் மக்கள் பரந்த நோக்குடையவர்களாகவும் காழ்ப்புணர்வு இல்லாமலும் வாழ்கின்றனர்.

2. காந்திஜி சொன்னது போல் இந்தியாவின் உயிர் நாடி சிற்றூர்கள். இந்திய மக்கள் தொகையில் 80% மக்கள் சிற்றூர்களிலேயே வாழ்கின்றனர். சிற்றூர்களில் வாழும் தீண்டத்தகாதோர், உயர் சாதி மக்கள் ஆகியோரின் எண்ணிக்கை சீராக அமையவில்லை. சில சிற்றூர்களில் உயர் சாதி மக்கள் சிறு எண்ணிக்கையிலும் தீண்டத்தகாதோர் பெரும் எண்ணிக்கையிலும் வாழ்கின்றனர். சில சிற்றூர்களில் இது மாறுபட்டு உள்ளது. எப்படி இருப்பினும் இவ்விரு சாதியினரும் அவரவர் சமூகப் பொருளாதார நிலைகளைத் தெளிவாக மனதிற் கொண்டுள்ளதால், இவ்விரு வகையினரும் சாதாரணமாகக் கலந்திடுவதில்லை என்பது உறுதியான கருத்தாகும். கைப் புண்ணிற்குக் கண்ணாடி தேவை இல்லை என்பது முது மொழி. சிற்றூர்களில் நிலவிடும் தீண்டாமையை உறுதி செய்யப் புள்ளி விவரப் பட்டியலைப் பார்க்க வேண்டிய தேவை இல்லை.

3. அரசியல் அமைப்புச் சட்டப் படியும் மற்ற சட்டங்கள் படியும் பிற வழிகளிலும் தீண்டப்படாதோர் பாதுகாப்பிற்காக உள்ள திட்டங்கள் பற்றி நான்காவது இயலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதிலிருந்து மாநில மத்திய அரசுகளும், குடியரசு அமைப்புச் சட்டமும் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளையும், வேறு பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளவை கொண்டும், மாநில மத்திய அரசுகள் தீண்டாமையை ஒழிக்க மேற்கொண்டுள்ள இந்தியச் சுதந்திரத்திற்கு முன் நிலைமை எவ்வாறு இருப்பினும், சுதந்திரத்திற்குப் பின் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சுதந்திரம் கொடுப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த அன்னிய ஆங்கில ஆட்சி இந்திய மக்களை இடம், மொழி, சாதி வாரியாகப் பல பிரிவுகளாகப் பிரித்து இந்தியாவை ஆண்டுவந்தனர். அந்த ஆங்கில ஆட்சி 1947—ற்குப் பின்னரும் தொடர்ந்திருந்தால் டாக்டர் அம்பேத்காரின் தீண்டத்தகாதோர் சார்பில் கொடுத்த விண்ணப்பம் என்னவாகி இருக்கும் எனத் தற்போது கூற முடியாது. தீண்டத்தகாதோரின் ஆதரவுடன் தன்னால் ஆனவரை தீண்டாமையை ஒழிக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை உறுதியாகக் கூறலாம். இவைபற்றி நான்காவது மற்றும் ஐந்தாவது இயல்கள், மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகளின் விரிவான விவரங்களைத் தந்துள்ளன.

தீண்டாமையை ஒழிக்க அரசு விருப்பம் கொண்டுள்ளது. மக்களும் ஒத்துழைக்கின்றனர் என்பது மட்டும் தெளிவான உண்மையாகும்.

அரசியல் அமைப்புச் சட்டம் கொண்டுள்ள திட்டங்களையும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான பாதுகாப்பை நடைமுறைப் படுத்த இந்திய அரசு தேசிய அளவில் நிலையான தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆய்வுக் குழுவை ஏற்படுத்தியுள்ள விவரங்கள் 5—ஆம் இயலில் விவரிக்கப்பட்டுள்ளது. தீண்டாமையை ஒழிப்பதற்கான வழிமுறைகளைக் கூறுவது மட்டுமின்றித் தீண்டத்தகாதோருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பை, செயல்முறைப் படுத்தப்படும் விதத்தை மேற்பார்வையிடுவதும், செயல்பாடுகளை அளவிடுவதும் இந்த ஆய்வுக் குழுவின் பொறுப்பாகும். மாநிலங்களில் உள்ள காவல் துறையின் சிறப்புக் குழுவாகிய குடியரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழு தேசிய ஆய்வுக் குழுவிற்கு உதவியாகச் செயல்படுகின்றது. இவ்வாறு தீண்டாமை ஒழிப்பில் காவல் துறையும் பங்கு கொண்டுள்ளது.

இக் குழுவின் அமைப்பு, அதிகாரம், செயல்பாடு, கடமை, பொறுப்பு, சட்ட அதிகாரம், ஆகியவைகள் என்ன என்பதை உள்துறை (Home Department) தன் தீர்மானத்தில் தெளிவாகக் கூறியுள்ளது. இவையும் இந்த ஆய்வின் 5—ஆம் இயலில் விளக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தவருக்காக அரசியல் அமைப்புச் சட்ட விதி முறைகளிலும், அதன் கீழ் உருவாக்கப்பட்ட பல்வேறு சட்டங்களிலும் கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீடுகள் செயல்படுத்தப்பட்ட விதம் பற்றியும், அவர்களுக்கான பாதுகாப்பு பற்றியுமான எல்லாச் செயல்பாடுகளையும் இந்த ஆய்வுக் குழு ஆராயும். மேலும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சம்பந்தமான வழக்குகள் பற்றிக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு உதவியுடன் ஆராய வேண்டும். சிறப்பான பரிந்துரைகளைக் கொடுத்து அரசியல் அமைப்புச் சட்டப் பாதுகாப்பை அவர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும். அவர்களுடைய பொது நலம் சமூகப் பொருளாதார வளர்ச்சிகளையும் வழி நடத்திட வேண்டும். இவை அனைத்தும் பற்றிய ஓர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதில் ஏற்படும். காலதாமதம் பற்றி ஆய்வுக் குழுவின் ஆண்டறிக்கைகள் வருத்தம் தெரிவிக்கின்றன.

தீண்டாமையை ஒழிக்கும் முயற்சியில் காவல் துறையிடம் எதிர்ப்பார்க்கும் ஒத்துழைப்பும், காவல்துறை எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும் பற்றி இவ்வாய்வின் 6—ஆம் இயல் விவரமாகவும் விளக்கமாகவும் விவாதிக்கின்றது.

காவல்துறையின் கடமைகள், சட்டம்—ஒழுங்கை நிலை நாட்டுவதும் குற்றத்தைத் தடுப்பதுமாகவே இருந்த போதிலும், சமூக ஒழுங்குமுறையை நிலைநாட்டுவதற்கும் காவல்துறை பாடுபட வேண்டியுள்ளது. சமுதாய மேடு பள்ளங்களைச் சமன் செய்யவும், சமுதாய அமைப்பை மாற்றுவதற்கும் சமூகச் சட்டங்கள் மிக முக்கியமானவை. அந்த வகையில் காலங்காலமாக நிலவிடும் தீண்டாமையை ஒழிப்பதற்கான குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மிகப் பெரிய சமூகச் சட்டமாகும் அத்துடன் தாழ்த்தப்பட்ட இன மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களையும் அது கொண்டுள்ளது.

வழக்குகளைப் பதிவு செய்யும் முக்கியமான இடம் காவல் நிலையம்தான். எனினும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக் குழுக்களையும் தனிப்பட்டு இயங்கத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. இதனால் மற்ற காவல் நிலையங்கள் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதில்லை என்று பொருள் கிடையாது. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்த உள்ளூர்க்காவல் துறையின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதோடு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டக்குழு ஒரு சக்தியின் ஊற்றாகவும் உள்ளது.

குடியுரிமைப்பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் (கொடுமைத் தடுப்புச்) சட்டம், இது சம்பந்தமான மற்றச் சட்டங்களையும், தீண்டத்தகாதோர் மீது நடத்தப்படும் கொடுமைகள் பற்றிய புகாரின் பேரிலும் மேல் நடவடிக்கை எடுப்பதிலோ காவல்துறை தன்னாலான சேவையைச் செய்து வருகிறது. பிற் சேர்க்கை 18—இல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குப் பதிவானவை, தண்டனை கொடுக்கப்பட்டவை, விடுதலை செய்யப்பட்டுள்ளவை, காவல்துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரங்களைத் தெளிவுபடுத்துகின்றன. பல்வேறு மாவட்டக்குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட குழுக்களின் செயல்பாடுகள் பற்றிய மதிப்பீட்டைப் பிற்சேர்க்கை 21—இல் உள்ள வரைபடங்கள் விளக்குகின்றன.

பாதுகாப்புச் சட்டம் காலத்திற் கொவ்வாத பழமையான பழக்க வழக்கங்களை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டுள்ள மேல்சாதி இந்துக்கள் மனதில் குடியுரிமைச் சட்டத்தை மீற முடியாது; மீறினால் தண்டனைக்குள்ளாக வேண்டும் என்ற பயத்தைப் பதிய வைத்துள்ளது. உண்மையாகவே தீண்டப்படாதோருக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளியாக இந்தச் சட்டம் திகழ்கின்றது. தீண்டத்தகாதோரின் சமூக விழிப்புணர்வையும் இச் சட்டம் வெளிக் கொணர்கின்றது. இந்நிலையில் சமூக விழிப்புணர்வு, பழமையான ஏற்றத்தாழ்வுகளையும் இயலாமைகளையும் எதிர்த்துக் கேள்வி கேட்பதால் ஏற்படும் சாதி மோதல்கள் தவிர்க்க முடியாதவை.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சமூக மாற்றத்திற்குச் சக்தி வாய்ந்த கருவியாகும். ஆனால் சாதிப் பெயர்களைச் சொல்லித் திட்டுவதினால் உண்டாகும் வழக்குகளைப் பதிவு செய்வதற்காக மட்டுமே இச்சட்டம் பெரிதும் பயன்படுகின்றது. இவ்வழக்குகளில் விடுவிக்கப்பட்டவர்களே மிக அதிகம். ஏனெனில் பிரமிட் போன்ற அமைப்பில் உள்ள இந்தச் சமூக அமைப்பைத் தலைகீழாக மாற்றியமைத்தாலன்றி அது தீண்டத்தகாதோருக்கு எதிராகவே இருக்கும்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தால் தீண்டத்தகாதோரின் வாழ்கை நிலையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு மேற்போக்கானதே. இச் சட்டத்தின் மூலம் தீண்டத்தகாதோரின் வாழ்க்கை நிலை உயர்வதற்கு முயற்சி எடுத்தும் அவர்களின் பொருளாதார வாழ்க்கை நிலை உயராமலேயே உள்ளது. மீண்டும் ஒரு விழிப்புணர்ச்சியும் அதனால் ஒரு சமூக மாற்றமும் ஏற்படாவிடில் உயர் சாதி இந்துக்களுக்கும் தீண்டத்தகாதோர்களுக்கும் இடையே உள்ள சாதி வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். இந்திய சமூக ஒற்றுமையைச் சீர் குலைக்கவே செய்யும்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் காவல்துறையினர் சட்டத்தின் பாதுகாவலர்களாக இருந்து வருகின்றனர். பொதுமக்கள் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடி மக்கள் காவலர்கள் தங்களின் நண்பர்களே; தங்களைக் கொடுமைப்படுத்தும் எதிரிகளல்ல என்பதை உணர வேண்டும். அத்தகைய மாற்றமே தீண்டாமை ஒழிப்பிற்கு வேகத்தைக் கொடுக்கும். இன்றைய சூழ்நிலையில் தீண்டாமையை முற்றிலுமாக ஒழிக்கும் நாள் எப்பொழுது ஏற்படும்

என்று குறிப்பிட முடியாது. காவல்துறை மரபுவழியான அதன் குடியேற்ற நாட்டுணர்வை சட்டத்தைக், குறிப்பாக, சமுதாய நலச் சட்டங்களை, விலக்கிவிட்டு இன்னலில் தவிக்கும் மக்களின் உணர்வுகளை மனதிற்கொண்டு முழு மனதுடன் செயல்படுத்த வேண்டும். காவல் துறையினர் தங்களால் இயன்ற அளவு தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுகின்றனர் என்பது கண்கூடு. ஆனால் முன்னர் கூறியது போல், காவல் துறையினால் மட்டுமே தனித்து நின்று இக்குறிக்கோளை எட்டமுடியாது என்பது இவ்வாய்வின் வெளிப்பாடுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. எனவே இக்குறிக்கோளை எட்டப்பின்வரும் திருத்தங்கள் சட்டத்தில் ஏற்கப்படலாம்.

1. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப் பரப்பை விரிவாக்கித் தீண்டத்தகாதோரின் பொருளாதார நிலை உயர்வதற்கான விதிமுறைகளையும் கொண்டதாகச் செய்யலாம்.

2. பயங்கரமான குற்றவியல் சட்டம் (Criminal Law) தீவிர ஆலோசனை இன்றிப் பயன்படுத்தப்படும் போது அது சாதிகளிடையே இறுக்கத்தை ஏற்படுத்திக் கசப்புணர்வை உண்டாக்கக்கூடும். இதனால் சாதிச் சண்டைகள் நிகழக்கூடும். எனவே இச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்திடத் திருத்தங்களைக் கொண்டுவரலாம்.

3. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டமும், சாதிக் கொடுமைகள் சட்டமும் ஒருங்கே அமலில் உள்ளன. இதை அமல்படுத்தும் அதிகாரியே ஒரு வழக்கை எந்தச் சட்டப்படி பதிவு செய்வதென்பதை முடிவு செய்வார். இது இருசட்டங்களிலுமுள்ள சாதகமான பயனைச் சட்டப்படி ஏற்றுக் கொள்ள வழிவகை செய்வதில்லை; இவற்றில் பதிவுசெய்யப்பட்ட ஒரு சட்டத்தின் வழியேதான் முடிவுகள் தீர்மானிக்கப்படும். எனவே, இவ்விரு சட்டங்களிலுமுள்ள விதிமுறைகளை ஒருங்கிணைத்து, ஒரே சட்டமாகக் கொண்டுவந்தால் சிறப்பாக அமையும் என்பது திண்மை. அதன்விளைவு பொதுவாகப் பின்னால் இயற்றப்படும் சட்டம் அதற்கு முந்திய சட்டத்தை விலக்கிவிடும். ஆனால் இவ்விரு சட்டங்களைப் பொறுத்த வரையில் இதற்கு முரண்பாடாகவே உள்ளது.

4. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது நடத்தப்படும் கொடுமைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கத் தனி உளவுத்துறை ஏற்படுத்தலாம்.

5. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகியோரைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தி அக்குழு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், கொடுமை இழைப்புச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கச் செய்யலாம். இக்குழுவில் (Inspector General of Police, Superintendent of Police) காவல் துறைத் தலைவர், காவல் உதவி ஆய்வாளர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோரை இடம் பெறச் செய்யலாம்.

6. காவல் நிலையங்களில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் (கொடுமைத் தடுப்புச்) சட்டம் ஆகியவற்றை எல்லோருக்கும் தெரியும் வண்ணம் வைத்திருக்க வேண்டும்.

7. தீண்டாமை நிலவிடும் பகுதிகளில் சிற்றூர் கிராம நிர்வாக அலுவலர் (VAO) தாசில்தார் ஆகியோர்களை அதற்குப் பொறுப்பாக்க வேண்டும்.

8.ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சாதி அமைப்புகளில் பங்கேற்பதைச் சட்டரீதியாகத் தடைசெய்ய வேண்டும்.

9.குறிப்பிட்ட இடைவெளிகளில் அரசு எல்லாக் கட்சிகளையும் கொண்ட கூட்டத்தைக் கூட்டித் தீண்டாமைப் பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டும்.

10. ஆசிரியர்கள், மாணவர்கள், காவலர்கள் ஆகியோரைச் சாதி அமைப்புகளை ஒழிக்கும் வகையில் சிந்தனை செய்யத் தூண்ட வேண்டும்.

11. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்கான இட ஒதுக்கீடு செயல்படுவதைக் கண்காணிக்க மாவட்ட அளவில் ஒரு குழுவை அமைக்க வேண்டும்.

12. பஞ்சமி, வருவாய்த் துறை புறம்போக்கு நிலங்களைப் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் கூட்டுறவு முறையில் பயிர்செய்ய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

13. சாதி அடிப்படைவாதச் சக்திகள் சாதி உணர்வைத் தூண்டி விடுவதைத் தடை செய்ய வேண்டும்.

14. தமிழ் நாட்டில் புதுமையான கருத்தில் தோன்றியுள்ள சமத்துவபுரம் அமைப்பதைப் பிற மாநிலங்களும் பின் பற்றலாம். இங்கு அரசு மானியமாகக் கொடுக்கும் மனைகளில் பல சாதி மக்களும் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களும் இணைந்து வாழ்கின்றனர்.

15. மக்கள் மனநிலையில் மாறுதல் ஏற்படுத்துதல் முற்போக்கான நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருதல் ஆகிய இருமுனைத் தாக்குதலால்தான் தீண்டாமையை ஒழிக்க முடியும்.

16. இறுதியாக இப்போதுள்ள தீண்டத்தகாதோர் மத்தியில் கல்வி அறிவை ஏற்படுத்தி, அரசும் அரசியலும் இணைந்து செயல்படுவதின் மூலமே தீண்டத்தகாதோர்களை மற்ற இனத்தவர்களுக்கு— உயர்சாதியினர், முன்னேறிய இனமக்களுக்கு— இணையாக உயர்த்திடமுடியும்.

மேலும் தாழ்த்தப்பட்ட இன மக்கள் மீது நடத்தப்படும் கொடுமைகளைக் கால வரிசையில், அரசியல் அமைப்புச் சட்டம், மற்ற சமூகச் சட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு இந்தியா முழுமையிலுமோ அல்லது மாநிலங்கள் வாரியாகவோ, ஆய்வை மேற்கொள்ளச் சமூகவியல் அறிஞர்கள் முன்வரவேண்டும். அதற்கான ஊக்கமும் அரசால் அளிக்கப்பட வேண்டும். அத்துடன் இச் சட்டங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களிடையே சமுதாய இணக்கத்தைப் பல்வேறு மாநிலங்களிலும் ஏற்படுத்தியுள்ளதா என்பதையும் ஆராயலாம்.

இறுதியாக இவ்வாய்வு முன்வைப்பது ஆலிவர் மெண்ட்லிஷோன் (Oliver Mendlesohn) மரிகா விக்காஸியாரி (Marika Vicaziary) ஆகியோரின் கவனிக்கத்தக்க கருத்துக்களே அவை வருமாறு.

> "எல்லாச் சமுதாயங்களிலும் சமூக அந்தஸ்தினாலும் சொத்து சுகத்தினாலும் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன.... ஒரு நோக்கில் தீண்டத்தகாதோர் என்பதும் இவ்வகை நிகழ்வின் பாற்பட்டதேயாகும். வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளும் நிலச் சீர்திருத்தங்களும் சமநிலைப் படுத்துதற்காகப் பாகுபாடு காட்டுதலும் தீண்டத்தகாதோர்களை வறுமைக் கோட்டிற்கு மேல் உயர்த்திட வில்லை. எனினும், சட்டம் தடுப்பதினாலும், அரசியல் சமூக நிர்ப்பந்தத்தினாலும் சமூகக் கொடுமைகள் குறிப்பிடுமளவிற்குக் குறைந்துள்ளன. கல்விச் சாலைகளும் போக்குவரத்துச் சாதனங்களும் ஏற்றத் தாழ்வு காட்டப்படுவதற்கு உகந்த இடங்களில்லை.... உயர் சாதி இந்துக்களுக்கும்

தீண்டத்தகாதோருக்கும் உள்ள சமூகத் தொடர்பு பெரும்பாலும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் உத்திகளே அன்றி மனப்பூர்வமான சகிப்புத்தன்மையினால் அல்ல..... இறுதியாக, தீண்டத் தகாதோரின் சுதந்திரம் அவர்களுக்கேயான பிரச்சினையாகும். அதைக்களைந்திடுவதற்கான கருவி அரசியலே ஆகும். ஆனால் மற்ற சாதிகளைச் சேர்ந்த நல்லெண்ணங் கொண்டோர் இம்முயற்சியில் முக்கியப்பங்காற்ற முடியாது எனக் கருதுவது, அநீதியானது மனிதத் தன்மையற்றது".

அடிக்குறிப்பு :

1. ஆலிவர் மெண்ட்லிஷோன் & உபேந்திர பக்சி: பக் 115 — 116.

*இணைப்பு – 1*

*இந்திய அரசியல் அமைப்பில் தேவையான சரத்துகளின் பொருளடக்கம்*

பகுதி – 16

சில பிரிவினருக்கான தனிப்பட்ட சலுகைகள்: சரத்து 330; மக்களவையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு

(1) மக்களவையில் செய்யப்பட்ட இடஒதுக்கீடு

அ. தாழ்த்தப்பட்ட இனத்தோருக்கு

ஆ. அசாம் போன்ற தன்னாட்சி மாநிலங்களைத் தவிர்த்த மற்ற மாநிலப் பழங்குடியினத்தோருக்கு

இ. மேலும் அசாம் மாநில தன்னாட்சி மாவட்ட பழங்குடியினத்தோருக்கு

2. எந்த மாநிலத்தின் (கூட்டுறவு நாடுகளின்) பகுதி 1—ன் கீழ் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டு எண்ணிக்கை ஏறக்குறைய மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் மக்கள் தொகை எந்த விகிதாச்சாரத்தில் உள்ளதோ அதே விகிதாச்சாரத்தில் மாநிலத்தின் மக்களவையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரிவு—2—ல் உள்ள எந்த விதியையும் சாராது அசாம் மாநிலத்தின் எந்த தன்னாட்சி மாவட்டத்தின் பழங்குடியினருக்காக மக்களவையில் ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு அந்த மாநிலத்திற்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டீன் விகிதாச்சாரம் மொத்த மக்கள் தொகையில் பழங்குடியினரின் மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கு குறைவானதல்ல.

சரத்து 332: மாநிலத்தின் மேலவையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு:

(1) (அசாம் போன்ற மாநிலத்தின் தன்னாட்சி மாவட்டத்திலுள்ள பழங்குடியினரைத் தவிர்த்து) ஒவ்வொரு மாநிலத்தின் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்குமான இடஒதுக்கீடு.

(2) அசாம் மாநிலத்தின் மேலவையில் தன்னாட்சி மாவட்டங்களுக்கான இடஒதுக்கீடும்.

(3) பிரிவு—1 ன் அடிப்படையில் எந்த ஒரு மாநிலத்தின் மேலவையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்குமான இடஒதுக்கீடு ஏறக்குறைய மாநிலத்தின் தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை அல்லது மாநிலத்தின் மாநிலப் பகுதியிலுள்ள பழங்குடியினரின் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் எந்த விகிதாச்சாரத்தில் உள்ளதோ அதே விகிதாச்சாரத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3A) பிரிவு—3 ன் எந்த விதியையும் கொண்டிராது திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 170—ன் படி 2000—ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அருணாச்சலபிரதேசம் மேகாலயா, முசௌரம், நாகாலாந்து போன்ற மாநிலங்களின் மேலவையில் பழங்குடியினத்தாருக்கு ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு

அ. மேலவையின் ஒரே ஒரு இடத்தை தவிர எல்லா இடங்களிலும் மேற்சொன்ன மாநிலங்களில் 1987—ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட ஐம்பத்தி ஏழாவது சட்டச்சீர்திருத்தத்தின்படி பழங்குடியினரை அங்கனத்தினராகக் கொண்ட குழு விரைவில் நிர்ணயிக்கப்படும்.

ஆ. சிலசமயங்களில் அந்த இடஒதுக்கீட்டு விகிதாச்சாரம் பழங்குடியினத்தாரின் எண்ணிக்கை அவை அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் எந்த விகிதாச்சாரத்தில் அமைகின்றதோ அதைவிடக் குறைந்ததல்ல.

(3B) பிரிவு 3—ன் எந்த விதியையும் கொண்டிராது திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 170—ன் படி 2000—ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி திரிபுரா மாநிலத்தின் மேலவையின் இடஒதுக்கீடு பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு விகிதாசாரம் மொத்த இடத்தில் எந்த அளவில் உள்ளதோ. 1992—ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட எழுபத்தி இரண்டாவது சட்டச் சீர்திருத்தத்தின்படி மேலவையில் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு மொத்த இடஒதுக்கீட்டில் எந்த விகிதாச்சாரத்தில் உள்ளதோ அதை விடக் குறைவானதல்ல.

4. அசாம் போன்ற மாநிலத்தின் தன்னாட்சி மாவட்டங்களுக்கான மேலவை இடஒதுக்கீடு மொத்த இடத்தில் எந்த விகிதாச்சாரத்தில் உள்ளதோ, மாவட்டங்களின் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் எந்த விகிதாச்சாரத்தில் உள்ளதோ அதைவிட குறைவானதல்ல.

5. அசாம் மாநிலத்தின் தன்னாட்சி மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு அதன் மற்ற பகுதிகளுக்கு அதாவது அந்தந்த மாவட்டத்தின் எல்லைக்கப்பாற்பட்ட இடங்களுக்குச் செல்லுபடியாகாது.

6. அசாம் மாநிலத்தின் எந்த ஒரு தன்னாட்சி மாவட்டத்தின் பழங்குடியினரல்லாத ஒருவர் மாநிலத்தின் மேலவைத் தேர்தலுக்குப் எந்த தொகுதிக்கும் போட்டியிட தகுதி பெற்றவனாகியிருக்கிறான்.

சரத்து 16(4): இந்தச் சரத்திலுள்ள எந்த விதியும் மாநிலத்தின் பிற்படுத்தப்பட்டோருக்காக நிர்ணயிக்கும் இடத்தையோ அல்லது பதவியையோ தடுக்கும் உரிமை கிடையாது.

சரத்து 243 – T யின் படி நகரசபை கிராமப் பஞ்சாயத்துக்களின் இடஒதுக்கீடு:

ஒவ்வொரு நகராட்சியிலும் மொத்த இடத்தில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவர் இடஒதுக்கீடு விகிதாச்சாரம் நகராட்சியின் நேரடித் தேர்தல் மூலமாக நடத்துவது நகராட்சி எல்லைக்குட்பட்ட தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை அல்லது பழங்குடியினரின் மக்கள் தொகை போன்றவை அல்லது பழங்குடியினரின் மக்கள் தொகை போன்றவை மொத்த மக்கள் தொகையில் எந்த விகிதாச்சாரத்திலுள்ளதோ அதே அளவு விகிதாச்சாரமாக இருக்கும். நகராட்சியின் பல பகுதிகளிலிருந்து சுழற்சி முறையில் இடம் நிர்ணயிக்கப்படும்.

2) பகுதி 1—ன் படி மொத்த இடஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதிக்கு குறைவானதாக தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினப் பெண்களின் இடஒதுக்கீடு இல்லை.

3) மொத்த இடத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாமல் (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினப் பெண்களுக்கான இடஒதுக்கீட்டையும் சேர்த்து) ஒவ்வொரு நகராட்சியிலும் அதன் தொகுதிகளிலும் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு நேரடித் தேர்தல் மூலமாக சுழற்சி முறையில் நிரப்பப்படுகிறது.

4) நகராட்சியின் தலைவருக்கான இடஒதுக்கீடு தாழ்த்தப் பட்டோருக்காகவும் பழங்குடியினருக்காகவும் மேலும் பெண்களுக்காகவும் மாநிலத்தின் மேலவையின் சட்டத்திற்குட்பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

5) இடஒதுக்கீடு பிரிவு ஒன்று மற்றும் இரண்டின் சரத்துப்படி நகராட்சியின் தலைவருக்கான இடஒதுக்கீடு(பெண்களல்லாத நகராட்சித் தலைவர்) பிரிவு நான்கின்படி சரத்து 334—ன் படி குறிப்பிட்ட கால அளவிற்கு முன்பும் நகராட்சித் தலைவரின் பதவிகாலம் முடிவு பெறலாம்.

6) இந்தப் பிரிவிலுள்ள எந்த விதியும் மாநில சட்டசபையின் நகராட்சி தலைவர் பதவிக்கோ அல்லது நகராட்சி அலுவலர்களின் பதவிக்கோ பின்தங்கிய வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடஒதுக்கீட்டில் தடை செய்ய முடியாது.

சரத்து 243 (T)

1) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்படும் இடஒதுக்கீடு மொத்தமக்கள் தொகையில் மேற்படியினரின் மக்கள் தொகை விகிதாச்சாரம் எந்த அளவில் உள்ளதோ அதே அளவில் உள்ளது. பஞ்சாயத்து தேர்தல்முறை நேரடியானது. இந்தப்பதவி நிரப்புதலும் பஞ்சாயத்து பகுதிகளிலிருந்து சுழற்சிமுறையில் நிரப்பப்படுகிறது.

2) மொத்த இடஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாமல் இடஒதுக்கீடு தாழ்த்தப்பட்டோர் மேலும் பழங்குடியினப் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

3) மொத்த இடஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறையாமல் (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினப் பெண்களையும் சேர்த்து) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நேரடித் தேர்தல் மூலமாக பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு நிரப்பப்படுகின்றது. பஞ்சாயத்துப் பகுதிகளிலிருந்து சுழற்சி முறையில் பெண்களுக்காக பதவி நிர்ணயிக்கப்படுகின்றது.

4) கிராமத்தின் பஞ்சாயத்து அலுவலர்களின் பதவியோ அல்லது அதற்குச் சமமான மற்ற பதவிகளின் தாழத்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு அல்லது பெண்களுக்கான இடஒதுக்கீடு மாநிலத்தில் மேலவைச் சட்டத்தின் விதியை நிரூபிக்கும் வண்ணமே அமைக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்தின் ஒவ்வொரு படிநிலையின் அலுவலர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு விகிதாசாரம் பஞ்சாயத்தின் மொத்தப் பதவிகளின் இட எண்ணிக்கையில் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் மக்கள் தொகை எந்த விகிதாச்சாரத்தில் உள்ளதோ அதே அளவில் உள்ளளது.

மேலும் பஞ்சாயத்தின் மொத்தப் பதவியில் மூன்றில் ஒரு பங்கு பதவிகள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் பல பஞ்சாயத்துக்களிலிருந்து ஒவ்வொரு படிநிலையிலிருந்தும் சுழற்சி முறையில் பதவி நிர்ணயம் செய்யப்படுகின்றது.

5) பிரிவு ஒன்று மற்றும் இரண்டின் அடிப்படையில் இடஒதுக்கீடு நகரத்தலைவர் அலுவலர்களின் பதவி இடஒதுக்கீடு (பெண்களுக்காக ஒதுக்கபட்டிருப்பவை தவிர்த்து) பிரிவு நான்கின் படி சரத்து 334—ல் குறிப்பிட்டுள்ளபடி காலஅளவிற்கு முன்பே விரட்டும் நிலையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

6) இந்தப் பிரிவிலுள்ள எந்த விதியும் மாநில சட்டசபையின் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கோ அல்லது பஞ்சாயத்து அலுவர்கள் பதவிக்கோ பிற்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டில் தடை செய்ய முடியாது.

***சரத்து 335 : தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் பதவியும் பதவிகால உரிமைகளும் :***

தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகள் ஆகும். மாநிலத்தின் அல்லது தேசத்தின் தேவைக்கேற்ப பதவிகாலத்திற்கு ஏற்றபடி பதவி நிர்ணயம் செய்தல்,நிர்வாகப் பொறுப்பு, நிர்வகிக்கும் திறமை போன்றவை பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.

***சரத்து : 338 தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் பிறவற்றிக்கான தனி அலுவலர்கள்***

சரத்து 338 பிரிவின்படி தாழத்தப்பட்டோர் பழங்குடியினர் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் மேற்பார்வையிட்டு ஜனாதிபதிக்கு அறிக்கை அளிக்கும் பாதுகாவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் உள்ளது.

தனிப்பட்ட ஒருவர் தலைவராக இருப்பதைவிட சரத்து 338 சட்ட பிரிவு அமைப்பின்படி உயர்தர ஐந்து பேர் அடங்கிய குழு தாழத்தப்பட்டோர் பழங்குடியினருக்கான பாதுகாவலர்களாக இருப்பதையே மிகவும் சிறந்தமுறை அமைப்பு என்று உணர்த்துகிறது. தாழ்த்தபட்டோர் பழங்குடியினரின் பாதுகாப்பு மேம்பாடு, சமூகப் பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றிக்கு மேற்கூறிய ஐந்து பேர் அடங்கிய குழுவின் செயல்பாடுகள் விரிவாக்கப்பட்டு முழு ஈடுபாட்டுடன் அவர்களைச் செயல்பட வைக்கின்றது. மேலும் பாராளுமன்றம் ஏற்படுத்திய சட்டத்தின்படி ஜனாதிபதி செயல்பட வேண்டும். மேற்கூறிய குழுவின் அறிக்கை பாராளுமன்றத்திற்கு முன்பும் சட்டசபை முன்பும் சமர்பிக்கப்பட வேண்டுமென்றும் உணர்த்துகின்றது.

*சரத்து:339 தாழ்த்தப்பட்டோர் பகுதிகளுக்கும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கும் மத்திய சர்க்காரின் நிர்வாகத் திறமையும் அடக்கு முறைகளும் :*

மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் பகுதிகளின் நிர்வாகத்திற்கும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கும் ஜனாதிபதி தொகுதி தொடங்கிய பத்து வருட காலத்திற்குப்பின் எந்தக் கால நேரத்திலும் ஒரு குழுவை நியமனம் செய்து அறிக்கை சமர்பிக்க செய்யும் அதிகாரம் உள்ளது.

ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அல்லது தேவைக்கேற்றபடி அறிக்கையின் அமைப்பை, அதிகாரத்தை காலத்திற் கேற்றபடி மாற்றவோ சீர்திருத்தவோ அதிகாரம் உண்டு. மாநிலத்தின் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கானவற்றை அமூலாக்கும் குழு தனது விதிகளைத் தளர்த்தவோ சேர்த்துக் கொள்ளவோ அதிகாரம் உண்டு.

சரத்து 341: தாழ்த்தப்பட்ட இனம் :

ஜனாதிபதி (எந்த மாநிலமாகவோ அல்லது எந்த சமஸ்தானமகாவோ இருந்தாலும் அது மாநிலமாக இருக்கும் பட்சத்தில் ஆளுநருடன் கலந்தாலோசித்தபின்பு) பொதுமக்களின் அறிக்கையின்படி சாதிக்குறிப்பு, இனக்குறிப்பு அல்லது பழங்குடியினம் அல்லது அதன் பகுதிகள் அல்லது சாதிப்பிரிவு, இனம் அல்லது பழங்குடியினரா என்று நிர்ணயிக்கும் உரிமை அந்தந்த மாநிலத்தைப் (அல்லது சமஸ்தானம்) பொறுத்தது.

பாராளுமன்றப் பிரிவு ஒன்றின் படி சட்டத்தின் விதிமுறைகளைச் சேர்க்கவோ தளர்த்தவோ பழங்குடியினரின் பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாதிப்பிரிவை இனத்தை அல்லது பழங்குடியினை, பழங்குடிப் பிரிவை அல்லது ஒரு சாதியிலுள்ள பிரிவை, இனத்தை, பழங்குடியை சட்டத்து விதிமுறைகளின்படி சேர்க்கவோ தளர்த்தவோ முன்னெச்சரிக்கை அறிக்கை ஒன்றை அதிலிருந்து மாறுபடாமலிருக்க அளிக்க வேண்டும்.

### *இணைப்பு – 2*

***தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினத்தவருக்குமான 1990–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்ட தேசியக் குழுவின் அபிப்பிராயங்கள், சிபாரிசுகளின் சுருக்கம்***

அத்தியாயம் : 1 இந்திய அரசியல் அமைப்பிலும் சட்டப் பாதுகாப்பு நீதித்துறையிலும் சமூகப்பொருளாதார நிகழ்வுகளிலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு திட்டங்கள்.

1. இந்திய அரசியல் அமைப்பில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடி யினருக்கெதிரான பலவீனப் பேதம் காணுதலை ஒழிப்பதற்கான சிறந்த கருத்துப்பட்டியல் உள்ளது. இவர்கள் 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் (PCRA) 1989—ஆம் ஆண்டின் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான கொடூரச் செயல் பாதுகாப்புச் சட்டம் (PAA) போன்ற அணைச் சுவர்களால் பாதுகாக்கப்படுகின்றனர். இத்துடன் தாழ்த்தபட்டோர் பழங்குடியினருக்கு பொருத்தமான பொது ஒப்புதல் நலச் சட்டங்களான கொத்தடிமை வேலை ஒழிப்புச் சட்டம் 1976 (BLSA) குறைந்த கூலிச்சட்டம் 1948 (MWA) குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பும் ஒழிப்பும் நிபந்தனைச்சட்டம் 1986(1—8) போன்ற சட்டங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றனர்.

2. சிறப்புத்தனிப்பிரிவு திட்டத்தின் (SCP) கீழும் பழங்குடியினருக்கான திட்டத்தின்கீழும் செலவுத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பரந்த நோக்கத்திட்டத்தின் முறைப்படி பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் இன்னும் பிற அமைப்புகளும் (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அமைக்கப்பட்ட மற்ற அமைப்புகளும் ஏழ்மை ஒழிப்பு நிகழ்ச்சிகள், நில உடைமைச் சீர்திருத்தச்

## இணைப்பு – 2

### தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினத்தவருக்குமான 1990–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்ட தேசியக் குழுவின் அபிப்பிராயங்கள், சிபாரிசுகளின் சுருக்கம்

அத்தியாயம் : 1 இந்திய அரசியல் அமைப்பிலும் சட்டப் பாதுகாப்பு நீதித்துறையிலும் சமூகப்பொருளாதார நிகழ்வுகளிலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு திட்டங்கள்.

1. இந்திய அரசியல் அமைப்பில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கெதிரான பலவீனப் பேதம் காணுதலை ஒழிப்பதற்கான சிறந்த கருத்துப்பட்டியல் உள்ளது. இவர்கள் 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் (PCRA) 1989—ஆம் ஆண்டின் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான கொடூரச் செயல் பாதுகாப்புச் சட்டம் (PA) போன்ற அணைச் சுவர்களால் பாதுகாக்கப்படுகின்றனர். இத்துடன் தாழ்த்தபட்டோர் பழங்குடியினருக்கு பொருத்தமான பொது ஒப்புதல் நலச் சட்டங்களான கொத்தடிமை வேலை ஒழிப்புச் சட்டம் 1976 (BLSA) குறைந்த கூலிச்சட்டம் 1948 (MWA) குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பும் ஒழிப்பும் நிபந்தனைச்சட்டம் 1986(1—8) போன்ற சட்டங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றனர்.

2. சிறப்புத்தனிப்பிரிவு திட்டத்தின் (SCP) கீழும் பழங்குடியினருக்கான திட்டத்தின்கீழும் செலவுத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பரந்த நோக்கத்திட்டத்தின் முறைப்படி பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் இன்னும் பிற அமைப்புகளும் (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அமைக்கப்பட்ட மற்ற அமைப்புகளும் ஏழ்மை ஒழிப்பு நிகழ்ச்சிகள், நில உடைமைச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் உபரிநிலப் பங்கீடு தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வளர்ச்சி சங்க அமைப்புக்களாலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவர் பயனடைகின்றனர்.

*ஆராய்ச்சியின் பின்னனி:*

1. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவரின் மேம்பாட்டிற்காக செய்த பாதுகாப்பு நடவடிக்கைகளான அரசியல் சட்டஅமைப்புகளையும் சட்டப் பாதுகாப்புகளையும் சமூகப்பொருளாதார அளவீடுகளையும் மீறி தீய செயல்கள் தொடர்ந்து நடைபெறுவது(1)

2. 1981—86 வருடங்களில் பதிவு செய்யப்பட்ட இலட்சக்கணக்கான மக்கட் தொகையின் அடிப்படையில் பொது குற்றங்களின் விகிதம் 10 சதவீதம் குறைவானதாகவும் அதே வருடங்களில் அதே அடிப்படையில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவருக்கு எதிரான குற்றங்கள் நான்கு சதவீதமே குறைவு என்பது இன்னும் கொடூரச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

3. இலட்சக்கணக்கான தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவர்களில் நடைபெறும் குற்ற விகிதாச்சாரம் பழங்குடியினரிடையே உள்ள குற்ற விகிதாச்சாரம் தாழ்த்தபட்டவர்களிடையே நடப்பதைவிட அதிகமாகவே இருக்கிறது.(4)

4. 1981—96 யில் மத்தியபிரதேசத்தில் அதிகபட்ச அளவு குற்ற விகிதம் உள்ளது.(5)

5. சமூகப் பகுப்பாராய்ச்சியாளர்கள் தாழ்த்தபட்டோர் பழங்குடியினருக்கு எதிராக செய்யப்பட்ட குற்றங்களுக்கான காரணங்கள் பொருளாதாரத்திலிருந்து பொருளாதாரமற்றவற்றிக்கு மாறியிருக்கின்றது என்று குறிப்பிடுகின்றனர். குற்றத்தின் தன்மையும் தனிமனிதனை துன்பப்படுத்துவதிலிருந்து அல்லது அவமதிப்பதிலிருந்து குழுக் கொடுமையாக மாறியுள்ளது என்கிறார்கள்.(7)

அத்தியாயம் 3 ஆராய்ச்சியில் பின்பற்றப்பட்ட முறைகளும் மாவட்டங்களைத் தேர்வு செய்வதற்கான அடிப்படைகளும்

1. ஆராய்ச்சிக்காக தேர்வு செய்யப்பட்ட மாநிலங்கள் பீகார் இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு போன்ற ஐந்து மாநிலங்களாகும்.

2. மாவட்டங்களின் தேர்வு எண்ணிக்கை திட்டமிட்ட முறையில் மொத்த மக்கட் தொகையில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் மக்கட் தொகை விகிதாச்சாரம் 1983 யிலிருந்து 1987 வரையிலான தீச் செயல்களின் நடப்பு முதலான அம்சங்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது.(2—7)

3. இந்த ஆராய்ச்சிக்காக மொத்தம் ஆயிரம் வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் நூறு வழக்குகளை கிராமத்துச் சூழ்நிலையில் மிகவும் ஆழமான ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.(9)

*அத்தியாயம் : 4 கொடூரச் செயலுக்கான காரணங்கள் 1–நிலம்*

1. நிலத்தகராறு என்பது ஒரு முக்கியமான தனிப்பட்ட ஒரு காரணமாகும். இது நிலத்திட்டம், வீட்டு இடப்பங்கீடு விவசாய பூமியும் நீர்பாசன உரிமைகளும் நில உடைமைகளும்(1)

2. புதிய நிலவுடைமை மேம்பாட்டு சட்ட அமுல் பூர்வீக நில உரிமையாளர்களுக்கும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தாருக்குமிடையே பகையை ஏற்படுத்திருக்கிறது.

3. இந்தப் பகைமை ஒதுக்கப்பட்ட நிலங்களை நீர்பாய்ச்சி பயிர் செய்தபோதும், பங்கீடு செய்த நிலம் வளமான நிலமாக மாறியதை அறிந்த போதும் மிகவும் உக்கிரமானது.(6)

4. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரால் செய்யப்பட்ட விவசாயம் நல்ல பயனைத் தந்த போது ஏற்படும் பொறாமையாகிய பகைமை மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களை பயிர்களை சேதப்படுத்தும் அளவுக்கு உச்சநிலைக்குக் கொண்டு சென்றது.(7)

5. பொதுவான மேய்ச்சல் நிலங்களையும், பிற சாதியாரின் அல்லது இனத்தாரின் நிலங்களையும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களோ பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களோ உபயோகப் படுத்தும்போது அவர்கள் மீது கோபமெழச் செய்தது.(8)

6. பயிர் செய்யும் உரிமைப் பங்கீடு மத்தியபிரதேசத்தில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரை துன்பமடையச் செய்திருக்கின்றது.(9)

7. கொடூரச் சம்பவங்கள் நடந்திருக்கும் இடத்தில் விதிக்கப்பட்ட துப்பாக்கி உபயோக உரிமைத் தள்ளுபடி, விலக்கல், மூத்த தலைவர்களின் மேற்பார்வையில் சொந்தமான எல்லைப்பகுதி நிர்ணயம் நிலத்தகராற்றில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்குக் கொடுக்கப்பட்ட தாராளமான சட்ட உதவி, உள்மாநில அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட சிறப்புப்பாதுகாப்பு நடவடிக்கை தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரால் அனுபவிக்கப்பட்ட பொதுவிளைச்சல் நிலம் பிற இனத்தாரின் விவசாய நிலம் போன்ற காரணங்களாகும்.(11)

*அத்தியாயம் 5 காரணம் 2 பழங்குடியினத்தாரின் நில உடைமை நீக்கம்.*

1. பீகார், இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாட்டு பழங்குடியினரின் நிலங்களைப் பாதுகாப்பு செய்வதற்கு சிறப்பு பாதுகாப்புச் சட்டமும் ஆணையும் உள்ளது. ஆனால் பழங்குடியினரல்லாத மற்ற இனத்தவர்கள் இந்தச் சட்டங்களிலிருந்து விடுபட தப்பிக்க வழிமுறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். ஏமாற்று வழிகளினாலும், கடனுக்காகவும் பழங்குடியினத்தாரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள் பழங்குடியினர் தொடர்ந்த வன்முறைகளுக்கும், குற்றங்களுக்கும் கொடூரச் செயல்களுக்கும் காரணங்களாகியது(1—2).

2. பெரிய அளவில் பழங்குடியினரிடமிருந்து பறிக்கப்பட்டநிலங்கள் பீகாரில் கூட்டு பொது திருப்தியின்மைக்கு காரணமானது.(3)

3. அதிலாபாத்தில் (Adilabad) பழங்குடியினத்தாரிடமிருந்து நிலப்பறிமுதல் செய்யப்பட்டபோது வருவாய்த்துறை (Revenue) அதிகாரிகளுடைய பட்வாரிகளின் (Patwari) கண்சாய்ப்பை டாக்டர் ஹைமென்டார்ஸ் (Dr.Haimendors) என்ற சமூக மானிடவியல் வல்லுநர் ஆராய்ச்சி செய்து கொண்டுள்ளார்(5)

4. 1985—ல் வருவாய்த்துறை அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கில் சட்டத்திற்குப் புறம்பான நிலபறிமுதலை சோதனை செய்ய அமுலாக்கிய சட்டங்கள் கிராமிய முன்னேற்ற அல்லது வளர்ச்சித் துறைகளால் திருத்தியமைக்கப் பட வேண்டும்.(6)

5. இந்த ஆராய்ச்சியில் மேற்கொண்ட குற்றங்களின் எண்ணிக்கை தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளில் நிகழ்ந்தவை. ஆளுநருக்கு பிரிவு 5—ன் அரசியல் அமைப்பின் கீழ் இந்தப் பகுதிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கும் உரிமை இருந்தபோதிலும் எந்தவிதமான தனிமுயற்சியும் பழங்குடியினரின் பாதுகாப்புக்குத் தேவையில்லை(7—8).

6. அத்தியாயம் 5—9—ல் பழங்குடியினரிமிருந்து நிலம் பறிமுதல் செய்யப்பட்ட போது எடுத்த விரிவான படிநிலை நடவடிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

***அத்தியாயம் : 6 காரணம் 3 கொத்தடிமை வேலையாட்கள் அல்லது கட்டுப்பாட்டிற்குள்ளான வேலையாட்கள்*** (Bonded Labour)

கொத்தடிமை வேலை ஒழிப்பு முறையை அறிமுகப்படுத்தி பதினான்கு வருடங்கள் ஆனபோதிலும் இன்னும் சில இடங்களில் கொத்தடிமை வேலைமுறை இன்றும் செயல்பட்டு வருகின்றது. கொத்தடிமை வேலை ஒழிப்பு முறை அமுலின் வீரியம் குறைந்தது போல தோன்றுகிறது(4—5).

2. கொத்தடிமை வேலை ஒழிப்பு முறை நடவடிக்கைகள் பல இடங்களில் சரியாகச் செயல்படவில்லை. இதற்காக போடப்பட்ட சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் இப்போதுவரை போதுமான அளவு கொத்தடிமை வேலை அமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கு நெருங்கிய தொடர்புடையதாகத் தெரியவில்லை.(6)

3. கொத்தடிமை வேலை அமைப்புச் சட்ட விதிமுறைகள் இன்றளவும் செயல்படும் இடங்களில் அதை ஒழிக்கும் சட்டத்தை நிறைவேற்றும் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும்(1).

4. இந்த வழிமுறைகளின் சுருக்க ஒத்திகை முழுவதுமாக உபயோகிக்கப்படுத்தப்பட வேண்டும்.

5. கொத்தடிமை வேலையாட்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரக்கூடிய உறுதிபடுத்திக் கொண்ட நடவடிக்கைகள் எடுக்கபட வேண்டும்.

6. கட்டுண்ட அல்லது கொத்தடிமை வேலைமுறை நடைபெறும் இடங்களில் அதனால் உண்டாகும் வன்முறைச் சம்பவங்கள் இதற்கென உண்டாக்கிய கிராம அலுவலகங்கள் சரியாகச் செயல்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. அந்த மாதிரியான அலுவலகங்களை செயல்பட வைக்க வேண்டும்.

7. அத்தியாயம் 6(11)(bonded Labour) கட்டுப்பாட்டிற்குள்ளான வேலையையும் அதனால் ஏற்படும் கொடூரச் சம்பவ ஒழிப்புக்கான நடவடிக்கைமுறைகளும் தரப்பட்டுள்ளன.

*அத்தியாயம் : 7 காரணம் :4 கடன்படல்.*

1. லேவாதேவிக்காரர்கள், நிலச்சுவான்தார்கள், வியாபாரிகள் போன்ற கடன் கொடுக்கும் தனியார்கள் மூலமாகக் குறிப்பிட்ட தொகை இன்றும் கடனாக விவசாயிகளுக்குக் கொடுப்பது தொடர்கிறது(1—10)

2. இந்தியா முழுவதிலும் கடன் நீக்கம் மறுபரிசீலனை செய்யப்பட்டு வலுவான ஆரோக்கியமான குணங்களைக் கொண்ட வழிகாட்டியை சம்பந்தப்பட்ட முறையில் சட்டமாக்கப்பட வேண்டும்.(14–16)

3. கடன் பட்ட அல்லது கடன்வயப்பட்ட தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவர் வசிக்கும் பகுதிகளில் ஏழ்மை ஒழிப்புத் திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.(17)

4. குறிப்பாக பணமாற்று அல்லது கொடுக்கல் வாங்குதல் சம்பந்தமான சச்சரவுகளில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்குச் சார்பாக ஏற்படுத்தப்பட்ட சட்ட உதவி மற்றும் பொது நல வழக்காடுகள் மிகவும் முக்கியமானது.

5. அத்தியாயம்(7) 19—ல் திட்ட அளவுகோல் பட்டியல் ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

*அத்தியாயம் 8 காரணம் 5 கூலிகள்*

1. நாற்பத்தெட்டு சதவீதம் தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த வேலையாட்களின் ஒரு பெரிய அளவு வேலை விவசாய வேலையாகும். இது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண் கூலி வேலையாட்களில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகி 68 சதவீதமாக இருக்கிறது(4—6)

2. தாழ்த்தப்பட்டோர் இன விவசாயக் கூலிகள் தொழில் முறையில் சுரண்டலினால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.

3. விவசாயத் தொழிலைத் தவிர தாழ்த்தபட்டோர் கிழக்குப் பகுதிகளில் மீன்பிடிப்பவர்களாகவும் மேற்குப் பகுதிகளில் அதிகமாக தோல்வேலை செய்பவர்களாகவும் விவசாய வேலை செய்பராகவும் தோல் உரித்தெடுப்பவர்களாகவும், கூட்டும் தொழில் செய்பவர்களாகவும் தோட்டிகளாகவும் நெசவுத் தொழில் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே தாழ்த்தப்பட்டோருக்கான இந்த வேலைகளில் நிர்ணயிக்கப்பட்ட சட்டமாக்கப்பட்ட குறைந்த கூலி என்பது மிக முக்கியமான தொன்றாகும்(7).

4. அத்தியாயம் 8 (11)—ல் குறைந்த கூலியால் ஏற்படும் கொடூரச் செயல்களைத் தடுக்கும் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

***அத்தியாயம் 9 கொடூரச் செயல்களும் சட்டமும் நில உடைமை இயந்திரங்களும்.***

1. முதலில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் அவர்களின் உரிமைகளைப் பெறவும் சட்டத்தைச் சரிசெய்து பாதுகாக்கவும் பொறுப்புள்ள காவல்துறை நிர்வாக அமைப்பு தேவைப்படுகின்றது.

2. வழக்கு புகார் செய்வதில் தாமதம், வழக்குகளைப் பதிவு செய்யாமை, குற்றம் நடந்த இடத்தைப் பார்வையிடுவதில் காலதாமதம் குற்றப்பத்திரிகை (Charge Sheet) போடுவதில் தாமதம் தேவையான முக்கியமான சட்டங்களான கட்டுப்பாட்டிற்குட்பட்ட வேலை அமைப்புச் சட்டம் (BISA) போன்றவற்றிக்கு நடவடிக்கைகள் எடுக்கத்தவறியது போன்ற எண்ணிக்கையற்ற வழக்குகள் உள்ளன. நீதிமன்றத்தில் முன்பகுதியில் தாமதப்படுத்தும் தொங்கும் மணி இருப்பதும் ஒரு அம்சமாகும்(2—8).

3. கொடூரச் சம்பவம் செயல்களில் அதிக சதவீதம் பேர் குற்றமற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டள்ளது(9—10).

4. சமூக உரிமைகளை நிறைவேற்றும் பிரிவுகளை செயல்பட வைக்க வேண்டும்(12).

5. சாதிக்கலவரங்கள் நடக்கும் இடங்களில் ஏற்படும் தொந்தரவுகளை நீக்க முன்னறிவிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்(13).

6. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவர் வசிக்கும் பகுதிகளில் அவர்களிடமிருந்து வரும் புகார்களைக் கவனிக்க தனிக் காவல்நிலையங்கள் திறப்பதற்குப் பதிலாக அதற்கென்று கூடுதல் சார்பு ஆய்வாளரோ அல்லது தலைமைக் காவலாளியோ தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்காக அவர்களைத் தனிப்பட்ட முறையில் கவனிப்பதற்கென்று நியமிப்பது சிறந்ததாகும்(14).

7. ஒழுங்கான தரவுகளின் அடிப்படையில் குற்றங்களுக்கப்பால் ஒரு முன்னேறப்படான, காலத்திற்கேற்ற அதிகாரமும் நடவடிக்கை எடுத்தலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தாருக்காக இருத்தல் நல்லது.

8. காவல் பயிற்சி பள்ளிகளில் பயிற்சியிலிருக்கும் அல்லது பணியிலிருக்கும் அலுவலர்களுக்கென்று கட்டுப்பாட்டிற்குள்ளான வேலை அமைப்புச் சட்டம் (BLSA) குறைந்த கூலிச்சட்டம், குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்புச்சட்டம் சமூக உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் (PCRA) போன்ற சட்ட மேற்கோள்களைப் பயிற்சிப் பாடநிலைகளுடன் சேர்க்க வேண்டும்.

9. கொடூரச் செயல்களைத் தடுப்பதற்கென்று தனிப்பட்ட முறையில் குறிப்பாக இயங்கும் கூடுதல் பகுதிகளைக் கொண்ட சிறப்புத் தனி நீதிமன்றங்கள் இருக்க வேண்டும். கொடூரச்செயல் தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளவை கொடூரச் வழக்குகளுக்கு முன்னுரிமை கொடுக்காது. இந்த வழக்குகளையன்றி மற்ற வழக்குகளுக்கென்று தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் இருக்க வேண்டும். மாவட்டத்தின் எந்தப் பகுதிகளில் கொடூரச் செயல் வழக்குகளின் எண்ணிக்கை போதுமான வேலைப் பளுவைக் கொடுக்கின்றதோ அங்கே ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கென்று கூடுதல் சிறப்பு நீதிமன்றங்கள் இருக்க வேண்டும்.

10. சிறப்புச்சட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி நீதிபதிகளைப் போடுவதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். பொறுப்பு நீதிபதி அலைந்து திரிபவராகவும் நீதிமன்றத்தின் செயல்பாடுகள் எளிமையானதாகவும் இருக்க வேண்டும்(18).

11. குற்றவியல் சட்ட நிறுவனங்கள் நீதியைப் பாதுகாப்பதற்கு நிர்வாகச் சபையின் திட்டங்கள் நடைமுறையிலிருக்க வேண்டும்.

12. கலவரப் பகுதியில் கொடூரச் செயல்களை சோதனை செய்வதற்கு கைச்சட்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

13. காவல் நிலையத்தில் கண்சாய்ப்பு நடவடிக்கைகள் செயலாகும் பட்சத்தில் காவல் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இம்மாதிரியான வழக்குகளில் குற்றம் செய்தவரின் பெயரை அதிகபட்ச நிலையில் போதுமான அளவு விளம்பரப்படுத்த வேண்டும். கற்பழிப்பு வழக்குகளில் சாட்சியங்களின் பெயர் தெரியாதபடி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

14. காவல் அதிகாரிகள் குற்றம் செய்திருக்கும் பட்சத்தில் பொது மக்களின் நேரடி ஆர்வ வழக்குரைத்தல்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

15. கொடூரச் செயல்கள் சம்பந்தமான சட்டங்களுக்கு பதினாறு படிநிலை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான ஆணைகளை வரிசைப்படுத்தப்பட வேண்டும்(24).

*அத்தியாயம் 10 பழங்குடியினத்தவரும் காட்டிலாகா அதிகாரிகளும்*

1. 1988—ஆம் ஆண்டு வனக் கொள்கைப் புரட்சியின்படி பழங்குடி மக்களின் உரிமைகள் செயலில் இருந்த போதிலும் பழங்குடியினருக்கும் வனத்துறையினருக்குமிடையே உள்ள மனஸ்தாபம் பழங்குடியினருக்கு எதிரான கொடூரச் செயல்கள் செய்ய பீறிட்டு எழுகின்றது(1).

2. குறிப்பிட்ட சில பகுதிகளில் நிறைய கொடூரச் செயல் வழக்குகள் நடைபெறுகின்றது(2).

3. ஆந்திர டாக்டர் ஹைமன்டோர்ஸ் இந்திய சமூகவியல் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பெர்னாண்டஸ் போன்றவர்களின் ஆய்வுகள் அரசாங்க தொழிற்சாலைகளின் வருமான விதிகளுக்கும் வனத்துறையின் விருப்பமில்லாத பழங்குடியினரின் பொருளாதாரத்தில் காட்டிலாகா அதிகாரிகளின் தவிர்க்க இயலாத தலையீட்டினால் ஏற்பட்ட கொடுமைகளையும், கொடூரச் செயல்களின் விளைவுகளையும் இருவரின் ஆய்வுகளும் விளக்குகின்றன.

4. 1982—ஆம் ஆண்டு புரபசர் பர்மனின் ஆய்வறிக்கை வனத்தில் பழங்குடியினரின் செயல்பாட்டினை விவரிக்கிறது. இவ்வாய்வின் விளைவுகள் அந்தந்தப் பகுதிகளில் செயல்முறை படுத்தப்படவில்லை.

5. பழங்குடியினரின் கேள்விகளுக்கு வனத்துறை அதிகாரிகளின் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன(9).

*அத்தியாயம் 11 பொருளாதாரமற்ற காரணங்கள் :*

1. சாதிக்கொடுமை, தீண்டாமை போன்றவைகளே வன்முறைச் சம்பவங்களுக்கான அடிப்படைக் காரணங்களாகும். அரசியல் கட்சிப் பிளவே சண்டைகளுக்கு அதிமுக்கியமான காரணமாகும். கொடூரச் செயல்கள் நடைபெறுவதற்கு மூடநம்பிக்கைகளும் காரணமாகின்றது(1).

2. நாடுகளில் ஏற்படும் பலவிதமான தீண்டாமைக் கொடுமைகளை தேசியக் கூட்டத்தின் (1981) ஆராய்ச்சி(ஆய்வு) வெளிப்படுத்துகின்றது(2).

3. குடிநீர் பாதுகாப்பு அணுகுமுறைகள் தேநீர் கடைகளின் அணுகுமுறை விழாக்கள் கொண்டாடுதல் சுடுகாட்டைப் பயன்படுத்துதல் போன்றவைகளும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறக் காரணமாகின்றது.(3—9)

4. சமூக கோபதாபங்கள் ஆழமாய் வேரூன்றியிருக்கும் பட்சத்தில் மிகவும் சாதாரணமாக அற்பத்தனமான வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக் காரணமாகின்றது. (10).

5. அரசியல் சாதி கட்சிப்பிரிவு பெரும்பாலும் வன்முறைச் சம்பவங்களுக்கும் சண்டைகளுக்கும் முக்கிய காரணங்கள் ஆகின்றன(11).

6. பிற சாதியினருக்கு பாரம்பரிய மிக்க செயல்களாக இருப்பதை குழி தோண்டிப் புதைத்தல், சிதையூட்டத் தயாராகுதல், பிராணிகளின் பிணத்தை அப்புறப்படுத்துதல், கொட்டி முழங்குதல் போன்றவற்றில் தனது பாரம்பரியச் செயல்களை செய்ய விடாமல் தடுக்கும்போது சண்டைகள் உருவாகின்றன(12).

7. நிறைய(பல) காவல்நிலையங்களில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகள் பரிச்சயமாக்கப்படவில்லை. எனவே இதையும் காவல் அதிகாரி பயிற்சி கால பாடத்திட்டத்தில் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்(13—14).

8. பல மாநிலங்களில் காணப்படும் குடியுரிமைப்பாதுகாப்புச் சட்ட வழக்குகளின் கீழ்த்தரமான பாராதீனம் செய்தல், தாமதப்படுத்தும் தொங்குமணி அதிக சதவீத குற்றமில்லை என்று தீர்மானிக்கப்பட்டவை போன்ற காரணங்கள்(15—17).

9. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குகள் மிகவும் வலுவுள்ளதாகச் செய்ய காவல்நிலையங்களுக்கும் குற்றஞ் சாட்டப்படும் வழக்குகளுக்குத் தொடர்பான செயல்பாடுகளும் அதற்கென தனிப்பட்ட பயிற்சியும் இருக்க வேண்டியது அவசியமான தொன்றாகும்(18).

10. பாராளுமன்ற ஆண்டறிக்கையை அரசு துரிதப்படுத்த வேண்டும்(20).

11. பட்டியலாகத் தீர்மானங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன(21).

*அத்தியாயம் 12 : 1989–ஆம் ஆண்டின் கொடூரச் செயல் பாதுகாப்புச் சட்டம்.*

1. சட்டத்தின் பின்னாலிருக்கும் விவேகம், குற்றங்களும் அதன் பிரிவுகளும் விளக்கப்பட்டுள்ளன(1—3).

2. இந்திய தண்டனைச் சட்டம் (IPC) அல்லது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் அபராதத் தொகையை விட கொடுஞ்செயல்கள் தடுப்புச்சட்டம் (PAA) வழங்கும் அபராதம் மிகவும் கடுமையானதாகும்.

3. கொடூரச் சம்பவங்கள் நடக்கும் பகுதிகளில் PAA சட்டம் அபராதத் தொகை வசூல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்றவை(6) நடவடிக்கை எடுக்க வழிவகை செய்கின்றது.

4. குறைந்த கூலி தராமை போன்றவற்றோடு தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்ட குற்றங்கள், மாடு களவு கடன்தொகை கணக்கெடுப்பு மேற்பார்வையில் ஏற்படும் மோசடிகள், புதைப்பதற்கு பாதுகாப்பு விதிமுறைகள் சுடுகாட்டுப் பிரச்சினைகள் போன்றவை PAA வில் அடங்கும்(7).

5. PAA வை விரிவுபடுத்தியபின்பு தற்போது குறிப்பிட்ட பகுதி அல்லது பழங்குடியினர் பகுதி போன்றவற்றைச் சேர்த்துக் கொண்டது. இச்சட்டம் தாழ்த்தப்பட்டோருக்கும் கொடூரச் செயல்கள் நடைபெறும் பிரச்சனைக்குட்பட்ட பகுதிகளையும் இணைக்கும்படி விரிவாக்கப்பட வேண்டும்(8).

6. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக் கெதிராகக் கொடுமைகள் மொத்தமாக நடக்கும் சூழலில் மொத்த அபராதத் தொகையே வலுவானதாகவும் பயனுள்ள தடுக்கக் கூடிய ஒன்றாகவும் இருக்க முடியும்(9).

7. விளம்பரப்படுத்துவதற்கு தொடர்பான வலுவுள்ளதாக்க விரிவானதாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கவும் மாநில மொழிபெயர்ப்பு, கருத்தரங்குகள், சிறப்பு நீதிமன்றங்கள், சிறப்பான முறையில் வாதாடுபவர்கள், PAA வழிமுறை குற்றச் சாட்டு(தாள்கள்) பத்திரிகைகள் வசூலிக்கப்படும் அபராதத் தொகை, சட்ட உதவிகள் போன்றவைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன(10).

அத்தியாயம் 13 சட்ட உதவி மையம், பொதுமக்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் பங்கு

1. முன்னணி சாதியினரும் குற்றவாளிகளின் பொருளாதார நிலையும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் காயப்படுத்தப்பட்டு வழக்கிடுதலில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

2. 39–A சட்ட அமைப்பின் அறிமுகம் மத்தியநிர்வாகக் குழுவின் சட்டப்பரிந்துரைகள், சட்ட உதவி அமைப்பின் நிர்வாகக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட சட்டங்களும் விடுப்பு முறைகளும் போன்றவை இதில் அடங்கும்(2–4).

3. தாழ்த்தபட்டோர் பழங்குடியினர் குற்றவாளிகளாக இருக்கும் பட்சத்தில் சட்ட உதவிகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் மேற்சொன்ன நிர்வாகக் குழுக்கள் அல்லது CILAS க்கு ஒத்துப்போகும். இது மிகவும் நிபந்தனைக்குட்பட்ட கருத்தாகும் சட்ட உதவி குழுவிற்கு ஒத்துப்போகாத நீதிபதி கிருஷ்ணஐயரின் நிர்வாகக்குழுவின் பரிந்துரைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

4. மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகள் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்குத் தொடர்பான விசாரணை வழக்குகளுக்கு மட்டும் CR.P.C யும் ஆதாரச் சட்டமும் ஒரு குறிப்பிட்ட சமயங்களில் பயன்படுத்தப்படும்(8).

5. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் தன்னிச்சைக் குழுக்கள் கொடூரச் செயல் வழக்குகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. சில மாநிலங்களில் வழக்குகள் சிறந்த முறையில் பதிவாவதற்கு இந்த நிறுவனங்கள் பயன்படுகின்றன. சாதி சண்டைகளில் தன்னார்வ நிறுவனங்களும் அதோடு தொடர்புடைய தனிப்பட்ட மனிதர்களும் மத்தியஸ்தர்களாக பஞ்சாயத்துகாரர்களாக செயல்படுகின்றனர்(9–10).

6. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வன்முறைச் சம்பவ வழக்குகளின் குற்றவாளிகளுக்கு விரைவில் விடுதலை பெறும் முறையில் பயனுள்ள வழிகளில் செயல்படமுடியும்.

7. PAA வின் கடுமையான அபராதத்தொகை கடுமையான பலம் பொருந்திய குற்றங்களின் எதிராளிகளான நிலச் சுவான்தார்கள், கடன் கொடுப்பவர்கள், காடுகளை ஒன்று சேர்ப்பவர்கள், காவலாளர்கள், நிலத்தைச் சுரண்டுபவர்கள், காட்டிலாகா அதிகாரிகள் போன்றவர்களின் விவேகமான நடவடிக்கைகள் மிகவும் கடுமையானதாக இருக்கும்போது சட்ட உதவி நிறுவனங்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன(12).

8. நம்பிக்கைக்குரிய தன்னார்வத் தொண்டுநிறுவனங்கள் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறும் பகுதிகளில் செயல்படும் போது அவற்றிற்குச் சட்ட உதவிநிறுவனங்கள் தன்னலமற்ற முறையில் வழக்கிடுவதில் உதவுகின்றன. இந்த மாதிரியான நடவடிக்கைகளில் சட்ட உதவி நிறுவனங்கள் பங்கேற்கும்போது தன்னலமற்றதாகவும், எதிராளிகளின் வழக்கிடுதலில் அரசு பக்கபலமாகவும் இருக்கும்போது சமூகநிதிப்படி சட்ட உதவி நிறுவனங்கள் கருவியாகச் செயல்பட வேண்டும்(13—15).

சட்ட உதவி நிறுவனங்கள் பின்வரும் விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

i) குற்றவாளிகளுக்கு என்னென்ன செய்யவேண்டும் என்று அறிவுரை வழங்குதல், மாற்று வழிகள் அதற்கு என்னென்ன உள்ளன என்பதையறிதல் கட்டாயப்படுத்தி சமாதானமாவதற்கு அனுமதித்தல் கூடாது.

ii) பதிவு செய்த அல்லது செய்யப்பட்ட வழக்குகளை உறுதிப்படுத்துதல்.

iii) விசாரணை அதிகாரிகளை குற்றப்பகுதிகளை அல்லது சம்பவம் நடந்த பகுதிகளை விரைவில் பார்வையிட உறுதிப்படுத்துதல்.

iv) எல்லாவகையான சட்ட விதிகளையும் பார்த்து எவ்வளவு விரைவில் குற்றப் பத்திரிக்கை (Charge Sheet) தாக்கல் செய்ய முடியுமோ அதைச் செய்தல்.

v) தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தவர் குற்றவாளியாகயிருக்கும் பட்சத்தில் வழக்கறிஞரின் வேலைகளுக்கு சாட்சிப்படி வாங்குவதற்கு நகல் பணம் காவல் நிலையம் நீதிமன்றத்திற்கு போய் வரும் செலவுகள் போன்றவற்றிக்கு சட்ட உதவி நிறுவனங்களின் உதவியை வழங்குதல்.

vi) வழக்குகளை நடத்துவதற்கும், சான்றாதாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் காவல் நிலையத்திற்கும், அரசுதரப்பு அதிகாரிகளுக்கும் தகுந்த மாதிரி ஒத்துழைப்பைத் தந்து உறுதிப்படுத்துதல்.

vii) நீதிமன்றச் செயல்முறைகளை ஒழுங்குபடுத்தும் முறையில் செயல்பட வேண்டும்.

viii) பொது வழக்காடுதலுக்கு ஆர்வமளிக்கும் தன்னார்வ நிறுவனங்கள் வெளிப்படையாகச் செயல்படாமல் இரகசியமாகச் செயல்படும் முறைகளுக்கும் சமாதான நிறுவனங்களுக்கு உதவுவதும் குற்றவாளிகளுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் துரித விடுதலை பெறுவதற்கு உதவுதலும் வேண்டும்.

*அத்தியாயம் 9 ஏழ்மையும் படிப்பறிவின்மையும்*

1. ஏழ்மையினாலும் படிப்பறிவின்மையினாலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் நிலத்தகராறு, கடன்படுதல், கொத்தடிமைக் கூலிகள் போன்றவற்றினால் காவல் நிலையத்தாரிடமும் காட்டிலாகா அதிகாரிகளிடமும் எவ்வளவு மோசமாகக் கீழ்தரமாக கட்டுப்பட்டுள்ளார்கள் என்பதைச் சில ஆய்வுகள் விளக்குகின்றன.

2. மொத்த மக்கட் தொகையில் நகரத்திலும் கிராமத்திலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் ஏழ்மை அல்லது வறுமைக்கோட்டு சதவீதம் மிகவும் மோசமானதாகவுள்ளது.

3. பொதுவாகத் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் பொருளாதாரநிலை கிராமத்தைவிட நகரத்தில் கொஞ்சம் பரவாயில்லாமல் உள்ளதென்று வறுமைக்கோட்டுச் சதவீதப் பட்டியல் தெளிவாக்குகின்றது.

4. (மத்திய கால) இடைக்கால ஏழு அம்சத்திட்டம், ஏழ்மைக் குறைபாட்டு நிகழ்ச்சிகளின் திறனாய்வு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவை IRDP, NERP & RLEGP

போன்றவற்றில் தாழ்த்தப்பட்டோர் பழங்குயினரின் பங்கு எதிர்பார்க்கும் இலக்கைவிட அதிகமாக உள்ளது. இருந்தபோதிலும் அதற்கென்று சில சிறப்பு வழிமுறைகள் செயல் முறைக்கு கொண்டு வரும் போது இறுக்கமாக்கப்படுகின்றது(5—7).

5. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தார் தமக்குரிய முதன்மை இடத்தைக் கண்டறிவதிலும் தேவைப்படும் நேரத்தில் உதவுவதிலும் கிடைக்கும் சலுகைகளை அனுபவிப்பதிலும் நிறைய பங்கு பெறுவதிலும் திட்டத்தின் தரத்தை வலுவற்றதாக்குவதிலும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் படிப்பறிவு அவசியமான தொன்றாகும்.

6. வளர்ச்சித் தரகரால் கவனிக்கப்படும் வளர்ச்சிநிதி அவ்வப்போது கண்காணிக்கப்பட வேண்டும்.

7. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான நிகழ்ச்சிகளின் விளைவுகளில் மொத்த நெருக்குநிலையைத் தவிர்க்க ஒழுங்குமுறையை அனுசரிக்கவேண்டும்.

8. கிராம நிலச்சுவான்தார்களின் கொத்தடிமைத்தனம் போன்றவற்றில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கு விடுதலை கிடைக்க, வருமானம் கிடைக்கும் வழிகளும் வருமானத்தை மிகைப்படுத்தும் அமைப்புக்களும் தேவைப்படுகின்றது.

9. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் முழுஆதரவும் முழுப்பயனும் பெறும் வகையில் ஒருதிட்டத்தை அவர்களுக்கு கிடைக்கப் பண்ணவேண்டுமென்றால் சில அமைப்புக்களின் நடைமுறைகளைக் கைவிட வேண்டிய அவசியமும் நேரிடுகின்றது.

10. 1981—ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் படிப்பறிவுத்தன்மை அல்லது கல்வி பெற்றவர்கள் முறையே 21% 16% மற்றவர்கள் 40% இருக்கும்போது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் மேற்சொன்ன சதவீதமே உள்ளனர். 1961—1981—ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரில் கல்வி பெற்றவர்களின் சதவீதம் மிகவும் குறைவானதாகவும் பெண் கல்வி ரொம்பவும் குறைவானதாக மற்ற சாதாரண மக்களின் பெண் கல்வியிலிருந்து அதிகம் மாறுபாடுடையதாகவும் வெளிப்படையான வித்தியாசம் தெரியும்படியாகவும் உள்ளது.

11. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான கல்வி மேம்பாட்டு அமைப்பு உலைக்களம் மிகவும் வலுவானதாகவும் ஆணித்தரமானதாக இருந்தாலும் மாநில வாரியான ஆய்வும் அந்த அமைப்பினால் உண்மையிலேயே மேற்படியார் பயனடைந்து உள்ளனரா மற்ற இனத்தாரின் கல்வி அளவிலிருந்து தாழ்த்தபட்டோர் பழங்குடியினரின் கல்வி அளவு மிகவும் வித்தியாசப்படுகின்றதா என்பதும் தேசீயக் கல்வி ஆண்டான 1990—ஆம் ஆண்டின் சிறப்புக்கவனம் தாழ்த்தபட்டோர் பழங்குடியினத்தவரின் கல்வி பற்றியும் அதிலும் பெண்கல்வியிலும் செலுத்தப்பட்டது.

12. மொத்த மக்கள் தொகைப் பெருக்கத்தை விட 1961—1981 ஆம் ஆண்டிற்கிடையே தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தாரின் மக்கள் தொகை பெருக்க சதவீதம் குறிப்பிடும்படியான அளவில் அதிகரித்துள்ளன. ஏழ்மைத்தன்மையைப் குறைப்பதற்காகவும் படிப்பறிவை அதிகப்படுத்துவதற்காகவும் அதிக அளவில் முயற்சிகள் எடுத்தும் அவையனைத்தும் தோல்வியுற்ற நிலையில் குடும்பக் கட்டுப் பாட்டுத்திட்டம் மட்டும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரோடு ஒத்துப்போகவில்லை.

*பாடம் 15 தொகுப்புரை*

அறிக்கையுள்ள முக்கியமான செய்திகள் சுருக்கமாக இந்தப் பாடத்தில் தரப்பட்டுள்ளது. அதனால் அதற்கு மேற்பட்ட எந்த செய்தியும் இதில் தரப்படவில்லை.

தாழ்தப்பட்டோர் பழங்குடியினருக்காக 1990—ஆம் ஆண்டு ஒரு தேசீயக்குழு ஏற்படுத்தப்பட்டது. ஒரு மாதிரி அறிக்கை கீழ் வரும் வகுப்புகளில் தரப்பட்டுள்ளன.

நிலத்தகராறு சம்பந்தப்பட்ட வழக்குகளின் ஆய்வு

1. வழக்காய்வு எண் : 4(தாழ்த்தப்பட்டோர்) மேல ஆத்தூர் கிராமம், மந்தைமேடு காவல்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம். வழக்கு நடந்த தேதி மற்றும் இடம் : 02.09.85, மேல ஆத்தூர் சம்பவத்தன்மை : கொலை வழக்கு (நிலத்தகராறு)

03.09.85 அன்று இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பிரிவு 302ன் படி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரால் கொடுக்கப்பட்ட புகார் பதிவு செய்யப்பட்டது. புகாரில் சம்பவம் நடந்த நாளிற்கு முந்தின இரவு வழக்குக்குச் சம்பந்தப்பட்டவர் தன் முதலாளியின் வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்காக வயலுக்கு போயிருந்தார். அப்போது தாழ்த்தப்பட்டோரல்லாத மற்ற இனத்தைச் சேர்ந்த ஒருவர் அந்த பாசனத் தண்ணீரை தன் வயலுக்கு மாற்றிப் பாய்ச்சியிருக்கிறார். தற்காப்புக்காக தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் கூர் மழுங்கிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இறக்க நேரிடுகின்றது. அதன்பின் வழக்கு காவல்நிலையத்தாரால் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை 12.09.86—ல் வழங்கப்பட்டது.

2. வழக்காய்வு எண் : 3 (தாழ்த்தப்பட்டோர்) தொட்டிச்சிவலசை கிராமம், கீழக்கரை காவல் நிலையம், இராமநாதபுரம் மாவட்டம். சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **30.07.86 தொட்டிச்சிவலசை** கிராமம். சம்பவத்தின் தன்மை : **கொலை (நிலத்தகராறு)**

30.07.86 ல் இந்தியன் பீனல் கோடு U/s 147, 148, 324, 323, 336, 307—ன் படி தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் தாழ்த்தப்பட்டோரல்லாத அறுபத்தி ஏழு பேருக்கு எதிராக புகார் செய்யப்பட்ட வழக்கு சிறிது காலத்திற்குப்பின் இந்தியன் பீனல் கோடு எண் 312—ம் இந்த வழக்கோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இந்துக்களால் சுடுகாடாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு சிறு பகுதி நிலம் சம்பவத்திற்கு அடிப்படைக்காரணம் என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அந்த நிலத்தைத் தங்களுக்கு வீடு கட்ட வேண்டுமென்று விரும்பினார்கள். 1986—ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஒரு இறந்த சடலத்தை எரிப்பதற்காக இந்துக்களின் சுடுகாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அது தாழ்த்தப்பட்டோர் இனத்தாரால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. அதன் விளைவாக கிராமத்தார்கள் தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்களை தடியாலும் கல்லாலும் அடித்ததன் விளைவு தாழ்த்தப்பட்டோர் இனத்தைச்

சேர்ந்த ஒருவர் இறக்கவும் பன்னிரெண்டுபேர் காயமடையவும் காரணமானது. அதே கலவரத்தில் தாழ்த்தப்பட்டோரல்லாத நான்குபேரும் காயமடைந்தனர். விசாரணைக்குப்பின் வழக்கு பதிவு செய்யப்பட்டு சம்பவம் நடந்தபகுதி பரிந்துரைக்குழுவின் மேற்பார்வையில் விசாரணை நீதிமன்றத்தில் முற்றுப்பெறாத நிலையிலுள்ளது.

3. வழக்காய்வு எண் : 3 (தாழ்த்தப்பட்டோர்) தாதன்குடை கிராமம், சிக்கல் காவல்நிலையம் இராமநாதபுரம் மாவட்டம், சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **07.06.1983 தாதன்குடை.** சம்பவத்தன்மை: **கொலை (நிலத்தகராறு)**

7.6.83 அன்று இந்தியன் பீனல் கோடு 147, 148, 447, 326, 307, 302 மற்றும் 379—ன் படி பதினேழு தாழ்த்தப்பட்டோரல்லாதோர் பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்களை தாக்கியதன் விளைவு தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் இறக்கவும் பதினொரு தாழ்த்தப்பட்டோரல்லாதவர் காயமடையவும் நேரிட்டது. அந்தச் சம்பவம் தேவருக்கும் பள்ளருக்குமிடையே நீண்டநாள் தீராத பகையை உண்டாக்கி அரசாங்கத்தின் மேற்பார்வையிலுள்ள ஒரு சிறு பகுதி நிலத்தில் பள்ளர் இனமக்கள் மரங்களை வளர்க்க தேவர் இனத்தவர் அதை வெட்டிக் கரிமூட்டம் போட்டனர். சம்பவம் நடந்த அன்று தேவர் இனத்தைச் சேர்ந்தவர் ட்ரக் வண்டியில் மரங்களை ஏற்றி இடமாற்றம் செய்தபோது தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர் அதை மறியல் செய்ய அதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்டோர் தாக்கப்பட்டு கொலையாக்கப்பட்டார். விசாரணைக்குப் பின் வழக்கு பதினெழு பேருக்கெதிராக பதிவு செய்யப்பட்டு 27.08.97 அன்று நீதிமன்றம் இரண்டு குற்றவாளிகளுக்கு ஆயுள்தண்டனையும் பன்னிரெண்டு பேருக்கு கடுங்காவல் தண்டனையும் மூன்று பேரைக் குற்றவாளியல்லவென்றும் தீர்ப்பளித்தது.

4. வழக்காய்வு எண் : 2 தாழ்த்தப்பட்டோர் பாலத்துப்பட்டி வாலாளாடி காவல்நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **15.2.87 பாலத்துப்பட்டி** சம்பவத்தன்மை: **கொலை (நிலத்தகராறு).**

நான்கு இந்து மதத்தைச் சேர்ந்தவர்களை எதிர்த்து தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரால் 15.02.87 அன்று இந்தியன் பீனல் கோடு எண் : 302—ன் படி ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

15.02.87 அன்று காலை சுமார் ஏழு மணியளவில் பலியாகப்பட்டவர் தன் நண்பர்களுடன் கிணற்றடிக்கு குளிக்கச் சென்றார் என்று வழக்கு பதிவாகியுள்ளது. அப்படி குளிக்கச் சென்றவரை குற்றவாளி கல் ஒன்றால் பின் மண்டையில் தாக்கியுள்ளார். இது நீண்டநாள்பகையாக வளர்ந்து கிணற்று நீர் பாய்சுவதன் மூலமாக வலுப்பெற்றது. விசாரணைக்குப் பின்பு 1987—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20—ந் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றம் தனது தீர்பிபல்குற்றவாளி ஒருவருக்கு ஆயுள் தண்டனையும் மற்ற இருவரையும் குற்றவாளியில்லை யென்றும் தீர்ப்பு வழங்கியது.

5. வழக்காய்வு எண் : 4 தாழ்த்தப்பட்டோர், சித்தூர் கிராமம் தொட்டியம் காவல்நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **31.10.85 சித்தூர்** சம்பவத்தன்மை: கொலை (நிலத்தகராறு).

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் மற்ற இனத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு எதிராக 31.10.85 அன்று இந்தியன் பீனல் கோடு 302—ன்படி ஒரு வழக்கைப்பதிவு செய்துள்ளார்.இந்துமதத்தைச் சேர்ந்த ஒருவரால் 29.10.85 அன்று வைக்கப்பட்ட மதகு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் தண்ணீர் பாய்ச்சுவதற்கு தடையாக இருந்ததாக வழக்கில் கூறப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் அந்த மதகை ஆரம்பத்திலிருந்தே ஆட்சேபித்தும் அதை இடித்தும் நாசம் செய்துள்ளார். இருதரப்பினரும் அவரவர் புகார்களை மற்றவர்களுக் கெதிராக பதிவு செய்தனர். இதற்கிடையில் ஒரு சண்டையில் ஏழு தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்களும் ஐந்து மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களும் மோதி காயமடைந்து அதில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு காயம் ஏற்பட்டு இறப்பு நேரிடுகின்றது. இந்த வழக்கு 27.11.85 அன்று விசாரணை செய்யப்பட்டு பதிவு செய்து எல்லோரும் குற்றவாளிகள் இல்லையென்று நீதிமன்றத்தால் 19.07.87 அன்று தீர்ப்பு சொல்லப்பட்டு விடுதலை பெற்றனர்.

***பணம் கொடுக்கல்/வாங்குதல் காரணமாக ஏற்பட்ட வன்முறைச் சம்பவ வழக்குகள்***

1.வழக்காய்வு எண் : 8 (தாழ்த்தப்பட்டோர்) கானல்புதூர் கிராமம், கிணத்துக்கடவு காவல் நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம். சம்பவம்

நடந்த தேதி மற்றும் இடம்: **10.11.83 கானல்புதூர் கிராமம்,** சம்வத்தன்மை : **பணம் கொடுக்கல்/வாங்குதல் (பாட்ட வழக்கு)**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கானல்புதூர் கிராமத்தில் 10.11.1983 ஆம் தேதியன்று பலியாக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தாருக்கும் மற்ற இனத்தைச் சேர்ந்த இருபத்தொன்பது குற்றவாளிகளுக்குமிடையே பணம் கொடுக்கல் வாங்குதலில் தகராறு ஏற்பட்டது, குற்றவாளி தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த நாற்பது வீடுகளுக்குத் தீ வைத்தார், எல்லா வீடுகளும் முழுமையாக எரிந்து சாம்பலாகியது, 14.11.1983 அன்று இந்தியன் பீனல் கோடு (IPC) எண்கள் 147,148 மற்றும் 436 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றப் பத்திரிக்கை (Charge Sheet) 2.2.1984— அன்று போடப்பட்டது. 20.10.1984 அன்று நீதிமன்றத்தால் விசாரனை செய்யப்பட்டு வழக்கு தள்ளுபடியாகியது.

2. வழக்காய்வு எண் : 15 (தாழ்த்தப்பட்டோர்) குப்பட்டம் பாளையம் கிராமம், கோயம்புத்தூர் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **24.05.1983 குப்படம் பாளையம்** கிராமம் சம்பவத்தன்மை : **கடன் திருப்பித் தராமலிருத்தல் வழக்கு (தாக்குதல்)**

24.05.1983 அன்று சம்பந்தப்பட்ட தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவரும் அவர் மகனும் குற்றவாளியான அடுத்த இனத்தைச் சேர்ந்தவரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதல் பலியாகப்பட்டவர் கடனாக பெற்ற தொகை ரூபாய் 7—ஐ திருப்பித் தராமல் பாக்கியாக வைத்திருந்ததால் ஏற்பட்டது. இந்த வழக்கு 24.05.1983 அன்று இந்தியன் பீனல் கோடு எண்கள் 147,447,325,323 மற்றும் 149—பிரிவின் கீழ் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. 4.3.1983 அன்று குற்றப்பத்திரிகை பதிவு செய்யப்பட்டு வழக்கு 01.06.1984 அன்று நீதி மன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி ஆனது.

3. வழக்காய்வு எண்:2 (தாழ்த்தப்பட்டோர்) மலைப்பண்ணை கிராமம், ஆறுமுகநேரி காவல்நிலையம், திருநெல்வேலி மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **21.07.1986 மலைப்பண்ணை** கிராமம் சம்பவத்தன்மை : **கடன் திருப்பிதராமையால் ஏற்பட்ட தகராறு (கொலை வழக்கு)**

சம்பவ தினமான 21.07.1986 அன்று திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மலைப் பண்ணை கிராமத்தைச் சேர்ந்த பலியாக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் இரவு கடைசி ஆட்டம் சினிமா பார்த்து விட்டு திரும்பிக் கொண்டிருந்த போது அடுத்த இனத்தைச் சேர்ந்த குற்றவாளி பலியானவனிடம் வாங்கிய கடனாகிய ரூபாய் 50—ஐத் திருப்பித் தரும்படி கேட்டபோது பலியானவன் தரமறுத்து இருக்கிறார், உடனே குற்றவாளியும் அவருடைய கூட்டாளிகள் இருவரும் தடியால் பலியானவரைச் சாகும் வரை அடித்துத் தாக்கியுள்ளனர், இந்த வழக்கு இந்தியன் பீனல் கோடு 302, 34— பிரிவின்படி பதிவாகி 25.01.1987 அன்று குற்றப்பத்திரிகை போடப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளது

4. வழக்காய்வு எண் : 3 தாழ்த்தப்பட்டோர் கோணல் மாச்சுகிராமம், குளித்தலை காவல்நிலையம், திருச்சி மாவட்டம், சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம்: **17.05.1986 கோணல்மாச்சு** கிராமம் சம்பவத்தன்மை: **பணம் கொடுக்கல்/வாங்குதல் (கொலை வழக்கு).**

17.05.1986 ஆம் தேதியன்று கோணல்மாச்சு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சாராத அடுத்த இனத்தைச் சேர்ந்தவரால் கொலை செய்யப்பட்டோர், இந்த வழக்கு கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனுக்கும் குற்றவாளிக்குமிடையே பணம் கொடுக்கல் வாங்குதல் தகராற்றின் காரணமாகவும் நெல் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுதல் சம்பந்தமான தகராற்றின் காரணமாகவும் ஏற்பட்ட மோதலின் விளைவே இந்தக் கொலை. இந்தியன் பீனல் கோடு பிரிவு 302—ன் படி வழக்கு பதிவாகி 23.6.1986 அன்று குற்றப்பத்திரிக்கை போடப்பட்டு 10.11.1996—ஆம் தேதியன்று நீதிமன்றத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கூலித் தகராறு காரணமாக ஏற்பட்ட கொடூரச் சம்பவ வழக்குகள்

1. வழக்காய்வு எண் : 11 தாழ்த்தப்பட்டோர் முஸ்டின் கோயில் பாளையம், கிணத்துக் கடவு காவல்நிலையம் கோயம்புத்தூர் மாவட்டம், சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **19.10.1987 முஸ்டின் கோபால் பாளையம் கிராமம்.** சம்பவத் தன்மை : **கூலித்தகராறு**

19.10.1987 அன்று தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சாராத ஒருவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பலியாக்கப்பட்டவரை கிணற்றைச் சுத்தம் செய்து தூறு வாரினால் ரூபாய் 30 கூலி தருவதாகச் சொல்லி கிணற்றை சுத்தம் செய்யச் சொன்னார். கிணற்றைச் சுத்தம் செய்து முடித்தவுடன் வெறும் பத்து ரூபாய் மட்டும் கூலியாகக் கொடுத்திருக்கிறார். பலியாகப்பட்டவர் தனக்கு மீதிக் கூலியையும் தரும்படி கெஞ்சிக் கேட்டிருக்கிறார். மேல் சாதியைச் சேர்ந்த குற்றவாளி பலியாக்கப்பட்டவரை செருப்பால் அடித்தும் கடுமையான பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று பயமுறுத்தியும் உள்ளார். மேலும் கீழ்சாதி என்ற காரணத்தினால் பல வழிகளிலும் துன்பம் கொடுத்துள்ளார். இந்த வழக்கு காவலாளிகளால் 20.10.1987 அன்று பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை 4.11.1987 அன்று போடப்பட்டது. 28.12.1987 அன்று நீதிமன்றம் வழக்கை விசாரணை செய்து குற்றவாளிக்கு ரூபாய் 100—ஐ அபாரதத் தொகையாக விதித்தது.

2. வழக்காய்வு எண் 4. (தாழ்த்தப்பட்டோர்) சாத்தூர் கிராமம் சாத்தூர் காவல்நிலையம், இராமநாதபுரம் மாவட்ட்ம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம்: **17.04.1985 சாத்தூர்** கிராம் சம்பவத்தன்மை: **கூலித்தகராறு (கொலை வழக்கு)**

17.04.1985 அன்று தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையே சம்பளம் கொடுப்பதில் தகராறு ஏற்பட்டது. மேல் சாதியைச் சேர்ந்தவர் ரூபாய் 200 மட்டும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவருக்கு கொடுத்துவிட்டு இரண்டு மாத சம்பளத்தைச் கொடுக்க மறுத்துவிட்டார். வாக்கு வாதங்கள் இரண்டு பேருக்குமிடையே ஏற்பட்டு பின் விளைவுகள் ஏற்படக் காரணமாயிற்று, மேல் சாதியைக் சேர்ந்த மூவர் தாழ்த்தப் பட்ட இனத்தைத் தாக்கியதால் காயமடைந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் இறக்க நேரிடுகிறது. 17.04.1985 அன்று வழக்கு காவல்நிலையத்தாரால் பதிவு செய்யப்பட்டு நீதிமறைத்தால் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளி 30.08.1985 அன்று தண்டிக்கப்பட்டார்.

3. வழக்காய்வு எண் : 4 (தாழ்த்தப்பட்டோர்) அளப்பாக்கம் கிராமம் புதுச்சத்திரம் காவல்நிலையம், தென்ஆற்காடு மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **23.09.1987 அளப்பாக்கம்** கிராமம் சம்பவத்தன்மை : **(தீயிடல்) குறைந்த கூலியைத் கொடுக்காமலிருத்தல்.**

23.09.1987 அன்று அளப்பாக்கம் கிராமம் மற்றும் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்த மேல் சாதி பெரும்கூட்டம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களைத்தாக்கி அவர்களுக்கும் சொந்தமான சுமார் 700 வீடுகளுக்குத் தீ வைத்தனர் அது தொடர்பான வழக்கு காவல் நிலையத்தாரால் இந்தியன் பீனல் கோடு 147,148,435,341 மற்றும் 307 பிரிவின்படி உடனே பதிவு செய்யபட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது, இந்த வழக்கில் தாழ்த்தப்பட்டோர் கூலி வேலை செய்யும் விவசாயிகள் தங்கள் முதலாளிகளிடம் தங்களின் கூலியை உயர்த்தித் தருமாறு கட்டாயப்படுத்தியுள்ளனர். வன்னியர் போராட்டத்தைப் பயன்படுத்தி மேல்சாதி இனத்தைச் சேர்ந்த குற்றவாளிகள் தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்குத் தீ வைத்து தாக்குதல்கள் செய்தனர்.

4. வழக்காய்வு எண் : 2.6(தாழ்த்தப்பட்டோர்) புரத்தக்குடி கிராமம், சமயபுரம் காவல்நிலையம், திருச்சி மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம்: **09.09.1986 புரத்தக்குடி** சம்பவத்தன்மை : **கூலித்தகராறு (கொலைவழக்கு)**

தாழ்த்தப்பட்டோருக்காக இரங்கி பரிந்து பேசும் பஞ்சாயத்துத் தலைவரின் தலைமையில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகக் கூலி வேண்டித் தங்களின் முதலாளிகளிடம் கேட்டனர். இதனால் மேல் சாதியினர் தாழ்த்தப்பட்டோர் இனத்திற்கு எதிராக மனமின்றி கூலியை உயர்த்திக் தந்தனர். இதன் விளைவாக மேல் சாதியினர் கீழ் சாதியினரின் வீடுகளைச் சோதனையிட்டு தீ வைத்தனர் இதில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் இறக்க நேரிடுகிறது. இந்தத் தீ வைத்தல் சம்பவத்தில் ரூ. பதினாரு இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் சேதமடைந்ததாகக் கணக்கிடப்பட்டு இந்தவழக்கு காவல்நிலையத்தாரால் 09.09.1986 அன்று பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ளது.

5. வழக்காய்வு எண் : 19 தாழ்த்தப்பட்டோர் பள்ளிப்பட்டி கிராமம், தோகைமலை காவல்நிலையம், திருச்சி மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **08.09.1984 பள்ளிப்பட்டி** கிராமம் சம்பவத்தன்மை: **கூலித்தகராறு**

மேல் சாதி இனத்தைச் சேர்ந்த குற்றவாளி கீழ்சாதி இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அவருடைய மகனை நிலத்து வேலை செய்யச் சொல்லி, நிபந்தனையின் பேரில் ரூபாய் 500 பலியாக்கப்பட்டவருக்கு

கொடுத்துள்ளார். மகனின் வேலையில் திருப்தி இல்லாததால் மேல் சாதியைத் சேர்ந்த பணம் கொடுத்தவர் ரூபாய் 150 ஐத் திரும்பத் தரும்படி வற்புறுத்தியுள்ளார். இதன்விளைவாக இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டு வழக்கு பஞ்சாயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பஞ்சாயத்தில் சாதகமான முடிவு கிடைக்காததால் குற்றவாளி பலியாக்கப்பட்டவரை சாதியின் பெயரால் துன்பப்படுத்தியுள்ளார். இதனால் பலியாக்கப்பட்டவர் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்தார். அதை நீதிமன்றம் விசாரணை செய்து குற்றவாளிக்கு 20.09.1985 அன்று ரூபாய் 100 அபராதத்தொகை விதித்தது.

*தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு எதிராக காவல் நிலையத்தாரல் சொல்லப்பட்ட குற்றங்கள்*

1. வழக்காய்வு எண் : 7(தாழ்த்தப்பட்டோர்) இளையூர் கிராமம். ஜெயங்கொண்டான் காவல்நிலையம் திருச்சிராப்பள்ளி மாவட்டம். சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : 12.07.1985 இளையூர் கிராமம், சம்பவத்தன்மை : **கற்பழிப்பு வழக்கு**

22.05.1985 அன்று இளையூர் கிராமத்தில் கீழ்சாதி இனத்தாருக்கும் மேல் சாதியினத்தாருக்கும் இடையே கலகம் ஏற்பட்டு கீழ்சாதி இனத்தார் மேல்சாதி இனத்தாரால் தாக்கப்பட்டனர். பலியாகப்பட்வர் இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் செய்ததன் விளைவாக ஒரு சார்பு ஆய்வாளர் இரண்டு காவலாளிகள் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க கிராமத்திற்குச் சென்றுள்ளனர். தொடர்ந்து 10.07.1985 அன்றும் சார்பு ஆய்வாளர் மட்டும் பலியாக்கப்பட்டவரின் வீட்டிற்குச் சென்று அவருடைய மகளைப்பற்றி விசாரித்துள்ளார் அப்போது பரியாக்கப்பட்டவர் தனது மகள் மாமியார் ஊருக்குச் சென்றிருப்பதாகச் சார்பு ஆய்வாளருக்குத் தகவல் சொல்லியுள்ளர். 12.07.1985 அன்று மறுபடியும் சார்பு ஆய்வாளர் பலியாக்கப்பட்டவரின் மகளை அழைத்து வரச் சொல்லியுள்ளார். அப்போதும் அவர் தனது மகள் இன்னும் ஊரிலிருந்து திரும்பவில்லை என்று சொல்லி அதனால் தனது மகளை தங்கள் முன்னிலையில் கொண்டு வர முடியவில்லை என்று சொல்லியுள்ளார். இதனால் கோபமடைந்த சார்பு ஆய்வாளர் பலியாக்கப்பட்டவரைப் பக்கத்திலுள்ள ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று கற்பழித்துள்ளார். இந்த வழக்கு உடனே காவல்நிலையத்தாரால் 12.07.1985 அன்று விசாரிக்கப்பட்டு மேலும் திருச்சி மாவட்ட குற்றவியல் பிரிவு உதவி

கண்காணிப்பாள்ராலும் விசாரணை செய்யப்பட்டது. உதவி கண்காணிப்பாளரின் அறிக்கையின் படி சார்பு ஆய்வாளர் 1.11.1987யிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது.

2.வழக்காய்வு எண் 10 (தாழ்த்தப்பட்டோர்) : பழமேநாத பொன்னிறை கிராமம், அறிவளம் காவல்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **06.03.1984 பழமேநாத பொன்னிறை** கிராமம், சம்பவத்தன்மை : **கற்பழிப்பு**

06.03.1984 காவலாளி (மேல் சாதியினத்தைச் சேர்ந்தவர்) பறையர் இனத்தைச் சேர்ந்த பெண்ணொருவரை திருமண வேலை செய்யச் சொல்லி பேரம் பேசி பலியாக்கப்பட்டவரை தனது வீட்டிற்கு அழைத்து வந்து கற்பழித்தார். காவலாளி 07.03.1984 அன்று விசாரணை செய்யப்பட்டு அன்றே குற்றப்பத்திரிக்கையும் போடப்பட்டு நீதிமன்றத்தால் 22.4.1988 அன்று விசாரணை செய்யப்பட்டு குற்றவாளி தண்டிக்கப்பட்டார்.

*கொத்தடிமை வேலையாட்கள் / கட்டாயத்துக்குட்படுத்தப்பட்ட வேலையாட்கள் சம்பந்தப்பட்ட வழக்காய்வுகள்*

1.வழக்காய்வு எண் 26 (தாழ்த்தப்பட்டோர்) அரசபல்து கிராமம் வடுவேர் காவல்நிலையம், தஞ்சாவூர் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **04.03.1987 அரசபல்து** கிராமம் சம்பவத்தன்மை : **காயப்படுத்துதல் (கட்டாயப்படுத்தப்பட்ட வேலையாட்கள்)**

மேல் சாதியைச் சேர்ந்த குற்றவாளி கீழ்சாதியைச் சேர்ந்த பலியாக்கப்பட்டவரைத் தனது சொந்த வேலைகளைச் செய்யச் சொல்லியுள்ளார். பலியாக்கப்பட்டவர் பணிய மறுத்ததால் குற்றவாளி அவரைத் துன்பப்படுத்தி, சாதி பெயரால் இழிவுபடுத்தித் தாக்கியுள்ளார். வழக்கு 10.03.1987 அன்று பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை போடப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

2. வழக்காய்வு எண்:10 (தாழ்த்தபட்டோர்) கரசனோர்ஜா கிராமம். துடியலூர் காவல் நிலையம். கோயம்புத்தூர் மாவட்டம். சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **17.04.1984 கரசனோர்ஜா** கிராமம். சம்பவத்தன்மை : **காயப்படுத்துதல் (கட்டாயப்படுத்தப்பட்ட வேலையாட்கள்)**

மேல்சாதியைச் சேர்ந்த குற்றவாளிகளின் செங்கல் சூளையில் இரண்டு கீழ்சாதியைச் சேர்ந்த பெண்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். மேல்சாதியினத்தாரிடமிருந்து வேலை செய்து கொண்டிருந்த பெண்கள் கொஞ்சப் பணத்தைப் பெற்றிருக்கின்றனர். செங்கல்சூளை மிகவும் தூரமாக இருப்பதைக் காரணம் காட்டி பணம் வாங்கிய பின்பு அப்பெண்கள் வேலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர். இதன் காரணமாக செங்கல்சூளை சொந்தக்காரர்கள் அவர்களை அடித்துத் துன்புறுத்திக் குற்றவாளியின் வீட்டில் தங்க கட்டாயப்படுத்தியுள்ளனர். அந்தப் பெண்கள் எப்படியோ தப்பித்து காவல் நிலையத்திற்குச் சென்று புகார் செய்துள்ளனர். இந்த வழக்கு 28.04.1984 அன்று பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை போடப்பட்டது. வழக்கு நீதிமன்றத்தால் 10.10.1984 அன்று விசாரணை செய்யப்பட்டு வழக்கு தீர்ப்பாக்கப்பட்டுள்ளது.

3. வழக்காய்வு எண் 13 (தாழ்த்தப்பட்டோர்) வேட்டைக்காரன்புதூர் கிராமம், அண்ணாமலை காவல்நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **01.12.1986 வேட்டைக்காரன்புதூர் கிராமம்.** சம்பவத்தன்மை : **கடுமையான காயப்படுத்துதல் (கட்டாயப்படுத்தப்பட்ட வேலையாட்கள்).**

01.12.1986 அன்று மேல்சாதியைச் சேர்ந்த குற்றவாளி கீழ்சாதியைச் சேர்ந்த பலியாக்கப்பட்டவரை தன்னுடைய வயலில் வேலை செய்யச் சொல்லி வற்புறுத்த அவர் மறுத்திருக்கிறார். இதனால் கோபமடைந்த மேல்சாதி வயல் சொந்தக்காரர் பலியாக்கப்பட்டவரை நன்றாக அடித்துத் துன்புறுத்தியுள்ளார். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு 31.12.1986 அன்று குற்றப்பத்திரிக்கை போடப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ளது.

4. வழக்காய்வு எண் : 16(தாழ்த்தப்பட்டோர்) தேர்ணமணலூர் கிராமம், தேர்ணமணலூர் காவல்நிலையம் கோயம்புத்தூர் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம்:**25.02.1983 தேர்ணமணலூர்** கிராமம்

கீழ்சாதியினத்தைச் சேர்ந்த வழக்குக்குச் சம்மபந்தப்பட்டவர் மேல் சாதியைச் சேர்ந்த குற்றவாளியான வயல் சொந்தக்காரரின் வேலையாள்க வேலை செய்து வந்துள்ளார்.அப்போது வயல் சொந்தக்காரரிடம் ரூபாய் 820/- கடனாகப் பெற்றுக் கொண்டு அதிலிருந்து வயல் சொந்தக்காரருக்கு வேலை செய்வதை விடுத்து மற்ற வயல்

வேலைக்குச் சென்றுள்ளார். இதைப்பார்த்த குற்றவாளி பலியாக்கப்பட்டவரைப் பார்த்து வாங்கிய கடனைத் திருப்பித் தரவேண்டும் இல்லையென்றால் வயலுக்கு வேலைக்கு வரவேண்டுமென்று அழைக்க பலியாக்கப்பட்டவர் மறுத்துள்ளார். உடனே குற்றவாளி பலியாக்கப்பட்டவரை நன்றாக அடித்துள்ளார். இந்த வழக்கு 4.3.1983 அன்று பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிகையும் போடப்பட்டு 1.6.1984 வழக்கு நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

*பொருளாதாரக் குறைபாட்டினால் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள்*

1.வழக்காய்வு எண்: 8(தாழ்த்தப்பட்டோர்) கந்தர்கோட்டை பஜார்கிராமம், புதுப்பட்டி காவல்நிலையம் தென்ஆற்காடு மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **18.09.1987 கந்தர்கோட்டை** கிராமம் சம்பவத்தன்மை : **தீ வைத்தல்.**

சம்பவ தினமான 18.09.1987 அன்று மேல்சாதியைச் சேர்ந்தவர்கள் கலவரத்தின் காரணமாக உள்ளூர் கீழ்சாதியைச் சேர்ந்தவர்கள் வைத்திருந்த கடைகளை மூடச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளனர். அதற்கு கீழ்சாதியினர் மறுத்துள்ளனர். இதனால் கலகம் ஏற்பட்டது. கலகத்தில் மேல் சாதியைச் சேர்ந்த சிலர் காயமடைந்துள்ளனர். இதையறிந்த மேல் சாதியினத்தைச் சேர்ந்த பக்கத்து இடத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து கீழ்சாதி இனத்தவரின் குடிசைகளுக்குத் தீ வைத்தனர். இந்தியன் பீனல் கோடு 147,148,324,323,341 மற்றும் 436 பிரிவின் படி வழக்கு அன்றே பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. இருந்தாலும் குடியுரிமைப்பாதுகாப்புச் சட்டம்(PCR) பயன்படுத்தப்படவில்லை.

2.வழக்காய்வு எண்: 5(தாழ்த்தப்பட்டோர்) நரிமேடு கிராமம், நெல்லைக்குப்பம் காவல்நிலையம், தென்னார்க்காடு மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **18.09.1987 நரிமேடு** சம்பவத்தன்மை : **தீ வைத்தல்**

18.09.1987 அன்று வன்னியப் போராட்டத்திற்கு ஒத்துழைப்புத் தராத கீழ்சாதி இனத்தவர் சாலை மறியல் போராட்டத்திற்கு வராததால் மேல்சாதி இனத்தவரான வன்னியர் 119 வீடுகளைத் தீயிட்டு நாசம் செய்து சில கீழ்சாதியினத்தவரைக் காயப்படுத்தியுள்ளனர் இது வன்னியர் இடஒதுக்கீடு சம்பந்தமான கலகம். இது சம்பந்தமாக வழக்கு 147,148 327 மற்றும் 436 இந்தியன் பீனல் கோடு பிரிவின்படி

18.09.1987 அன்றே வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் நிலுவையிலுள்ளது. குடியுரிமைப்பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை

2.வழக்காய்வு எண்: 24 (தாழத்தப்பட்டோர்)வேட்ட மங்களம்கிராமம் பந்தநல்லூர் காவல்நிலையம் தஞ்சாவூர் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **11.11.1987 வேட்டமங்களம்** சம்பவத்தன்மை : **தடை,கலகம்,மத எண்ணத்தை அழித்தல்**

11.11.1987 சம்பவத்தன்று கீழ்சாதியினத்தைச் சேர்ந்தவர்கள் தங்களின் இனத்தைச் சேர்ந்த பெண்ணொருவரின் இறந்த உடலை ஊர்வலமாக மேல்சாதி இனத்தெருவழியாகத் தகனம் செய்யக் கொண்டு சென்றபோது அது தடைசெய்யப்பட்டு, கீழ்சாதியினத்தவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டுள்ளனர். இந்தியன் பீனல் கோடு 114, 152, 153, 153A, 295A, 297 மற்றும் r/w 4(ir) ன் படியும் வழக்கு அன்றே பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் 02.02.1987 அன்று விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

3.வழக்காய்வு எண்16:(தாழ்த்தப்பட்டோர்) பகனூர்கிராமம் தோண்டி காவல்நிலையம், இராமநாதபுரம் மாவட்டம் சம்பவம் நடந்த தேதி மற்றும் இடம் : **16.04.1985 பகனூர்** கிராமம் சம்பவத்தன்மை:**தாக்குதல்**

16.04.1985 அன்று பகனூர் கிராம மேல்சாதி இனத்தைச் சேர்ந்தவர்கள் கீழ்சாதி இனத்தைச் சேர்ந்தவர்கள் பிணிக்குழி தோண்டுவது சம்பந்தமாக எடுத்த கூட்டத்தின் முடிவுகளில் குற்றவாளி கீழ்சாதி இனத்தாரை குழிதோண்ட வேண்டாம் என்று சொன்னார். வாய் வார்த்தைகள் சண்டையாக மாறியது. பரம்பரையாக கீழ்சாதி இனத்தவர் சேர்வை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு சவுக்குழி தோண்டுவது வழக்கம். ஏற்கனவே பலியாக்கப்பட்டவர் குற்றவாளியுடன் மாட்டுக் கொட்டத்தில் தகராறு செய்துள்ளார். அன்று மாலை குற்றவாளியின் மகன் பலியாக்கப்பட்டவரை வழிமறித்தார். இந்து இன மக்கள் கூட்டமாக ஒன்று சேர்ந்து பலியாக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தாரையும் தாக்கியுள்ளனர். வழக்கு 17.04.1985 அன்று இந்தியன் பீனல் கோடு 144,148,323,324,326,427, பிரிவின் படியும் IPC r/w 7(1)(d) PCR சட்டத்தின்படியும் பதிவு செய்யப்பட்டு 02.07.1985 அன்று நிதிமன்றத்தால் விசாரணை செய்யம் போது சம்பந்தப்பட்ட இருபிரிவினருக்கும் சமாதானம் செய்து தீர்ப்பு வழங்கியது.

4.வழக்காய்வு எண்:15 தாழ்த்தப்பட்டோர் தைதக்கோட்டை கிராமம், திருவடனை காவல்நிலையம் இராமநாதபுரம் மாவட்டம் சம்பவம் நடந்ததேதி மற்றும்இடம்: **13.08.1986 தைதக்கோட்டை சம்பவத்தன்மை: தாக்குதல்.**

18.04.1986 சம்பவ தினத்தன்று பறையர் இனத்தைச் சேர்ந்தவர் உடையார் இனத்தைச் சேர்ந்தவர் இறப்பிற்கு கொட்டு கொட்டுவதற்கு மறுத்துவிட்டார். பரம்பரையாக பறையர் இனத்தவர் தேவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இறப்புக்குக் கொட்டுக் கொட்டுவது வழக்கம். உடையார் இனத்தைச் சேர்ந்தவர்கள் இதனால் வெட்கமடைந்தனர். பலியாக்கப்பட்ட தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்தேவர் இனத்தாருக்கு கொட்டு கொட்டிவிட்டு மேலவைக் கோட்டைக்குப் பக்கத்தில் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது பலியாக்கபட்டவரும் மற்ற மூன்று வேறு இனத்தைச் சேர்ந்த பலியானவர்களும் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதன் விளைவாகக் காயமடைந்தனர். அந்த வழக்கு இந்தியன் பீனல் கோடு 147,148,323,324,427–பிரிவின்படி 18.04.1986 அன்று பதிவு செய்யப்பட்டு 27.01.1987 அன்று இரு தரப்பினருக்கும் சமாதானம் பேசி வழக்கை முடிந்துள்ளனர். இருந்தாலும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் எதுவும் பயன்படுத்தப்படவில்லை

5. வழக்காய்வு எண்: 25 (தாழ்த்தப்பட்டோர்) நகலப்புரம் கிராமம்,துறையூர் காவல்நிலையம், திருச்சிமாவட்டம், சம்பவம் நடந்ததேதி மற்றும் இடம்:**14.06.1985** நகலப்புரம் சம்பவத்தன்மை: **தாக்குதல் (கோயிலில் பிரவேசித்ததற்கு)**

சம்பவ தினமான 14.06.1985 அன்று கீழ்சாதியினத்தைச் சேர்ந்த பலியாக்கப்பட்டவர் இனத்தார் கோயிலுக்குள் பிரவேசிக்க முயன்ற போது வேறு இனத்தைச் சேர்ந்த பத்துப் பேர்களால் துன்புறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். வழக்கு இந்தியன் பீனல் கோடு 147,323–ன் படியும் IPC r/w 7(1) (c) PCR சட்டத்தின் படியும் 18.06.1985 அன்று காவலாளிகளின் மூலம் பதிவுசெய்யப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்பின்படி வழக்குக்குச் சம்பந்தப்பட்ட அனைத்துக் குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டார்கள் என்று அறிக்கை கூறுகின்றது.

*இணைப்பு – 3*

***1955–ஆம் ஆண்டின் குடியுரிமைப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழுள்ள விசாரணை வழக்குகளின் ஆதாரங்களுக்கும் செயல்பாடுகளுக்குமான சிறப்பு விதிகள்***

அ. தீண்டாமையின் அடிப்படையில் செய்யப்படும் ஊகச் செயல்களின் செயல்பாடுகள் :

தீண்டாமையின் அடிப்படையில் இக்குற்றங்கள் செய்யப்பட்டால் மட்டுமே இச்சட்டத்திற்கான விளக்கம் சொல்ல முடியும். இக்குற்றங்களுக்கான தீர்வுகளை சட்டப்படி நீதிமன்றம் நிரூபிக்க வேண்டுமென்றால், சூழ்நிலைகளின் அடிப்படையில் உண்மைகளைக் கண்டறிந்தால் மட்டுமே முடியும். (பிரிவு (12)) ன் படி சாதாரணமாக நீதிமன்றங்கள் இதற்கு வலுவுண்டாக்க வேண்டுமென்றால் இச்சட்டம் தீண்டாமையின் அடிப்படையில் செய்யப்பட்டிருந்தால் இச்சட்டத்தில் விளக்கப்பட்டிருக்கும் குற்றங்களை தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவாகள் செய்திருந்தால், இதன் எதிர்மறை நிரூபிக்கப்படாமலிருக்கும் போது இச்சட்டத்தை நீதிமன்றம் ஊகித்து, நினைவு கொண்டு நிரூபிக்க வேண்டும்

இதை வேறுவிதமாகச் சொல்வதென்றால் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் சமூக, மத பொருளாதாரத்தின் அடிப்படையில் மற்றொருவரால் அல்லது மற்றவர்களினால் பலியாக்கப்பட்டால் அது தீண்டாமைச் சட்டத்தின் அடிப்படையில்தான் என்று நிர்மாணிக்கப்படுகின்றது. அதை நிரூபிப்பதும் பிரதிவாதியின் பங்காகும்.

ஆ) இச்சட்டத்தின் கீழுலுள்ள குற்றங்கள் வெளிப்படையானவை:

இச்சட்டத்தின் கீழுலுள்ள குற்றங்கள் ஒவவொன்றும் வெளிப்படையானவை என்றால், அவை காவல்துறையினரால் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்யப்பட்டு தேவைப்பட்டால் பிரிவு 15—ன் படி வாக்குறுதி (Warrant) இல்லாமல் கைது செய்யவும் முடியும்

இ. குறுகிய கால விசாரணைக் குற்றங்கள்

குறைந்தபட்சத் தண்டனையாக மூன்றுமாத காலத்திற்கு மிகாமல் சிறைதண்டனை வழங்கப்படும் வழக்குகளைத் தவிர இச்சட்டத்திலுள்ள மற்ற வழக்குகள் சட்ட சம்பந்தப்பட்ட நீதிபதியால் குறுகியகால விசாரணைக்குட் படுத்தப்படும். இந்திய குற்றவியல் சட்டத்தின்கீழ் அந்தந்தப் பிரிவின் கீழுலுள்ள குற்றங்களுக்ககேற்றபடி குறுகியகால விசாரணையை நீட்டித்து துரிதவிசாரணைக்குட்படுத்தப்படும்.

வெளிப்படையாக சுருக்க விசாரணையோடு தீண்டாமை மூலகாரணமாகவும் அதோடு சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு விரைவாக தண்டிக்கும்படியாகவும் அதோடு தொடர்புடைய தண்டனை உறுதியாக வழங்கும்படியான வலுவான பாரபட்சமில்லாத் அமைப்புக்களை குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் உண்டாக்கியுள்ளது.

ஈ) குற்றவாளிகளுக்கு விசாரணை காலச் சலுகைகள் கிடையாது:

சாதாரணமாக குற்றவியல் நீதிமன்றங்கள் சட்டத்துக்குப் புறம்பான செயல்களைச் செய்த குற்றவாளிகளுக்கு விசாரணைக் கால சலுகைகளுக்கு சிபாரிசு செய்யும். ஆனால் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அதிமுக்கியமான குற்றங்களுக்கு விசாரணைக்கால சலுகைகள் முழுகைமயாக மறுக்கப்படுகின்றத. பிரிவு—16—4—ன்படி இச்சட்டம் பதினான்கு வயதுக்குட்பட்டவர்களுக்குச் செல்லுபடியாகாது.

2) நேர்மையாகச் செயல்படும் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு வற்புறுத்துதல் (ஏற்பாடுகள் செய்தல்)

சட்டநிரூபணங்கள் முன்பலமுள்ளதாக இருக்கும் போது பாராளுமன்றம் நிர்வாகத்திடமிருந்து அதிக கால தாமதமில்லாமல் நடவடிக்கைகள் எடுக்க ஊக்குவிக்க எதிர்பார்க்கிறது. சில சமயங்களில் இம்மாதிரியான நடவடிக்கைகள் அவசரமானதாகவும் தவிர்க்கப்பட வேண்டியவனவாகவும் அலுவலர்களுக்கு மனத்தாங்கல் உண்டாக்கப்படுவதாகவும் அமையும் அது சம்பந்தப்பட்டவர்களுக்கு அநீதியான விளைவு ஏற்படுத்தலாம் இந்நேரத்தில் சட்டத்தின் கீழ் அலுவலர்களின் செயல்பாடுகளுக்குத் தகுந்தபடி சட்டநடவடிக்கைகளின்படி அலுவலர்கள் பாதுகாக்கப்படாவிட்டால் சட்டம் நிறைவேற்றுதல் கால தாமதமானதாகவும் பலங்குறைந்தாகவும் ஆகிவிடலாம். இதைத்தவிரக்கும் சட்டம் ஊக்குவிக்கும் நேர்மையாக நடைபெறும் செயல்பாடுகள் எதற்கும் யாராவது ஒருவர் பாதிக்கப்படும் பட்சத்தில் மத்திய அல்லது மாநிலச் சர்க்காரின் சட்டச் செயல்களுக்கு எதிரானவை அடிப்படையாக முடியாது. பிரிவு 14—A அதோடு இச்சட்டத்தின்படி பொது மக்கள் சேவை அலுவலர் யாரும் குற்றத்திற்கு உடந்தையாய்யிருந்தால் பணியிலிருக்கும் போது குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கு முன் நடவடிக்கை எடுக்கும். பிரிவு15(2)

## *இணைப்பு* – 4

*1984—ஆம் ஆண்டு நான்கு சிறப்பு நீதிமன்றங்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைப் பட்டியல்

| வரிசை எண். | சிறப்பு நீதிமன்றங்கள் இருக்குமிடம் | 1.1.84—ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முடிவு பெறாத வழக்குகள் | 1984—ல் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | மொத்தம் | குற்றவாளிகள் | குற்றவாளி யல்லாதவர்கள் | வேறு நீதி மன்றங்களுக்கு மாற்றம் செய்யப்பட்ட வழக்குகள் | வருடக் கடைசியில் உள்ள நீதி மன்ற நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கும்பகோணம் | 174 | 232 | 406 | 8 | 268 | 14 | 116 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 588 | 380 | 968 | 21 | 163 | 498 | 286 |
| 3. | மதுரை | 38 | 127 | 165 | 16 | 115 | 1 | 33 |
| 4 | திருநெல்வேலி | 34 | 184 | 218 | 29 | 113 | 46 | 30 |
| | மொத்தம் | 834 | 923 | 1757 | 74 | 659 | 559 | 465 |

*1984—ஆம் ஆண்டின் தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட ஆண்டறிக்கை.

## இணைப்பு – 5

1984—ல் மாவட்ட வாரியாக தமிழ்நாட்டில் கணக்கெடுக்கப்பட்ட தீண்டாமைக் கிராம/குக்கிராமங்களின் எண்ணிக்கைப்பட்டியல்*

| வரிசை எண் | மாவட்ட வாரியாக | கணக்கெடுக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு(கிழக்கு) | 17 |
| 2. | செங்கல்பட்டு(மேற்கு) | 90 |
| 3. | தென்ஆற்காடு | 18 |
| 4. | வடஆற்காடு | 40 |
| 5. | தர்மபுரி | 8 |
| 6. | சேலம் | 7 |
| 7. | திருச்சிராப்பள்ளி | 37 |
| 8. | புதுக்கோட்டை | 14 |
| 9. | தஞ்சாவூர்(மேற்கு) | 10 |
| 10. | தஞ்சாவூர்(கிழக்கு) | 10 |
| 11. | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | 11 |
| 12. | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | 8 |
| 13. | பெரியார் | 15 |
| 14. | நீலகிரி | 5 |
| 15. | மதுரை(தெற்கு) | 14 |
| 16. | மதுரை(வடக்கு) | 5 |
| 17. | இராமநாதபுரம்(தெற்கு) | 147 |
| 18. | இராமநாதபுரம்(வடக்கு) | 28 |
| 19. | திருநெல்வேலி | 75 |
| 20. | கன்னியாகுமரி | 5 |
| | மொத்தம் | 564 |

*1984 — ஆம் ஆண்டின் தமிழ்நாட்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட ஆண்டறிக்கை

## இணைப்பு – 6

1980—யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமை வழக்குகளின் வருடங்களும் மாவட்டப் போராங்களும்

| வரிசை எண் | மாவட்டம் | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | 4 | 7 | 12 | 13 | 17 | 17 | 15 | 15 | 7 | 13 | 16 | 3 | 11 | 4 | — | — | — |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | 14 | 18 | 27 | 35 | 41 | 35 | 31 | 26 | 41 | 19 | 21 | 10 | 16 | 4 | 1 | — | — |
| 3 | தென்ஆற்காடு | 113 | 133 | 137 | 142 | 75 | 79 | 128 | 70 | 61 | 34 | 34 | 81 | 84 | 5 | 3 | 9 | 6 |
| 4 | விழுப்புரம் | — | — | — | — | — | — | — | — | 4 | 15 | 50 | 51 | 37 | 16 | 8 | 14 | 2 |
| 5 | திருவண்ணாமலை | — | — | — | — | — | — | — | — | — | 2 | 8 | 11 | 39 | 8 | — | 1 | — |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | 21 | 43 | 25 | 43 | 78 | 55 | 69 | 66 | 42 | 21 | 30 | 18 | 13 | 3 | 1 | 5 | 2 |
| 7 | தர்மபுரி | 7 | 15 | 11 | 12 | 25 | 17 | 5 | 30 | 20 | 33 | 36 | 22 | 30 | 2 | 2 | 11 | 1 |
| 8 | சேலம் | 44 | 47 | 65 | 33 | 17 | 32 | 48 | 59 | 45 | 33 | 46 | 35 | 63 | 4 | 8 | 3 | 2 |
| 9 | திருச்சி | 124 | 132 | 122 | 139 | 236 | 88 | 84 | 73 | 49 | 47 | 58 | 116 | 107 | 10 | 3 | 2 | 1 |
| 10 | நாகபட்டினம் | 58 | 118 | 113 | 160 | 116 | 137 | 88 | 63 | 52 | 30 | 53 | 73 | 49 | 1 | 2 | 5 | 6 |
| 11 | காயிதே மில்லத் தஞ்சாவூர் | 91 | 125 | 115 | 116 | 133 | 101 | 78 | 72 | 47 | 47 | 46 | 86 | 129 | 1 | — | 3 | 2 |
| 12 | புதுக்கோட்டை | 20 | 16 | 26 | 20 | 41 | 50 | 92 | 69 | 36 | 23 | 11 | 10 | 27 | — | — | — | — |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | 24 | 48 | 25 | 17 | 39 | 31 | 33 | 23 | 32 | 24 | 22 | 3 | 7 | — | — | — | — |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | 92 | 56 | 33 | 28 | 68 | 72 | 65 | 57 | 63 | 41 | 55 | 77 | 34 | 6 | 4 | 8 | — |
| 15 | பெரியார் | 85 | 147 | 133 | 75 | 113 | 125 | 62 | 32 | 57 | 63 | 87 | 54 | 70 | 21 | 10 | 5 | 3 |
| 16 | நீலகிரி | 9 | 2 | 4 | 4 | 8 | 8 | 4 | 13 | 6 | 9 | 5 | 7 | 5 | — | — | — | — |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | 31 | 30 | 27 | 87 | 90 | 49 | 9 | 12 | 8 | 5 | 1 | 2 | 5 | — | 1 | 1 | 1 |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | 25 | 55 | 95 | 84 | 74 | 108 | 83 | 79 | 76 | 29 | 17 | 27 | 25 | 12 | 11 | 5 | 1 |
| 19 | திண்டுக்கல் | — | — | — | — | — | 49 | 70 | 37 | 33 | 18 | 32 | 23 | 30 | 12 | 3 | 3 | 2 |
| 20 | இராமநாதபுரம் | 19 | 50 | 55 | 62 | 45 | 25 | 30 | 27 | 37 | 24 | 40 | 36 | 27 | 4 | 4 | 2 | 1 |
| 21 | பசும்பொன்முத்து | — | — | — | — | — | 22 | 20 | 27 | 32 | 22 | 20 | 29 | 43 | 4 | — | — | — |
| 22 | இராமலிங்கத்தேவர் காமராசர் | — | — | — | — | — | 21 | 21 | 16 | 14 | 4 | 14 | 7 | 15 | — | 3 | 6 | 2 |
| 23 | திருநெல்வேலி | 65 | 81 | .65 | 104 | 163 | 140 | 144 | 75 | 65 | 64 | 46 | 38 | 45 | 2 | 3 | 8 | 4 |
| | கட்டபொம்மன் | | | | | | | | | | | | | | | | | 6 |
| 24 | சிதம்பரனார் | — | — | — | — | — | — | 18 | 26 | 22 | 20 | 18 | 23 | 27 | 13 | 8 | 5 | 3 |
| 25 | கன்னியாகுமரி | 12 | 15 | 15 | 27 | 21 | 16 | 30 | 44 | 36 | 19 | 17 | 18 | 23 | — | 1 | — | |
| 26 | இருப்புப்பாதை காவல் | — | — | — | 3 | 2 | 3 | 1 | 1 | — | — | 3 | 1 | — | — | — | — | — |
| 27 | சென்னை மாநகர் காவல் | — | — | — | 1 | — | — | — | 4 | 1 | 1 | 1 | — | — | — | — | — | — |
| | மொத்தம் | 858 | 1136 | 1105 | 1205 | 1402 | 1280 | 1228 | 1016 | 886 | 660 | 787 | 861 | 961 | 132 | 76 | 96 | 45 |

## *இணைப்பு* – 7

1985—யிலிருந்து 1990 வரையிலான குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமைப் பிரிவுகளின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

| வரிசை எண். | வருடம் | குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமைகளின் அடிப்படையிலுள்ள மொத்த வழக்குகள் | குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமை மூன்றாவது பிரிவின் கீழுள்ள வழக்குகள் | குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமை நான்காவது பிரிவின் கீழுலுள்ள வழக்குகள் | குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமை ஆறாவது பிரிவின் கீழுலுள்ள வழக்குகள் | குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட உரிமை ஏழாவது பிரிவின் கீழுலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1985 | 1280 | 2 | 8 | 19 | 1251 |
| 2. | 1986 | 1228 | — | 8 | 25 | 1195 |
| 3. | 1987 | 1016 | 1 | 3 | 60 | 952 |
| 4. | 1988 | 886 | — | 7 | 47 | 832 |
| 5. | 1989 | 660 | 1 | 3 | 52 | 604 |
| 6. | 1990 | 787 | 3 | 2 | 86 | 696 |

## இணைப்பு – 8

தமிழ்நாட்டில் 1982—யிலிருந்து 1996 வரை (தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர்) பதிவு செய்யப்பட்ட கொலை வழக்குகளின் வருடம், மாவட்டப் போராட்டங்களின் எண்ணிக்கைப் பட்டியல்.

| வரிசை எண் | மாவட்டம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | — | — | — | 1 | 1 | — | 2 | — | — | — | — | — | — | — | — |
| 3 | தென்ஆற்காடு வட்டம் | — | — | — | — | — | 2 | 6 | 1 | — | 1 | — | — | — | 1 | — |
| 4 | விழுப்புரம் | — | — | — | — | — | — | 1 | 2 | 2 | — | 3 | — | 1 | 1 | — |
| 5 | திருவண்ணாமலை | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | 2 | — | — | — |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | 2 | — | — | — | 3 | — | 5 | — | — | — | — | — | — | — | 3 |
| 7 | தர்மபுரி | — | — | — | — | — | — | 2 | — | — | — | — | — | — | — | — |
| 8 | சேலம் | — | — | — | — | 1 | — | — | — | — | 3 | — | 1 | — | — | 1 |
| 9 | திருச்சி | — | — | 1 | 5 | 1 | 2 | — | 2 | — | — | — | 2 | — | — | — |
| 10 | நாகபட்டினம் காயிதே மில்லத் | — | — | — | 4 | 2 | 2 | 2 | — | — | 4 | — | 2 | 5 | 2 | — |
| 11 | தஞ்சாவூர் | — | — | — | — | 1 | — | — | 1 | 1 | 1 | 1 | — | 1 | 1 | — |
| 12 | புதுக்கோட்டை | — | — | — | 1 | — | 1 | — | — | — | — | — | — | — | 1 | 1 |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | — | 1 | — | — | — | — | 1 | — | — | — | 1 | — | — | — | — |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 |
| 15 | பெரியார் | 1 | — | — | — | — | — | 1 | — | — | — | — | 1 | — | — | — |
| 16 | நீலகிரி | — | — | — | — | — | — | 2 | — | — | — | — | 1 | — | 1 | — |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | — | — | — | — | — | — | 3 | — | — | — | 2 | — | 1 | — | 1 |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | 1 | 6 | 1 | 3 | 1 | 1 | 1 | 4 | 3 | 2 | 1 | — | 1 | 4 | 1 |
| 19 | திண்டுக்கல் | — | — | — | 1 | — | 1 | 1 | — | 1 | — | — | 1 | — | — | — |
| 20 | இராமநாதபுரம் | 1 | 7 | 1 | 1 | 2 | — | — | — | — | — | 1 | — | 1 | 1 | 2 |
| 21 | பசும்பொன்முத்து இராமலிங்கத்தேவர் | — | — | — | 1 | — | — | — | — | 3 | — | — | — | — | — | — |
| 22 | காமராசர் | — | — | — | 1 | — | 4 | — | — | 10 | — | — | 2 | 1 | 3 | 8 |
| 23 | திருநெல்வேலி கட்டபொம்மன் | — | — | 1 | 1 | 1 | 2 | 3 | 4 | 4 | 1 | 1 | — | — | 9 | 6 |
| 24 | சிதம்பரனார் | — | — | — | — | 4 | 1 | 4 | 1 | — | — | 1 | 4 | 6 | 6 | 1 |
| 25 | கன்னியாகுமரி | — | — | 1 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | — | — | — | — | 2 | 2 |
| 26 | இருப்புப்பாதை காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 27 | சென்னை மாநகரக் காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| | மொத்தம் | 5 | 14 | 6 | 20 | 18 | 19 | 35 | 16 | 25 | 12 | 12 | 16 | 17 | 32 | 27 |

## *இணைப்பு – 9*

1982—யிலிருந்து 1996 வரை தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் புகார் செய்யப்பட்ட கொடூரச் சம்பவ வழக்குகளின் எண்ணிக்கை



## *இணைப்பு – 10*

1982 யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினரின் பதிவு செய்யப்பட்ட கொலைமுயற்சிச் சம்பவங்களின் எண்ணிக்கையும் வருடாங்களும் மாவட்டப் போராட்டங்களும்.

| வரிசை எண் | மாவட்டம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | — | — | 2 | — | — | — | — | — | — | 1 | — | — | — | 1 | — |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 3 | தென்ஆற்காடு வட்டம் | — | — | — | — | — | 3 | — | — | — | — | — | 1 | 1 | — | — |
| 4 | விழுப்புரம் | — | — | — | — | — | — | — | 2 | 3 | — | 1 | 5 | — | — | — |
| 5 | திருவண்ணாமலை | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | — | — | 6 | — | 2 | 2 | 2 | — | — | — | 1 | — | — | 1 | 3 |
| 7 | தர்மபுரி | — | — | — | — | — | 1 | — | — | — | — | — | — | 2 | 3 | — |
| 8 | சேலம் | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — |
| 9 | திருச்சி | — | — | — | 1 | 1 | — | — | 1 | — | — | 1 | — | 1 | — | — |
| 10 | நாகபட்டினம் காயிதே மில்லத் | 2 | — | 1 | 4 | 1 | 3 | — | — | — | 1 | — | — | — | — | — |
| 11 | தஞ்சாவூர் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 12 | புதுக்கோட்டை | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | — | 2 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 15 | பெரியார் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 16 | நீலகிரி | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | — | — | — | 1 | — | 1 | 1 | — | — | — | — | — | — | 1 | 1 |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | 2 | 1 | 1 | 1 | — | 1 | — | 5 | 1 | 2 | 3 | — | 5 | 1 | — |
| 19 | திண்டுக்கல் | — | — | — | 1 | 1 | — | 1 | — | — | — | — | — | — | — | — |
| 20 | இராமநாதபுரம் | 1 | 1 | 3 | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — |
| 21 | பசும்பொன்முத்து இராமலிங்கத்தேவர் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 22 | காமராசர் | — | — | — | 1 | — | 1 | — | — | — | — | — | — | — | — | — |
| 23 | திருநெல்வேலி | — | — | 1 | 1 | 1 | — | — | 4 | 1 | — | — | — | — | 1 | — |
| 24 | கட்டபொம்மன் சிதம்பரனார் | — | — | — | — | — | — | — | — | — | — | 3 | 1 | 3 | 1 | — |
| 25 | கன்னியாகுமரி | — | — | — | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — |
| 26 | இருப்புப்பாதை காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 27 | சென்னை மாநகரக் காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| | மொத்தம் | 5 | 5 | 14 | 10 | 6 | 13 | 4 | 12 | 5 | 4 | 9 | 10 | 11 | 20 | 4 |

1982–யிலிருந்து 1996 வரை தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் புகார் செய்யப்பட்ட கொடூரச் சம்பவ வழக்குகளின் எண்ணிக்கை



## இணைப்பு – 12

1982—யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர்ஃ பழங்குடியினரின் பதிவு செய்யப்பட்ட கற்பழிப்பு வழக்குகளின் எண்ணிக்கையும் வருடங்களும் மாவட்டப்போராட்டங்களும்

| வரிசை எண் | மாவட்டம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — | — | — |
| 3 | தென்ஆற்காடு வட்டம் | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | 1 | — |
| 4 | விழுப்புரம் | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | 1 | 4 | — | — |
| 5 | திருவண்ணாமலை | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | 1 | 3 | 4 | 1 | — | 1 | — | — | — | — | — | — | — | — | — |
| 7 | தர்மபுரி | — | — | 1 | — | 1 | — | — | — | — | — | — | — | 1 | — | — |
| 8 | சேலம் | — | — | — | — | — | — | 2 | — | — | — | — | — | — | — | — |
| 9 | திருச்சி | — | — | — | 2 | — | — | 1 | 1 | 1 | — | — | — | — | — | — |
| 10 | நாகபட்டினம் காயிதே மில்லத் | — | 1 | 1 | 2 | 1 | — | — | 1 | 3 | — | — | 1 | 2 | 2 | 3 |
| 11 | தஞ்சாவூர் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 12 | புதுக்கோட்டை | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | — | — | — | 2 | — | — | — | — | — | — | — | — | 1 | — | — |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | — | — | 2 | 1 | — | — | — | — | 2 | 1 | — | 1 | 2 | 1 | — |
| 15 | பெரியார் | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 16 | நீலகிரி | — | — | 1 | — | 1 | 1 | — | 1 | 1 | — | — | — | — | — | — |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | — | 1 | 2 | 4 | 2 | 2 | 1 | 4 | — | — | — | — | 1 | 3 | 1 |
| 19 | திண்டுக்கல் | — | — | — | 1 | 2 | — | 1 | 1 | 2 | 1 | — | 2 | 1 | 1 | — |
| 20 | இராமநாதபுரம் | — | 3 | 1 | — | — | — | 2 | 2 | — | 1 | — | — | — | — | 1 |
| 21 | பசும்பொன்முத்து இராமலிங்கத்தேவர் | — | — | — | — | 1 | — | 1 | 1 | — | 2 | — | 1 | 1 | 2 | — |
| 22 | காமராசர் | — | — | — | 1 | — | — | 1 | — | — | — | — | — | — | — | 1 |
| 23 | திருநெல்வேலி கட்டபொம்மன் | — | 1 | 1 | 2 | 3 | 2 | 2 | 3 | 3 | — | 1 | — | 1 | 4 | 1 |
| 24 | சிதம்பரனார் | — | — | — | — | — | 1 | — | — | 3 | — | — | — | 1 | — | 1 |
| 25 | கன்னியாகுமரி | — | — | 2 | — | — | — | — | — | — | — | — | — | — | 2 | 2 |
| 26 | இருப்புப்பாதை காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 27 | சென்னை மாநகரக் காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| | மொத்தம் | 2 | 9 | 17 | 16 | 12 | 7 | 11 | 14 | 16 | 5 | 3 | 6 | 15 | 16 | 10 |

இணைப்பு – 13

1982–யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் பதிவு செய்யப்பட்ட கொடூரச் சம்பவ வழக்குகளின் எண்ணிக்கை



## *இணைப்பு* – 14

1982–யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினரின் தீயிட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் வருடங்களும் மாவட்டப் போராட்டங்களின் பட்டியல்

| வரிசை எண் | மாவட்டம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | – | – | – | – | – | – | 1 | 2 | 1 | – | – | 1 | – | – | – |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | – | – | – | – | – | – | 2 | – | 1 | 2 | – | 3 | – | – | – |
| 3 | தென்ஆற்காடு வட்டம் | – | – | – | – | – | 10 | 18 | 1 | – | – | – | – | 2 | 1 | 3 |
| 4 | விழுப்புரம் | – | – | – | – | – | – | – | 4 | 3 | 3 | 6 | 3 | 5 | 1 | 2 |
| 5 | திருவண்ணாமலை | – | – | – | – | – | – | – | – | – | – | 1 | 2 | – | – | – |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | 2 | – | – | 3 | 1 | 1 | 1 | – | – | – | – | – | 2 | 1 | – |
| 7 | தர்மபுரி | – | – | – | – | – | 1 | 1 | 4 | 12 | – | 1 | 2 | 1 | – | – |
| 8 | சேலம் | – | – | 1 | – | – | 2 | 1 | – | – | 5 | – | 2 | 2 | – | – |
| 9 | திருச்சி | – | – | 1 | 4 | 7 | 2 | 4 | 2 | 1 | – | 1 | 1 | 2 | 3 | – |
| 10 | நாகபட்டினம் | – | – | – | – | – | 2 | 1 | – | – | – | – | – | 1 | – | – |
| 11 | காயிதே மில்லத் தஞ்சாவூர் | – | – | – | – | 1 | – | – | – | 1 | – | 1 | 1 | – | – | – |
| 12 | புதுக்கோட்டை | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | 3 | 3 | 1 | – | – | – | – | – | – | – | – | – | 1 | 1 | – |
| 15 | பெரியார் | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 16 | நீலகிரி | – | – | – | – | 1 | 1 | – | – | 1 | – | – | – | – | – | – |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | – | – | 1 | – | – | – | – | – | – | – | – | – | – | – | 1 |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | – | – | 2 | 1 | 2 | 3 | 1 | 18 | 2 | 1 | – | 4 | 3 | 3 | 9 |
| 19 | திண்டுக்கல் | – | – | – | – | – | – | – | – | 2 | – | – | – | 1 | – | 1 |
| 20 | இராமநாதபுரம் | – | – | 2 | 2 | – | – | – | 1 | – | – | – | 4 | 1 | 3 | – |
| 21 | பசும்பொன்முத்து | – | – | – | – | – | – | – | – | – | 1 | – | – | 1 | 2 | – |
| 22 | இராமலிங்கத்தேவர் காமராசர் | – | – | – | – | 2 | – | 1 | – | 3 | – | – | – | 1 | – | 2 |
| 23 | திருநெல்வேலி | 1 | – | – | 2 | 1 | – | 1 | – | – | – | 1 | – | 1 | – | – |
| 24 | கட்டபொம்மன். சிதம்பரனார் | – | – | – | – | – | – | – | – | – | 1 | – | 2 | – | – | – |
| 25 | கன்னியாகுமரி | – | – | – | – | 1 | 2 | 2 | 2 | 1 | – | – | 1 | – | 1 | 2 |
| 26 | இருப்புப்பாதை காவல் | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 27 | சென்னை மாநகரக் காவல் | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| | மொத்தம் | 6 | 3 | 8 | 12 | 16 | 24 | 34 | 34 | 28 | 13 | 11 | 26 | 24 | 16 | 20 |

1982–யிலிருந்து 1996–வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினரின் புகார் செய்யப்பட்ட தீயிட்ட வழக்குகளின் எண்ணிக்கை



## இணைப்பு – 16

1982—யிலிருந்து 1996—வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினரின் பிற இந்திய குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கையும் வருடமும் மாவட்டப் போராட்டங்களும்.

| வரிசை எண் | மாவட்டம் | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | 6 | 5 | 8 | 8 | 12 | 14 | 4 | 10 | 8 | 1 | 11 | 9 | 5 | 4 (IST) | 10 |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | — | 2 | 6 | 24 | 21 | 13 | 29 | 11 | 8 | 8 | 11 | 3 | 8 | 5 | 9 |
| 3 | தென்ஆற்காடு வட்டம் | — | 5 | 30 | 30 | 50 | 29 | 42 | 14 | — | 20 | 25 | 16 | 27 | 58 | 61 |
| 4 | விழுப்புரம் | — | — | — | — | — | — | — | 20 | 45 | 37 | 55 | 59 | 39 | 20 | 7 |
| 5 | திருவண்ணாமலை | — | — | — | — | — | — | — | — | — | 10 | 19 | 20 | 6 | 1 | 13 |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | 9 | 11 | 43 | 31 | 26 | 22 | 17 | 7 | 3 | 4 | 8 | 5 | 10 | 15 | 33 (IST) |
| 7 | தர்மபுரி | — | 1 | 8 | 5 | 2 | 4 | 9 | 19 | 21 | 5 | 14 | 6 | 24 | 24 | 21 |
| 8 | சேலம் | — | 7 | 14 | 24 | 22 | 22 | 16 | 8 | 17 | 18 | 43 | 17 | 23 | 6 | 24 |
| 9 | திருச்சி | 2 | 13 | 76 | 44 | 44 | 36 | 55 | 35 | 19 | 58 | 56 | 63 | 40 | 27 | 19 |
| 10 | நாகபட்டினம் காயிதே மில்லத் | 44 | 88 | 66 | 74 | 46 | 39 | 44 | 12 | 26 | 42 | 33 | 29 | 20 | 19 | 40 |
| 11 | தஞ்சாவூர் | — | 10 | 76 | 77 | 60 | 52 | 33 | 33 | 25 | 39 | 104 | 120 | 74 | 33 | 48 |
| 12 | புதுக்கோட்டை | — | 2 | 21 | 30 | 64 | 55 | 25 | 12 | 7 | 7 | 19 | 35 | 60 | 12 | 10 |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | — | — | 5 | 9 | 7 | 11 | 13 | 8 | 9 | — | 1 | — | 3 | — | 2 |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | 4 | 4 | 35 | 48 | 48 | 39 | 42 | 20 | 27 | 50 | 18 | 24 | 32 | 35 | 22 |
| 15 | பெரியார் | 21 | 5 | 52 | 107 | 51 | 19 | 36 | 37 | 58 | 33 | 54 | 38 | 46 | 27 | 35 |
| 16 | நீலகிரி | — | — | — | 1 | 1 | 3 | — | 1 | 1 | — | — | 1 | 1 | 4 (IST) | 2 (IST) |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | — | 14 | 40 | 26 | 7 | 5 | 7 | 2 | 1 | 6 | 6 | 4 | — | 6 | 2 |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | 2 | 18 | 42 | 62 | 55 | 68 | 49 | 44 | 19 | 26 | 31 | 22 | 15 | 25 | 4 |
| 19 | திண்டுக்கல் | — | — | — | 37 | 31 | 20 | 15 | 8 | 12 | 13 | 6 | 6 | 17 | 13 | 11 |
| 20 | இராமநாதபுரம் | 3 | 35 | 49 | 30 | 29 | 17 | 41 | 33 | 44 | 55 | 26 | 36 | 39 | 25 | 36 |
| 21 | பசும்பொன்முத்து இராமலிங்கத்தேவர் | — | — | — | 12 | 8 | 10 | 12 | 8 | 13 | 23 | 22 | 23 | 33 | 24 | 7 |
| 22 | காமராசர் | — | — | — | 27 | 23 | 4 | 4 | 1 | 16 | 5 | 1 | 1 | 6 | 3 | 7 |
| 23 | திருநெல்வேலி | 35 | 42 | 73 | 70 | 68 | 58 | 85 | 52 | 64 | 27 | 28 | 4 | 7 | 32 | 19 |
| 24 | கட்டபொம்மன் சிதம்பரனார் | — | — | — | — | 14 | 14 | 28 | 10 | 19 | 19 | 27 | 17 | 15 | 9 | 15 |
| 25 | கன்னியாகுமரி | 10 | 7 | 4 | 6 | 17 | 38 | 23 | 8 | 8 | 11 | 15 | 2 | 13 | 12 | 19 |
| 26 | இருப்புப்பாதை காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 27 | சென்னை மாநகரக் காவல் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| | மொத்தம் | 136 | 269 | 648 | 784 | 706 | 592 | 629 | 413 | 471 | 518 | 633 | 560 | 563 | 439 | 476 |

## இணைப்பு – 17

1982–யிலிருந்து 1996–வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினரின் பதிவு செய்யப்பட்ட வன்முறைச் சம்பவ வழக்குகளின் எண்ணிக்கை



## இணைப்பு –18

இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்கும் தீர்ப்பு சொல்லப்பட்ட வழக்குகளுக்குமான ஒப்பீட்டு வாக்குமூலம்ப் பட்டியல்

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | உறுதிப்படுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | குற்றவாளிகளிகள் வழக்குகளின் எண்ணிக்கை | | வழக்குகளின் எண்ணிக்கை | | வழக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இந்தியா | தமிழ்நாடு | இந்தியா | தமிழ்நாடு | இந்தியா | தமிழ்நாடு | இந்தியா | தமிழ்நாடு | இந்தியா | தமிழ்நாடு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1977 | 3425 | 1387 | 551 | 246 | 1463 | 750 | 301 | 40 | 3179 | 570 |
| 1978 | 4729 | 1022 | 490 | 117 | 2005 | 711 | 497 | 93 | 5212 | 499 |
| 1979 | 4911 | 1157 | 613 | 170 | 2062 | 513 | 927 | 11 | 5572 | 686 |
| 1980 | 4303 | 858 | 1267 | 131 | 2066 | 654 | 698 | 84 | 4996 | 534 |
| 1981 | 4085 | 1136 | 441 | 65 | 2085 | 488 | 690 | 76 | 4547 | 846 |
| 1982 | 4087 | 1105 | 199 | 51 | 1633 | 594 | 725 | 164 | 4545 | 956 |
| 1983 | 3965 | 1205 | 243 | 51 | 1707 | 765 | 1136 | 99 | 7238 | 1083 |
| 1984 | 3922 | 1402 | 1150 | 54 | 1220 | 937 | 1199 | 113 | 7664 | 1112 |
| 1985 | 3292 | 1280 | 329 | 50 | 1926 | 982 | 688 | 111 | 5039 | 1024 |
| 1986 | 3709 | 1228 | 457 | 59 | 1880 | 781 | 1189 | 100 | 5841 | 989 |
| 1987 | 3776 | 1016 | 385 | 57 | 2123 | 610 | 629 | 114 | 6772 | 1030 |
| 1988 | 3712 | 886 | 303 | 51 | 1402 | 456 | 699 | 148 | 7504 | 1137 |
| 1989 | 3700 | 660 | 410 | 36 | 1463 | 630 | 1951 | 155 | 8761 | 983 |
| 1990 | 3730 | 787 | 128 | 47 | 906 | 589 | 1829 | 171 | 8879 | 914 |

## *இணைப்பு –19*

### *தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 1989–ஆம் ஆண்டின் வன்முறைச் சம்பவ பாதுகாப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்கள் :*

A. மனித நேயத்தைக் குறைக்கின்ற சட்டங்கள்:

இச்சட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோரையோ,பழங்குடியினரையோ கட்டாயப்படுத்தி குடிக்க ஸ்வத்தல் அருவருக்கத்தக்கவற்றை உண்ணச் செய்தல், சாக்கடையில் மூழ்கடித்தல், பக்கத்து வீட்டாரால்ட தொந்தரவு செய்யப்படுதல், வலுக்கட்டாயமாக ஆடைகளைக் களைதல், நிர்வாணப் படுத்துதல் போன்றவை அடங்கும்

B. பொருளாதார உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தியதால் ஏற்படும் இழப்பு:

இவ்வகையான கொடூரச் செயல்களில் கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது கட்டுண்ட வேலையாட்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குயினரின் நிலங்களைத் தவறான முறையில் ஆக்கிரமிப்பு செய்தல், உழவடை செய்தல்,முறைகேடான் வழிகளைப் பயன்படுத்தி அவர்களின் நிலங்களைப் பறித்தல், நிலஉரிமைகளைப் பறித்தல், பலவந்தப்படுத்தி அவர்களை சொந்த வீட்டிலிருந்தோ கிராமத்திலிருந்தோ அப்புறப்படுத்துதல் போன்றவை அடங்கும்.

C. கட்டாய ஓட்டுரிமை:

கட்டாயப்படுத்தி அல்லது அச்சுறுத்தி தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரை ஓட்டுரிமையிலிருந்து விலக்குதல் அல்லது அவர்களை தவறான முறையில் எதிராக ஓட்டுப் போட வைத்து குற்றமிழைக்க செய்தல் போன்றவை அடங்கும்

D. சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்துதல்:

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக பொய்யான பொறாமையான, தொந்தரவு தரக்கூடிய சட்டங்களையும்,சம்பந்தம்பட்ட அதிகாரிகளுக்கு பொய்யானஅற்பத்தனமான தகவல்கள் கொடுத்து அவர்களைக் காயப்படுத்துவதும்,தொந்தரவு செய்வதும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாக இச்சட்டம் குறிப்பிடுகிறது.

E. பெண்களை அவமதித்தல் அல்லது மானபங்கப்படுத்துதல்:

இச்சட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினப் பெண்களை அவமதித்தல், மானபங்கப்படுத்தித் தாக்குதல் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களைக் சீரழித்தல் போன்றவை அடங்கும்

F. பொது இடத்தில் அவமதித்தல்:

இச்சட்டத்தில் பொது இடத்தில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரை அவமதித்தலை வன்மையாகத் தண்டிக்கும் படியுள்ளது.

G. சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் தீய செயல்களுக்கான சட்டங்கள்

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு சாதாரணமாக சுத்தமில்லாத ஆரோக்கியமற்ற தண்ணீரைப் பயன்படுத்தக் கொடுத்தல் வன்மையாகத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமென இச்சட்டம் குறிப்பிடுகின்றது.

H. பொதுவிட அல்லது அடிப்படை உரிமைகளைத் தரமறுத்தல்

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பொதுவிட உரிமைகளை அனுபவிக்கத் தடைசெய்தல் பொதுவிட அனுபவப் பயன்பாட்டை மற்றவர்கள் அனுபவிக்கத் தடைசெய்தல் போன்ற கொடூரமான செயல்கள் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமென இச்சட்டம் குறிப்பிடுகின்றது.

மேற்சொல்லப்பட்ட எல்லா வகையான குற்றங்களுக்கும் குறைந்தபட்ச தண்டனையாக ஆறுமாத கால சிறைதண்டனையும் அபராதத் தொகையும் வசூலிக்கப்படும். குறிப்பிட்ட சில வழக்குகளுக்கு சிறைதண்டனை ஐந்து வருடகாலம்வரை நீடிக்கப்படும். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழுலுள்ள குற்றங்கள் பெரும்பாலானவற்றிக்கு ஒரு மாதத்திலிருந்து ஆறுமாதம் வரை சிறைதண்டனை வன்முறைச் சம்பவப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழுலுள்ள குற்றங்களுக்கு ஆறுமாதத்திலிருந்து ஐந்து வருடம் வரை தண்டிக்கப்படலாம். குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அபராதத் தொகை ரூபாய் 500 மட்டுந்தான் வன்முறைச் சம்பவப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அபராதத் தொகை என்பது குறிப்பிட்டுச் சொல்லும்படியான தொகையில்லை.

I. பொய்யான ஆதாரங்கள் கொடுப்பது அல்லது ஆதாரங்களை உருவாக்குவது

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் குற்றவாளியாக நினைத்து பொய்யான ஆதாரங்களைக் கொடுப்பதும் உருவாக்குவதும் வன்முறைச் சம்பவப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குற்றமெனக் கருதப்படுகின்றது. மேற்படியினர் மரணதண்டனைக் குற்றவாளியாக இருக்கும் பட்சத்தில் அதற்கான பொய்யான ஆதாரங்களைக் கொடுத்தவருக்கு அபராதத் தொகையுடன் அதிகபட்சத் தண்டனையான ஆயுள் தண்டனையும் வழங்கப்படும் குற்றவாளியல்லாத தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் பொய்யான ஆதாரங்களினால் குற்றவாளியாகக்ப்பட்டு மரணதண்டணை அடைந்தால் பொய்யான தகவல்கள் அல்லது ஆதாரங்கள் கொடுத்தவருக்கு மரணதண்டணை வழங்கிடவும் இச்சட்டத்தில் இடமுள்ளது.

கொலைகுற்றமல்லாத மற்ற குற்றங்களுக்கு அதிகபட்ச தண்டனையாக ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையுத் பொய்யான தகவல்கள் கொடுத்தவருக்கு அபராதத்தொகையுடன் ஆறுமாதத்திலிருந்து ஏழு வருடம் வரை சிறைதண்டனையும் வழங்கப்படும்.

J. உடைமைகளுக்கு/சொத்துக்களுக்கு தீயிட்டுத் தீங்கிழைத்தல் ;

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வீடு/கோயில்களுக்குத் தீயிடல்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் உடைமைகளுக்கு சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் படியாக தீயிடுவதற்கு தண்டனை அபராதத்தொகையுடன் ஆறுமாதத்திலிருந்து ஏழுவருடங்கள் வரை சிறைதண்டனையும் வழங்கப்படும். குடியிருப்புகளுக்கு கோயில்களுக்கு தானிய சேமிப்பு கிடங்குகள் போன்றவற்றிக்கு தீயிடுவதற்கு அபராத்த தொகையுடன் சிறைதண்டனையும் வழங்கப்படும்.

K. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்ததைச் சேர்ந்தவர் வன்முறைச் சம்பவங்களினால் பலியாகப்பட்டவராக இருக்கும் பட்சத்தில் :

இந்திய குற்றவியல் பிரிவின் எந்த குற்றங்களுக்கும் பத்து வருடச் சிறைதண்டணை அல்லது அதற்கு மேலான தண்டனை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்தவர் ஒருவருக்கோ அல்லது அவர்களது உடைமைகளுக்கோ சேதம் விளைவிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர் அதே இனத்தைச் சேர்ந்தவராக இருக்கும்பட்சத்தில் கொடூரச் செயல்களின் சட்டத்தின் கீழ் அபராதத் தொகையுடன் ஆயுள் தண்டனையும் வழங்கப்படும்.

L. கொடூரமான குற்றம் செய்பவருக்கு எதிரான ஆதாரங்களை மறைத்தல்:

ஒருவர் தெரிந்தோ அல்லது சூழ்நிலை காரணமாக கொடூரமான குற்றங்கள் செய்திருந்தால் அதற்கான ஆதாரங்களை மறைத்து குற்றம் செய்தவரைத் தண்டனையிலிருந்து தப்பிக்கம தவறான தகவல்கள் கொடுப்பது போன்ற தவறுகளுக்கான தண்டணை அந்த தவறுக்கு கொடுக்ககும் தண்டனைக்கு எந்தவிதத்திலும் குறைந்திருக்காது.

M.பொது அலவலர்களின் வன்முறைச் செயல்கள்:

பொது அலுவலர் அல்லது அரசாங்க அலுவர்கள் மேற்சொல்லப்பட்ட எந்தவிதமான குற்றங்களையும் செய்திருந்தால் குற்றவாளிக்கு ஒருவருடத்திலிருந்து அதிக பட்சத் தண்டனை வரை செய்யப்பட்ட குற்றத்திற்குரிய தண்டனையாக வழங்கப்படும்.

அரசாங்க அலுவலர்கள் தன் சொந்த விருப்பத்தின்படி அவர் கடமைகளைச் செய்யாமலிருந்தால் இச்சட்டத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட காலம் வரை அல்லது ஆறுமாதத்திலிருந்து ஒரு வருடம் வரை தண்டிக்கப்படுவர் (பிரிவு : 3)

N.சில குறிப்பிட்ட குற்றங்களுக்கு தண்டனைகளை அதிகப்படுத்துதல்:

தொடர்ந்து செய்யப்படும் குற்றங்களுக்குத் தண்டனையை அதிகப்படுத்தி வன்முறைச் சம்பவப் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் தண்டனைக்கு ஈடாக அசையும், அசையாச் சொத்துக்களை தரகாகப் பெறுதல் மேலும் அதோடு வழக்கு விசாரணையில் இருக்கும்போது சொத்தை சப்தி செய்ய உத்தரவிடலாம். குற்றத்திற்கேற்ப அபராதத் தொகையும் வசூலிக்கலாம்.(பிரிவு 4,5,7)

O.குழுவினரின் பங்கு:

ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள அனைவரும் ஒரு குறிப்பிட்ட குற்றத்தில் ஈடுபட்டால் அதற்கென்று ஒரு குறிப்பிட்ட தொகை அபராதத் தொகையாக வசூலிக்கப்படும்(பிரிவு.16)

## இணைப்பு – 20

1990–யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் பதிவு செய்யப்பட்ட கொடுஞ்செயல்கள் தடுப்புச்சட்ட(PAA) வழக்குகளின் எண்ணிக்கையும் வருடமும் மாவட்டப் போராட்டங்களும்.

| வரிசை எண் | மாவட்டம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு(கிழக்கு) | – | – | 2 | 13 | 7 | 14 | 12 |
| 2 | செங்கல்பட்டு(மேற்கு) | – | – | 5 | 8 | 17 | 26 | 28 |
| 3 | தென்ஆற்காடு வட்டம் | – | – | 7 | 27 | 16 | 36 | 57 |
| 4 | விழுப்புரம் | – | – | 14 | 33 | 40 | 39 | 28 |
| 5 | திருவண்ணாமலை | – | – | 11 | 30 | 17 | 11 | 15 |
| 6 | வடஆற்காடு அம்பேத்கார் | – | – | 5 | 10 | 17 | 14 | 33 |
| 7 | தர்மபுரி | – | – | 13 | 14 | 31 | 26 | 32 |
| 8 | சேலம் | – | – | 9 | 46 | 58 | 59 | 50 |
| 9 | திருச்சி | – | 1 | 38 | 172 | 135 | 85 | 55 |
| 10 | நாகபட்டினம் | – | – | 11 | 33 | 38 | 22 | 41 |
| 11 | காயிதே மில்லத் தஞ்சாவூர் | – | 2 | 67 | 125 | 82 | 51 | 51 |
| 12 | புதுக்கோட்டை | 2 | 7 | 46 | 106 | 94 | 15 | 26 |
| 13 | கோயம்புத்தூர்(நகரப்பகுதி) | – | – | – | 4 | 2 | 5 | 3 |
| 14 | கோயம்புத்தூர்(கிராமப்பகுதி) | – | – | 16 | 49 | 56 | 49 | 55 |
| 15 | பெரியார் | 2 | 1 | 6 | 34 | 44 | 36 | 39 |
| 16 | நீலகிரி | – | – | – | 5 | 2 | 4 | 9 |
| 17 | மதுரை(நகரப்பகுதி) | – | – | 3 | 7 | 10 | 13 | 4 |
| 18 | மதுரை(கிராமப்பகுதி) | – | 3 | 9 | 36 | 37 | 37 | 13 |
| 19 | திண்டுக்கல் | – | – | 9 | 25 | 41 | 40 | 21 |
| 20 | இராமநாதபுரம் | – | – | 7 | 26 | 22 | 23 | 23 |
| 21 | பசும்பொன்முத்து ராமலிங்கத்தேவர் | – | – | 4 | 43 | 42 | 43 | 35 |
| 22 | காமராசர் | – | – | 9 | 45 | 32 | 20 | 20 |
| 23 | திருநெல்வேலி | – | – | 6 | 29 | 39 | 47 | 27 |
| 24 | கட்டபொம்மன் சிதம்பரனார் | – | – | 2 | 27 | 23 | 21 | 24 |
| 25 | கன்னியாகுமரி | – | – | 11 | 33 | 17 | 14 | 20 |
| 26 | இருப்புப்பாதை காவல் | – | – | – | – | 3 | – | – |
| 27 | சென்னை மாநகர காவல் | – | – | – | – | – | – | – |
| | மொத்தம் | 04 | 14 | 310 | 980 | 922 | 750 | 721 |

## இணைப்பு – 21

1980 யிலிருந்து 1996 வரை தமிழ்நாட்டில் புகார்செய்யப்பட்ட குடியுரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குகளின் எண்ணிக்கைகளின் உயர்வும் தாழ்வும்.



## ஆசிரியர் பற்றி...

தமிழ் இலக்கியத்தைத் தத்தெடுத்துக் கொண்ட இரவி ஆறுமுகம்
தமிழகக் காவல்துறையில் விளைந்த அபூர்வ முத்து
தாமிரபரணித் தடாகம் தமிழுக்கு அளித்த சொத்து
தன்னிகரில்லாப் புதுமைச் சிந்தனை பூக்கும் வித்து

நேர்கொண்ட பார்வை; நிமிர்ந்த நன்னடை
நெஞ்சம்நிறை உறுதி; இவரின் புறத் தோற்றம்
கூர்மழுங்காத அறிவு; குவலயம் அளாவிய சிந்தனை
கோபுரம்போல் புலமை; இவரின் அக முற்றம்

பொறியியலும் சட்டமும் கல்லூரிப் படிப்பு
போற்றுகின்ற காவல்படையில் ஐ.பி.எஸ். முடிப்பு
செறிவார்ந்த தமிழ்த்தாகம் இதயத் துடிப்பு
செதுக்குகின்ற எழுத்தெல்லாம் இமாலயப் படைப்பு

“**பனித்துளிக்குள் ஓர் பாற்கடல்**” என்கிற
பகுத்தாய்வு நூல் இவரது சாதனைக்கு நல்ல சாட்சி
பார்புகழும் மதுரைப்பல்கலைக் கழகத்தில்
பல்லாண்டு நுணுக்கமாக ஆய்வு செய்து
பணிந்தளித்த “**தீண்டாமை ஒழிப்பில் காவல்துறை**”
பரந்துபட்ட இவரது சிந்தனையின் மற்றொரு காட்சி.

கூடுதல் காவல் இயக்குநர் தற்போதைய பணி - தமிழ்க்
கோட்டையிலே எப்போதும் ஒலிக்கும் இவர் புகழின் மணி.

**- இலக்கியா நடராஜன்**